D
Y211,31'N90
N90.27.1
143804

வெளியீடு 26-12-1990 Issued 26-12-1990

436

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 10, 1990 - தொகுதி 27 - எண் 1

Tuesday, the 10th April, 1990-Volume 27-No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3-00

143804
D
V211,311(1,9
N90.2701

600 008

# உள்ளடக்கம்

10—4—1990

பக்கங்கள்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும். iii—v

Personnel of the Government of Tamil Nadu vii—ix

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் xi—xiv

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகரவரிசைப்படி). xv—xxvi

வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 1—33

தகவல் கோரல்—

(அ) தமிழ்நாட்டு மீனவர்கள் விடுதலைப் புலிகளால் இலங்கைக்குக் கடத்தப்பட்டுள்ளது தொடர்பான செய்திகள் பற்றி அரசுக்குக் கிடைத்துள்ள விவரங்கள் குறித்து .. .. .. 33—35

(ஆ) வருவாய்த் துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து .. .. .. 36—39

(இ) பொறியியல் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் பிரேக் சிஸ்டம் முறையை எதிர்த்து நடத்தும் போராட்டம் குறித்து .. .. .. .. 39—41

கவன ஈர்ப்பு—

பேரூராட்சிகளிலும் ஊர் நலப் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து .. .. .. .. 42

அறிக்கைகள் அளித்தல்—

பொது நிறுவனங்கள் குழு .. .. .. 42

| | பக்கங்கள் |
|---|---|
| 5. மானியக் கோரிக்கைகள், 1990-91 விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி). | 43—130 |
| கோரிக்கை எண் 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முஸ்லியோர் நலன் .. .. .. | 43—130 |
| *மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி .. | 43, 44, 111—130 |
| *திரு. கொ. மாதப்பன் .. .. .. | 44—46 |
| திரு. ஏ. ஜி. சம்பத் .. .. .. | 47—54 |
| * திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் .. | 54—59 |
| திரு. எம். சீரங்கன் .. .. .. | 59—64 |
| *திரு. கோ. பூவராகன் .. .. .. | 65—73 |
| திரு. பி. எச். பாண்டியன் .. .. .. | 73—77 |
| *திருமதி. ரமணி நல்லதம்பி .. .. .. | 77—85 |
| திரு. பெ. ஆசையன் .. .. .. | 86—92 |
| திரு. ஜி. பழனிச்சாமி .. .. .. | 92—97 |
| திரு. எம். அப்துல் லத்தீப் .. .. .. | 97—103 |
| *திரு. வி. கே. சின்னசாமி .. .. .. | 104—111 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 131 |




## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர். திரு. பி. சி. அலெக்சாண்டர்.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் .. | மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிக வரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உள்பட), மற்றும் ஆயத் துறை. |
| 2. கல்வி அமைச்சர் .. | மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : கல்வி (தொழில் நுட்பக் கல்வி உள்பட) ஆட்சி மொழி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தமிழ்ப் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் இயல். |
| 3. சட்ட அமைச்சர் .. | மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைபற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் வக்ஃப். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. நாஞ்சில். கி. மனோகரன் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம். |

| | |
|---|---|
| 5. போக்குவரத்துத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் வீட்டு வசதி. |
| 6. அறநிலையத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அறநிலையத்துறை, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள் மற்றும் சின்கோனா. |
| 7. ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கோ. சி. மணி : நகராட்சிகள், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை. |
| 8. உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் நுகர்பொருள் வழங்கல், கூட்டுறவு மற்றும் புள்ளி விவரங்கள். |
| 9. வேளாண்மைத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட, பிரதம, கூட்டிணைப்பு அமைப்புகள் உள்பட) மற்றும் உணவு உற்பத்தி. |
| 10. பொதுப்பணித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. துரைமுருகன் : பொதுப்பணிகள், சிறு பாசனம் (சிறப்பு சிறு பாசனம் உள்பட), திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் மின்சாரம். |
| 11. சமூக நலம்-ஊரகத் தொழிற்துறை அமைச்சர். | மாண்புமிகு திருமதி. சுப்புலட்சுமி செகதீசன் : சமூக நலம் (குழந்தைகள், மகளிர் நலம் உள்பட), பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்பட), கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம். |



| | |
|---|---|
| 12. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர். |
| 13. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மக்கள் நல்வாழ்வு, மருந்துகள், குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்படுத்தல். |
| 14. செய்தி-தொழிலாளர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. என். நேரு : செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், தொழிலாளர், மக்கள் தொகைக் கணக்கு, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம் மற்றும் பால்வளம். |
| 15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : கால்நடை பராமரிப்பு, மீனளம் மற்றும் மீனள வளர்ச்சிக் கழகம். |
| 16. கைத்தறி-நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : கைத்தறி, நெசவாலைகள், நகர அமைப்பு, நகர்ப்புற மேம்பாடு, இட வசதிக் கட்டுப்பாடு மற்றும் குடிசை மாற்று வாரியம். |
| • முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர். | திரு. எல். கணேசன். |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU—Thiru P. C. ALEXANDER.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | |
|---|---|
| 1. Chief Minister .. .. | **The Hon. Dr. M. KARUNANIDHI :** Public, General Administratiion, Indian Adminsitrative Service, District Revenue Officers, Police, Finance, Planning, Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor Permits and Excise. |
| 2. Minister for Education . | **The Hon. Dr. K. ANBAZHAGAN:** Education including Technical Education, Official Language, Legislature, Elections, Electronics, Science and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps, Ex-Servicemen and Archaeology. |
| 3. Minister for Law .. .. | **The Hon. Thiru S. J. SADIQ PASHA:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits and Wakf. |
| 4. Minister for Revenue .. | **The Hon. Thiru NANJIL K. MANOHARAN:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration and Stamp Act. |
| 5. Minister for Transport .. | **The Hon. Thiru M. KANNAPPAN:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Housing. |

6. Minister for Hindu Religious and Charitable Endowments — The Hon. Thiru K.P. KANDASAMY: Hindu Religious and Charitable Endowments, Tourism, Tourism Development Corporation, Forest and Cinchona.

7. Minister for Rural Development and Local Administration. — The Hon. Thiru KO. SI. MANI: Municipal Administration, Rural Development, Panchayats, Panchayat Unions and Rural indebtedness.

8. Minister for Food and Co-operation. — The Hon. Thiru Pon. MUTHURAMALINGAM: Food, Price Control and Civil Supplies, Co-operation and Statistics.

9. Minister for Agriculture .. — The Hon. Thiru VEERAPANDI S. ARUMUGAM: Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering and Service co-operative Societies at the Block, District and Apex Level including the Federation and Food Production.

10. Minister for Public Works — The Hon. Thiru DURAIMURUGAN: Public Works, Minor Irrigation including Special Minor Irrigation, Programme Works, Highways and Electricity.

11. Minister for Social Welfare and Rural Industries. — The Hon Tmt. SUBBULAKSHMI JAGADISAN: Social Welfare including Children and Womens Welfare, Beggers' Home, Orphanages, Correctional Administration, Nutritious Noon Meals, Rural Industries including Village Cottage and Small Industries, Khadi Board, Bhoodan and Gramdan.

12. Minister for Adi-Dravidar welfare. — The Hon. Dr. E. RAMAKRISHNAN: Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.



13. Minister for Public Health .. — The Hon. Dr. K. PONMUDI alias DEIVASIGAMANI: Public Health, Medicines, Water Board and Environmental Pollution Control.

14. Minister for Information and Labour. — The Hon. Thiru K. N. NEHRU: Information and Publicity, Film Technology, Cinematograph Act, Labour, Census, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, Newsprint control, Stationery, and Printing Government Press and Milk.

15. Minister for Animal Husbandry: — The Hon. Dr. K. CHANDRASEKARAN: Animal Husbandry, Fisheries and Fisheries Development Corporation.

16. Minister for Handlooms and Urban Development. — The Hon. Thiru S. THANGAVELU: Handlooms, Textiles, Town Planning, Urban Development Accommodation Control and Slum Clearance Board.

17. *Parliamentary Secretary to Chief Minister.* — Thiru L. GANESAN.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர் :

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

பேரவைத் துணைத் தலைவர் :

திரு. வீ. பெ. துரைசாமி.

## மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. அ. லெ. சுப்பிரமணியன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்.

திரு. இரா. மோகன்.

திரு. கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன்.

திரு. குமரி அனந்தன்.

திரு. உ.ரா. வரதராசன்.

செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி.

டி 2 ஏ 53—90— C

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்

(அகரவரிசைப்படி)

| | |
|---|---|
| ஜானகிராமன், திரு. செ. சு. பி.ஏ., பி.எல். | இணைச் சயெலாளர். |
| டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்ஸி., பி.எல். | இணைச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர். |
| கனகசபாபதி, திரு. பெ. ச., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர். |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ. | துணைச் செயலாளர். |
| கோவிந்தராஜன், திரு. ஆர். | குழு அலுவலர். |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| இராசாராமன், திரு. வி., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| கேசவராம், திரு. சு., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| முனிர் உன்னிசா, திருமதி, பி.எஸ்ஸி. | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| ஜான், திரு. வ.சா. பி.ஏ. | சார்புச் செயலாளர். |

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்
## (அகரவரிசைப்படி)—தொடர்ச்சி.

| | |
|---|---|
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| ஜோசப், திரு. மா. கு., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| அரங்கநாதன், திரு. சு., பி.ஏ., பி.எல். | தலைமை நிருபர் (குழுக்கள்). |
| ஜெயதேவ், திரு. பி. சி. | தலைமை நிருபர். |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **அ** | |
| 1 அங்கமுத்து, திரு. கே. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 2 அசேன், திரு. ஜெ. | இராணிப்பேட்டை. |
| 3 அண்ணாதுரை, திரு. கா. | பட்டுக்கோட்டை. |
| 4 அண்ணாதுரை, டாக்டர் கே. | வரகூர் (செ.வ.) |
| 5 அண்ணாநம்பி, திரு. ஆர். | அவிநாசி (செ.வ.) |
| 6 அண்ணாமலை திரு. எம். | அரூர் (செ.வ.) |
| 7 அதியமான், திரு. அ. | சேடப்பட்டி. |
| 8 அப்துல் சமத், திரு. பா. | வாணியம்பாடி. |
| 9 அப்துல் லத்தீப், திரு. எம். | சேப்பாக்கம். |
| 10 அர்ஜுனன், திரு. கே. | தாரமங்கலம். |
| 11 அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி. |
| 12 அழகுவேலு, திரு. ச. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13 அறிவழகன், திரு. ஆ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 14 அன்பழகன், டாக்டர் க. | அண்ணாநகர். |
| 15. அன்பழகன், திரு. வ. | செய்யாறு. |
| 16 அன்பில் பொய்யாமொழி, திரு. | திருச்சிராப்பள்ளி-2. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ஆ** | |
| 17 ஆசையன், திரு. பெ. | ஆண்டிபட்டி. |
| 18 ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 19 ஆறுமுகம், திரு. து. | அரியலூர். |
| 20 ஆறுமுகம், திரு. வீரபாண்டி, சோ. | சேலம்-2. |
| **இ** | |
| 21 இரகுமான்கான், திரு. அ. | பூங்கா நகர். |
| 22 இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 23 இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | மேலூர். |
| 24 இராசன், திரு. வி. பி. | ராஜபாளையம் (செ. .) |
| 25 இராசு, திரு. வி. கே. | அரக்கோணம் (செ.வ.) |
| 26 இராசு, திரு. வெ. | குளத்தூர் (செ.வ.) |
| 27 இராசேந்திரன், திரு. அ. | பேளூர். |
| 28 இராதா, திரு. எஸ். ஆர். | மதுரை கிழக்கு. |
| 29 இராதாகிருஷ்ணன், திரு. டி. | சோழவந்தான். |
| 30 இராமகிருஷ்ணன், டாக்டர் எ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 31 இராமகிருஷ்ணன், திரு. நா. | கம்பம். |
| 32 இராமச்சந்திரன், திரு. எம். | திருவோணம். |
| 33 இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | விளாத்திகுளம். |
| 34 இராமச்சந்திரன், திரு. ந. | செஞ்சி. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **இ—தொடர்ச்சி** | |
| 35 இராமசாமி, திரு. ஏ. எம். | ஆத்தூர். |
| 36 இராமசாமி, திரு. கே. வி. | கரூர். |
| 37 இராமசாமி, திரு. வி. | திருச்செங்கோடு. |
| 38 இராமசாமி, திரு. கே. ஆர். | திருவாடானை. |
| 39 இராமநாதன், திரு. மு. | கோவை மேற்கு. |
| 40 இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர். |
| 41 இராஜேந்திரன், திரு. கே. ஆர். | பர்கூர். |
| 42 இராஜேந்திரன், திரு. பி. வி. | வேதாரண்யம். |
| 43 இளம்வழுதி, திரு. | எழும்பூர் (செ.வ.) |
| **ஈ** | |
| 44 ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர், (செ.வ.) |
| **உ** | |
| 45 உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம். |
| 46 உதயசூரியன், திரு. தா. | சின்ன சேலம். |
| 47 உபயதுல்லா, திரு. எஸ். என். எம். | தஞ்சாவூர். |
| **ஏ** | |
| 48 ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | பள்ளிபட்டு. |
| **க** | |
| 49 கண்ணப்பன், திரு. மு. | பல்லடம். |
| 50 கண்ணன், திரு. எஸ். பி. | அணைக்கட்டு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| | க—தொடர்ச்சி |
| 51 கணபதி, திரு. என். | மயிலாப்பூர். |
| 52 கணேசமூர்த்தி, திரு. என். | குறிஞ்சிப்பாடி. |
| 53 கணேசமூர்த்தி, திரு. ஏ. | மொடக்குறிச்சி. |
| 54 கணேசன், திரு. எல். | ஓரத்தநாடு. |
| 55 கணேசன், திரு. க. சொ. | ஜெயங்கொண்டம். |
| 56 கணேசன், திரு. சா. | தியாகராய நகர். |
| 57 கணேசன், திரு. வே. | மங்களூர் (செ.வ.) |
| 58 கந்தசாமி, திரு. கே. | கிணத்துக்கடவு. |
| 59 கந்தசாமி, திரு. கே. பி. | திருச்செந்தூர். |
| 60 கரீம், திரு. எம். கே. | கூடலூர். |
| 61 கருணாநிதி, டாக்டர் மு. | துறைமுகம். |
| 62 கருப்பசாமி, திரு. எஸ்.எஸ். | சாத்தூர். |
| 63 கருப்பையா மூப்பனார், திரு. ஜி. | பாபநாசம். |
| 64 கன்னையன், திரு. க. | தொட்டியம். |
| 65 கஜபதி, திரு. டி. ஆர். | ஆற்காடு. |
| 66 காஞ்சனா, டாக்டர் க. | கிருஷ்ணகிரி. |
| 67 காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. எஸ். | முதுகுளத்தூர். |
| 68 காளியப்பன், திரு. பி. | ஒட்டன்சத்திரம். |
| 69 கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் து. | சிதம்பரம். |
| 70 கிருஷ்ணன், திரு. சி. | ஓமலூர். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| | க—தொடர்ச்சி. |
| 71 குணசேகரன், திரு. எஸ். | தலைவாசல் (செ.வ.) |
| 72 குமரி அனந்தன், திரு. | சாத்தான்குளம். |
| 73 குருநாதன், திரு. சு. | பாளையங்கோட்டை. |
| 74 குருமூர்த்தி, திரு. ஜி. ஜி. | பவானி. |
| 75 கோதண்டம், திரு. ஏ. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 76 கோபாலகிருஷ்ணன், திரு. வெ. | மேட்டுப்பாளையம். |
| 77 கோவிந்தசாமி, திரு. சி. | திருப்பூர். |
| 78 கோவிந்தசாமி, திரு. வி. சி. | காவேரிப்பட்டினம். |
| 79 கோவிந்தராஜன், திரு. சி. | நெல்லிக்குப்பம். |
| 80 கோவிந்தன், திரு. வெ. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| | ச. |
| 81 சண்முகம், திரு. சி. | ஆலந்தூர். |
| 82 சந்திரசேகர், திரு. வி. பி. | பொள்ளாச்சி. |
| 83 சந்திரசேகரன், டாக்டர் க. | ஆலங்குடி. |
| 84 சம்சுதீன் என்கிற கதிரவன், திரு. | கடையநல்லூர். |
| 85 சம்பத், திரு. ஏ. ஜி. | முகையூர். |
| 86 சற்குணம், திருமதி எஸ். பி. | இராதாகிருஷ்ணன் நகர். |
| 87 சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே. | உடுமலைப்பேட்டை. |
| 88 சாந்தகுமாரி, டாக்டர் த. | தாராபுரம் (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| | ச—தொடர்ச்சி |
| 89 சாமிநாதன், திரு. ஆர். | திருமங்கலம். |
| 90 சிங்காரம், திரு. ஆர். | பேராவூரணி. |
| 91 சிவசுப்பிரமணியன், திரு. சா. | ஆண்டிமடம். |
| 92 சிவலிங்கம், திரு. எஸ். ஆர். | பனைமரத்துப்பட்டி. |
| 93 சின்னக்குழந்தை, திரு. மு. | பெரணமல்லூர் |
| 94 சிவலோகம், திரு. எஸ். | புவனகிரி. |
| 95 சின்னசாமி, திரு. கே. | சேந்தமங்கலம், (ஆ.வா.) |
| 96 சின்னசாமி, திரு. ரா. | தர்மபுரி. |
| 97 சின்னசாமி, திரு. வி. கே. | பவானிசாகர். |
| 98 சீரங்கன், திரு. எம். | மேட்டூர். |
| 99 சீனிவாசன், திரு. பெ. | சிவகாசி. |
| 100 சுந்தர், திரு. கே. | உத்திரமேரூர். |
| 101 சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு. |
| 102 சுந்தரம், திரு. க. | பொன்னேரி (செ.வ.) |
| 103 சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம். |
| 104 சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர். |
| 105 சுந்தரராஜ், டாக்டர் எஸ். | பரமக்குடி (செ.வ.) |
| 106 சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே. | கன்னியாகுமரி. |
| 107 சுப்பிரமணியம், திரு. தூ. க. | சத்தியமங்கலம். |
| 108 சுப்பிரமணியன், திரு. அ. லெ. | திருநெல்வேலி. |
| 109 சுப்பிரமணியன், திரு. வே. நா. | பெருந்துறை. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| | ச—தொடர்ச்சி. |
| 110 சுப்பு, திரு. ஏ. | ராசிபுரம். |
| 111 சுப்புலட்சுமி செகதீசன், திருமதி. | ஈரோடு. |
| 112 சுப்பையா, திரு. ஆலவயல் | திருமயம். |
| 113 செங்குட்டுவன், திரு. ஏ. | மயிலாடுதுறை. |
| 114 செங்கைசிவம், திரு. | பெரம்பூர் (செ.வ.) |
| 115 செங்கோட்டையன், திரு. கே. ஏ. | கோபிச்செட்டிபாளையம். |
| 116 சேட்டு, திரு. எம். | செங்கம் (செ.வ.) |
| 117 சொக்கர், திரு. ரா. | விருதுநகர். |
| 118 சௌந்திரபாண்டியன், திரு. ந. | சமயநல்லூர் (செ.வ.) |
| | ட. |
| 119 டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம். |
| | த. |
| 120 தங்கபாண்டியன், திரு. வே. | அருப்புக்கோட்டை. |
| 121 தங்கம், திரு. அ. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 122 தங்கராஜன், திரு. எஸ். ஏ. | திண்டுக்கல். |
| 123 தங்கராஜு, திரு. ஏ. | காட்டுமன்னார்கோயில் (செ.வ.) |
| 124 தங்கவேல், திரு. எம். | முசிறி. |
| 125 தங்கவேல், திரு. என். | குன்னூர் (செ.வ.) |
| 126 தங்கவேலு, திரு. ச. | சங்கரநாயனார்கோயில் (செ.வ.) |
| 127 தம்புசாமி, திரு. வி. | திருவாரூர் (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **த—தொடர்ச்சி.** | |
| 128 தமிழ்க்குடிமகன், முனைவர், மு. | இளையான்குடி. |
| 129 தமிழ்மணி, திரு. வீ. | செங்கல்பட்டு. |
| 130 தயாளன், திரு. ஏ. சி. | ஆரணி. |
| 131 தனபாலன், திரு. கே. ஆர். ஜி. | சேலம்-1. |
| 132 தனராஜ், டாக்டர் வி. | வந்தவாசி (செ.வ.) |
| 133 திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி. |
| 134 திருமூர்த்தி, டாக்டர் து. | திருப்போரூர் (செ.வ.) |
| 135 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 136 துரை சந்திரசேகரன், திரு. | திருவையாறு. |
| 137 துரைசாமி, திரு. வீ. பெ. | நாமக்கல் (செ.வ.) |
| 138 துரைபாண்டி, திரு. பெ. | மானாமதுரை (செ.வ.) |
| 139 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 140 துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோயில். |
| 141 தென்னரசு, திரு. எஸ். எஸ். | திருப்பத்தூர். |
| 142 தேவராஜ், திரு. வி. எம். | வேலூர். |
| **ந.** | |
| 143 நஞ்சப்பன், திரு. ந. | பெண்ணாகரம். |
| 144 நடராசன், திரு. ஆ. | பேரூர். |
| 145 நடராசன், திரு. பொ. | திருத்தணி. |
| 146 நடேசன், திரு. எகால், மு. | ரிஷிவந்தியம். |
| 147 நடேசன், திரு. ஆர். | திருவட்டாறு. |
| 148 நந்தகோபாலகிருட்டிணன், டாக்டர் கோ. | பண்ருட்டி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ந—தொடர்ச்சி.** | |
| 149 நாராயணன், திரு. ராம. | காரைக்குடி. |
| 150 நார்முகமது, திரு. செ. | பத்மநாபபுரம். |
| 151 நேரு, திரு. கே. என். | லால்குடி. |
| **ப.** | |
| 152 பஞ்சாட்சரம், திரு. ஆர். | மேல்மலையனூர். |
| 153 பழனிச்சாமி, திரு. டி. கே. | திருவொற்றியூர். |
| 154 பழனிச்சாமி, திரு. ஜி. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 155 பழனிசுவாமி, திரு. க. | எடப்பாடி. |
| 156 பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 157 பன்னீர்செல்வம், டாக்டர் மா. | சீர்காழி (செ.வ.) |
| 158 பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி. |
| 159 பாப்பா உமாநாத், திருமதி. | திருவரம்பூர். |
| 160 பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை. |
| 161 பால்ராஜ், திரு. சோ. | மதுரை-மத்திய. |
| 162 பாலசுப்பிரமணியன், திரு. அ. வே. | திருநாவலூர். |
| 163 பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். | பொங்கலூர். |
| 164 பாலையா, திரு. ஆ. | கொளச்சல். |
| 165 பிச்சாண்டி, திரு. கே. | திருவண்ணாமலை. |
| 166 பிச்சைமுத்து, திரு. ரெ. | பெரம்பலூர் (செ.வ.) |
| 167 பீட்டர் ஆல்போன்ஸ், திரு. சா. | தென்காசி. |
| 168 புகழேந்தி, திரு. இ. | கடலூர். |
| 169 பூவராகன், திரு. கோ. | விருத்தாசலம். |
| 170 பெரியசாமி, திரு. என். | தூத்துக்குடி. |
| 171 பெரியசாமி, திரு. ஐ. | ஆத்தூர். |
| 172 பெரியசாமி, திரு. வே. | அந்தியூர் (செ.வ.) |
| 173 பெரியண்ணன், திரு. அ. | புதுக்கோட்டை. |
| 174 பெருமாள், திரு. செ. | ஏற்காடு (ஆ.வா.) |
| 175 பொன்முடி, திரு. டி. | தண்டராம்பட்டு. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | ப—தொடர்ச்சி. | |
| 176 | பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, டாக்டர், க. | விழுப்புரம். |
| 177 | பொன். முத்துராமலிங்கம், திரு. | மதுரை மேற்கு. |
| 178 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 179 | பொன்னுசாமி, பேராசிரியர், க. | மருங்காபுரி. |
| 180 | பொன்னுபிள்ளை, திரு. ஜி. | தேனி. |
| | ம. | |
| 181 | மகேந்திரன், திரு. ஆர். | நாட்ராம்பள்ளி. |
| 182 | மணி, திரு. ஆச்சியூர், எம். | நாங்குநேரி. |
| 183 | மணி, திரு. கே. ஏ. | கபிலர்மலை. |
| 184 | மணி, திரு. கோ. சி. | கும்பகோணம். |
| 185 | மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ.வ.) |
| 186 | மதிவாணன், திரு. இரா. | ராயபுரம். |
| 187 | மலர்மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி-I. |
| 188 | மனோகரன், திரு. நாஞ்சில், கி. | திருவல்லிக்கேணி. |
| 189 | மனோகரன், திரு. பா. | சிவகங்கை. |
| 190 | மாசிலாமணி, டாக்டர் சி. ரா. | திண்டிவனம். |
| 191 | மாசிலாமணி, திரு. தி. ரா. | பூந்தமல்லி. |
| 192 | மாதப்பன், திரு. கொ. | பாலக்கோடு. |
| 193 | மாரப்பன், திரு. பீ. | காங்கேயம். |
| 194 | மாரிமுத்து, திரு. அ. | வானூர் (செ.வ.) |
| 195 | முகமது சித்திக், திரு. எம். | பூம்புகார். |
| 196 | முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 197 | முத்தையன், திரு. எம். | சங்கராபுரம் |
| 198 | முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 199 | முருகேசன், திரு. பொ. | காஞ்சிபுரம். |
| 200 | முல்லைவேந்தன், திரு. வ. | மொரப்பூர். |
| 201 | முனிரத்தினம், திரு. ஆ. மு. | சோளிங்கர். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | ம—தொடர்ச்சி. | |
| 202 | முனிரத்தினம், திரு. எஸ். ஆர். | திருவள்ளூர். |
| 203 | மூக்கன், திரு. ஆர். | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 204 | மூக்கையா, திரு. எல். | பெரியகுளம். |
| 205 | மோகன், திரு. இரா. | சிங்காநல்லூர். |
| 206 | மோசஸ், டாக்டர் எம். | நாகர்கோவில். |
| | ய. | |
| 207 | யசோதா செல்லப்பா, திருமதி. | வலங்கைமான் (செ.வ.) |
| | ர. | |
| 208 | ரமணி, திரு. கே. | கோவை (கிழக்கு). |
| 209 | ரமணி நல்லதம்பி, திருமதி | ராதாபுரம். |
| 210 | ரவி அருணன், திரு. கே. | அம்பாசமுத்திரம். |
| 211 | ராமச்சந்திர ரெட்டி, திரு. ந. | ஓசூர். |
| 212 | ராமச்சந்திரன், திரு. கே. | மன்னார்குடி. |
| 213 | ராமச்சந்திரன், திரு. சி. | திருப்பரங்குன்றம். |
| 214 | ராமசாமி, திரு. மொஞ்சனூர், ப. | அரவக்குறிச்சி. |
| 215 | ராமசுப்பு, திரு. எஸ். எஸ். | ஆலங்குளம். |
| 216 | ராஜு, திரு. எச். எம். | உதகமண்டலம். |
| 217 | ராஜேந்திரன், திரு. எம். எஸ். கே. | இராமநாதபுரம். |
| | ல. | |
| 218 | லட்சுமி, திருமதி பி. | வால்பாறை (செ.வ.) |
| | வ. | |
| 219 | வரதராஜன், திரு. ஆர். | சங்கரி (செ.வ.) |
| 220 | வரதராசன், திரு. உ. ரா. | வில்லிவாக்கம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **வ—தொடர்ச்சி.** | |
| 221 வல்லரசு, திரு. பி. என். | உசிலம்பட்டி. |
| 222 விஜயராகவன், திரு. பொன். | கிள்ளியூர். |
| 223 விஜயேந்திரையா, திரு. டி. சி. | தளி. |
| 224 வீராசாமி, திரு. ஆற்காடு, நா. | புரசைவாக்கம். |
| 225 வீரையன், திரு. கோ. | நாகப்பட்டினம். |
| 226 வெங்கடாசலம், திரு. பெ. | வீரபாண்டி. |
| 227 வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய். | ஸ்ரீரங்கம். |
| 228 வெள்ளிங்கிரி, திரு. யூ. கே. | தொண்டாமுத்தூர். |
| 229 வேணு, திரு. கி. | கும்மிடிப்பூண்டி. |
| 230 வைத்தியலிங்கம், திரு. மீ.அ. | தாம்பரம். |
| **ஸ.** | |
| 231 ஸ்டாலின், திரு. மு.க. | ஆயிரம் விளக்கு. |
| **ஜ.** | |
| 232 ஜெயலலிதா, செல்வி ஜெ. | போடிநாயக்கனூர். |
| **ஹ.** | |
| 233 ஹமீது இப்ராகிம், திரு. அ. மு. | கடலாடி. |
| **ஸ்ரீ.** | |
| 234 ஸ்ரீதர், திரு. ஆர். எஸ். | சைதாப்பேட்டை. |
| 235 ஆஸ்கார், சி. நிக்ஸி, திரு. | நியமன உறுப்பினர். |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்.

| | |
|---|---|
| திரு. கு. அழகிரிசாமி | தலைமை வழக்கறிஞர். |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 27, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021

1990, ஏப்ரல் 10, செவ்வாய்க் கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்.''

தான் பிறந்த குடிப்பெருமைக்கு உரிய கடமையைச் செய்வதற்கு ஒருநாளும் சோர்வடைய மாட்டேன் என்று ஒருவன் அடுத்தடுத்து முயல்வதால் ஏற்படும் பெருமையைப் போல் மேம்பாடானது வேறொன்றும் இல்லை.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### மாவட்ட விளையாட்டு அரங்கம்.

*2169—திரு. என். பெரியசாமி ;

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தூத்துக்குடியில் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு** டாக்டர் க. அன்பழகன் ; பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தூத்துக்குடியில் விளையாட்டு அரங்கம் கட்டும் பணி தமிழ்நாடு மாநிலக் கட்டுமானப் பணிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 54.56 இலட்சங்கள் ஆகும். கட்டுமானப் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## அரசு மகளிர் கல்லூரி

*3540—திரு; ந. நஞ்சப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

தருமபுரியில் பெண்களுக்கென தனியாக அரசு மகளிர் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ந. நஞ்சப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, தர்மபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்று மத்திய மாநில அரசுகள் அறிவித்திருக்கின்றன. வளர்ச்சி யற்று இருக்கின்ற அந்த மாவட்டத்தில் பெண்களுக்கென தனி யான கலைக் கல்லூரியைத் தொடங்க அரசு பரிசீலனை செய் யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய மாவட்ட மக்களை முன்னேற்றுவதற்கு கலைக் கல்லூரிதான் ஏற்றதா, தொழில் கல்லூரி ஏற்றதா அல்லது தொழிற்சாலை ஏற்றதா என்பது ஆராயப்பட வேண்டியதாக உள்ளது.

திரு. ந. நஞ்சப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்ம புரி மாவட்டத்தில் படித்த பெண்களின் எண்ணிக்கை 9½ சத விதம்தான். ஆனால் மகளிருக்காக, அவர்களின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து உள்ள இந்த அரசு, தர்மபுரி மாவட்டத்தில் இரண்டே இரண்டு கல்லூரிகள் இருக்கின்ற நிலை மையிலும், வேறு தனியார் கல்லூரிகள் கூட இல்லாத நிலைமை யிலும், மறு பரிசீலனை செய்து இவ்வாண்டே அந்த மாவட்டத் தில் கலைக் கல்லூரி தொடங்க முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மகளிர் 9½ சத விகத்தினர் தான் கல்வி கற்று இருக்கிறார்கள் என்றார்கள். அந்த நிலையில் அதற்கேற்றவழி முதியோர் கல்வியைப் பரவலாக நடத்துவதுதான்.





திரு. வ. முல்லைவேந்தன் ; பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் குறிப்பாக பெண்கள் படிப் பதற்காக வெளி மாவட்டங்களைத்தான் நாடிச் செல்ல வேண் டிய அவலநிலை இருக்கிறது. எனவே கல்வித் துறையின் மூலம் கல்விக்கூடம் அமைக்க நிதி வசதி இல்லை என்றாலும் கூட இந்து சமய அற நிலையத் துறையின் மூலமாகவாவது அந்த இடத்தில் ஏதேனும் ஒரு மகளிர் கலைக் கல்லூரியை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, தாராளமாகப் பரிந்துரைகள் செய்யப்படும்.

டாக்டர் க. காஞ்சனா: பேரவைத் தலைவர் அவர்களே தர்மபுரி மாவட்டம் பின் தங்கிய மாவட்டம் என்பதை அமைச் சர் அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். தர்மபுரி மாவட் டத்தில் கலைக் கல்லூரி அமைக்கலாமா அல்லது தொழில் கல் லூரி அமைக்கலாமா என்று யோசனை செய்து கொண்டு இருப்ப தாகவும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் தர்மபுரி மாவட்டத்தில் தொழில் கல்லூரி அமைக்கப்படுமா? அப்படி அமையும் போது அது கிருஷ்ணகிரியில் அமைக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்குப் பெயரே தர்மபுரி. அந்த மாவட் டத்திற்கு என்று சொல்லிவிட்டு அதற்குப் பின்னால் அதை கிருஷ்ணகிரியில் அமைக்க வேண்டும் என்று சொல்கிறபோது மாவட்டத் தலைநகர் கைவிடப்பட்டது போன்ற ஒரு எண்ணம் ஏற்படும். அந்த மாவட்டத்தில் மகளிர் பாலிடெக்னிக் அதாவது பல தொழில் பயிலகம் ஏற்படுத்த முடியுமா என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திருமதி பாப்பா உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பொதுவாகவே கல்வி, பள்ளிக்கூடம் என்றால் மறுப்புச் சொல்லக்கூடிய முறையில் தான் அடிக்கடி பதில் சொல்கிறார்கள். எனவே என்னுடைய கருத்து என்னவென்றால் இந்த பின்தங்கிய மாவட்டத்தில்

பெண்களுடைய கல்வியை ஊக்குவிக்கக்கூடிய முறையில் அடுத்த ஆண்டிலேயாவது கல்லூரியைத் திறக்க ஏற்பாடு செய்வார்களா ?

''மலைவாழை போலல்லவோ கல்வி
நீவாயார உண்ணுவாய் வாயென்புதல்வி''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''வாயென்புதல்வி'' அல்ல, ''போயென் புதல்வி''.

திருமதி பாப்பா உமாநாத்: அந்த பாரதிதாசனின் பாடலுக்கேற்பவாவது அதற்கான அறிவிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

9-05 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாவேந்தர் பாரதிதாசன் அந்த பாடல் வரியைப் பாடுகிறபோது, அதற்கு எந்தச் செலவும் இல்லை. (சிரிப்பு) நாம் கல்லூரி துவக்குவதாக இருந்தால், குறைந்தது 30 லட்சம் ரூபாய், ஒரு கல்லூரிக்குத் துவக்கத்தில் நிதி தேவை. ஆண்டுதோறும் பல லட்சம் செலவாகும். ஆகவே தான், தொழிற்கல்வியை வழங்குகிற முறையில், பாலிடெக்னிக் ஏற்படுத்தினால், பின்தங்கிய மாவட்டத்தில் தொழிற்கல்வியும் வளரும், மகளிருக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்று அரசு எண்ணிப் பார்க்கிறது.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்களோடு பெண்களும் சம உரிமை பெற வேண்டும் என்றுதான், மகாத்மா காந்தியிலிருந்து, நேருவி லிருந்து, பேரறிஞர் அண்ணாவிலிருந்து, தந்தை பெரியாரி லிருந்து போராட்டம் நடத்தி, அது வெற்றிபெற வேண்டு மென்ற கருத்தை வலியுறுத்தி வருகிறார்கள். ஆண்களும், பெண்களும் ஜனத்தொகையிலும் சரிபாதியாக இருக்கிறார்கள்; ஓட்டு உரிமையை எடுத்துப் பார்த்தால், அதிலும் சரிபாதியாக இருக்கிறார்கள். ஆகவேதான், ஒரு ஆணுக்கு ஒரு பெண் என்று வகுத்து, திருமணம் செய்துகொண்டு வாழ்ந்து வருகின்ற ஒரு வாய்ப்புகூட ஏற்பட்டிருக்கிறது. ஆனால், பல இடங்களில், தமிழகத்தைப் பொறுத்தவரையில்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறீர்கள் ?



திரு. வி. கே. சின்னசாமி : தமிழகத்தைப் பொறுத்த வரையில், ஒரு மாவட்டத்திற்கு 5 கல்லூரிகள் ஆண்களுக்கு என்று இருந்தால், ஒரு கல்லூரி அல்லது ஒன்றுகூட இல்லாத நிலைமை பெண்களுக்கு இருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, ஒரு மாவட்டத்தில் ஆண்களுக்கு 5 கல்லூரிகள் என்றிருந்தால், பெண்களுக்கும் 5 கல்லூரிகளைத் துவக்குவதற்கான வாய்ப்பு தரப்பட வேண்டும் என்ற அடிப்படையை முன்னிட்டு, அதற்கு ஆவன செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்துபேசி, இந்த ஆண்டே கல்லூரிகள் துவக்கப்படும் என்ற அறிவிப்பை அறிவிக்க, அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறான முடிவு செய்து பழக்கப் படாதவன். (சிரிப்பு) மகளிருக்கென்று தனிக் கல்லூரி ஏற் படுத்தினால்தான், மகளிர் படிக்கமுடியும் என்பது, ''ஆண்க ளோடு பெண்களும் சரிநிகர் சமானம்'' என்று பாடுவதற்கு எதிரானது. எனவே, ஆடவர்களுக்கு என்று மட்டும் தனியாகக் கல்லூரிகள் கிடையாது. அந்தக் கல்லூரிகளிலே மகளிரும் தாராள மாகச் சேரலாம். சேர்த்துக் கொள்கிற முறை இல்லையென்றால், சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, கல்லூரியிலிருந்து கொஞ்சம் வேறுபட்டாலும் கூட, இந்த ஆண்டு கல்வி ஆண்டு; ஏற்கெனவே, நம்முடைய மாநிலத்தில் 45 சதவிகிதம் படிக்காதவர்கள். அதிலும், குறிப்பாக, அதிகமாகப் படிக்காதவர்கள் பெண்கள். ஆகவே, இந்தப் படிப்பு அறிவின்மையைப் போக்குவதற்காக கேரளாவிலே, சமீபத்தில் ஓராண்டுக்குள்ளாக அத்தனை பேருமே படிக்கத் தெரிந்தவர்கள் என்ற நிலைக்குக் கொண்டு செல்ல இருக்கிறார்கள்.—நமது மாநிலத்தில் 5 ஆண்டுக்குள் ளாவது, அத்தனை பேருக்கும் முதியோர் கல்வியை, குறிப்பாக பெண்களுக்கு கல்வி கற்பிக்கக் கூடிய ஒரு நிலையை உருவாக்கு வதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலம் முழுவதும் அப்படி நடைபெற்றதாக எந்தவிதமான செய்தியும் இல்லை. ஒரே ஒரு மாவட்டத்தில், ஓராண்டுக் காலம் முயற்சி எடுத்துக் கொண்டு தீவிர முயற்சி காரணமாக, அனைத்து அலுவலர்களும் அந்தப் பணியிலே ஈடுபட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. ஒருவகையான கட்டாயம்கூட இருந்ததாக, மாவட்ட ஆட்சித் தலைவர் தனது குறிப்பிலே தெரிவித்திருக்கிறார். எனவே, வற்புறுத்தலோடு, கூடுமானவரையில், ஒரு மாவட்டத்தில் அது வெற்றி பெற்றிருக் கிறது. ஏறத்தாழ அதைப்போன்ற ஒரு நிலையை கோவை

மாவட்டத்திலே ஏற்படுத்துவதற்கு ஒரு தீவிரமான முயற்சியை அனைத்துத் தரப்பும் சேர்ந்து செய்வதற்கு கடந்த ஆண்டு முயற்சி துவக்கப்பட்டது. என்ன இருந்தாலும், அந்த அளவுக்கு நம்முடைய உழைப்பாளர்களை, தாழ்த்தப்பட்ட மக்களை வற்புறுத்திக் கல்வி கற்கச் செய்ய முடியாது, இருந்தாலும்கூட, ஓரிரு ஆண்டு காலத்திலாவது ஒரு மாவட்டத்தில் முழு வெற்றி, மற்ற மாவட்டங்களில் பெருமளவு வெற்றி என்ற அளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திருமதி ஏ. எஸ்.** பொன்னம்மாள்; : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 5 கல்லூரிகள் ஆண்களுக்கு இருப்பதைப் போல, பெண்களுக்கும் கேட்டார்கள். நான் அப்படிக் கேட்கவில்லை. ஒவ்வொரு மாவட்டத்திற்கும், பெண்களுக்காக—தனியாக, ஒரு கல்லூரியோ அல்லது ஒரு பாலிடெக்னிக்கோ ஆரம்பித்து அரசின் மூலமாக இந்த ஆண்டிலிருந்து நடத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு** டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்கள் கல்லூரியிலே எல்லாம் மகளிரும் படிக்கலாம். மகளிரும் தங்கள் உரிமையை நிலைநாட்ட வேண்டுமானால், ஆண்களுக்குக் கிடைக்கிற இடத்தைத் தான் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். அதைத்தான் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏற்கெனவே சொன்ன போது, ''மகளிர் தங்கள் தங்கள் உரிமைகளை வீட்டில் நிலைநாட்டினால் நாட்டிலே வெற்றிபெறும்'' என்று சொன்னேன் எனவே அந்த முயற்சியிலே நாம் முதலில் ஈடுபடவேண்டும். மற்றொன்று, ஆண்களுக்கென்று கல்லூரி தனியாக அமைக்க இந்த அரசு, என்றைக்குமே நினைத்தது கிடையாது. அந்தக் கல்லூரியில், மகளிருக்கு உரிய இடம், குறைந்தது 30 சதவிகிதமாவது ஒதுக்கப்படும்.

**திரு.** அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் கல்லூரி அமைக்க தனியார் மனு செய்தால், தகுதி இருப்பின், அனுமதி வழங்க அரசு முன்வருமா என அறிய, விரும்புகிறேன்.

**மாண்புமிகு** டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தகுதிகள் என்பது தேவையான அடிப்படையான வசதிகள் செய்வதுடன் நிதிப் பொறுப்பும், அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியுமானால், அந்தக் கல்லூரியிலே பயில்கின்ற மாணவிகளும் பின்னர் கல்வி கற்பதில் எவ்வித இடர்ப்பாட்டிற்கும் ஆளாக மாட்டார்கள் என்பதும் அரசாங்கத்திற்கு ஓரளவு திட்டவட்டமாக உறுதி செய்யப்படுமானால் அவை ஏற்கப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது. அந்தப் பொறுப்புக்களையெல்லாம், ஏற்றுக்கொள்ளக்கூடிய தனியார் அமைப்பு இருக்குமானால், அவர்கள் கல்லூரி துவக்குவது ஏற்றுக் கொள்ளப்படும்.



**திரு. எம். அண்ணாமலை** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் அரூரில் ஒரு பெண்கள் கல்லூரி அமைக்க வேண்டும் என்று மனு கொடுத்ததற்கிணங்க கல்வித் துறையிலிருந்து 5 இலட்சம் ரூபாயும் 40 ஏக்கர் நிலமும் ஏற்பாடு செய்து கலெக்டர் அவர்கள் மூலமாக அனுகும்படி கடிதம் அனுப்பப்பட்டது அரசுக்குத் தெரியுமா ? இதை இப்போது இந்த அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு** டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கடிதம் ஏற்கெனவே அனுப்பப்பட்டதாக இருக்கும். இப்போது எழுதினால் அந்தத் தொகை அதிகமாகும்.

**திரு.** பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அரசு பெண்களுக்கான தொழில் பயிற்சிக் கல்லூரிகள் எங்கெங்கு ஆரம்பிக்க உத்தேசம் ? அதிலே திருவண்ணாமலை இடம்பெற்றிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு** டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 இடங்களில் தொடங்கலாம் என்பது நிதிநிலை அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த 3 இடங்கள் இன்னும் சரியான முறையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்படுகிறபோது இதுவும் ஆய்வு செய்யப்படும்.

**திரு.** கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவில் அவர்கள் அந்த மாநிலம் முழுவதும் எழுத்தறிவு இயக்கத்தை, எழுதப் படிக்கத் தெரியாதவர்களே இல்லை என்ற நிலையை உருவாக்குவதற்கான திட்டம் போட்டு அது தான் எர்ணாகுளம் ஜில்லாவிலே பரிபூர்ணமாக நிறைவேறியிருக்கிறது. நம் தமிழ்நாட்டு அதிகாரிகளும் அங்கே அந்த மாநாட்டிலே பங்கெடுத்திருக்கிறார்கள். அதனுடைய விளைவாக கோவை மாவட்டத்திலே அந்தத் திட்டத்தை அவர்கள் நிறைவேற்ற முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே கம்பல்ஷன் இல்லை. கம்பல்ஷன் இருக்கிறது என்பது சரியாகாது. நேரடியாகவே இந்த விவரங்கள் தெரிந்ததால்தான் சொல்கிறேன். இப்போது இந்த கொஸ்டியன் தர்மபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். சேலத்திலிருந்து பிரிக்கப்பட்டபோது அங்கே கல்லூரி வேண்டுமென்பது இருக்கிறது. 30 இலட்சம் செலவு என்பது உண்மை. அது தெரியும். அது ஒத்துக்கொள்ளக்கூடிய விஷயம்தான். ஆனால், ஒரே அடியாக

ஸ்டார்ட்டிங்கிலேயே 30 இலட்சம் ரூபாய் தேவை இல்லை. அங்கே மகளிர் கல்லூரி உருவாக்குவதற்கு முயற்சி எடுப்பார்களா ? அதுவும் முடியாவிட்டால் ஆண்களும், பெண்களும் படிக்கின்ற ஒரு கல்லூரியாவது உடனடியாக ஏற்பட செய்வதற்கு முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்கள் பயில்கின்ற இந்தக் கல்லூரியிலே மகளிர் சேரக்கூடாது என்று ஒரு தடை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மகளிர் கல்லூரி என்றால்தான் ஆண்கள் சேரத் தடை இருக்க முடியும். கிருஷ்ணகிரியிலே தர்மபுரியிலே உள்ள கல்லூரிகளிலே அப்படி மகளிருக்கு ஒரு தடை இருக்குமானால் அது நீக்கப்படும்.

சில ஊராட்சிகளை வாணியம்பாடி தாலுக்காவிலிருந்து
திருப்பத்தூர் தாலுக்காவிற்கு மாற்றுதல்.

*5465—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

வட ஆற்காடு–டாக்டர் அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குரிசிலாபட்டு, பெருமாபட்டு, இருணாபட்டு, ஆண்டியப்பனூர், மிட்டூர், பூங்குளம் போன்ற ஊராட்சிகளை வாணியம்பாடி தாலுக்காவிலிருந்து திருப்பத்தூர் தாலுக்காவிற்கு மாறுதல் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குரிசிலாபட்டு, பெருமாபட்டு, இருணாபட்டு, ஆண்டியப்பனூர், மிட்டூர், பூங்குளம் போன்ற ஊராட்சிகளை வாணியம்பாடி வட்டத்திலிருந்து திருப்பத்தூர் வட்டத்திற்கு மாறுதல் செய்யும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நீண்ட நாட்களாக இருக்கின்ற ஒரு கோரிக்கை. திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலே அடங்கிய கிராமங்கள் எல்லாப் பணிகளுக்கும்—பத்திரம் பதிவு மற்றும் மின்சாரம், அதேபோல ஊராட்சி ஒன்றியப் பணி இதற்கெல்லாம்—திருப்பத்தூருக்கு வரவேண்டியிருக்கிறது. தாலுக்கா மட்டம் வாணியம்பாடி





இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் 10 ஆண்டுக் காலம், 15 ஆண்டுக் காலமாக கோரிக்கை விடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை அரசு கவனித்து உடனடியாக நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு, அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குரிசிலா பட்டு, பெருமாப்பட்டு, இருணாப்பட்டு, ஆண்டியப்பனூர் மிட்டூர், பூங்குளம் போன்ற ஊராட்சிகளை வாணியம்பாடி வட் டத்திலிருந்து திருப்பத்தூர் வட்டத்திற்கு மாற்றுவதற்கான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. 1991ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் காரணமாக மாவட்டம், வட்டம் மற்றும் வருவாய் கிராமங்களின் ஆட்சி வரம்பில் 1991 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் வரை எவ்வித மாற்றமும் செய்யத் தடை ஆணை அமலில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இதைப் பிரிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களிடம் கூட தனியாகச் சொல்லி ஒரு கடிதம் கொடுத்திருக்கிறேன். இது நீண்டகாலமாக இருக்கும் கோரிக்கை. அந்தப் பகுதிகளில் சில பணிகளுக்கு ஒட்டுமொத்தமாக திருப்பத்தூருக்கு வரவேண்டி இருக்கின்ற காரணத்தினால், தாலுக்காவுக்கு மட்டும் வாணி யம்பாடி போக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கைகளை எண்ணி அமைச்சர் அவர்கள் உடனடியாக இந்த ஆண்டாவது பிரிப்பதற்கு ஏற்பாடு செய்வார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்த அந்தக் கடிதம் என்னிடம் பத்திரமாக இருக்கிறது.

கூடலூர் தாலுக்காவைப் பிரித்தல்.

*8048—திரு. எம். கே. கரீம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுக்காவை பந்தலூர், கூடலூர் என்று இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் [illegible]

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

9-15 மணி

திரு. எம். கே. கரீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் கூடலூர் என்பது தமிழகத்தின் கடைசி எல்லை. அங்கு ஏராளமான வன விலங்குகள் இருக்கின்ற காரணத்தாலும் 1½ இலட்சம் வாக்காளர்கள் இருக்கக்கூடிய பகுதியாக கூடலூர் இருக்கின்ற காரணத்தாலும் அதை இரண்டாகப பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்டுக்கொள்கிறார். வினாவாகக் கேட்டால் தொடர்ச்சியாக வரும். " கேட்டுக் கொள்கிறேன் " என்று கேட்டுக் கொண்டால் அத்தோடு முடிந்து போகிறது.

திரு. எம். கே. கரீம் : அதை ஒட்டி ஒரே ஒரு வார்த்தை சொல்லிவிடுகிறேன். கடந்த 7 ஆம் தேதி 28 வயதான காசியம்மாளும் 9 மாத குழந்தையும் யானை அடித்து இறந்து போய்விட்டார்கள். . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது இரண்டாகப் பிரித்துவிட்டால் யானை அடிப்பது நின்று போய் விடுமா ?

திரு. எம். கே. கரீம் : இது அரசுக்குத் தெரியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எந்த அமைச்சரிடம் கேட்கிறீர்கள். யானை அடிப்பதற்குப் பொறுப்பு யார் ? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : கால்நடை அமைச்சரிடம் கேட்டால் நன்றாக இருக்கும். (சிரிப்பு).

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, நான் கூடலூர் காரனாக இல்லாவிட்டாலும் நீலகிரியைப் பற்றியும், தமிழ் நாட்டைப்பற்றியும் பூராவும் [illegible] எந்த இடத்தில் வேண்டுமானாலும் கேள்வி கேட்கலாம். [illegible] பகுதியில் பெரியதொரு நிலப்பரப்பில் 100, 150 [illegible] தூரம்



இருக்கும் என்று நினைக்கிறேன், அதனுடைய நீளம். அப்படிப் பட்ட பெரும் மலைப்பகுதி, நிர்வாகத்திற்கே வசதி இல்லாமல் அரசு ஊழியர்கள் மிகப் பெரிய இடையூறுகளுக்கு மத்தியிலே போய் செயல்பட வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, நிர்வாக சௌகரியத்தை ஒட்டியும் மக்களுக்கு உடனுக்குடனே தங்களுடைய பிரச்சினைகளை நேரிடையாகக் கொண்டுபோய் அதிகாரிகளிடம் சொல்வதற்கும் வேண்டி நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து, இதறகு என்ன தடை இருக்கிறது என்று சொல்லப் போகிறாரோ தெரியவில்லை, அது எல்லாம் சொல்லாமல் அந்த தாலுக்காவை இரண்டாகப் பிரிப்ப தற்கு முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, முதிர்ச்சியும் பயிற்சியும், பக்குவமும் பெற்ற
மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் ஏதாவது தடை
இருக்கும் என்று அமைச்சர் சொல்லிவிடாமல் என்று பீடிகை
போட்டு தனது கருத்தை தெரிவித்து இருக்கிறார்கள். விளக்கத்
திற்காகச் சொல்லுகிறேன். நீலகிரி மாவட்டத்தில் உள்ள
உதகை மண்டலம் வட்டத்தை பிரித்து குந்தா என்ற புதிய
வட்டம் அமைக்கவும் கூடலூர் வட்டத்தைப் பிரித்து புதிய
பந்தலூர் என்ற வட்டத்தை அமைக்கவும் சிறப்பு ஆணையர்
மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் செயற்குறிப்பு
ஒன்றை அரசுக்கு அனுப்பியுள்ளார்கள். சிறப்பு ஆணையர்
மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரை அரசால்
பரிசீலிக்கப்பட்டது. மக்கள் தொகை, பட்டாதாரர்களின்
எண்ணிக்கை, நிலவரி, குறு வட்டங்கள் மற்றும் கிராமங்களின்
எண்ணிக்கை இவற்றைப் பார்க்கும்போது கூடலூர் ஒரு சிறிய
வட்டமாக மிஞ்சும். எனவே இதனை இரண்டாகப் பிரிக்கத்
தேவை இல்லை என்று கருதப்பட்டது. மற்றும் கூடலூர்
வட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பை சில ஆண்டு
களுக்குத் தள்ளி போடலாம் என்றும் கருதப்பட்டுள்ளது. இம்
மாநிலத்தில் உள்ள 7 பெரிய மாவட்டங்களை பிரித்து அமைக்க
கருதப்பட்டு ஒவ்வொரு மாவட்டங்களாக பிரித்து அமைக்கப்
பட்டு வரப்படுகிறது என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத்
தெரியும். தென்னாற்காடு மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்
களை பிரித்து அமைக்கும் வல்லுநர் குழுவின் அறிக்கை அரசுக்கு
கிடைக்கப்பெற்று ஆய்வில் உள்ளது. எனவே பெரிய மாவட்டங்கள்
பிரித்து அமைக்கப்பட்டவுடன், உடன் பிரித்து அமைக்கப்பட
வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லாத மற்றும் பிரிப்பதை சிறிது
காலத்திற்கு தள்ளி போடலாம் என்று கருதப்படுகிற வட்டங்
களை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.
இறுதியாக வழக்கமாக நான் சொல்வதை திருப்பியும் சொல்
கிறேன். 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்
காரணமாக வட்டங்களின் ஆட்சி வரம்பில் 30—6—1991 வரை
எவ்வித மாற்றமும் செய்ய தடை ஆணை அமலில் உள்ளது
என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1990 ஏப்ரல் 10

பஸ்ஸில் படிக்கட்டில் பயணம் செய்வதைக் கட்டுப்படுத்துதல்.

*2209—திரு செங்கை சிவம் :
டாக்டர் எஸ். சுந்தரராஜ் :
திரு. வ. முல்லை வேந்தன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பஸ்ஸில் படிக்கட்டில் பயணம் செய்யும் பயணிகளைக் கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, பஸ்ஸில் படிக்கட்டில் பயணம் செய்யும் பயணிகளை கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கை எடுக்க மோட்டார் வாகனச் சட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

9-20 மணி

திரு. செங்கைசிவம் : படிக்கட்டிலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே........(சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து சொற்களை வெட்டாதீர்கள். நீங்கள் என்னைப் படிக்கட்டில் நிறுத்தக் கூடாது. (சிரிப்பு).

திரு. செங்கை சிவம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளின் படிக்கட்டுகளில் பயணம் செய்வது குறித்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். காலை நேரங்களில், நெரிசல் நேரங்களில் அலுவலக நேரங்களில் இது தவிர்க்க முடியாமல் போய்விடுகிறது. ஆகவே பாம்பே போன்ற பெரிய நகரங்களில் ஒவ்வொரு நிறுத்தங்களிலும் இன்ஸ்பெக்டர்களை வைத்து அவர்களை ஒழுங்குபடுத்தி பஸ்களிலே ஏற்றுகிற ஒருமுறை இருக்கிறது. அது போலவும், அது மட்டுமல்லாமல் டெல்லி போன்ற பெரிய நகரங்களில் டெல்லி டிரான்ஸ்போர்ட் கார்ப்பொரேஷனில் பஸ்களிலே பின்னாலே இருக்கிற சீட்டுகளை எல்லாம் அகற்றிவிட்டு அங்கே உள்ளே நிறைய பேர்கள் நிற்பதற்கான வழிவகைகளை செய்திருக்கிறார்கள். இதுபோன்ற நிலைமைகளை பஸ்களில் செய்தால் இடமும் ஏற்படும் பஸ்களில் படிக்கட்டுகளில் பயணம் செய்வதையும் நிச்சயம் தவிர்க்கவும் முடியும் என்பதை அரசு அறியுமா? ஆகவே, இந்த யோசனைகளை ஏற்று அரசு நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே படிக்கட்டில்பயணம் செய்வது பெரும்பாலும் பீக் அவர்ஸ் என்று சொல்லப்படுகிற நெருக்கடியான நேரங்களில்தான் நெருக்கமான இடங்களில் நடைபெறுகிறது. இ[illegible] இடங்களில் வேண்டுமென்றே படிக்கட்டுகளிலே பயணம் செய்[illegible] திலே தனி இன்பம் என்று பயணம் செய்கிற சில பேரும் இருக் கிறார்கள். என்றாலும் நெரிசலான நேரங்களில்தான் இப்படி பயணம் செய்வது அதிகமாக இருக்கிறது' என்பதை அரசாங்கப் உணர்ந்ததற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய ஆலோசனைகளையெல்லாம் பல்லவன் போக்குவரத்துக் கழகங் களில் இருக்கிற நெரிசலைப் போக்குவற்காக இரண்டு மா[illegible] களுக்கு முன்னாலே கேட்கப்பட்டு அந்த அடிப்படையிலே[illegible] பள்ளி நேரத்தை மாற்றி அமைத்தால் இந்த நெரிசலை தவி[illegible] லாம் என்ற யோசனையும் பேசப்பட்டு அது அரசாங்கத்[illegible] ஆய்வில் இருக்கிறது. அடுத்து மற்ற மாநில பேருந்துகளி[illegible] இருப்பதைப் போல பின் பகுதி சீட்டுகளை எடுத்துவிட்டு பயண[illegible] கள் நிற்பதற்கான இட வசதியை செய்யலாம் என்ற யோசனை யும் சொன்னார்கள். அதேபோலத்தான் சமீபத்திலே ஒரு மா[illegible] காலத்திற்கு முன்பு பல்லவன் போக்குவரத்து கழகத்தில் பக்கட களிலே இருக்கக்கூடிய சீட்டுகளில், 2 பக்கத்திலேயும் ஒருவர் மட்டுமே வரிசையாக உட்காரக் கூடிய வகையில் இருக்கைகள் அமைக்கப்பட்டு, பேருந்துகளின் மத்தியில் இரண்டு வரிசை களில் பயணிகள் நிற்பதற்காக வசதிகள் செய்யப்பட்டு அப்படிப் பட்ட பேருந்து ஒன்று யக்கப்பட்டு வருகிறது. அதற்கு பெரிய வரவேற்பும் நகரத்தில் இருக்கிற காரணத்தால் மற்ற நெரிசல் பகுதிகளிலேயும் அப்படிப்பட்ட பேருந்துகளை விரிவாக் கம் செய்வதற்கு பல்லவன் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை கையை மேற்கொள்ளும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிக்கட்டுகளில் நின்று பயணம் செய்வதை தடுக்க கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இட நெருக்கடி காரண மாகத்தான் இவ்வாறு படிக்கட்டுகளில் நின்று பிரயாணம் செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகவே அவ்வாறு உள்ள வழித் தடங்களில் அதிகமான பஸ்கள் விடப்படுமா. அவ்வாறு படிக் கட்டுகளில் நின்று பிரயாணம் செய்யும்போது பிரயாணிகள் இறக்க நேரிட்டால், சட்டத்திற்குப் புறம்பாக நின்று கொண்டு வந்தாலும், தவறி இறக்க நேரிட்டாலும் அவர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, நெருக்கடியை தவிர்ப்பதற்காகத்தான் என்னென்ன நடவடிக்கை களை எடுக்கிறோம் என்பதைப் பற்றி முன்னாலேயே நான் குறிப்

பிட்டிருக்கிறேன். அப்படி விபத்து ஏற்பட்டு உயிரிழக்கக்கூடிய நிலைமைகள் இருக்கிற காரணத்தினால் தான் சட்டம் கடுமை யாக்கப்பட்டு அப்படி தவறான பயணம் மேற்கொள்ளப்படக் கூடாது என்று அரசு அறிவித்து வருகிறது.

9-25 மணி

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, பேருந்துகளின் படிக்கட்டுகளில் பயணம் செய்யும் பயணிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எப்படிப்பட்ட கடுமை யான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் விளக்கு வாரா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1988 ஆம் ஆண்டில், இந்திய மோட்டார் வாகன சட்டப் பிரிவு 177-ல் முதல் தடவையாக இந்தக் குற்றத் தைச் செய்தால் 100 ரூபாய் அபராதமும், இரண்டாவது அல்லது மூன்றாவது முறையோ அல்லது அதற்கு மேலாகவோ இந்தக் குற்றத்தைத் தொடர்ந்து செய்தால் ரூபாய் 300 வரை அபராதம் விதிக்கலாம் என்று சட்டத்திலே வழிவகை செய்யப்பட்டிருக் கிறது.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளின் படிக்கட்டுகளில் பயணம் செய்வ தன் காரணமாக கடந்த 3 மாதக் காலத்தில் விபத்துக்கு ஆளானவர்கள் எத்தனை பேர் ? இறந்தவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்தவர்கள் அல்லது காயப்பட்டவர்கள் எண்ணிக்கை பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், படிக்கட்டில் நின்று பயணம் செய்த குற்றத்திற்காக 1987 ஆம் ஆண்டில் 681 வழக்குகளும்; 1988 ஆம் ஆண்டில் 9,889 வழக்கு களும், 30-6-1989 வரையில் 3,046 வழக்குகளும் பதிவு செய்ய பட்டுள்ளன.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிக்கட்டுகளில் பயணம் செய்கிறபோது இப்படிப் பட்ட விபத்துக்கள் நிகழக் காரணம் படிக்கட்டு ஒப்பனாக திறந் திருப்பதுதான். மாறி வருகிற விஞ்ஞான யுகத்தில், பயணிகள் ஏறும்போது ஆட்டோமெட்டிக்காக கதவுகள் திறந்து, பயணிகள் உள்ளேபோனதும் ஆட்டோமெட்டிக்காக மூடக் கூடிய வசதி யுள்ள பேருந்துகள் பல மாநிலங்களில் அறிமுகமாகியுள்ள நிலை



யில் அத்தகைய வசதிகளை நம்முடைய ஒவ்வொரு போக்குவரத் துக் கழகப் பேருந்துகளிலும் அறிமுகப்படுத்த அமைச்சர் முன் வருவாரா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெரிசலைக் குறைப்பதாலே பெரும்பாலும் இந்தக் குறைகள் சரி செய்யப்படவும், நிலைமைகள் மாறிடவும் வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும் உறுப்பினருடைய கருத்தும் பரிசீலிக்கப்படும்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிக்கட்டில் பயணம் செய்வதால் ஏற்படும் விளைவு கள் குறித்தும், நெருக்கடியான நேரங்களில் அதிகமாக பேருந்து கள் விடுவது பற்றியும் ஆய்வு நடத்தப்படுவதாக அமைச்சர் இங்கே சொன்னார். திருப்பூரில் நான் பார்த்துக் கொண்டிருக் கும் நிலைமையைப் பொருத்தவரையில் படிக்கட்டின் முன் பகுதி மற்றும் பின் பகுதியில் சுமார் 25 பேருக்கு மேல் பயணம் செய்யும் நிலைமை இன்றையதினம் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. ஆகவே, திருப்பூர் போன்ற பெரிய தொழில் நகரங்களைப் பொருத்தமட்டிலும், அப்படிப்பட்ட ஆய்வில் ஈடுபடுவதற்கு முன்பே, ஒவ்வொரு பேருந்திலும் 200க்கு மேற்பட்ட பயணிகள் பயணம் செய்கின்ற நிலைமை இருப்பதால், அமைச்சரவர்கள் சற்று முன்னுரிமை கொடுத்து, நெருக்கடி நேரங்களில் அதிகப் பேருந்துகளை விடுவதோடு, பெண்களுக்கு என்று நெருக்கடியான நேரங்களில் தனியாகப் பேருந்துகளை விடுவது குறித்து நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரைப் பொறுத்தவரையில் கடந்த வாரம் உறுப்பினர் அங்கே இருக்கக் கூடிய நிலைமைகளைப் பற்றி எல்லாம் நேரில் எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பிறகு சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழக அதிகாரிகளிடம் ஆலோசனை செய்து மே மாதம் இறுதிக்குள் திருப்பூரில் இருக்கிற நிலைமைகளை, நெருக்கடிகளைக் குறைக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். முத்தையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பஸ்ஸிலே [illegible] [illegible] இருப்பதோடு, பஸ்ஸிலும் மரியாதையாகவும் [illegible] நடத்துகிறார்கள்..... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களும் படிக்கட்டில் போகும் சூழ்நிலை இருக்கிறதா? (சிரிப்பு).

திரு. எலி. ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளில் பயணம் செய்கின்றபோது பயணி களுக்கு ஒலிநாடா மூலம் பாடல்கள் போடப்படுகின்றன. அத் தகைய பாடல்கள் பால் உணர்வுகளைத் தூண்டும் அளவுக்கு ஆபாசப் பாடல்களாக இருக்கின்றன. இதை அரசு அறியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொடர்பற்ற வினா.

புதிய வழித் தடங்கள் ஏற்படுத்துதல்.

*3774—திரு. எம். முகமது சித்திக் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம், பூம்புகார் சென்னை (வழி-பொறையார், மங்கைநல்லூர், மயிலாடுதுறை, பாண்டி); பூம்புகார்-திருச்சி (வழி—பொறையர்ர், மங்கைநல்லூர், மயிலாடுதுறை); தரங்கம்பாடி-சென்னை (வழி-பொறையார், மங்கைநல்லூர், மயிலாடுதுறை) புதிய வழித்தங்டகள் ஏற்படுத்தப் படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக மயிலாடுதுறை, நாகப்பட்டிணம் போன்ற இடங்களுக்குப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனது தொகுதியிலுள்ள பயணிகள், சென்னை, மதுரை போன்ற தொலைவு தூரம் செல் லும் பயணிகள், மயிலாடுதுறையில் இறங்கி அங்கிருந்து மாட்டு வண்டி அல்லது வாடகைக் கார் மூலம், ஊருக்குச் செல்லும் நிலைமை இருக்கிறது. இதனால் பணிகள் மிகவும் கஷ்டம் அடைகிறார்கள். அதுமட்டுமல்லாமல், எனது தொகுதியிலே ஏராளமான அயல்நாட்டுப் பயணிகள் வரும்போது, லக்கேஜுடன் மயிலாடுதுறையில் இறங்கும்போது, வீட்டுக்குச் செல்லக் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்தினை மயிலாடுதுறையிலிருந்து செம்பனார்கோவில், சங்கரம்பந்தல், பொறையார் வழியாக நாகப்பட்டிணம் செல்ல மாற்று ஏற்பாடு செய்யப்படுமா? அதோடு வெளிநாடுகளிலிருந்து, விமானப் பயணிகள்...... (மணியடிக்கப்பெற்றது).



9-30 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் வினாவிற்கு விடை, மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த வழித் தடத்தில் பயணம் செய்கின்ற பயணிகளுடைய விகிதாச்சாரம் குறைவாக இருக்கிற தென்று கணிக்கப்பட்டதன் காரணமாக அந்தப் பேருந்துகள் விடுவதற்கு இயலாத சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, மீண்டும் அது சர்வே செய்யப்பட்டு, தேவைப்படின் பேருந்து களை விடலாம்.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக விடப்படும் விரைவுப் பேருந்துகளில் பயணம் செய்ய திரிசூலம் விமான நிலையத்தில் ஒரு ரிசர்வேஷன் கவுண்டர் அமைத்து, விமான நிலையத்திலிருந்து இறங்கிச் செல்கின்ற லட்சக் கணக்கான பயணிகள் அங்கேயிருந்து அவரவர்கள் இல்லங் களுக்குச் செல்ல வசதி செய்து தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூல வினாவிற்குத் தொடர்பற்றது.

குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள்.

*2640ஏ—திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சுற்றுலாத் துறையினரால் சுற்றுலாப் பயணிகளுக்கு குற்றாலத்தில் என்னென்ன வசதிகள் மேற்கொள்ளப்படவிருக் கின்றன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 7.97 இலட்சம் செலவில் சுற்றுலாத் துறையின் மானியத்தால் கட்டப்பட்டு, நகரியத்தினால் நிர்வகிக்கப்பட்டு வரும் 'அருவி இல்லத்தை' தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் எடுத்துக்கொண்டு, அதனை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தவிர, ''மல்லிகை இல்லத்தையும்'' தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் எடுத்துக் கொள்ளும் கருத்துருவும் பரிசீலனையில் உள்ளது. மேலும், கூடுதலாக ஒரு சுற்றுலா விடுதியும் இங்கு கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1990 ஏப்ரல் 10

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குற்றாலத்திலே குளிப்பதைத் தவிர வேறு பொழுதுபோக்கு ஒன்றுமில்லை. ஆகவே திருக் குற்றலாத்திலிருந்து ஐந்தருவி வரையிலே சென்று வருவதற்கு சிறுவர்கள் இரயில் ஒன்று விடப்படுமா ? இரண்டாவதாக, சீசன் காலத்திலே, 3 மாதங்களுக்கு ஒலி-ஒளிக் காட்சியை அங்கே அமைக்கும் உத்தேசம் அமைச்சரவர்களுடைய சுற்றுலாத் துறைக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற 5 அருவிகளில், ஏனைய அருவிகளையும் சேர்த்துச் சொல்கிறேன், சிற்றருவி, லோயர் பால்ஸ் ஆகிய அனைத்து அருவிகளிலும் குளித்தாலே நேரம் போய்விடும். அதற்குமேலே ஒலி-ஒளிக் காட்சி அமைக்கும் திட்டம் இப்போது இல்லை. சிறுவர் இரயில் விடும் திட்டமும் இப்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறன்.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய குற்றாலம் பகுதிகளிலே தங்கு வதற்கான குடில்களும் இல்லை, தங்குகின்ற விடுதிகளும் இல்லை. ஆகவே குளிக்கப் போகின்றவர்களுக்கு இங்கே தங்குகின்ற விடுதி களையும், குடில்களையும் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: அவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்று, நிச்சயமாக அந்த வசதிகள் அங்கே செய்து தரப்படும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்ந்த, வனப்புடன் விளங்கிய சிறுவர் பூங்காவானது ஒளி இழந்து பராமரிக்கப்படாமல் இருக்கிறது. அது சீரமைக்கப் பட்டு நல்ல முறையில் பராமரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

9-35 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுவர் பூங்கா சுற்றுலாத் துறையினுடைய பராமரிப்பில் இல்லை. நகரியத்தினுடைய பராமரிப்பில் இருக் கலாம் என்று கருதுகின்றேன். அது பற்றி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தான் பதில் அளிக்க வேண்டும் என்று கருதுகிறேன்.

சுற்றுலா மையம்.

* 4526—திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



1990 ஏப்ரல் 10]

(அ) கோவை மாவட்டம் உடுமலையை அடுத்துள்ள திருமூர்த்திமலை, பஞ்சலிங்கம் நீர்வீழ்ச்சிப் பகுதியை சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோவை மாவட்டத்தில் உடுமலையை அடுத்துள்ள திருமூர்த்திமலை பஞ்சலிங்கம் நீர்வீழ்ச்சிப் பகு தியை சுற்றுலா மையமாக ஆக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்காக ஏற்கெனவே 3 1/2 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமூர்த்திமலையில் பஞ்சலிங்கம் நீர்வீழ்ச்சியும், திருக்கோவிலும் இருக்கின்றது. நீண்டகாலமாக இது சுற்றுலா மையமாக அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இப்போது அமைச்சர் அவர்கள் $3\frac{1}{2}$ இலட்சம் ரூபாயை அதற்குப் பூர் வாங்கமாக ஒதுக்கீடு செய்து இருப்பதாகச் சொன்னார்கள். இது கோவை மாவட்டத்தில் ஒரு முக்கியமான இடம். ஆண்டுதோறும் இந்த நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்கு வரக் கூடிய மக்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடு இல்லாத காரணத் தினாலேயே தொடர்ந்து பலர் நீர்வீழ்ச்சியில் மூழ்கி இறந்து விடுகிறார்கள். ஆகவே கூடுதலாக விடுதிகளைக் கட்டித் தரவும் சுற்றுலாப் பயணிகளுக்கு உண்டான நல்ல வாய்ப்புகளை உரு வாக்கித் தரவும் அமைச்சர் அவர்கள் மேலும் பல வாய்ப்புகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, மேலும் சுற்றுலா விடுதிகளைக் கட்டினால் அங்கே செல்கின்ற பயணிகள் அருவியிலே விழுந்து சாவதைத் தடுக்க முடியும் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அந்த இடத்தை நான் சென்று பார்த்து இருக்கிறேன். அது நல்ல இடம்; பசுமையான இடம். அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அவ்வப்போது விடுமுறை நாட்களிலே, வார இறுதியிலே, ஞாயிற்றுக்கிழமைகளிலே அங்கு சென்று தங்கி இருந்து கொஞ்ச நேரம் பொழுது போக்க வசதியான நல்ல இடம். ஆகவே அங்கு வருகின்ற பயணிகளுக்கு வசதியைச் செய்வதற்கு நிச்சயமாக வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும். ஆனால் அந்த விபத்தைப் பொறுத்தவரையில், குளிக்கின்றபோது திடீரென்று அருவியிலே அதிகம் தண்ணீர் வந்து, வெள்ளம் வந்து அதன் காரணமாக சில விபத்துக்கள் ஏற்பட்டு மரணம் ஏற்படுகின்றது என்று நான் அறிகின்றேன். அதற்கு பொதுப்பணித்துறை மூலமாக அல்லது வனத் துறை மூலமாக செக் டாம் உயரமான அந்தப் பகுதியில் கட்டி, அதன் மூலமாக தண்ணீர் வருவதை ரெகுலேட் செய்தால் நிச்சயமாக அப்படிப்பட்ட விபத்துகளைத் தடுக்க முடியும் என்று நான் கருதுகின்றேன்.

திரு. பு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, பயணிகள் குளிக்கும்போது திடீரென்று வெள்ளம் வந்தாலும் கூட எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் இருக்கின்றது. திருக் குற்றாலத்திலே கூட குளிப்பதற்கு அவர்களை வரிசைப்படுத்து வதற்கு தடுப்புச் சுவர்கள், பாதுகாப்பு ஏற்பாடுகள், உடை மாற்றுவதற்கு உண்டான ஏற்பாடுகள், தங்குவதற்கு விடுதி ஏற்பாடுகள் எல்லாம் இருக்கின்றது. ஆகவே திருமூர்த்தி மலையிலும் அதுபோன்ற ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்பதை நான் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடத்தில் வலியுறுத்துகிறேன். அவர்கள் அண்மையில் அந்த இடத்தைப் பார்வையிட்டு இருக்கிறார்கள். மேலும் அறநிலையத் துறை அமைச்சர் பொறுப்பும் அவர்களிடத்திலே இருக்கின்ற காரணத் தினாலே பஞ்சலிங்கேஸ்வரர் திருக்கோயிலும் அங்கே இருக்கிறது; திருமூர்த்திமலை அணையும் அங்கே இருக்கிறது. நீர்வீழ்ச்சியும் அங்கே இருக்கிறது—ஆகவே கூடுதலான நிதியை ஒதுக்கீடு செய்து எல்லா வாய்ப்புகளையும் உருவாக்கி அதை இரண்டாவது குற்றாலமாக உருவாக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் இருக்கிற குற்றாலத்திற்கு அடுத்து, கோவை மாவட்டத்தில் இன்னொரு குற்றாலம் இருக்கிறது. அதற்கு கோவைக் குற்றாலம் என்று சொல்வார்கள். ஆகவே நம்முடைய உறுப்பினர் அவர்கள் இரண்டாவது குற்றாலத்தை உருவாக்க வேண்டுமென்று சொல்வது கோவைக் குற்றாலத்தை உருவாக்க வேண்டுமா அல்லது திருமூர்த்தி மலையில் உள்ள— அருவியை மேம்படுத்த வேண்டுமா என்பதை நான் அவர்களிடம் இருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இருந்தாலும் கூட அங்கு வருகின்ற பயணிகளின் வசதிக்காக விடுதிகள் கட்டப்படும். அந்த அருவியில் வெள்ளம் வரும்போது அங்கே இருப்பவர்களை அடித்துச்செல்வதைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டப்படும் என் பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: மாண்புமிகு தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் அமைச்சர் அவர்கள் பேசும்போது குறிப் பிட்டார்கள்; திருமூர்த்தி நீர்வீழ்ச்சியைப் போன்று தான் தொண்டாமுத்தூர் தொகுதிக்கு உட்பட்ட கோவை சிறுவாணியில் கோவைக் குற்றாலம் என்று ஒரு நீர்வீழ்ச்சி இருக்கின்றது. கோவை மாவட்டத்திற்கு ஒரு பொழுது போக்கும் இல்லாத சூழ்நிலையில் அதை முதலிலே செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



9-40 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விடையில் வேண்டுமானால் கோவைக் குற்றாலத்தைச் சேர்க்கலாம். வினா தொடர் பற்றது.

ஊராட்சி ஒன்றிய இடங்குகளில் அரிசி இருப்பு குறைவு.

*467—திரு. கே. ஆர். இராமசாமி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பசும்பொன் தேவர் திருமகள் மாவட்டத்தில், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (என்.ஆர்.ஈ.பி.) ஊரக நிலமற்றோர் வேலை உறுதி திட்டம் போன்றவற்றிற்கு வழங்கப்பட்டிருக்கும் அரிசி, ஊராட்சி ஒன்றிய கிடங்குகளில் இருப்பில் இருக்கும் அரிசி இருப்பு பதிவேட்டில் காணப்படும் அளவைவிட குறைவாக இருப்ப தால், அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் (மற்றும்) ஊரக நிலமற்றோர், வேலை வாய்ப்பு உறுதித் திட்டங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அரிசி மற் றும் கோதுமையும் இருப்பில் குறைவாக உள்ளது. இக்குறைபாட் டிற்குக் காரணமான அலுவர்களிடமிருந்து தொகையை வசூலிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது மாவட்டத்திலே எந்தெந்த ஊராட்சி ஒன்றி யங்களிலே இவ்வாறு குறைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் காளையார்கோயில். சாக்கோட்டை, கல்லல் தலைவர் அவர்களே, இளையாங்குடி, திருபத்தூர் சிங்கம்புணரி, கள்ளங்குடி, சிவகங்கை, மானாமதுரை, திருபுவனம்.

திரு. கே. ஆர். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அத்தனை ஊராட்சி ஒன்றியங்களிலேயும் அவர்களே, அநேகமாக அமைச்சர் கூறுகிறார். இது போலக் குறைவு ஏற்பட்டிருப்பதாக என்னவென்பதை அமைச்சரவர்கள் தமிழகத்தினுடைய நிலை இந்தத் தவறுகளைச் செய்த அதிகாரிகள் அறிய வேண்டும். மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்குமா? சுமார் இரண்

டாண்டுகள் ஆகியும், இதுவரையும் நடவடிக்கை எடுத்ததாக நான் அறியவில்லை. இதற்கு உடனடியாக இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆட்சி வந்ததற்கு முன்னாலே, 89-க்கு முன்னால் நடைபெற்ற நிகழ்ச்சிகள். அது தொடர்ந்து எல்லா மாவட்டங்களிலும் இருக்குமா என சந்தேகப்பட்டுத்தான் Zonal Officer-ஐ விட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

கல்லுப்பட்டி பேரையூர் சாலை

*2072—திரு. ஆ. அதியமான் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாவட்டம், கல்லுப்பட்டி-பேரையூர் நெடுஞ்சாலையை அகலப்படுத்தவும், செப்பனிடவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

அரசின் நிதி நெருக்கடியால் அண்மையில் எடுத்துச் செய்யும் வாய்ப்பில்லை.

சேலம் பேரூர் பாதையை அகலப்படுத்துதல்.

*3253—திரு. செ. பெருமாள் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலத்திலிருந்து அயோத்தியாபட்டினம் வழியாக பேரூர் செல்லும் பாதையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

இல்லை.

திரு. செ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலத்திலிருந்து அயோத்தியாபட்டினம் வழியாகப் பேரூர் செல்லும் பாதை குறுகிய பாதையாக இருப்பதால், இப்பொழுது வாகன வசதிகள் பெருகிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அந்த விபத்துக்களைத் தடுப்பதற்கு இந்த அரசு முன் வந்து அந்தப் பாதையை அகலப்படுத்தும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இந்தப் பாதையை அகலப்படுத்துவதற்குச் சுமார் 70 இலட்சம் ரூபாய் செலவு ஆகும். ஆகவே, தற்போதுள்ள நிதிநிலை அடிப்படையில் அதைப் பராமரித்துக் கொண்டு இருக்கிறோமே தவிர அதை அகலப்படுத்துவதற்கு, பலப்படுத்துவதற்கு இப்பொழுது இந்த ஆண்டு வாய்ப்பு இல்லை.

திரு. செ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது நடக்கிற ஆட்சியில் கிராமப் பகுதிகளில் சாலைகளைச் சீர்படுத்தவேண்டும் என்பதை மனத்திற்கொண்டு பல திட்டங்களைத் தீட்டியிருக்கின்றார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் தாங்கள் செய்தால் இந்த அரசுக்கு நல்ல பெருமை கிடைக்கும் என்பதைக் கூறிக்கொண்டு, இந்தத் திட்டத்தை நீங்கள் மிக விரைவில் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதை மனத்திற்கொண்டு கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை மேற்கொண்டு அதை அரசு நடத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, கிராமச் சாலை திட்டத்திற்கு ஒதுக்கப்படுகின்ற நிதி வேறு. இது. MDR (Major District Road)க்கு ஒதுக்கப்படுகிற பணம் வேறு. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தைக் கவனத்திற்கொண்டு நிதிநிலைமைக்கேற்ப அரசு இதை செய்ய முன்வரும்.

கொள்ளிடம் குடிநீர்த் திட்டம்

*3324—திரு. க. சொ. கணேசன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) மின் அழுத்தம் குறைவு காரணமாக கொள்ளிடம் குடிநீர்த் திட்டம் சரிவர செயல்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதிக மின் அழுத்தம் உள்ள மோட்டார் பொருத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

(அ) கொள்ளிடத்திலிருக்கும் கோடாலிகருப்பூர் குடிநீர்த் திட்ட 11 கே. வி. உயர் மின் அழுத்த மின் இணைப்பு (Switch end)-இல் மின் அழுத்தக் குறைவு ஏதுமில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

[1990 ஏப்ரல் 10]

திரு. க. சொ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடத்திலிருந்து ஜெயங்கொண்டத்திற்கு குடிநீர்த் திட்டம் 1975ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதிலே பொருத்தியிருக்கின்ற மின் மோட்டார் 40 குதிரைத் திறன் கொண்ட மின் மோட்டார் ஆகும். இப்பொழுது அந்தக் கொள்ளிடம் குடிநீர்த் திட்டத்தில் மேலும் பத்தாயிரம் மக்கள் தொகை கொண்ட, உடையார்பாளையம், வான திரையன்பட்டினம் ஆகிய கிராமங்களையும் பேரூராட்சிகளையும் இணைத்திருக்கின்றார்கள். ஆகவே, அதில் பொருத்தப்பட் டிருக்கின்ற 40 குதிரைத் திறன் கொண்ட மின் மோட்டார் அதற்குப் பற்றாக்குறையாக இருக்கிறது. ஆகவே, 70 குதிரைத் திறன் கொண்ட மின் மோட்டாரைப் பொருத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

9-45 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர்த் திட்டத்தை குடிநீர் வடிகால் வாரியம்தான் பராமரித்துக் கொண்டிருக்கிறது. அதற்குத் தேவையான மோட்டாரை மாற்றியமைப்பது குடிநீர் வடிகால் வாரியத்தின் வேலை. மூலக் கேள்வி மின் அழுத்தம் குறைவாக இருக்கிறதா என்பதுதான். இல்லையென்பது தான் அதற்குப் பதில்.

திரு. க. சொ. கணேசன் : தலைவர் அவர்களே, இப்போது மின் அழுத்தம் குறைவாக இருக்கிற காரணத்தால், மோட்டா ருடைய திறனும் குறைவாக இருக்கிற காரணத்தால், வேறு ட்ரான்ஸ்பார்மரை மாற்றும் உத்தேசம் அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இதுவரையில் மின் அழுத்தம் அந்தப் பகுதியில் குறைவாக இருக்கிறது என்று எந்த ஆதாரமான செய்தியும் வரவில்லை. அதிகாரிகள் இதுபற்றி ஆய்ந்து பார்த்தார்கள். இன்னும் சொல்லப்போனால் அவர் குறிப்பிடுகிற ''அந்த ஃபீடர் லைன்'' டாப்பிங் இல்லாமல், மறிக்காமல் ஓடுகிற, இடை வழியில் மின்சாரம் எடுத்துக்கொள்கிற இடர்ப்பாடு இல்லாமல் போகிற ஒன்றாகும். ஆகவே, எந்தக் காரணத்தைக் கொண்டும் மின் அழுத்தக் குறைவு அங்கே இல்லை. அவர்கள் குறிப்பிடுவது, இடையில் சில நாட்கள் பம்பிங் மோட்டார் கெட்டுப் போயிருந்தது. அதை வாட்டர் போர்டே சரிசெய்துவிட்டார் கள். இப்பொழுது எந்தப் பிரச்சினையும் இல்லை.



1990 ஏப்ரல் 10]

நாமக்கல்லில் புறவழித் திட்டம்.

*6734—திரு. வீ. பெ. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நாமக்கல்லில் புறவழித் திட்டம் எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

நாமக்கல்லில் புறவழிச்சாலை அமைக்கும் பணி மத்திய சாலை நிதித் திட்டத்தில் (C.R.F.) சேர்ப்பதற்கு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : தலைவர் அவர்களே, நாமக்கல் நகரம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இந்த நெடுஞ் சாலை கன்னியாகுமரியையும், பெங்களூரையும் இணைக்கிற சாலையாக இருக்கிறது. நாமக்கல் நகரத்தில் மட்டும் 4,000 லாரிகள் இருக்கின்றன. நகரத்தில் போக்குவரத்துப் பிரச்சினை என்பது ஒரு பெரும் பிரச்சினையாகி இருப்பதாலும் சாலை விபத்துகள் நிறைய நடப்பதாலும், அங்கே வசிக்கிற மக்களுடைய மாமூல் வாழ்க்கை கெடுகிற சூழ்நிலை இருக்கிறது. எனவே, மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி விரைவில் அந்த புறவழிச்சாலை அமைய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டுதான் நாமக்கல்லுக்கு புறவழிச்சாலை அமைக்க வேண்டுமென்று இந்த அரசு நினைத்து, அதற்காக உத்தேச மான ஒரு மதிப்பீட்டைத் தயாரிக்க வேண்டுமென்று முற் பட்டது. அத்தகைய புறவழிச்சாலை அமைக்க 343 லட்சம் உத்தேசமாக செலவாகும் என்று கணித்து அந்த முடிவை 23—3—1989 அன்று மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. மத்திய அரசிலிருந்து அது குறித்து ஒரு திட்டவட்டமான முடிவு தெரிவிக்கப்பட்டவுடன், மேற்கொண்டு இந்த அரசு அந்தப் பாதையை அமைக்க ஆவன செய்யும்.

திரு. வீ. பெ. துரைசாமி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தலைவர் அவர்களே, அந்தப்பகுதி மக்க ளுடைய நீண்டகால கோரிக்கையாக அது இருக்கிறது. லாரி

உரிமையாளர்களுடைய, அந்தச் சங்கத்தினுடைய நீண்டகால கோரிக்கையாகவும் அது இருப்பதால், அதனை அவசர, அத்தியா வசிய கோரிக்கையாக அரசு ஏற்று, இதனை ஒரு ஸ்பெஷல் கேசாக ட்ரீட் செய்து, மத்திய அரசை வலியுறுத்தி, விரைவில் இந்தப் புறவழிச்சாலை அமைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அரசு விரைந்து இந்தச் சாலையை அமைக்க எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும்.

பாளையங்கோட்டையில் தொழிற்பேட்டை அமைத்தல்.

* 5040—திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பாளையங்கோட்டையில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மகளிர் மேம்பாட்டுக் கழகம்.

* 6480—திருமதி பாப்பா உமாநாத் :

திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையில் செயல்பட்டுவரும் மகளிர் மேம்பாட்டு கழகத்தின் தொழில் துறைகளில் பணிபுரியும் பெண்களின் ஊதியத்தை உயர்த்திட அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி. பாப்பா உமாநாத் : தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள அச்சகம், சிவகாசியில் உள்ள அச்சகம் ஆகியவற்றில் பணிபுரிகிற தொழிலாளர்களுக்கு குறைந்த





பட்ச கூலிச் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள ஊதியம் வழங்க வேண்டுமென்றும், இது தொடர்பான நிலுவைகளைத் தரவேண்டும் என்றும், இது சம்பந்தப்பட்ட அதிகாரி, துணை ஆணையர் தீர்ப்பு வழங்கியுள்ளதை அரசு அறியுமா? அந்த குறைந்தபட்ச கூலிக்குச் சமமான ஊதியத்தை அங்கே பணிபுரியக் கூடிய மகளிருக்கும் அரசு வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

9-50 மணி

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு மன்றத்திலே அப்படிப் பட்ட தீர்ப்பு வழங்கப் பட்டதை அரசு அறியும். ஆனால் அந்தத் தீர்ப்பு விசாரணைக்கு வருவதற்கு முன்பு அதிகாரிகள் வழக்கு மன்றத்திற்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார்கள் இந்த வழக்கு விசாரணையை மறு தேதிக்கு ஒத்திவைக்குமாறு கேட்டுக் கொண்டிருந்தும்கூட, அரசு அதிகாரிகள் கலந்து கொள்ளாமல் அந்த விசாரணை நடைபெற்று எக்ஸ்-பார்ட்டி யாக தீர்ப்பு கிடைத்திருப்பதை கருத்தில் கொண்டு, மீண்டும் அரசு அந்த வழக்கை நடத்த முடிவு எடுத்திருக்கிறது. தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் நடத்தப்படுகிற இந்த அச்சக மற்றும் தச்சுப் பொருட்கள் உற்பத்தி செய்கின்ற இந்த நிலையங்கள் தொழிற்கூடங்களாக அமைக்கப்படாமல் வெறும் பயிற்சி நிலையங்களாகத்தான் தொடங்கப்பட்டன. பொருளாதாரத் துறையில் பின்தங்கியிருக்கிற மகளிருக்கு அச்சுப் பணி மற்றும் தச்சுப் பணிகளில் பயிற்சி அளித்து அவர்களுக்கு வேலைவாய்ப்பை வேறு பகுதிகளிலே உருவாக்கிக் கொடுக்கின்ற நோக்கத்தோடு மத்திய மாநில அரசுகளின் நிதி உதவியோடு தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் முதலில் பயிற்சி முடிந்ததற்குப் பிறகு, அவர்களை வேறு துறையிலே பயிற்சிக்கு அமர்த்தாமல் அந்தப் பயிற்சி மையத்திலே தொடர்ந்து வேலை கொடுத்துக் கொண்டு இருப்பதன் காரணமாக அவர்கள் எதிர்பார்க்கிற அந்த குறைந்தபட்ச ஊதியத்தை அந்தத் துறையால் கொடுக்க இயலவில்லை. இருந்தாலும் கூட, கடந்த ஆட்சி யிலே அவர்கள் செய்த அந்தத் தவறின் காரணமாக தொடர்ந்து அவர்களுக்கு முதலிலே தந்துவந்த 200 ரூபாய் மானியம், பயிற்சிக் காலத்திலே தரப்பட்ட மானியம், மீண்டும் 259 ஆக உயர்த்தப்பட்டது. அதற்குப் பிறகு 285ஆக உயர்த்தப்பட்டு, இப்போது 325 ரூபாய் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் மகளிர் மேம்பாட்டுக் கழகத்திற்கு 6 லட்சம் ரூபாய் வரையில் நஷ்டம் ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசிய நேரத்தில். அங்கே பணியாற்றுகிற பெண்களுக்கு அரசு அச்சகங்களில் வேலைவாய்ப்பு உருவாக்கித் தரப்படும். அதற் கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்

தனைத் தொடர்ந்து, அது பரிசீலிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. எனவே தற்போது ஊதியத்தை உயர்த்துகிற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திருமதி ராணி நல்லதம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேம்பாட்டுக் கழகத்தில் பணியாற்றுகிற பெண்களிலே ஏறத்தாழ 100-க்கு அதிகமானவர்கள் ஊனமுற்றவர்களாகவும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்களே, அதைக் கருத்தில் கொண்டாவது அவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்புக்கான அந்த ஓர்க்கிங் கண்டிசன்களை எல்லாம் நன்றாக மாற்றிக் கொடுத்து ஊதியத்தை நியாயமான முறையில் நிர்ணயம் செய்து அவர்களுக்கும் சமநீதி வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைபெற்றுக் கொண்டு இருக்கிற ஒரு தொழிற்கூடம் அல்ல. இது ஒரு பயிற்சி நிறுவனம். பயிற்சி முடிந்ததற்குப் பிறகு, அந்தப் பெண்களை வெவ்வேறு துறைகளிலே பணியில் அமர்த்துவதற்கான ஏற்பாட்டைக் கடந்த காலத்தில் செய்து இருக்கவேண்டும். அவர்கள் செய்யத் தவறியதினுடைய விளைவு, பயிற்சி பெற்ற இடத்திலேயே தொடர்ந்து அந்தப் பெண்கள் 60 பேர்கள் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு இருக்கிற நிலையை உணர்ந்துதான் அவர்களை அரசுத் துறையில் வேறு அச்சகங்களில் பணியிலே அமர்த்திக் கொள்வதற்கான பரிசீலனையை இந்த அரசு இன்றைக்கு மேற்கொண்டு இருக்கிறது.

## வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு இருதய நோய் சிகிச்சைப் பிரிவு

* 4005—**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு இருதய நோய் சிகிச்சைப் பிரிவு வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்தலக்குண்டு மலையையொட்டி இருக்கிறது. மலையிலே ஆக்சிடெண்டான கேஸ்கள், கொடைக்கானல் மலைப் பகுதியிலே அந்த இருதய நோய்ப்பட்டவர்களை, இங்கே கீழே எடுத்துக்கொண்டு வருவதற்கு மிகவும் சிரமம் அடைகிறார்கள். மதுரைக்குக் கொண்டு வருவதற்குள்ளாக அந்த உயிரே போய்விடுகிறது. ஆகையினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, இந்த முக்கியமான விஷயத்தை ஆராய்ந்து அங்கே மறுபடியும் அதை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதெல்லாம் இருதயப் பிரிவு சிகிச்சை முறைகள் மாவட்டத் தலைநகரங்களிலே மட்டுமே கொடுக்கப்பட்டு வருகின்றன. இப்போது மதுரை மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டதால், தாலுகா மருத்துவமனையாக இருந்த பெரியகுளம் அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையாக உயர்த்தப்பட்டது. ஆகவே, முதலிலே பெரியகுளத்திலே இது போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான கருத்துரு இப்போது அரசுக்கு வந்துள்ளது. ஆகவே மாவட்டத் தலைநகரங்களில் மட்டுமே இப்போது செய்கின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளது. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை இப்போது இருக்கிற நிதிநிலையில் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளத்தை மதுரை ஜில்லாவோடு இணைத்து விட்டார்கள். நாங்களோ திண்டுக்கல்-காயிதே மில்லத் ஜில்லாவிலே இருந்து கொண்டு இருக்கிறோம். ஆகையினாலே, திண்டுக்கல் ஜில்லாவிலே இருக்கிற எங்களுக்கு அந்தப் பகுதியிலே வரக்கூடிய அந்த ஏழைகள் பாதிக்கப்படுகின்ற காரணத்தால்—இதற்கு ஒன்றும் அதிகமாகச் செலவில்லை—ஆகையினாலே இங்கே முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள்—ஆகையினாலே அதிகம் செலவு இல்லாத அளவிற்கு இந்த மன்நோய், அதாவது இருதய நோய்ச் சிகிச்சைப் பிரிவை மறுபரிசீலனை செய்து ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1990 ஏப்ரல் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோயில் என்ன இவ்வளவு பெரிய தடுமாற்றம் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி. பேரவைத் தலைவர் அவர்களே, இருதய நோய் சிகிச்சைக்கு அதிகமான செலவில்லை என்று தவறான குறிப் பைக் கொடுக்கிறார்கள். அதை ஆரம்பிக்கவேண்டும் என்று சொன்னால், முதலிலே, ஐ.சி.சி. யூனிட்டை ஆரம்பித்து, அதற்குப் பிறகுதான் அதை வளர்ப்பதற்கான வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன. அவர்களுடைய மாவட்டத் தலை நகரம் திண்டுக்கல்லாக இருக்குமானால், அந்தத் திண்டுக் கல்லிலே, மாவட்டத் தலைநகரத்திலே ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர்

*5913 திரு. க. பழனிசுவாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், பூலாம்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட கிராமங்களுக்கு உலக வங்கியின் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் மூலமாக குடிநீர் வழங்கும் திட்டம் இப்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

9-55 மணி

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91-ல் இத்திட்டம் எடுத்துக்கொள்ளப் படுவதாக அமைச்சரவர்கள் குடிநீர் வழங்குகின்ற ஆலோ சனை கூட்டத்தில் சொல்லப்பட்டது அதையொட்டி அமைச்சரவர்கள் இத்திட்டத்தை எடுத்துக்கொள்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நடைமுறையில் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். இப்பேரூராட்சியின் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்துவதற்காக



1990 ஏப்ரல் 10]

சுமார் ரூ. 62 இலட்சம் செலவில் ஒரு மதிப்பீடு தயாரிக் கப்பட்டு வருகின்றது. ஆகவே அரசினுடைய நிதிநிலை குறித்து இந்த ஆண்டு அதை செயல் திட்டத்திலே சேர்த்துக் கொள்வதற்கான முயற்சியை அரசு எடுக்கும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தை எடுத்துக்கொள்கிறபோது அதை ஒட்டினாற்போலுள்ள சித்தூர், வெள்ளரிவெள்ளி, ஆடையூர், இடுப்பாலை போன்ற ஊராட்சிகளும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பின ருடைய கருத்துக்களை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 8338 மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப் பட்டுள்ளது.

கோழி நோய் தடுப்பு ஆராய்ச்சி நிலையம்

*3367—திரு. ஏ. சுப்பு :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், இராசிபுரத்தில் கோழி நோய் தடுப்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாட்டம் ராசிபுரம் வட்டாரத்தில் பொதுமக்கள் கோழிப் பண்ணைகளை வைத்து குடிசைத் தொழிலாக நடத்திக் கொண்டு பயனடைந்து வருகிறார்கள். சில நேரங்களில் திடீரென்று கோழிகளுக்கு நோய் வந்து அவை

இறந்துவிடுகின்றன. அவைகளைத் தடுப்பதற்கு உடையாக ஒரு கோழி நோய் தடுப்பு ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சேலம் மாவட்டம் நாமக்கல்லில் ஒரு கோழி நோய் ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகின்றது. ஒரு மையத்தைப் புதியதாக ஆரம்பிக்க வேண்டுமென்றால் அதிகமான செலவு ஏற்படும். நாமக்கல்லுக்கு அருகாமையிலேயே ராசிபுரம் இருக்கின்ற காரணத்தினால் அந்த நாமக்கல்லில் இருக்கின்ற கோழி நோய் ஆராய்ச்சி நிலையத்தின் மூலமாக அந்த பண்ணையாளர்கள் பயனடையலாம் என தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலூரில் கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் அலுவலகம்

*6547—திரு. க. வெ. வீ. ராசமாணிக்கம் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், மேலூரில் முன்பு இயங்கி வந்த கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் அலுவலகம் மீண்டும் அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. வெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேலூர் தொகுதியில் சேக்கிப்பட்டியிலே ஒரு தீவிர கால்நடை அபிவிருத்தி செயற்கை உறை கருவூட்டு விற்பனை நிலையம் கடந்த 20 ஆண்டுகளாக இருந்தது. இப்போது அது காலாவதியாகிவிட்டது என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது என்பதை கவனத்திற்குக் கொண்டுவருவதோடு, இதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை வினா தொடர்புடையதாக இல்லாத காரணத்தினால் தனி வினா எழுப்ப வேண்டுகிறேன்.



திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஐ. ஆர். டி.பி. திட்டத்தின் கீழ் அதிகமான கால்நடைகள் அங்கே வழங்கப்பட்டிருக்கின்ற வேளையிலே, இந்த செயற்கை உறை கருவூட்டு விற்பனை நிலையத்தை—மருத்துவ அலுவலகத்தை திறக்க அரசு கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா தொடர்புடையதாக இல்லாத காரணத்தினால் அதற்கு தக்க பதிலளிக்க இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, தனியாக வினா எழுப்பினால் அதற்குத் தகுந்த பதிலளிக்க இயலும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினா எண் 9445 மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பெறுகிறது.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

**(அ) தமிழ்நாட்டு மீனவர்கள் விடுதலைப் புலிகளால் இலங்கைக்கு கடத்தப்பட்டுள்ளது தொடர்பான செய்திகள் பற்றி அரசுக்குக் கிடைத்துள்ள விவரங்கள் குறித்து**

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு இலங்கைப் பிரச்சினையில் மீனவர்கள் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் பார்த்து விட்டு வந்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக அவர்கள் பார்த்து விட்டு வந்ததற்குப் பின்னால் அங்கே இருக்கின்ற நிலைமையையும், அதை மாற்றுவதற்கு அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

அடுத்து பொறியியல் கல்லூரியில் வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)

10–00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இது தொடர்பானதா?

திரு. குமரி அனந்தன் ; மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கோடிக்கரையிலே நமது மீனவர்களை விடுதலைப் புலிகள் கடத்திச் சென்றிருக்கிறார்கள் என்கிற தகவல். அதைப் போல புதுக்கோட்டையிலே இருந்து 107 படகுகளை எடுத்து தங்களுடைய யாழ்ப்பாணத்திற்கு பக்கத்திலே இருக்கிற ஒரு சின்னஞ்சிறு தீவிலே கொண்டு போய் அதில் இருக்கிற மீன்களை வைத்திருக்கிறார்கள் என்று செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. அங்கே அப்படி கொண்டு போனவர்களை அவர்கள் தாக்கினார்கள் என்ற செய்தியும் பத்திரிகையிலே வந்திருக்கிறது. கோடிக்கரையைப் பொறுத்த வரையில் நமது கப்பற்படை நமது இயந்திரப் படகுகளிலே வந்து புலிகளை தடுத்து நிறுத்துவதற்கு முயன்றபோது அவர்கள் அங்கு கடல் பகுதியிலே கடற்கரைப் பகுதியிலே ஆழம் இல்லாத பகுதியிலே ஷேலோ வாட்டர்ஸ் என்ற அதற்குள்ளே வந்து தப்பி விட்டார்கள் என்ற செய்தியும் வந்திருக்கிறது.

நமது மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புவது கடல் எல்லையை தாண்டி நமது மீனவர்கள் போகிறார்கள் என்று சொன்னால் சுற்றிலும் தண்ணீர் இருக்கிற பகுதியிலே எது நமது எல்லை எது இன்டர்நேஷனல் வாட்டர். என்று தெரியாத போது அவர்கள் கடத்திச் செல்லப்படுகிறார்கள், துன்புறுத்தப்படுகிறார்கள் என்று சொன்னால் மீனவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படுகிறது என்பது மட்டுமல்ல, நமது கடற்கரை எல்லையிலேயே அவர்கள் தப்பி விடுகிறார்கள் என்று சொன்னால் நமது கடற்கரைப் பகுதியே பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே இந்தியாவே பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது என்று பார்க்கிற போது நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே சென்றார்கள், அடிபட்டவர்களுக்கு ஆறுதல் சொன்னார்கள் என்ற தகவல் கூட வந்திருக்கிறது. அவர்களுடைய எல்லையிலே போய் நமது மீனவர்கள் தெரியாமல் மீன் பிடித்து விட்டால் கூட ராணுவத்திற்கு புலிகள் உதவி செய்வார்களானால் தெரிந்தே கடலைக் கடந்தும் நமது தமிழகத்திற்கு உள்ளேயே புலிகள் இருக்கிறார்களே அவர்களை எல்லாம் நாம் என்ன செய்யப் போகிறோம் என்பது பற்றியெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுக்கிற அறிக்கையையோ அல்லது அமைச்சர் மூலமாக மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் தருகிற அறிக்கையையோ நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து நேரில் அறிந்து வர அந்தத் துறையினுடைய அமைச்சர் அனுப்பப்பட்டிருக்கிறார்





என்று நேற்றைய தினம் சொன்னேன். அவர் இன்று தான் வந்து சேர்ந்திருக்கிறார். அது குறித்து அறிக்கை தயாராகிக் கொண்டிருக்கிறது. அவரோடு நான் கலந்து பேசி நாளைய தினம் முழு விவரத்தை இந்த அவைக்கு அளிப்பதாக உறுதி கூறுகிறேன். அதற்கிடையே கடல் எல்லை எது என்று தெரியாத ஒரு சூழ்நிலை இருப்பதாக நேற்றைய தினம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இன்றைக்கு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள். இது நீண்ட காலமாக, மத்தியிலே அரசுகள் இருந்தாலும் கூட, அந்த அரசுகள் அப்படி ஒரு எல்லையை வகுத்துத்தர வேண்டிய பொறுப்பிலேயிருந்து தவறி விட்டார்களா என்ற கேள்விக்கு நாம் விடை காண வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒரு வேளை அந்த எல்லை வகுக்கப்பட்டு அது தெரியாமலோ அல்லது மீறியோ நமது மீனவர்கள் அங்கு சென்றார்களா என்பதும் அறிந்து கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இந்த அரசு இருப்பதைப் போலவும், விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே எதிர் தரப்பிலே உள்ளவர்கள் பேசுவதைப் போலவும் ஒரு சூழ்நிலை உருவாவது நல்லது அல்ல. விடுதலைப் புலிகளுடைய தலைவரும் கூட இந்தியாவோடு நாங்கள் நேசமாக இருக்கத்தான் விரும்புகிறோம் என்று பேட்டி அளித்து அது பத்திரிகையிலே வந்திருக்கிறது. டைம்ஸ், இண்டர்நேஷனல் போன்ற பத்திரிகைகளிலேயும் கூட அந்தப் பேட்டி விரிவாக வெளியாகியிருக்கிறது.

இது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாவண்ணம் நமது மீனவர்கள் எல்லையைத் தாண்டிச் செல்லாமல் இருக்க எல்லை எது என்பது குறித்து இனிமேலாவது, இந்தப் புதிய மத்திய அரசாவது அதை நிர்ணயிக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க நாம் முயற்சிக்க வேண்டும். இன்றைய தினம் நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் டெல்லியிலே நடைபெறுகிற மாநாடுகளிலே கலந்து கொள்ள என் சார்பிலே செல்லுகிறார்கள். அப்படி செல்லும் போது தகவல்களை, விவரங்களை எல்லாம் அங்குள்ள தொடர்புடைய அமைச்சர்களிடத்திலே பேசி அது குறித்து ஆவன செய்வதற்கு முயற்சிகளை அவர்களும் மேற்கொள்ளுவார்கள். அதைப்பற்றி, அவரிடத்திலே நான் மாலையிலேயே செல்லுவதற்கு முன்பு பேச இருக்கிறேன். எனவே நேற்று அமைச்சர் சென்று சேகரித்த விவரங்களை நாளைய தினம் தொகுத்து இந்த அவைக்குத் தருவேன் என்ற உறுதியை அளிக்கிறேன்.

**(ஆ) வருவாய்த் துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.**

திரு. கே. ரமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு வருவாய்த் துறை ஊழியர்களுடைய போராட்டம் 20 நாட்களுக்கு மேலாக நடை பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை தாங்கள் அறிவீர்கள். இந்தப் போராட்டத்தின் விளைவாக அரசுக்கும் ஊழியர்களுக்கும் மக்களுக்கும் கஷ்டங் கள் ஏற்படுகிறது என்பதும் ஒரு உண்மை. நாமெல்லாம் அறிந்த உண்மை.

10–05 மணி

அந்தப் பேச்சுவார்த்தைக்கு அவர்களைக் கூப்பிட்டுப் பேச வேண்டும் என்று பல தடவை நாங்களும், குறிப்பாக நானும், நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலே வேண்டிக் கொண்டோம். அவரும் பேச்சு வார்த்தையை ஆரம்பித்து, 2 தடவை பேச்சு வார்த்தை நடந்தது. திடீரென்று ஸ்டிரைக்கைக் கைவிட்டால்தான் பேச்சு வார்த்தை என்ற ஒரு நிலை துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்டு, அதன் விளைவாக அந்தப் பேச்சு வார்த்தை நின்று போய் விட்டது. உடனடி யாக அவர்களைக் கூப்பிட்டு வைத்துப் பேசினால், நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் ஆழமாகத் தலையிட்டுப் பேசினால் தீர்க்க முடியாத பெரும்—தாண்ட முடியாத மலைகள் இருப்பதாக எனக்குப் படவில்லை, எனவே அப்படிப்பட்ட ஒரு அணுகு முறையோடு, அவருடைய இலாக்கா, அவருக்குக் கீழே இருக்கின்ற ஊழியர்கள், அவர்களை எந்த நேரத்திலும் அவர்கள் கூப்பிட்டு வைத்துப் பேசுவதற்கு சகல உரிமைகளும் உண்டு, செய்யவும் முடியும். அந்த முறையில் இனி இப்படிப் பட்ட ஒரு சஸ்பென்ஸ் நிலைமையை நீடிக்காமல் அவர்களை உடனே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு கூர்ந்து கூப்பிட்டுப் பேசி ஒரு முடிவைக் காண்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர் களே, இந்த வருவாய்த் துறை பிரச்சினைக்காக நேற்று முன் தினம் 78-வது விதியின் கீழ் ஒரு விவாதத்தை எழுப்ப வேண்டும் என்று உங்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறேன். ஆனால் இன்றைக்கு எதிர் பாராத விதமாக இதை அனுமதித்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு அந்தப் போராட்டம் ஒரு வலுவான சூழ்நிலைகள் ஏற்பட்டு, மறியல் என்ற அளவிற்கு ஆகி, கைது செய்யப்படுகிற நிலைமை கள் ஏற்பட்டு, அவர்கள் காவல் துறையினாலே கொடுமைப் படுத்தப்படுகிற நிலைமைகள் உருவாகி விட்டன. எனவே,





இந்த நிலைமைகள் எல்லாம் மீண்டும் அந்தப் போராட்டத்தை அதிகமாக வலுப் பெறுகிற அளவுக்கோ அல்லது இந்தப் போராட்டம் பரவுகிற நிலைமை ஏற்படுவதற்கோ அரசு அனு மதிப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆனால், அரசின் மூலம் வரு வாய்த்துறை அமைச்சர் அவர்களின் அணுகு முறை, எங்களுக்கு சரியாக இருக்கிறது, எப்போதும் கதவு திறந்தே இருக்கிறது என்று கதவை மூடாத நிலையில் அவர் பேசிக் கொண்டிருக் கிறாரே தவிர, பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கொஞ்சம் உடனடியாக அவர்களிடத்திலே எந்தப் பிரச்சினையாக இருந் தாலும் மனம் திறந்து கொஞ்சம் பேசி, அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலமாக தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற, இன்றைக்கு வருவாய்த் துறை என்று சொல்கிற ஒரு அத்தியாவசியமான துறையிலே இருக்கிற 15,000 ஊழியர்கள் என்று சொல்கிற நேரத்தில் எவ்வளவு பெரிய (குறுக்கீடு) அத்தியாவசியம் இல் லையா ? (குறுக்கீடு) எனவே, அந்த நிலையிலே அவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். ஆளுங் கட்சியிலே இருக்கிற நண்பர் சீனிவாசனுக்கு இது அத்தியாவசியம் இல்லையென் றாலும் கூட, நாட்டு மக்களுக்கு இது ஒரு அத்தியாவசியமான துறையாக இருக்கிறது. எனவே, அத்தியாவசியமான அந்தத் துறையிலே ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். அதன் மூல மாக பல்வேறு பொது மக்கள் பயன் பெறுகிறார்கள். எனவே, அந்த வகையில் இந்தப் பிரச்சினையை விரைவில் இன்றே, தீர்ப்பதற்கு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே......

**மாண்புமிகு பேரவை தலைவர்:** ஒருவருக்கு வாய்ப்புக் கொடுத்தால் எல்லோரும் "Mention" க்கு எழுந்து பேசுவது எப்படி முறையாகும்? இப்படித்தான் போய்க் கடைசியில் கொஞ்சம் இறுக்கமாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது. ஏற்கெனவே பேசியாகி விட்டது. (குறுக் கீடு) அவர் விதி 78-லே கொடுத்திருக்கிறார், திரு. ரமணி அறையிலே கொடுத்திருக்கிறார், இது குறித்து அமைச்சரிடம் சொல்லப்பட்டிருக்கிறது, அதனாலே இரண்டு பேருக்கும் அனு மதி கொடுத்தேன். (குறுக்கீடு) இப்படி தொடர்ந்து எல்லோ ரும் விவாதத்திலே இறங்கினால் எப்படி அவையை நடத்த முடியும்? (குறுக்கீடு) எப்போது கொடுத்திருக்கிறீர்கள், சொல்லுங்கள். இது தொடர்பாகவா, என்ன எண் என்று சொல்லுங்கள்.

[1990 ஏப்ரல் 10

திரு. சோ. அழகர்சாமி : மூன்று நாளைக்கு முன்னாலே கொடுத்தேன். அரை மணி நேர விவாதம் அதிலே வேண்டும் என்பதற்காகக் கொடுத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "Mention"—க்கு ஒரு வாய்ப்புக் கொடுக்கப்பட்டது, எல்லோரும் பேசுவது என்று ஆரம்பித்தால் எப்படி அவையை நடத்த முடியும்? அமைச்சர் பதில் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டார். அமருங்கள்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும், வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பாக நாம் எல்லாம் வேதனைப்படுகின்ற அளவிற்கு, அனைத்துத் துறைகளுக்கும் தொல்லைகள் ஏற்படுகின்ற அளவிற்கு அந்த மறியல் நடைப்பெற்றுக் கொண்டியிருப்பது நமக்கெல்லாம் தெரியும். இதுகுறித்து அரசின் நிலை என்ன எஃபதைப் பற்றி விளக்கமாக இன்றைய தின ஏடுகளில் விரிவாக வந்திருக்கின்ற அறிக்கைகளையும், அவை உறுப்பினர்கள் படித்திருக்கக்கூடும், என்று நான் நம்புகின்றேன். கதவு திறந்தே இருக்கிறது. எப்போதும் தாராளமாக, எனது வருவாய்த்துறையைச் சார்ந்த அன்பு நண்பர்கள் வரலாம், கலந்து பேசலாம். நீங்கள் அதற்கு ஏற்பாடு செய்து அவர்களோடு பேசுங்கள் என்று நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் எனக்குக் கட்டளையும் இட்டிருக்கிறார்கள். மகிழ்ச்சியோடு நான் தெரிவிக்க விரும்புகின்றேன். இந்தத் துறையில் மறியலில் அல்லது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டியிருக்கின்ற அணிக்குத் தலைமை தாங்குகிற தலைவர்கள் அவர்களாகவே விருப்பம் தெரிவித்து, இன்று

10-10 மணி

11-30 மணிக்கு என்னை எனது அறையில் சந்திக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். நிச்சயமாக எனக்கு நம்பிக்கை இருக்கிறது, இன்றோடு அந்தப் போராட்டம் கைவிடப்படும் என்று நான் நம்புகிறேன். அந்த அளவுக்கு அவர்களும் ஒத்துழைப்பார்கள். நான் மனம் விட்டுப் பேச வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். 30, 35 ஆண்டு காலமாக என்னைப் புரிந்த திரு. இராதா





போன்ற நண்பர்கள் நான் மூடி மறைத்து பேசிப் பழக்கப்பட்டவன் அல்ல என்பதை தெரிந்த பிறகும் அந்த வார்த்தையை பயன்படுத்தியதற்காக நான் வருந்துகிறேன். 11-30 மணிக்கு நான் அவர்களை கலந்து பேசியதற்குப் பிறகு என்ன பேசிக் கொண்டோம் என்பதை மாண்புமிகு முதலைமச்சர் அவர்களுக்கு தெரிவித்து அதன் அடிப்படையில் கருத்துக்களை இந்த மாமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டும். இன்றைக்கு டெல்லி செல்கிற காரணத்தால் நான் இருக்க மாட்டேன். அந்த பொறுப்பை எப்போதும் ஒப்படைக்கின்ற இடமாகிய முதல் அமைச்சரிடம் நான் ஒப்படைக்கின்றேன் என்பதையும் தெரிவித்துக் கொண்டு பேச்சு வார்த்தைக்கு என்னை அனுமதியுங்கள் என்று உங்களது அனுமதியைப் பெற்று நான் விடைபெறுகிறேன். வணக்கம்.

(இ) பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் பிரேக் சிஸ்ட முறையை எதிர்த்து நடத்தும் போராட்டம் குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பொறியியல் கல்லூரியில் அனைத்துக் கல்லூரிகள் என்று சொல்லாவிட்டாலும் கூட சில கல்லூரிகளில் இன்றைக்கு தேர்வு முறையில் சில மாற்றங்கள் வேண்டும் என்பதற்காக தேர்வு நடைபெறுகிற நேரத்தில் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த வேலை நிறுத்தம் 10, 15 நாட்களாக நடைபெற்ற காரணத்தால் மாணவர்களுக்கு தொல்லைகள் ஏற்படுகிறதோ இல்லையோ பெற்றோர்கள் தரப்பிலிருந்து தங்களுக்கு மிகப் பெரிய தொல்லையாக இருக்கிறது. இந்த வேலை நிறுத்தம், இது களையப்பட வேண்டும் என்பதற்காக பல்வேறு பெற்றோர்கள் கடிதங்கள் மூலமாக, தந்திகள் மூலமாக தெரிவித்து இருக்கிறார்கள். இது பல்கலைக் கழகத்திற்கு உரிய பிரச்சினை இல்லை என்று சொன்னாலும் அரசின் சார்பில் பல்கலைக் கழகத்திற்கோ, அல்லது சம்பந்தப்பட்ட கல்லூரிகளுக்கோ இந்த வேலை நிறுத்தப் நீக்கப்படுவதற்கு ஏதேனும் நல்ல முறையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொள்கை பிரச்சினை என்று வருகிற போது கொஞ்சம் பிடிவாதமாக இருப்பார்கள். அந்த கொள்கைகளை விடவேண்டும் என்று நிச்சயமாக நான் வற்புறுத்த மாட்டேன். ஆனால் தேர்வு முறையில் அவர்கள் அணுகுகிற முறையில் மாணவர்களாகிய அவர்கள் தெரிந்தோ, தெரியா

[திரு. எஸ். ஆர். இராதா] ·[1990 ஏப்ரல் 10

மலோ சில கோரிக்கைகளை வைத்து அதற்காக வேலை நிறுத்தம்
என்ற முறையில் தேர்வு நேரத்தில் நடந்து கொண்டிருக்கிறது.
ஆனால் நான் நேற்றைக்கு வேலூரில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்
சிக்குச் சென்ற நேரத்தில் வேலூரில் இருக்கிற பொறியியல்
கல்லூரியில் அந்த வேலை நிறுத்தம் நடைபெறவில்லை என்று
சொன்னார்கள். அங்கே இருக்கிற நிர்வாகத்தைச் சேர்ந்தவர்
கள் அந்தக் கல்லூரி மாணவர்களை அழைத்து இந்த முறைகளை
மாற்றுவதற்கு பல்கலைக் கழகமும் எடுக்க வேண்டிய
முடிவுகள் இருக்கின்ற காரணத்தால் தேர்வு பாதிக்கப்படக்
கூடாது என்று சொல்லி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்
கள் கலந்து பேசியதன் காரணமாக அங்கே அந்த வேலை நிறுத்
தம் தவிர்க்கப்பட்டிருக்கிறது. எனவே அந்த வகையில்
இந்த வேலை நிறுத்தம் தவிர்க்கப்படுவதற்கும், உடனடியாக
இந்த நிலையை மாற்றுவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக்
கேட்கிறேன்.

* மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
இப்போது எழுப்பிய அந்தப் பிரச்சினை குறித்து நேற்றைய தினம்
காலை 11 மணி அளவுக்குக் கவன ஈர்ப்பு என்ற முறையில் ஒரு
குறிப்பினை என்னிடத்திலே கொடுத்தார்கள். அந்தக் கவன
ஈர்ப்பு முறையாக கவனத்தை ஈர்த்து எங்கிருந்து பதில் வர
வேண்டுமோ அங்கே அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் பதில்
இன்னும் எனக்கு கிடைக்கவில்லை. காரணம் இது இந்த அரசைப்
பொறுத்த நேரடியான பிரச்சினை அல்ல. பல்கலைக் கழகக்
கல்வி முறையைப் பற்றிய ஒரு பிரச்சினை. ஏன் என்றால்,
இந்தத் தேர்வு எழுத வேண்டாம் என்று கேட்கிற சில மாணவர்
கள், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் பிரேக் சிஸ்டம் என்று
இருக்கிற அந்த முறையைக் கைவிட வேண்டும் என்று கேட்
கிறார்கள். பாலிடெக்னிக் அளவில் பிரேக் சிஸ்டம்
முறையைக் கைவிட வேண்டும் என்று கேட்டபோது அது ஏற்கப்
பட்டது. பாலிடெக்னிக், பல்கலைக் கழகப் படிப்பு வரன்
முறைக்கு உட்பட்டது அல்ல. மேலும் பாலிடெக்னிக்கில்
படிக்கிற மாணவர்கள் ஒரு தொழில் கல்வி என்ற முறையில்
ஓரளவு தேர்ச்சி குறைவாக இருந்தாலும் கூட, அவரவர்கள் சில
தொழில்களை தாங்களே தொடங்கி நடத்தக் கூடிய நிலை
உள்ளது. தாங்களே தொழில் தொடங்கிவிட்ட பின்னர்
தகுந்த தேர்ச்சியைத் தாங்களே தேடிக்கொள்கிறார்கள். எனவே
அங்கு தேர்வில் வெற்றி பெறாவிட்டாலும் அந்தத் தேர்ச்சி
அவரவர்கள் தேடிக்கொள்ளக் கூடிய ஒன்று என்ற ஒரு எண்ணத்
தில் அங்கே இருந்த பிரேக் சிஸ்டம் நீக்கப்பட்டுவிட்டது.
ஆனால் பல்கலைக் கழகப் படிப்பு என்பது பட்டம் வழங்குவதற்
கான படிப்பாக இருக்கிற காரணத்தால், அந்தப் படிப்பில் தகுந்த



1990 ஏப்ரல் 10] [டாக்டர் க. அன்பழகன்]

தேர்ச்சியை உடனுக்குடன் பெறாவிட்டாலும் கூட முதல் ஆண்டு
பெற வேண்டிய தேர்ச்சியை இரண்டாம் ஆண்டுக்குள் பெற்று
முடித்தால்தான் மூன்றாம் ஆண்டுக்குச் செல்லலாம் என்பது
போல் வைத்து இருக்கிற முறையில் ''இட் இஸ் நாட் டோட்டல்
பிரேக்'' படிக்கட்டுக்கள் முறையான பிரேக் தான் இப்போது
இருக்கிறது. முதல் படிக்கட்டில் வெற்றி அடையாவிட்டாலும்
மூன்றாவது படிக்கட்டுக்கு வருகிற போதாவது முதல் படிக்கட்டில்
வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்பது போன்ற சில விதிகள்
இருக்கின்றன. பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் அவர்
களுக்கு மாணவர்களின் வேண்டுகோள் அனுப்பப்பட்டு இருக்கிறது.
இருந்தாலும் பல்கலைக் கழகத் துணை வேந்தர் ஒரு முறை
என்னைக் காண்கிற போது துணை வேந்தரே கூடத் தனியாக
இவைகளைப் பற்றி முடிவு எடுக்க முடியாது என்று கூறினார்.

10-15 மணி

நான் கூட ஆலோசனைதான் வழங்க முடியும். படிப்புக்
காகக் கல்வியின் தரத்தைக் கூடுமான வரையில் ஒழுங்குபடுத்து
வதற்காக இருக்கிற அக்கடமிக் கவுன்சில்தான் இந்த மாற்றம்
பற்றி ஏற்றுக்கொள்ள வேண்டும். இது அங்கும் ஆலோசிக்கப்
பட வேண்டிய ஒன்றாக இருக்குமே தவிர உடனடியாக ஏற்றுக்
கொள்ள முடியாது.

அதே போல் பொறியியல் கல்லூரி மாணவர்கள்
எல்லோரும் எல்லா இடத்திலும் பிரேக் சிஸ்டம் கூடாது என்று
கேட்கவில்லை. சில கல்லூரிகளில் சில மாணவர்கள் இந்தத்
தேர்வு வருகிற நேரத்தில் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு
இருக்கிறார்கள். உடனடியாக என்ன செய்ய முடியும் என்று
எங்களால் தெரிவிக்க முடியவில்லை என்று பல்கலைக் கழகத்
துணை வேந்தர் தெரிவித்தார். ஒருவேளை அதற்குப் பின்னர்
ஏதேனும் அவருடைய எண்ணங்களில் மாற்றம் இருக்கிறதா
அல்லது ஏதேனும் செய்யக் கூடியது இருக்கிறதா என்பது
இன்றைக்கு என்னால் சொல்ல முடியாததாக இருக்கிறது.

அதைவிட முக்கியமாக சுய நிதிக் கல்லூரியில் சேர்ந்து பயில்
கின்ற மாணவர்கள்தான் அவர்களில் ஒரு குறிப்பிட்ட ஒரு சாரார்
அந்த சுய நிதிக் கல்லூரியில் அவர்கள் பெற்ற பயிற்சி போதாது
என்ற காரணத்தால், நாங்கள் பயிற்சி பெற்றோமோ இல்லையோ
மேல் வகுப்புக்கு அனுப்பப்பட வேண்டும் என்று கேட்கக்கூடிய
ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அதைப் பல்கலைக் கழகம்
எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியும் என்பதைப் பார்த்துத்
தான் தீர்மானிக்க முடியும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

## 3. கவன ஈர்ப்பு

### பேரூராட்சிகளிலும் ஊர் நலப் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. சம்சுதின் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்திலுள்ள கிராமப் பஞ்சாயத்துக்கள் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உருவாக்கப்பட்டுள்ள ஊர்நலப் பணியாளர்கள் பதவிகளைப் பேரூராட்சிப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

### அறிக்கை.

நடப்பாண்டு முதல் பேரூராட்சிகளிலும் இத்திட்டம் அமுல் படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பாப்பா உமாநாத், வெ. இராசு, கே. ரமணி, கோ. வீரையன் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கொடுத்த கவன ஈர்ப்பு மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளிவைக்கப்படுகிறது.

## 4. அறிக்கை அளித்தல்.

### பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையின் பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி நான்காவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.



## 5. மானியக் கோரிக்கைகள், 1990–91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 28,46,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூரில் உள்ள பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டிடம் கட்ட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்; மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,46,79,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் பிற்பட்டோர் நல மாணவிகள் விடுதி ஆரம்பிக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,46,79,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அரசு விடுதி ஒன்று கட்டுவது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,46,79,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

10-20 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கான மானியக் கோரிக்கை* அவையில் வைக்கப்பட்டிருக்கின்றது. இதை நான் படித்ததாக அவையினர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதன்மீது எழுகின்ற கருத்துக்களின் அடிப்படையில் நிறைவாக, மனநிறைவாகக் கூட என்னுடைய கருத்துக்களை வழங்குவேன் என்று கூறி அமைகிறேன்.

* திரு. கொ. மாதப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறும் பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கைமீது என்னுடைய கருத்துகளைச் சொல்ல முன்வருகிறேன்.

---

* 132—155 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.





பிற்பட்டோருக்காக எத்தனை சலுகைகளை நீங்கள் அறிவித்தாலும், முதலிலே அந்த பிற்படுத்தப்பட்ட மக்கள் தொகை என்ன, அவர்களுடைய பொருளாதார நிலை என்ன என்று இன்றுவரை நீங்கள் கணக்கு எடுத்தது உண்டா என்றால் இல்லை. சென்சஸ் கணக்கு துல்லியமான முறையிலே இல்லாமல் அரசு அறிவிக்கின்ற சலுகைகள், யாருக்கு அந்தச் சலுகைகள் போய் சேரும் என்பதை அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்கு, பொறியியல் கல்லூரி, கால்நடைக்கல்லூரி, மருத்துவக்கல்லூரி, கலைக்கல்லூரி போன்றவற்றில் படிக்கும் மாணவர்களுக்கு, அவர்களுடைய பெற்றோர்களின் வருமானத்தை கணக்கு எடுக்காமலேயே அனைத்து உதவிகளையும் அரசு வழங்க வேண்டும். பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர், சிவில் சர்வீஸ் எக்ஸாமினேசன் எழுதுவதற்கு மாவட்டங்கள்தோறும் மையம் அமைத்து சிறந்த பயிற்சி அளிக்க வேண்டும். ஐந்தாம் வயதிலிருந்து 16 வயது வரையில், மிகவும் பிற்பட்ட குழந்தைகள், சீர்மரபினர் கட்டாயக் கல்வி பெற அனைத்து வழிவகைகளையும் அரசு செய்ய முன்வரவேண்டும். மாணவர் இல்லங்கள் இன்னும் அதிகமாகத் துவக்கப்பட வேண்டும். கட்டாயக் கல்வி முறையை இவர்களுக்கு கொண்டுவர வேண்டும். தமிழக அரசுக்கு அதிகமான வருமானத்தைக் கொடுப்பவர்கள் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் என்று சொல்வது மிகவும் பொருந்தும். விவசாயம், மற்றும் ஏனைய தொழில்கள் செய்து வரும் இவர்களால் அரசுக்கு பெரும் வருவாய் வருகிறது. எல்லாத் துறைகளிலும் இவர்கள் அரசுக்கு வருமானத்தைத் தேடித்தருகின்றனர். இப்படி இருக்கும் வண்ணத்தில், அரசு இவ்வின மக்களுக்கு பாரபட்சம் காட்டிக் கொண்டிருக்கிறது. புரட்சித் தலைவர் காலத்தில் இவ்வின மக்களுடைய சென்சஸ் எடுத்து அவர்களுக்குப் பல சலுகைகளை அளிக்க புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் திட்டமிட்டிருந்தார். மிகுந்த முயற்சியுடன் சென்சஸ் எடுக்கும் நேரத்தில் பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்கு நன்மை பயக்கும் விதத்தில் நல்ல திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற நேரத்தில், புரட்சித் தலைவர் அவர்கள் மரணம் அடைந்துவிட்டார். அவருடைய மரணம் இவ்வின மக்களின் நல்வாழ்வை பறித்துவிட்டது. அரசு வருவாயில், மக்களின் உழைப்பு மிகவும் முக்கியமானதாகும் என்று சொல்வது மிகையாகாது. இவ்வின மக்களுக்கு, அரசு வேலைகளில், கல்லூரிகளில், பள்ளி போன்ற துறைகளில் சிறந்த முறையில் இடம் ஒதுக்கீடு செய்ய வேண்டும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் மிகவும் போற்றத்தக்க வகையில் நல்ல திட்டங்களை கொண்டு வந்தார். எனவே, இந்த அரசு பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு, கல்வி மற்றும் பல துறைகளில் வளர்ச்சி அடைவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கொ. மாதப்பன்] [1990 ஏப்ரல் 10

பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட இனத்தினர் இன்னும் தாழ்ந்த நிலையிலே உள்ளார்கள் என்பதை அரசுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இட ஒதுக்கீட்டில் இவர்களுக்கு முன் னுரிமை வழங்க வேண்டும். தமிழகத்திலே இவ்வின மக்கள் அதிகமாக வாழ்ந்து வருகிற காரணத்தால் மக்களுக்குக் கூடுதல் நிதியுதவி வழங்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இவ்வரசு முன்வர வேண்டும். பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மக்கள் கர்நாடகம், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் கொத் தடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, தர்மபுரி மாவட்டத்திலேயிருந்து கொண்டு செல்லப்பட்ட மக்களை அரசு மீட்க வேண்டும். அதே நேரத்திலே, விறகு வெட்டி வாழ்ந்து வரும், கூலி வேலை செய்துவரும் மற்ற சமு தாயமும் இந்த சமுதாய மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர அரசு தனி கவனம் செலுத்தியும் மாவட்டத்திற்கு கூடுதல் நிதியுதவி அளித்து இவ்வின மக்களுக்கு வாழ்வளிக்க அரசு முன் வரவேண்டும். பிற்பட்ட மக்கள் சிவில் சர்வீஸ் எக்சாமினேஷன் எழுத இதுவரையில் சென்னை மற்றும் திருச்சியிலே அதற்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதனால் மற்ற மாவட்டங்களிலும் உள்ள மாணவர்கள் வந்து படிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இவர்களுக்கு வசதியில்லாத காரணத்தால் அவர்களால் வந்து படிக்க முடியவில்லை. எனவே மாவட்டங்கள்தோறும் இந்தப் பயிற்சி மையம் அமைத்து அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே 2 ஏக்கருக்குக் குறையாத சாகுபடி நிலம் உள்ளவர்களுக்கு, எவ்வளவு பேர் இவ்வின மக்கள் உள்ளனர் என்று கணக்கெடுத்து அப்படி கணக்கெடுத்ததிலிருந்து நீங்கள் அவர்களுடைய நிலையைப் பார்த்தால், எவ்வளவு பேர் தாழ்ந்த நிலையிலே இருக்கிறார்கள் என்ற உண்மை நிலை புரியும்.

ஏற்கெனவே உள்ள மாணவ விடுதிகள் சீர்கெட்ட நிலையிலே உள்ளன. அவைகளை சரிபார்த்து, சீர்செய்யப்பட வேண்டு மென்று கேட்டுக்கொண்டு, சீர்மரபினருக்காக, மானியத்தோடு 30 கிணறுகள் வெட்டவேண்டுமென்று அரசு அறிவித்திருந் தாலும், இன்னும் கூடுதலாக அவர்களுக்கு மானியம் வழங்கி அவர்கள் கிணறு வெட்டிக்கொள்வதற்கு உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 10]

10–25 மணி

* திரு. ஏ. ஜி. சம்பத் : மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த அவையிலே வைக்கப்பட் டிருக்கிற மானியக் கோரிக்கையான பிற்பட்டோர் நலன் மிகவும் பிற்பட்டோர் நலன், சீர் மரபினர் ஆகியோர் நலன் என்பதன் கீழ் பேசக் கிடைத்த வாய்ப்பினை உள்ளபடியே நான் என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

நான் மிகவும் பின்தங்கிய சமுதாயத்தில் பிறந்தவன் என்ற அடிப்படையில் என்னுடைய உணர்வினை இந்த அவையிலே வைப்பதை என்னுடைய கடமையாகவே நான் கருதுகிறேன். அதிலும் சிறப்பாக, இந்த மானியக் கோரிக்கையினை வைத்து இருக் கின்ற தமிழக முதல்வர் தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் மிகவும் பின்தங்கிய சமுதாயத்தில் பிறந்து இந்தச் சமுதாயத் தினுடைய வளர்ச்சிக்காக இரவு பகல் பாராத அவருடைய உழைப்பு, அவருடைய திறமை, அவருடைய அனுபவம் எல்லாம் இந்தத் துறைக்குக் கிடைத்திருக்கிறது என்ற நிலையைப் பார்க்கிற நேரத்தில் இந்தப் பின்தங்கிய சமுதாயத்திற்கு அவருடைய திறமையும் அனுபவமும் ஒரு காவல் அரணாக இருப்பதைப் பார்த்து நான் முதலமைச்சர் அவர்களை மனதாரப் பாராட்டு கிறேன்.

அதேபோன்று இன்றைக்கு அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள். 1969-ஆம் ஆண்டு இந்தத் துறைக்கென்று 1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதற்குப் பிறகு 1989ஆம்- ஆண்டு இந்தத் துறைக்கு சற்றொப்ப 19 கோடி ரூபாயை தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒதுக்கினார்கள். அவ்வாறு ஒதுக்குகின்ற நேரத்திலேயே குறிப்பிட்டார்கள். அடுத்த ஆண்டு நான் அதிகமாக நிதி ஒதுக்கீட்டினைச் செய்து தருகிறேன் என்று (சென்ற ஆண்டு இந்த அவையிலே தெரிவித்தார்கள். நான் முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதி ஆண்டில் பின்தங்கியோர், மிகவும் பின்தங்கியோர் முன்னேற்றத்திற்காகவும், சிறுபான்மையினர் முன்னேற்றத் திற்காகவும் ஒரு 30 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறீர்கள் என்பதைப் பார்க்கிற நேரத்தில் என்னுடைய நன்றியுணர்வை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

என்னுடைய பாராட்டுதலைத் தெரிவிக்கின்ற அதே நேரத்தில் ஒரு வேண்டுகோளையும் தலைவர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். இன்றைய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி பார்த்தால் பின்தங்கியோர், மிகவும் பின்தங்கியோர், சீர்மர பினர், சிறுபான்மையோர் ஆகிய இவர்கள் அனைவரையும் கூட்டிப்பார்த்தால் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு

பங்கு பேர் வருகிறார்கள். ஆனால் இன்றைக்கு ஒதுக்கப்பட்
டிருக்கிற தொகை 30 கோடி ரூபாய்தான் என்று சொல்லி ஒதுக்கி
யிருக்கிறீர்கள். தயவு செய்து இனி வரும் ஆண்டிலாவது இந்த
துறைக்கென 100 கோடி ரூபாய் அல்லது 150 கோடி ரூபாயாவது
ஒதுக்கித் தரவேண்டும் என்று என்னுடைய பணிவான வேண்டு
கோளை வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இந்தத் துறையிலே உள்ள இட ஒதுக்கீட்டைப் பற்றிப்
பேசுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். எனக்கு
முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மாதப்பன்
அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்
காலத்தில் இங்கே இட ஒதுக்கீடு பற்றிச் சிந்தித்தார்கள், செயல்
பட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். நான் பணிவன்
போடு அவர்களுக்கும், அவர்கள் சார்பிலே இந்த அவைக்கும்
ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இட ஒதுக்
கீட்டுப் பிரச்சினை புயல் வேகத்தில் ஒரு போராட்டமாக
உருவாகிய நேரத்தில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில்
போராட்டம் நடத்தியவர்களை அழைத்துப் பேசியதே
கிடையாது. அதற்குப் பிறகு வந்த கவர்னர் ஆட்சியிலும்
அவர்களை அழைத்து ஏன் என்று கூடக் கேட்கவில்லை. ஆனால்
எங்களுடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்
ஆட்சிப் பீடம் ஏறி 100 நாட்கள் கூட ஆகவில்லை; அதற்
குள்ளாக இந்த இட ஒதுக்கீட்டு முறையை மிக அற்புதமாகப்
பிரித்துக்கொடுத்தார்கள். அதாவது 50 சதவீதத்தை 20 என்
றும் 30 என்றும் மிக அற்புதமாகப் பிரித்துக்கொடுத்தார்கள்.
அந்தப் பயனை இன்றைக்கு பின்தங்கிய சமுதாயத்தில் இருக்
கின்ற நாங்கள் எல்லாம் அனுபவித்துக்கொண்டு இருக்கிறோம்.
அப்படி இருக்க மாறாகப் பேசுவதைத் தயவுசெய்து மாற்றுக்
கட்சி தோழர்கள் தவிர்க்கவேண்டுமென்று இந்த அவையிலே
நான் என்னுடைய பணிவான வேண்டுகோளைத் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

**10–30 மணி**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பக்குவமாகத்
தானே சொன்னார்.

திரு. எஸ். ஆர். இராதா : பக்குவமாகச் சொல்கிறார்,
அழைத்துப் பேசவில்லை என்று குற்றச்சாட்டாகச் சொல்கிறார்.
அழைத்துப் பேசியிருக்கிறோம்; எல்லோரையும் அழைத்துப்
பேசி இருக்கிறோம்.

திரு. ஏ. ஜி. சம்பத் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் சென்ற முறையே
சொன்னார்கள், கல்கி அவர்கள் சொன்னதாக சொன்னார்கள்,



ஏதாவது ஒரு காரியம் உருப்படக்கூடாது என்று நினைத்தால்
ஒரு கமிட்டியை போடு, இல்லை கல்லைத் தூக்கிப் போடு என்று.
அந்த அடிப்படையில்தான் ஒரு கமிட்டி போட்டு முன்னாள்
முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் தினந்தோறும் ஒரு சங்கம்,
தினந்தோறும் ஒருவரை வர வைக்க வேண்டியது, போராடுகின்ற
அந்தச் சங்கத்தை கூப்பிடுவது கிடையாது. ஆனால் ஏதாவது
ஒரு சங்கத்தை 200-க்கு மேற்பட்ட சங்கங்களை எல்லாம்
அழைத்து அவர்களுடைய வேண்டுகோள்களை எல்லாம் கேட்டு,
உங்கள் ஜனத்தொகை என்ன ... ...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, யார் செய்தார், யார் செய்யவில்லை
என்ற விவாதத்தை விட்டு விட்டு, என்ன செய்யவேண்டும்
என்ற கருத்துக்களை வழங்குவது பொருத்தமானதாக
இருக்கும்.

திரு. ஏ. ஜி. சம்பத் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, எனவே அந்த அடிப்படையில் கலைஞர் அவர்
களுடைய அறிவுரையை ஏற்று என் பணியைத் தொடர்ந்து
செய்ய நான் முன்வருகிறேன். கலைஞர் அவர்கள் இன்றைக்கு
அறிவித்து இருக்கிற அந்த 20 சதவீத இட ஒதுக்கீடு மூலமாக
இன்றைக்கு மிகவும் பின் தங்கியிருக்கின்ற சமுதாயம், சீர்
மரபினர் ஆகியோருக்கு நல்ல பல சலுகைகள் எல்லாம்
கிடைத்து இருப்பதை நான் உணர்கிறேன். மருத்துவக் கல்லூரி
அட்மிஷனில் மட்டும் 1989 ஆம் ஆண்டு மிகவும் பின் தங்கிய
சமுதாயம் சீர் மரபினருக்கு 68 இடங்கள் தான் கிடைத்தது.
ஆனால் கலைஞர் அவர்கள் அறிவித்த 20 சதவீத இட ஒதுக்
கீட்டுக்குப் பிறகு இன்றைக்கு 3 மடங்கு உயர்ந்துள்ளது. சலுகை
களைப் பெற்று மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கு நாங்கள்
எல்லாம் 3 மடங்காக 187 இடங்கள் கிடைத்து இருக்கின்றன
என்பதைப் பார்த்து கலைஞர் அவர்களுக்கு நான் நன்றி
விசுவாசத்தோடு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.

அதிலும் குறிப்பாக நான் பிறந்து இருக்கின்ற வன்னிய சமு
தாயத்திற்கு 1988 ஆம் ஆண்டில் 26 இடங்கள் தான் மருத்துவக்
கல்லூரியில் கிடைத்தது. ஆனால் கலைஞர் அவர்கள் அறிவித்த
20 சதவீத இட ஒதுக்கீட்டிற்குப் பிறகு இன்றைக்கு மருத்துவக்
கல்லூரியில் 75 இடங்கள் கிடைத்து இருக்கின்றன என்பதைப்
பார்த்து நான் உள்ளபடியே பூரிப்பு அடைகிறேன். அதேபோல்
பொறியியல் கல்லூரியில் மிகவும் பின் தங்கிய வகுப்பினர், சீர்
மரபினருக்கு 1988 ஆம் ஆண்டு 354 இடங்கள் தான் கிடைத்தது.
ஆனால் கலைஞர் அவர்கள் அறிவித்த இட ஒதுக்கீட்டிற்கு பிறகு
1989 ஆம் ஆண்டு 685 இடங்கள், 2 மடங்கு கூடியிருக்கிறது.
அதிலும் குறிப்பாக வன்னிய சமுதாயத்திற்கு கலைஞர் அவர்கள்
அறிவிப்பதற்கு முன்பாக பொறியியல் கல்லூரியில் 109 இடங்கள்,

தான் கிடைத்தன. கலைஞர் அவர்கள் அறிவித்த 20
சதவீத இட ஒதுக்கீட்டிற்குப் பிறகு அந்த எண்ணிக்கை 3
மடங்கு உயர்ந்து 292 இடங்கள் கிடைத்து இருக்கிறது என்பதைப்
பார்க்கின்ற நேரத்தில், கலைஞர் அவர்களே, உங்களுடைய
முயற்சி வீண் போகவில்லை என்பதைப் பார்த்து நான் பெரு
மைப்படுகிறேன். பூரிப்படைகிறேன். அதேபோல் இந்த
மன்றத்தில் சென்ற ஆண்டு........(மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 2 மணித்துளிகளுக்குள்
முடித்துக்கொள்ளவேண்டும்.

திரு. ஏ. ஜி. சம்பத் : தலைவர் அவர்களே, கொஞ்சம்
நீட்டித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு
தலைவர் அவர்கள் சொன்னார்கள், மாண்புமிகு திரு. பூவராகன்
அவர்கள் எழுப்பிய கேள்வியை மையமாக வைத்து, அந்தக்
கேள்வியினை துணைக் கொண்டு இந்த நாட்டுக்கு ஒன்றை
அறிவித்தார்கள். இன்றைக்கு மிகவும் பின் தங்கிய சமுதாயத்
திற்கு ஒரு மாங்கனியைக் கொடுத்து இருக்கிறேன், அந்த மாங்
கனியை சுவைத்துப் பாருங்கள், அது புளிக்கிறதா, அல்லது
இனிக்கிறதா என்ற பரிசோதனைக்குப் பிறகு ஒரு முடிவு எடுப்
போம் என்று திரு. பூவராகன் அவர்களுக்குப் பதில் அளிப்பது
போல் இந்த நாட்டுக்கு ஒன்றை அறிவித்தார்கள்.
நான் இன்றைய தினம் இருக்கின்ற முதலமைச்சர் கலைஞர்
அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுவது எல்லாம், தலைவர்
அவர்களே, நீங்கள் கொடுத்த அந்த மாங்கனி இனிக்கிறது;
இனிக்கிறது; இனிக்கிறது; என்று இந்த அவையில் தெரிவித்துக்
கொள்கிறேன். வேண்டுமானால் இந்த அவையின் மூலமாக
இந்த உலகத்தில் வாழ்கின்ற பின் தங்கிய சமுதாயத்தினருக்கு
சொல்லிக்கொள்கிறேன், கலைஞர் அவர்களை விட்டால்
இந்தப் பின் தங்கிய சமுதாயத்திற்கு வேறு நாதி கிடையாது
என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-35 மணி

அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள்
பேசுகின்ற நேரத்தில் கலைஞர் அவர்கள் ஒன்றைச் சொன்
னார்கள். 1969-70 ஆம் ஆண்டில் மாண்புமிகு உறுப்பினர்
திரு. லத்தீப் அவருடைய சமுதாயத்தில் உருது பேசுகின்ற
முஸ்லீம் தோழர்களை மிகவும் பின் தங்கிய சமுதாயத்தில்
சேர்க்கின்ற நேரத்தில், அன்று ஆட்சிப் பொறுப்பிலே
இருந்த அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், சட்டம்
இடம் தரவில்லை என்று. எனவே சேர்த்துக்
கொள்ள இயலாது என்ற முடிவை அறிவித்த அந்
நிலையில் கலைஞர் அவர்கள் எழுந்து லத்தீப் அவர்களுடைய





உணர்வை மதித்து, லத்தீப் அவர்களுடைய உணர்வை மதிக்க
வேண்டுமென்ற அடிப்படையிலே, சட்டத்திலே இடம் இல்லை
யென்றாலும் என் இதயத்திலே இடம் இருக்கிறது, லத்தீப்
அவர்களே, உருது பேசுகின்ற அந்த முஸ்லீம் மக்களையும் நான்
பின்தங்கிய மக்கள் சமுதாயத்திலே சேர்த்துக்கொள்கிறேன்
என்று அறிவித்ததாகச் சொன்னார்கள். நான் தலைவர்
அவர்களிடத்திலே கேட்டுக்கொள்வதெல்லாம், தலைவர்
அவர்களே, சட்டத்தில் இடம் இல்லை, எங்களுக்கும் தெரியும்;
அப்படிப்பட்ட பிரச்சினை எழுந்தால் பல சங்கடங்கள் எழும்,
அது எங்களுக்குத் தெரியும். ஆனால் உங்கள் இதயத்திலே
எங்களுக்கு இடம் இருக்கிறது. இன்னும் கொஞ்சம் சேர்த்து
இடம் தாருங்கள் என்று மிகவும் தாழ்மையோடு கேட்டுக்
கொள்கிறேன். இன்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் மிகவும் பின்தங்கிய இந்த சமுதாயத்திற்காக தனியாக
ஒரு இயக்கத்தை ஆரம்பித்து இருக்கின்றார்கள். (குறுக்கீடு)
கொஞ்சம் முக்கியமான பாயின்ட், தயவுசெய்து "அலவ்"
பண்ணுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி ஒவ்வொருவரும்
நேரத்தை நீட்டித்துக்கொண்டு போவது என்றால், மாண்புமிகு
முதல்வர் அவர்கள் பதில் சொல்வதற்கு ரொம்ப நேரம் ஆகும்.
அதனால் சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. ஏ. ஜி. சம்பத் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சீக்கிரம் முடித்து விடுகிறேன். இன்றைக்கு தனியாக
ஒரு இயக்கத்தை ஆரம்பித்து இருக்கின்றார்கள். அவர்களுடைய
நடவடிக்கை குறித்து என்னால் பாராட்டாமல் இருக்கமுடிய
வில்லை. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே,
உங்களுடைய நடவடிக்கை, இன்றைக்கு மாநிலத்திலே ஒரு
இடத்தில் ஒரு இயக்கத்தை ஆரம்பித்து இருக்கின்றீர்கள். அந்த
இயக்கத்தினுடைய விழுதுகள் மாவட்டங்கள் தோறும் ஒன்றி
யத்தோறும் வேர்விட்டு பரவவேண்டுமென்பதை தயவுசெய்து
எங்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இன்றைக்கு கலைஞர்
அவர்கள் பல சலுகைகளை அள்ளி அள்ளி கொடுத்து இருக்
கின்றார்கள். அந்தச் சலுகைகளெல்லாம் கிராமப்புறத்திலே
இருக்கின்ற மிகவும் பின்தங்கிய சமுதாயத்திற்கு, சீர்மரபின
ருக்கு போய் சேரவேண்டுமென்றால் இப்படிப்பட்ட நிர்வாகம்
அவசியம் தேவை. ஒன்றிய அளவில் அந்தத் தனி இயக்ககம்
தொடர்ந்து நடைபெறவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்
கிறேன். இன்றைக்கு கலைஞர் அவர்கள் பட்டப்படிப்பு வரை
இலவசம் என்று அறிவித்து இருக்கின்றார்கள். அதேபோன்று
50 மாணவ விடுதிகளை, பி.சி. வகுப்பினருக்கு கட்டித் தர
[illegible] அவர்கள் [illegible] [illegible] இருக்கின்றார்கள். அதற்காக
தலைவர் [illegible] [illegible] இருக்கிறார்கள். அதேபோன்று பல
[illegible] கோடி ரூபாய் ஒதுக்கி [illegible]

[திரு. ஏ. ஜி. சம்பத்] [1990 ஏப்ரல் 10

விதமான திட்டங்கள் நிறைவேற்றப்படவிருக்கின்றன.
ஐ.ஏ.எஸ். பரீட்சைக்கு என்று கோச்சிங் கேம்ப் என்று வைத்
திருக்கிறார்கள். மற்ற எதற்கும் இப்படி வைத்தது கிடையாது.
ஆனால் இன்றைக்கு கலைஞர் அவர்கள் பேங்க் எக்சாமினேஷன்,
ரயில்வே சர்வீஸ் கமிஷன், தமிழ்நாடு அரசு பணி தேர்வு போன்ற
வற்றுக்கெல்லாம் சிறப்புப் பயிற்சி என்று அறிவித்து இருக்
கின்றார்கள்.

வீட்டுமனைப்பட்டாவிற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி இருக்
கிறார்கள். கல்விக்காக பல உதவிகள், பல ஊக்கப் பரிசுகள்
போன்றவைகளையெல்லாம் இன்றைக்கு அறிவித்து இருக்
கின்றார்கள். பாடப் புத்தகங்கள் எல்லாம் இலவசமாக அளிக்
கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். சீருடைகள் எல்லாம்
வழங்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே
நான் இந்த மாமன்றத்திலே, மிகவும் பின்தங்கிய சமுதாயத்
தைச் சேர்ந்தவன் என்கிற அடிப்படையிலே, கலைஞர் அவர்
களை நான் பாராட்டுகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், நான் கலைஞர் அவர்களைக்
கேட்டுக்கொள்வதெல்லாம், தலைவர் அவர்களே, நுழைவுத்
தேர்வு என்பதை தயவுசெய்து எடுத்துவிடுங்கள். இன்றைக்கு
நுழைவுத் தேர்வுக்கு நீங்கள் ஒரு கோச்சிங் கேம்ப் என்று
அமைத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். என்னுடைய
தனிப்பட்ட கருத்து, அந்த நுழைவுத் தேர்வு என்பதை தயவு
செய்து நீக்கி விடுங்கள். கிராமத்திலேயிருந்து வருகின்ற மாண
வர்கள் இன்றைக்கு நுழைவுத் தேர்விலே தேர்ச்சி பெறுவது
கடினமாக இருக்கிறது. எனவே தயவுசெய்து அதை நீக்கி
விடுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், தலைவர் அவர்களே, இன்றைக்கு
எவ்வளவோ சங்கடத்திற்குப் பிறகு, எவ்வளவோ சிரமங்
களுக்குப் பிறகு நீங்கள் 20 விழுக்காடு கொடுத்தீர்கள். ஆனால்
இன்றைக்கு அதை நடைமுறைப்படுத்துவதிலே சில சிக்கல்கள்
எழுந்துள்ளதாக எனக்குச் சில செய்திகள் கிடைத்து இருக்கின்
றன. அந்தச் செய்திகளை உங்களுடைய கவனத்திற்குக்
கொண்டுவருவது என்னுடைய கடமை.

வேட்டுவ கவுண்டர் என்பது எம்.பி.சி.யிலே சேர்த்து இருக்
கின்ற ஒரு இனம். வேட்டுவ கவுண்டர் என்ற அந்த இனத்தை
வைத்துக்கொண்டு கவுண்டர் என்ற பட்டயங்கள் கொண்ட
சில இனத்தார், வேட்டுவ கவுண்டர் என்ற சான்றிதழ் வாங்கி
அந்த எம்.பி.சி.யிலே நுழையப் பார்க்கின்றார்கள். அப்படிப்
பட்ட சில காரியங்களெல்லாம் நடைபெறுவதாக ஒரு தகவல்
வந்திருக்கிறது. அதேபோன்று தொட்டிய நாயக்கன் என்பது
எம்.பி.சி.யிலே நீங்கள் சேர்த்திருக்கிறீர்கள். ஆனால் தொளுவ
நாயக்கன் என்பது பி.சி. அந்தத் தொளுவ நாயக்கன் பிரிவினர்



1990 ஏப்ரல் 10] [திரு. ஏ. ஜி. சம்பத்]

சிலர் தொட்டிய நாயக்கன் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று
சர்டிபிகேட் வாங்குவதாகவும் சில தகவல்கள் வந்திருக்கின்றன.
அதேபோன்று சீர்மரபினர் இனத்தவர்கள், பிரமலைக்
கள்ளர் என்பவரை எம்.பி.சி.யிலே நீங்கள் சேர்த்திருக்கி
றீர்கள். ஆனால் பி.சி.யிலே இருக்கின்ற மற்ற கள்ளர் இனத்
தாரும் அதைப் பயன்படுத்தி, பொய் சர்டிபிகேட் வாங்குவதாக
ஒரு தகவல் வந்திருக்கிறது. எனவே தயவுசெய்து, கலைஞர்
அவர்களே, உங்களுடைய குறி, எந்த எண்ணத்தோடு நீங்கள்
எங்களுக்கெல்லாம் வாரி வழங்கினீர்களோ அது கொஞ்சம்

10-40 மணி

கூட எங்களுக்குக் குறையாமல் பார்த்துக்கொண்டால் உங்களு
டைய நடவடிக்கைகள் பலனளிக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். இதுபோல, போலி சான்றிதழ்கள் வழங்கு
வதில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 15 மணித்துளிகள்
பேசியிருக்கிறீர்கள். விரைவில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ஏ. ஜி. சம்பத் : இன்றையதினம் எம்ப்ளாய்மென்ட்
எக்சேஞ்சில் இன்டர்வியூ கார்டு வருவதாக வைத்துக்கொண்
டால் அது ரோஸ்டர் முறையில் தான் கொடுக்கப்படுகிறது.
அது கூடாது. தென்னாற்காடு மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட
சமுதாயமும், வன்னிய சமுதாயமும் நிரம்ப இருக்கின்றார்கள்.
அங்கே அனைவருக்கும் வேலைவாய்ப்புக்கான கார்டை
அனுப்புவதை விட்டு விட்டு, இன்டர்வியூ கார்டு வருவதற்குக்
கூட கம்யூனல் ரொட்டேஷன் முறை தேவைதானா என்பதைச்
சிந்திக்கவேண்டுமென்று கேட்டு, அதைத் தவிர்க்க வேண்டு
மென்றும் கேட்டுக் கொள்கிறேன். அப்பாயின்ட்மென்ட்
வரும்போது ரோஸ்டர் முறை தேவை. ஆனால் இன்டர்வியூ
முறைக்குக் கூட தேவையா? (மணியடிக்கப் பெற்றது) பிறகு
20 சதவீத இட ஒதுக்கிடு வழங்கப்பட்டு இருக்கிறது. அதன்படி
பார்த்தால் 10 பேர் வேலைக்குப் போனால் 2 இடங்கள்
கிடைக்கவேண்டும். 20 பேர் போனால் 4 இடங்கள் கிடைக்க
வேண்டும். ஆனால் அதற்கு மாறாக 10க்கு ஒன்று, 20க்கு
2 என்ற வீதத்தில் வேலை கிடைக்கிறது. அல்லது 20க்கு
3 என்ற வீதத்தில்தான் கிடைக்கிறது. இதைத் தவிர்க்க
வேண்டுமென்று நாங்கள் எல்லாம் விரும்புகிறோம். உங்களை
மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம். கம்யூனல் ரொட்டேஷன்
முறையில் முதலில் இருப்பது ஓ. சி. அதை தயவு செய்து மாற்றுங்
கள். முதலில் எஸ்.சி.யை வையுங்கள். நாங்கள் எல்லாம் நொண்டிக்
குதிரைகள். கலைஞர் அவர்கள் கொடுத்திருக்கிற கைத்தடியை
ஊன்றித்தான் நடக்கவேண்டும். ஓ.சி. முதலில்
தேவைதானா என்பதை சிந்திக்கவேண்டும். முதலில் எஸ்.சி.,

[திரு. ஏ. ஜி. சம்பத்] [1990 ஏப்ரல் 10

எஸ்.டி., இரண்டாவதாக எம்.பி.சி.,/டி.என்.டி., மூன்றாவ
தாக பி.சி. நான்காவதாக ஓ.சி., ஐந்தாவதாக மறுபடியும்
எஸ்.சி./எஸ்.டி., பிறகு ஆறாவதாக எம்.பி.சி./டி.என்.டி.,
ஏழாவது பி.சி.,எட்டாவது ஓ.சி., ஒன்பதாவது பி.சி., கடைசியாக
பத்தாவது ஓ.சி. என்று வந்தால் அனைவருக்கும் நல்ல
பாதுகாப்பும், வேண்டிய தேவையெல்லாம் கிடைக்கும் என்பதை
இந்த மாமன்றத்தில் வைப்பது எனது கடமையாகக்
கருதி, என்னைப் பேசுவதற்கு அழைத்த தங்களுக்கும்,பேசுவதற்கு
வாய்ப்பளித்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நன்றி
தெரிவித்து அமைகிறேன்.

*திருமதி ஏ .எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால்
கொண்டுவரப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்
படுத்தப்பட்டோர் நலத்துறை மானியக் கோரிக்கையின் மீது
ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே போட்டிருக்கிற திட்டங்கள் உண்மையிலேயே
அவர்களுக்கு நல்ல திட்டங்கள்தான். 50 சதவீத ஒதுக்கீடு
என்ற அடிப்படையில் பார்த்தால், பிற்படுத்தப்பட்டவர்கள்,
மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள், சீர் மரபினர், இப்படி வருகிற
போது அவர்களுக்கு சென்ற ஆண்டைக் காட்டிலும் இப்போது
கல்லூரிகளிலும், என்ஜீனியரிங், மெடிக்கல் கல்லூரிகளில் நிறைய
அளவில் சேருவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்பதை
நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக
பாராட்டுகிறேன்.

ஹாஸ்டல்கள் கட்டுவது என்று எடுத்துக் கொண்டால்
சென்ற வருஷம் 26 ஹாஸ்டல்கள் கட்டுவதற்கு சொல்லி
யிருந்தார்கள். இந்த ஆண்டு 50 ஹாஸ்டல்கள் கட்ட வழிவகை
செய்யப்பட்டிருக்கிறது. நான்கு கோடி ரூபாய் செலவில் 4(
ஹாஸ்டல்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப
பட்டுள்ளது. அதைக் கட்டும்போது பொதுப்பணித்துறை
யினரிடம் சொல்லி, நல்ல கெட்டியான கட்டிடங்களாகக்
கட்டவேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்

அதோடு இன்னொன்று. 60,833 பேர் பயன் அடையக்
கூடிய வகையில் பட்டயப்படிப்பு வரையில் இலவசக் கல்வி
கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. 60,833
பேர் மட்டும் இருக்கக்கூடாது. வரக் கூடிய ஆண்டுகளில்
ஒரு லட்சம், இரண்டு லட்சம் குழந்தைகள் படிக்கக்கூடிய வாய்ப்பு
பெறக்கூடிய வகையில அவர்களுக்கு பட்டயப் படிப்புக்கான
வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 10] [திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்]

அதுமட்டுமல்லாமல், சுயவேலைவாய்ப்பு இருக்கிறதே, அதற்கு
20 சதவீத மானியம் கொடுக்கிறோம். ஆனால் பாங்குக்குப்
பணம் வாங்கப் போனால் அவர்களுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது.
பாங்கில் பணம் வாங்கிக் கொண்டு சுய வேலைவாய்ப்பு ஏற்
படுத்திக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறோம். ஏனோ
தெரியவில்லை. பேங்க் அதிகாரிகள் மனம் இன்னும் இளகவில்லை.
ஏழைகள் அப்ளிகேஷன் எடுத்துக்கொண்டு பாங்குக்குப் போனால்
அதை அப்படியே தூக்கியெறியக் கூடிய வகையில்தான் இன்றைக்கு
காரியம் நடக்கிறது. சில பாங்குகளில் அப்படியிருக்கிறது. ஆகவே
பாங்க் மூலமாக சுயவேலைவாய்ப்புக்கு இடைஞ்சல் ஏற்பட்டால்,
அதில் அரசாங்கமே தலையிட்டு, பாங்குக்குத் தாக்கீது கொடுத்து
அந்த ஏழை மக்கள் எப்படி சுயவேலை வாய்ப்பைப்
பெற விரும்புகிறார்களோ அவர்களுக்கு பணத்தைக்
கிடைக்கச் செய்ய தகுந்த நடவடிக்கைகளை அரசே எடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

10-45 மணி

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கல்வியிலே நாம் நிறைய செய்கிறோம். உண்மையிலேயே
நான் அதைப் பாராட்டுகிறேன். நான் அதை வரவேற்கிறேன்.
ஆனால் இவர்கள் படித்துவிட்டு வேலைக்குப் போகும்போது
நிச்சயமாக அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதில்லை.
எங்கெங்கெல்லாம் இந்த பிற்படுத்தப்பட்ட மக்களும், அரிஜன
மக்களும் நிறைந்து வாழ்கின்றார்களோ அந்த பகுதியிலேயே
கூட்டுறவு முறையிலே ஆகிலும் அதாவது நூற்பாலைகள்,
சர்க்கரை ஆலைகள் போன்றவைகளை ஏற்படுத்தி
அதிலேயே 50 சதவீதம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் 30
சதவீதம் பெண்களுக்கும் 20 சதவீதம் அரிஜன மக்களுக்கும்
என்று வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய அளவில் செய்யவேண்டும்.
ஏனென்றால் உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள் இந்த தொழிலை
செய்யமாட்டார்கள். அவர்களுக்கு இந்த தொழில் தெரியாது.
அவர்கள் வேறு வேலைக்கு செல்வார்கள். ஆகவே பிற்படுத்தப்
பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய அளவிலே
தனியாகவே 3 ஆண்டுகளுக்கு ஒரு திட்டம் போட்டுக்கூட இவர்
களை முன்னுக்கு கொண்டு வரக்கூடிய அளவிலே இதைச் செய்
வோமானால், அதுவும் நன்றாக இருக்கும் என்பதை இந்த நேரத்
தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நாம் பயிற்சி அளிக்கிறோமே, அதாவது ஐ.ஏ.எஸ்.,
ஐ.பி.எஸ்., இந்த பேங்குகள் வேலைகள் மட்டும் இதர வேலை
கள் செய்வதற்கு அவர்களுக்கு பயிற்சி கொடுக்கிறோம். அது
நான்கு இடத்திலே பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்களுக்கு
என்று வைத்திருக்கிறோம் இவர்களுக்கு மாதத்திற்கு
கொடுக்கக்கூடிய உதவித்தொகை ரூ. 250 என்று போட்ட

பட்டிருக்கிறது. இந்த 250 ரூபாயை வைத்து அந்த மாணவன் எப்படி சாப்பிடுவான்? அந்த பணம் எப்படி போதும்? மேற்கொண்டு பணம் அவனால் செலவழிக்க முடியாது. இந்த 250 ரூபாயை கொஞ்சம் உயர்த்தி ஒரு 350 ரூபாயாவது கொடுக்கக்கூடிய அளவிலே செய்வோமானால் வயிறார சாப்பிட்டுவிட்டு படிப்பான். நல்ல உணவு சாப்பிட்டால் தான் அந்த குழந்தைகள் நன்றாக படிக்கமுடியும். அவர்கள் மூளையிலே அந்த விஷயங்களை ஏற்றிக்கொள்ள முடியும். இந்தப் பணத்தை அதிகமான அளவில் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு வீட்டுமனை, இது மிக வரவேற்கக்கூடிய ஒன்று. அரிஜன மக்களுக்கு கொடுத்து வந்தோம். இது போன்று இப்போது பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வீட்டு மனைகள் கொடுப்பதிலே இந்த அரசு முனைப்பாக இருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் வீட்டுமனையைக் கொடுத்துவிட்டு, வீட்டுமனைப் பட்டா கொடுத்துவிட்டு, அவர்கள் வீடு கட்டுவதற்கு என்ன செய்யப்போகிறீர்கள்? கடைசியில் பிரமலை கள்ளர்களுக்காக ஏற்கனவே 143 வீடுகள் கட்டப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது ஏதோ யானைப் பசிக்கு சோளப்பொறி என்பது மாதிரி, வாய்க்குப் பத்துமா? பல்லுக்குப் போதுமா? ஒன்றுமே போதாது. இவர்களுக்கு வீடு கட்டுவது பற்றி ஆதிதிராவிட மானியக் கோரிக்கையிலே பேசும்போதுகூட நான் சொல்லியிருக்கிறேன். அவர்களுக்கு ஆண்டிற்கு ஒரு லட்சம் வீடு கட்டிக்கொடுக்க வேண்டும். இது போன்று பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இனாமாக கட்டுவது கொஞ்சமாக இருந்தாலும்கூட, அவர்களுக்கு கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்தின் மூலமாக எங்கெங்கெல்லாம் அவர்கள் குடிசையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள், அங்கெல்லாம் அவர்களுக்குத் தனியாக ஒரு திட்டம் போட்டு செய்யவேண்டும். ஆறு ஆயிரம் ரூபாயோ 10 ஆயிரம் ரூபாயோ என்ற ஒரு நிலையை உருவாக்கி அதிலே பாதி பணம் மானியமாக கொடுக்க வேண்டும். பாதிப் பணத்தைக் கடனாகக் கொடுக்கவேண்டும். இப்படி கொடுத்து அவர்கள் வீடு கட்டுவதை ஊக்குவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு நாம் துணிகள் கொடுக்கிறோம். இந்த துணிகள் கொடுப்பதிலேகூட உண்மையிலேயே, இந்த தையல் தைக்கிறோமே, அது குழந்தைகள் பாவாடை கட்டினால் சுருக்கமே இல்லை, பையன்கள் சட்டைப் போட்டால் அதில் சுருக்கமே இல்லை. அந்தந்த பள்ளியிலுள்ள ஆசிரியர்களிடம் சொல்லி அவர்களே அளவெடுக்க வைத்து, அப்படி அளவெடுப்பதை அந்த இலாகாவிற்கு பேக்வேர்ட் கிளாஸ் துறையில் உள்ள ஆபிசர்களுக்கு அனுப்பி அந்த அந்த அளவை வைத்து அவர்களுக்குத் துணிகளைத் தைத்து



அந்த துணிகளை கொடுத்தோமானால் அந்த குழந்தைகளுக்கு பயன்படும். பார்ப்பதற்கு அழகாக இருக்கும். ஆகவே அப்படி சுருக்கமே இல்லாத துணிகளை தைத்துக்கொடுப்பது நன்றாக இல்லை என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு வேண்டிய வழிவகைகளை செய்ய வேண்டும்.

பிறகு நாம் புத்தகம் கொடுக்கிறோம். இனாமாகக் கொடுக்கிறோம். நான் அதை வரவேற்கிறேன். அந்த புத்தகங்கள் கொடுப்பதிலே மிகவும் காலதாமதம் ஆகிறது. ஜூலையிலே இல்லை. ஜூனிலே கொடுக்கப்படுவதில்லை. ஆகஸ்டக்குப் போய் விடுகிறது. அப்படி ஆகஸ்ட்க்கு போய்விடுகின்ற காரணத்தால் ஆசிரியர்கள் குழந்தைகளை வெளியே அனுப்பி விடுகிறார்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள்? புத்தகம் வாங்காமல் பள்ளிக்கு வராதீர்கள் என்று சொல்லி அவர்களை வெளியிலே அனுப்புகிறார்கள். ஆகையால் அந்த புத்தகம் கொடுக்கும்போதுகூட மே கடைசி வாரத்திலே கொடுக்கவேண்டும் அல்லது ஜூன் மாதம் முதல் வாரத்தில் அவர்களுக்கு புத்தகம் கொடுத்துத் தீரவேண்டும் என்ற நிலைமை இருக்கவேண்டும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனதிலே வைத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று இந்தச் சலவையாளர்கள், பார்பர்கள், டோபிகள், இவர்களுக்கு நாம் துணி துவைக்கின்ற இடம் கொடுக்கிறோம். அதற்கு 75 சதவிகிதம் அரசு மானியம் கொடுக்கிறது. உள்ளாட்சி மன்றங்கள் 20 சதவிகிதம் கொடுக்க சொல்லி இருக்கின்றார்கள். பாக்கி ஐந்து சதவிகிதம் அவர்களையே போட சொல்லி இருக்கிறார்கள். இந்த துணிமணிகளை துவைக்கக்கூடிய அந்த ஆட்கள் ஏதோ துணிகளை எடுத்துக்கொண்டுபோய் 8 அணா அல்லது ஒரு ரூபாய் என்று வாங்கி கொண்டு துணிகளை துவைக்க கூடியவர்கள். அங்கே ஒரு லட்சம் ரூபாய்க்கு ஒரு சலவையிடம் கட்டவேண்டுமென்றால், அதற்கு அந்த பணத்தை, ஐந்து சதவிகிதம் தொகையை அவர்கள் எப்படி கொடுக்கமுடியும்? இந்த பணத்தை உள்ளாட்சித் துறையைக் கேட்டால் எங்களிடம் பணம் இல்லை என்கிறார்கள். நகராட்சியைக் கேட்டால் அவர்களும் எங்களிடம் பணம் இல்லை என்று சொல்கிறார்கள்.

10-50 மணி

ஆகவே, இந்த முழுத் தொகையும் அரசே போட்டுக் கொடுக்க வேண்டும் ரொம்ப குறைச்சலான பேருக்குதான் கொடுக்க வேண்டியிருக்கும். நாமே போட்டு கொடுப்பதுடன், சலவைச் செய்வதற்கான நிலத்தைத் தேர்ந்தெடுத்தல் விஷயத்தை பொறுத்தவரையிலும் கூட தண்ணீர் வசதியுள்ள இடத்தில் அதை கட்டிக் கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். இன்றைக்கு தொழில் செய்ய கருவிகள்

கொடுக்கிறோம். சலவையாளர்களுக்கு, பார்பர்களுக்கு எல்லாம் கொடுக்கிறோம். ஆனால் கல் உடைக்கும் போயர்கள் இருக்கிறார்களே அவர்கள் இன்றைக்கு மிகவும் கஷ்டப்படு கிறார்கள். அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால் அவர்களுக்குத் தேவைப்படும் அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டும். இன்றைக்கு தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் பார்பர்கள், டோபிகள், போயர்ஸ் என்று எடுத்துக்கொண்டால் அந்தத் தொழில் செய்கிறவர்கள் மிகவும் குறைச்சலாகத்தான் இருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நல்ல உள்ளத் தோடு இப்படிப்பட்ட மக்களுக்கு உதவிசெய்ய முன்வந்திருக் கிறார்கள். நான் சொல்வதெல்லாம், தயவுசெய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் எவ்வளவு பேர் இந்த உதவி நாடி வந்தாலும் அனைவருக்கும் கொடுக்கின்ற ஒரு நிலைமையை தயவுசெய்து உருவாக்க வேண்டும்.

அடுத்து, பிரமலைக் கள்ளர்கள். ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பிரமலைக் கள்ளர்களுக்கு கிணறுகள் தோண்ட உதவி செய்தோம். இன்றைக்கு ஜீவன்தாரா திட்டத்தின்கீழ் 25 ஆயிரம் ரூபாய் கொடுத்தும்கூட கிணறு வெட்ட முடியாத நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட திட்டத்தின்கீழ் பிற்படுத்தப் பட்டவர்களுக்கு, மறவர்களுக்கு, கள்ளர்களுக்கு, பிரமலைக் கள்ளர்களுக்கு என்று தனித் தனியாக திட்டத்தினைச் செயல் படுத்தாமல் வேறுவகையில் செயல்படுத்த வேண்டும். 2 ஏக்கர் நிலம் வைத்திருந்தால் மத்திய அரசு முன்பு உதவித் தொகை கொடுத்தது. அந்தவகையில் இனிமேலும் இந்த 25 ஆயிரம் ரூபாயை பெற்று கிணறு வெட்ட கொடுக்க வேண்டும்.

அடுத்து, வீடுகள் கட்டுவதைப் பொறுத்தவரையில் பலமுறை நான் இந்த இலாகாவிடம் கேட்டிருக்கிறேன். பலமுறை அதி காரிகளை அணுகியபோது எல்லாம், பிரமலைக் கள்ளர்களுக்கு வீடுகட்டும் திட்டம் இல்லையா என்று கேட்டேன். 9 ஆயிரம் ரூபாயில் வீடு கட்டும் திட்டம் நல்ல திட்டம். ஆனால் அதற்கு அரசு இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை என்று சொல்கிறார்கள். 4,300 ரூபாயில் வீடுகள் கட்டுவதில் பயனில்லை. 9 ஆயிரம் ரூபாய் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டுவது நல்லது. அங்கே வாழ்கிற மக்கள் வெயில் காலத்தில் வெயிலில் காய்ந்து, மழைக் காலங்களில் மழைத் தண்ணீர் ஒழுகி நனைந்து மிகவும் கஷ்டப் படும் நிலையில் வாழ்வதால், குறிப்பாக நிலக்கோட்டை பகுதியில் வாழ்கிற நாங்களே மிகவும் பின்தங்கியிருக்கிறோம். எங்களை விட இந்த பிரமலைக் கள்ளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார் களாகையால் இந்த ஆண்டுமுதலே, இச்சட்டமன்றகூட்டத்தொடர் முடிவதற்குள்ளாகவே, உரிய அதிகாரிகளுடன் கலந்து பேசி இது குறித்து முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடுகூட, இன்றைக்கு இருக்கிற நிலைமையில் 2 ஏக்கர், 3 ஏக்கர் என்று சிறிய அளவில்தான் பிரமலைக் கள்ளர்கள் நிலம் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாகத்தான்



நிலம் இருக்கிறது. ஆனால், நான்கு அல்லது 5 பேருடைய நிலத்தை ஒரே இடத்தில் தேர்ந்தெடுத்து, ஒரு 10 அல்லது 20 ஏக்கரை மொத்தமாகத் தேர்வு செய்து, அங்கே ஒரு பெரிய ராட்சச கிணறு தோண்டி, அதிலே பம்ப்செட் இணைப்பு கொடுத்து அந்த நிலங்கள் எல்லாம் தண்ணீர் பாசனத்தை பயன்படுத்தும் அளவுக்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி செய்தால், ஒரு ஏக்கர் வைத்திருப் பவருக்கு ஒரு பங்கு விளைச்சல், 2 ஏக்கர் வைத்திருப்பவருக்கு 2 பங்கு அது போல 5 ஏக்கர் வைத்திருப்பவருக்கு 5 பங்கு விளைச்சல் என்று விகிதாசாரப்படி பலனை எடுத்துக்கொள்ள அனுமதிப்பதுடன், கரண்ட் சார்ஜ் போன்றவற்றையும் கூட அதே விகிதாசாரப்படி வசூலிக்கலாம். அந்தவகையில் செய்து, அவர்களையும் பொருளாதாரத்தின் முன்னேற்ற நிலைக்கு கொண்டு வர வேண்டும். அதுபோல கூட்டுறவுத் துறையிலும் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதுமாத்திரமல் லாமல் ஒவ்வொரு இலாகாவிலும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு தரவேண்டும். பழைய காலத்தில், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியாது, மாண்புமிகு முதல்வருக்குத் தெரியும், மாடுகள் வழங்கினோம். அதாவது ஒவ்வொரு தொகுதிக்கும் 250 ஜோடி மாடுகள் என்று கொடுத்தோம். இன்றைக்கு இத்திட்டம் நடைமுறையில் இல்லை. பொருளாதார நிலையில் கீழ்மட்டத்தில் உள்ளவர்களுக்கு நிலம் வைத்திருப்பவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் உழவு மாடு வாங்க உதவித் தொகை வழங்க வேண்டும். அந்தவகையில் அவர்களை முன்னுக்கு கொண்டு வர வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்னும் நல்ல காரியங்களை பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு என் உரையை இத்துடன் முடிக்கிறேன்.

10—55 மணி

திரு. எம். சிரங்கன் : மாண்புமிகு பேரவையினுடைய உதவித் தலைவர்வர்களே, இன்று அவையில் நடைபெறும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப் படியான பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கையின்பேரில் மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக் களைக் கூற விரும்புகிறேன்.

தமிழகத்தில் சென்ற ஆண்டு பிற்பட்டோர், மிகப் பிற் பட்டோருக்கு தனி இடம் வேண்டுமென்பதற்காக பரபரப்பாக போராட்டம் நடந்த காலத்தில், தமிழக முதல்வர் அவர்கள் அதற்குத் தீர்வு காணும்படியான நிலையில், மகிழ்ச்சிகரமான திட்டத்தை அறிவித்தார்கள். அதன் பயனாக 20 சதவிகிதம் ஒதுக்கப்பட்டு, அந்த நிலையில் அன்றைக்கு 19 கோடியே 57 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு அதற்குப் பெருந்தொகை ஒதுக்கப்படுமென்று சொல்லி, 30 கோடியே 70 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

[திரு. எம். சீரங்கன்] [1990 ஏப்ரல் 10

அடுத்து மாணவர்கள் விடுதிகளைப் பொறுத்தவரையில்
40 புதிய விடுதிக் கட்டிடங்களைக் கட்டுவதாகவும், 50 புதிய
விடுதிகளைத் திறக்கப்போவதாகவும் கூறியிருக்கிறார்கள்.
அதைப் போன்றே கல்வித் துறையை எடுத்துக்கொண்டால்,
1988 ஆம் ஆண்டு 68 மாணவர்களுக்குத்தான் மருத்துவக்
கல்லூரிகளில் இடம் கிடைத்தது. ஆனால் 1989ஆம் ஆண்டு
187 ஆக இது கூடியிருக்கிறது. பொறியியல் கல்லூரிகளைப்
பொறுத்தவரையில் 1988-ல் 354 மாணவர்களாக இருந்தது
1989-ல் 685 ஆக உயர்ந்திருக்கிறது. இதன் மூலம் தமிழகத்தில்
இருக்கும் பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட மாணவர்கள் சுமார்
60,833 பேர் பயனடைவார்கள் என்றும் அறிக்கையில்
கூறப்பட்டிருக்கிறது. ஆக பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட
மாணவர்களுக்கு உயர் கல்வி அளிப்பதற்காக, கல்விச் சலுகைகள்
அளிப்பதற்காக எந்தவிதமான கட்டணமும் இல்லாமல், அனைத்து
மாணவர்களுக்கும் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.
அந்தச் சலுகைகளை வரவேற்பதோடு, விடுதிகளையும்
அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்
றைக்கு தமிழகம் முழுவதும் 696 விடுதிகள் இருக்கின்றன.
அவைகள் போதாது என்று கருதுகிறேன். மேலும் அதை அதிகப்
படுத்த வேண்டும். அதுவும் வாடகைக் கட்டிடங்களில் இருப்
பதை மாற்றி, அரசுக் கட்டிடங்களில் விடுதிகளை நடத்த
வேண்டும். இந்த ஆண்டு 4 கோடி ரூபாய் செலவில் 40 புதிய
விடுதிக் கட்டிடங்களைக் கட்ட இருப்பதாக அறிவிக்கப்
பட்டிருக்கிறது. அதைப்போல 50 விடுதிகள் வாடகைக்
கட்டிடங்களில் 90 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட
இருக்கிறது. மேலும் மாணவர்கள் தங்கிப் படிக்க வசதியான
இடங்களைத் தயார் செய்து, புதிய விடுதிகளைக் கட்ட
வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்குக் கல்விச்
சலுகை அளிக்க வருமான வரம்பு சென்ற ஆண்டு 5,000 ரூபா
யாக இருந்தது. தமிழக முதல்வர் அவர்கள் அதை 12,000
ரூபாயாக உயர்த்தினார்கள். ஆனால் இன்று இருக்கும்
படியான விலைவாசி ஏற்றம், வாழ்க்கைத் தரம் இவை
களைக் கணக்கில் எடுக்கும்போது, அந்த வரம்பு போதாது.
ஆகவே 12,000 என்பதை இன்றைய நிலைக்குத் தக்கவாறு
உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்களுக்கு ஒதுக்கி இருக்கும் 70 ரூபாய் என்பது இன்
றைய நிலையில் போதாது என்பது மாண்புமிகு தமிழக முதல்வர்
அவர்களுக்குத் தெரியும். அதை அதிகப்படுத்தி, முழுமையாக
அவர்கள் தேவையை ஈடு செய்யாவிட்டாலும், ஓரளவுக்கு
அவர்கள் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு அந்தக்
கட்டணத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 10] [திரு. எம். சீரங்கன்]

சிறு விவசாயிகளாக இருக்கும் பிற்பட்டவர்களுக்கு,
மிக மிகப் பிற்பட்டவர்களுக்கு, கிணறு தோண்டுவதற்கு
2,500 ரூபாய், 2 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்
படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுப்பதன்
மூலம் 30 லட்சம் விவசாயிகள் பயனடைவார்கள் என்று சொல்லப்
பட்டிருக்கிறது. ஆகவே அந்த 2,500 ரூபாயில் கிணறு
தோண்டுவது சாத்தியமா என்பது அமைச்சர் அவர்களுக்கும்,
தமிழக முதல்வர் அவர்களுக்கும் தெரியாதது அல்ல. அந்தத்
திட்டம் நிறைவேற்றும்படியான நிலையில் இருக்காது. சாதா
ரண விவசாயிகளை, 2 ஏக்கர் வைத்து இருப்பவர்களை
முன்னுக்குக் கொண்டுவருவதற்கு அத்தகைய திட்டங்கள்
தேவைதான். முழுமையாக அந்தக் கிணற்றை வெட்டிய பிறகு
அதிலுள்ள தண்ணீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதற்கு
வேண்டிய பம்புசெட் உட்பட அவைகளை வாங்குவதற்குத்
தேவையான பணத்தை அரசிடமிருந்து கொடுத்து சரி செய்ய
வேண்டும். அதைத் தவணை முறையில் ஒரு பகுதியை மானிய
மாகவும், மற்றொரு பகுதியை தவணை முறையில் வசூலிக்க
வும் வகை செய்தால் அத்திட்டம் நிறைவேற்றுவதற்கு உதவி
யாக இருக்கும். அத்தகைய நிலையில் அந்த 2,500 ரூபாயைப்
பரிசீலிக்க வேண்டும். 2,500 ரூபாய் வீணாகிவிடும் என்பது
தான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

11—00 மணி

அடுத்து இன்றைக்கு அரிசனங்களுக்கும், சீர்மரபினர்
களுக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் வீடு கட்டுவதற்கு
4,500 ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. அவர்கள் அந்த
4,500 ரூபாயில் வீடு கட்ட முடியாது என்பதையும் இந்த
அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்கள். அதை மேலும்
அதிகரிக்க வேண்டும் என்றும் சொல்லி இருக்கிறார்கள்.
அந்த அதிகரிப்பு குறைந்தது 10 ஆயிரம் ரூபாயாக இருக்க
வேண்டும். அந்த 10 ஆயிரம் ரூபாயை அவர்களுக்கு வழங்கு
வதோடு அல்லாமல், இன்னொரு பகுதியில் மிக மிக மோசமான
நிலையில் அரிசனப் பகுதியில் மோசமான பகுதியில் பல்வேறு
கிராமங்களில் வன்னியர்கள், நாடார்கள், மீன் பிடிப்பவர்கள்
போன்ற பல பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள்
மிக மோசமான வாழ்க்கை வாழ்ந்து வருவதால் அவர்களுக்
கும் அரிசனங்களுக்குச் சொந்தமாக கட்டிக் கொடுப்பது
போன்று ஃப்ரீயாக கட்டிக் கொடுக்க வேண்டும் என்று இந்த
மன்றத்தில் அந்த மக்களின் சார்பாக தமிழக முதல்வர்
அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரிசன மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்
கும் பட்டா கொடுக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள்.
ஆதிதிராவிடர், பழங்குடியினர், முடி திருத்துவோர், சலவைத்

[திரு. எம், சிரங்கன்] [1990 ஏப்ரல் 10

தொழிலாளர்கள், நரிக் குறவர்கள், போயர்கள் ஆகியோர்
களுக்கு எல்லாம் இப்போது வீட்டுமனைப் பட்டா கொடுக்கும்
போது அதை ஃப்ரியாக கொடுக்கிறார்கள். அதுமாதிரி
பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த அனைத்து மக்களுக்கும்
பட்டாவை ஃப்ரியாக கொடுக்க வேண்டும். இன்றைக்கு பட்டா
கொடுப்பதைக் கூட கிராமப் பகுதிகளில் அரிசனங்களுக்கு
பட்டாக்களை உடனே பரிசீலித்து கொடுப்பது கிடையாது.
அவர்களுக்குக் காலங் கடத்தி, காரணங்களைச் சொல்லி,
பட்டா கொடுப்பதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே இருக்
கிறார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக அந்த மக்
களுக்கு பட்டா கொடுக்கப்பட வேண்டும் என்று ஒரு திட்டம்
அறிவிக்கப்பட வேண்டும். அப்போது தான் அது நடைமுறைக்கு
வருமேயொழிய, அதைவிட்டு நாம் அவர்களுக்கு பட்டா
கொடுக்க வேண்டும் என்று சொன்னால், கிராம அதிகாரிகள்
அவர்கள் இஷ்டம் போல் செயல்பட்டு, கிராமத்தில் இருக்கிற
பெரிய மனிதர்கள் அதை வேறு விதமாகவும் திசை திருப்பி
அரிசனங்களுக்கு அந்த வீடுகள் கிடைக்காமல் செய்கிறார்கள்.

அரிசனங்களுக்கு காலனி கட்டுகின்றோம். ஆனால் அவர்
களுக்கு பட்டா கொடுப்பது கிடையாது. அப்படி சிரமங்களுக்கு
இடையே பட்டாவை அவர்கள் பெற்றுவிட்டாலும், அங்கு
காலனி மட்டும்தான் அமைக்கப்படும். அங்கு போக்குவரத்துக்கு
வழி இருக்காது; குடிநீர் வசதி இருக்காது, சுகாதார வசதி
இருக்காது—இவைகளை எல்லாம் மனதில் எடுக்காமல், ஏதோ
வீடு கட்டினோம், அந்தத் திட்டத்தை நிறைவேற்றினோம்
என்ற நிலையில் உள்ள சில அதிகாரிகளின் செயல்பாடு இருப்
பதைக் கண்காணிக்க வேண்டும். ஒரு இடத்தில் காலனி அமைக்
கப்படுமானால் அங்கு அவர்களுக்கு அனைத்து வசதிகளும் இருக்
கிறதா—சுகாதார வசதி இருக்கிறதா, போக்குவரத்து வசதி
இருக்கிறதா, பக்கத்தில் சுடுகாடு இருக்கிறதா என்பவைகளை
எல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு தீர்வு கண்டு அனைத்து
சலுகைகளும் கிடைக்கும்படியான நிலையில் விரிவுபடுத்த வேண்
டும். (மணி அடிக்கப்பெற்றது) இந்தகைய பிரச்சினைகளுக்கு
எல்லாம் தீர்வு காணவேண்டும் என்று சொன்னால், இப்படிப்
பட்ட சில சலுகைகளினால் தீர்ந்துவிடும் என்று மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த நாங்கள் கருதவில்லை; இது
இடைக் காலம்; அவைகளைக் கொடுக்க வேண்டாம் என்ப
தல்ல—இந்த இடைக்காலத்தில் சமுதாயக் கொடுமைகளின்
நெருக்கடியில் இப்படிப்பட்ட மக்களைப் பாதுகாத்து முன்னுக்குக்
கொண்டு செல்வதற்கு ஒரு முன்னோடியாக, உதாரணமாக
இருக்கலாமே தவிர, நிரந்தரமான தீர்வு காண்பதற்கு அது
அல்ல பரிகாரம்; நிரந்தரமாகத் தீர்வு காணப்பட வேண்டும்
என்று சொன்னால் கிராமங்களில் இருக்கிற விவசாயிகளுக்கு
நிலம் இல்லாத விவசாயிகளுக்கு நிலங்கள் கொடுக்க வேண்டும்.



1990 ஏப்ரல் 10] [திரு. எம். சிரங்கன்]

11—05 மணி

நிலச்சீர்திருத்தச் சட்டம் என்று சொல்கிறோமே, பினாமி
நிலத்தை எடுக்கிறோம் என்று சொல்கிறோமே, அதைத்
தீவிரப்படுத்தி அமல்படுத்த வேண்டும். அத்தகைய நிலச்
சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வருவதோடு, பினாமி
நிலங்களும் எடுக்கப்பட வேண்டும். கிராமப் பகுதிகளில்
இருக்கும்படியான தரிசு பூமிகள்—சாகுபடிக்கு லாயக்கான
பூமிகளை எடுத்து, கிராமத்தில் இருக்கும்படியான, பிற்படுத்
தப்பட்டோர், மிகமிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர்
போன்றவர்களுக்கு—அப்படிப்பட்ட நிலம் இல்லாதவர்களுக்கு
நிலங்கள் வழங்கப்பட வேண்டும்.

சுய தொழில் வாய்ப்பு என்று சொல்கிறோம். அதற்காகப்
பல்வேறு நிதி ஆதாரங்களை நாம் தேடுகிறோம். நிதி ஆதாரங்
களையும் அரசிடமிருந்து கொடுக்கிறோம். ஆனால் எப்படி
கொடுக்கப்படுகிறது? அந்த நிதி ஆதாரங்களைப் பெறுவதிலே
படித்தவர்கள் எத்தனை சிரமங்களுக்கு ஆளாக்கப்படுகிறார்
கள் என்பது இந்த மன்றத்திலே இருக்கும்படியான அனை
வருக்கும் தெரியும். அந்தச் சிரமங்களைப் போக்குவதற்கு,
யதார்த்தபூர்வமாக, படித்தவர்களுக்கு அப்படிப்பட்ட தொழில்
தொடங்குவதற்கு பேங்குகளில் பணம் கிடைப்பதில் இருக்கும்
படியான சிரமங்களைப் போக்க, குறித்த காலங்களில் அது
கிடைத்து, தொழில் துவங்குவதற்குப் பயனளிக்கச் செய்ய
வேண்டும்.

இன்றைக்குத் தமிழகத்தில் மூடியிருக்கின்ற ஆலைகளைத்
திறப்பது, புதிய தொழிற்சாலைகளை உண்டாக்குவது போன்ற
காரியங்களைச் செய்து வேலைவாய்ப்புகளை உண்டாக்கவேண்
டும். காலங்கடத்தாமல் அந்தகைய நிலையில் தொழிற்சாலை
களைத் திறப்பதன் மூலம் அத்தகைய சூழ்நிலை உருவாகுமே
யானால் வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பக்கம் தீரும்.
அவர்களுடைய வாழ்க்கையில் வருமானம் அதிகரிக்குமே
யானால்தான் அவர்களுடைய பிரச்சினைகளுக்கு உரிய வகை
யில் தீர்வு காண முடியும். நிரந்தரத் தீர்வு என்பது அத்தகைய
பரிகாரம்தான். அத்தகைய நடவடிக்கைதான் நிரந்தரத்
தீர்வுக்கு வழிகாணும். அத்தகைய நடவடிக்கையை நோக்கி
தமிழக அரசாங்கம்—தமிழக முதல்வரவர்கள்
விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், அங்கே
மலைப் பகுதியாக இருப்பதால், அந்தப் பகுதியில் வாழும்
மலைஜாதி மக்களுக்கு எத்தகைய சலுகையும்
படியான நிலையிலேயே இருக்கிறார்கள். அப்படி
இல்லாமல், பிற்பட்ட நிலையிலேயே இருக்கிறார்கள். அப்படி
அங்கு இருக்கும்படியான மக்களில் குறும்பர் ஜாதி என்ற

[திரு. எம். சீரங்கன்] [1990 ஏப்ரல் 10

ஒன்று இருக்கிறது ; அதேபோன்று ரம்பாபு என்று இருக்
கின்றார்கள் ; இன்னொன்று கொண்டா ரெட்டி என்று இருக்
கின்றார்கள்.

இந்தப் பகுதியில் இருக்கும்படியான இந்த மூன்று மக்க
ளுக்கும் பல்வேறு சலுகைகளும் இல்லாமல் அந்தச் சமூகத்தில்
இருக்கும்படியானவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்
படுகின்றார்கள்.

குறிப்பாக, கொண்டா ரெட்டி மக்கள் இன்றைக்குப் பல
தொழிற்சாலைகளிலேயும், பல காரியாலயங்களிலேயும் பணி
யாற்றுகின்றார்கள். அவர்கள் தவறான அனுமதியைப் பெற்
றிருக்கிறார்கள் என்ற காரணத்திற்காகப் பலபேர் மீது
விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. நான் அமைச்சரிடத்
தில் சொல்லிக்கொள்கிறேன். அந்தப் பிரச்சினை சம்பந்த
மாகப் பரிசீலனை செய்து, தவறுகளைக் களைந்து, அத்தகைய
நிலை நீடிக்காமல், அவர்களுக்கு வேலைப் பாதுகாப்பு அளிப்
பதற்கான சூழ்நிலையில், நிரந்தரமான தீர்வு காண்பதற்கும்
மாண்புமிகு முதல்வரவர்கள் முன் வர வேண்டுமென்று இந்த
நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி குறும்பர் என்று சொல்லும்படியான
வர்கள் மேட்டூர் தொகுதியை ஒட்டியிருக்கும்படியான ஆந்திர
மாநிலத்தில் இருந்து வந்த ஒரு பகுதியினர் இருக்கின்றார்கள்
அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் கிடையாது.
அவர்கள் மிகமிகப் பிற்படுத்தப்பட்டவர்கள். தினசரி
மலை ஏறினால்தான் அவர்களுக்கு வாழ்க்கை. அவர்
களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் செய்வதற்கு, குறும்பர்
இனத்தாரை பிற்பட்ட இனத்தோடு சேர்த்து, எஸ் டி. யோடு
சேர்த்து அவர்களுக்கெல்லாம் எல்லாச் சலுகைகளும் அளிக்கப்பட
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மண்டல் கமிஷனுடைய தீர்ப்பை அமல்படுத்துகிறோம்
என்று இந்திய அரசாங்கம் தைரியமாக அறிவித்திருக்கிறது.
அதை நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்களும் வரவேற்
றிருக்கின்றார்கள். அத்தகைய கொள்கையை விரைவில் அமல்
நடத்துவதற்குத் தமிழக அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமென்று
பணிவோடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்
கப்பட்டது) இன்னொரு விஷயத்தைச் சொல்லி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 16 பேர்
பேச வேண்டும். திரு. பூவராகன் அவர்கள் பேசலாம். (குறுக்
கீடு) ... எங்களுடைய சிரமத்தை நீங்கள் கொஞ்சம்கூட



1990 ஏப்ரல் 10] [பேரவைத் துணைத் தலைவர்]

கணக்கிலே எடுத்துக்கொள்ள மாட்டேன் என்கிறீர்கள். 16 பேர் பேச வேண்டும். முதலமைச்சர் பதிலுரை சொல்ல வேண்டும். இப்படி 15 மணித்துளிகள் 15 மணித்துளிகள் என்றால், வேண்டுமானால் மாலையிலே அவையை நடத்துவதற்கு நீங்கள் முதல்வரவர்களிடத்தில் சொல்லி அனுமதி வாங்கிக் கொடுங்கள். (குறுக்கீடு) பேசிக் கொண்டே இருக்கலாம். பிரச்சினைகள் நிறைய இருக்கின்றன. ஆனால் பேசக் கூடிய வாய்ப்பை எல்லோருக்கும் நாங்கள் வழங்கியாக வேண்டும்.

திரு. கோ. வீரையன் : முடித்து விடுவார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எங்கே முடிக்கிறார்? இப்பொழுதுதான் ஆந்திராவுக்குப் போய் இருக்கிறார்; கொண்டாரெட்டிக்குப் போய் இருக்கிறார், திரு. பூவராகன் அவர்கள் பேசலாம்.

*திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கின்ற, "பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன்" என்று இருப்பதை, முதன்மையாக நான் அதை வரவேற்கவில்லை. இந்த முதலியோர் என்பதில் யார் யார் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்? ஒரு பெரிய அளவிலே இருக்கின்ற சமுதாயத்தை, "முதலியோர்" என்பதிலே சேர்ந்து விட்டார்கள் என்று சொன்னால், அந்த எழுத்துச் சுருக்கம், முதலிலே பிற்படுத்தப்பட்டோர், பிறகு மிகப் பிற்படுத்தப்பட்டோர், பிறகு சீர்மரபினர் என்று ஏன் சொல்லக் கூடாது? பிற்படுத்தப்பட்டோர் என்ற நிலையிலே முதலியோரையும் சேர்த்துக் கொள்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது.

11-10 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அது முதலியோர்தான் முதலியார் அல்ல. அதுமாத்திரம் அல்ல. வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்க மானியக்கோரிக்கை குறிப்புகள் அனைத்திலும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை என்றுதான் அச்சேற்றப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கோ. பூவராகன் : தலைவர் அவர்களே, அதைப் பெரிதும் வரவேற்கிறேன் தாங்கள் அளித்துள்ள அத்தனை விளக்க உரையிலும் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது வரவேற்கத்தக்க ஒன்று. இன்றையதினம் அறிக்கையில் முதலாவதாக நீங்கள் படித்த போது, பிற்படுத்தப்பட்டோர் முதலியோர் என்று இருந்தது. ஏனென்றால் நீங்கள் சொன்னதுபோல் முதலில் முதலியோர் என்று தான் இருக்கிறது. அதைப் பார்த்தபோது பிற்பட்டோர் முதலியார் என்று கூட சிலபேர்,

படிக்கக்கூடிய அளவிற்கு வந்துவிடக் கூடாது. பிற்பட்டோர்
மிகப் பிற்பட்டோர், சீர்மரபினர் என்று அடுத்த ஆண்டு வருகிற
போது, தயவுசெய்து முதலமைச்சர் அவர்கள் இதற்குத் தனி
யாக ஒரு மானியக் கோரிக்கையை வைக்க வேண்டும். மிகப்
பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்கு ஏராளமான பணத்தை
ஒதுக்கியிருக்கிறீர்கள். நான் அதை வரவேற்கிறேன். பாராட்
டுகிறேன். அதற்கென்று தனி இலாக்காவை அமைத்து
இருக்கிறீர்கள். அப்படி அமைத்திருக்கிறபோது, ஒரு காரிய
தரிசியை பொறுப்பாக போட்டிருக்கிறபோது, அடுத்த ஆண்டு
வருகிறபோது, இதற்கென்று தனி மானியக் கோரிக்கை
அமைக்க வேண்டும். அமைப்பீர்கள் என்று நன்றாக தெரியும்.
அதை அமைத்து, அந்தப் பெருமையை நீங்கள் ஏற்படுத்தித் தர
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையைத்
தொடங்குகிறேன்.

குறிப்பாக, க்ஷேமநல அரசாங்கம் மிகவும் பின்தங்கியவர்கள்
தாழ்ந்தப்பட்ட மக்கள், மிகவும் பின்தங்கிய மக்கள், சமுதாயத்
தில் முன்னேற்றம் அடையாமல் இருக்கிற மக்களுக்கு புதிய
திட்டங்கள் மூலமாக, நல்ல முறையில் அவர்களுடைய வரு
வாயைப் பெருக்குவதற்கும், கல்வித்திறனை வளர்ப்பதற்கும்
எதிர்காலத்தில் மற்றவர்களுக்கு சமமாக வாழ்வதற்கும்
சிறந்த முறையில் திட்டங்கள் தீட்டுகிற அந்த முறையை நம்
முடைய அரசாங்கம் ஏற்பாடு செய்திருப்பதை நான் பாராட்டு
கிறேன், வரவேற்கிறேன். உங்களுடைய தலைமையில் இயங்கு
கிற அரசாங்கம் சென்ற ஓராண்டுக் காலமாக மிகப் பிற்பட்
டோர் சமுதாயத்திற்கு, சீர்மரபினருக்கு, பிற்படுத்தப்பட்ட
மக்களுக்கு நிறைய காரியங்களை ஆற்றியிருக்கிறது. அதை நான்
பாராட்டாமல் இருக்க முடியாது. இருப்பினும், கூட, நீங்கள்
சொல்கிறபோது, சென்ற ஆண்டு குறைந்த அளவிற்கு நிதியை
ஒதுக்கி அடுத்த ஆண்டு பாருங்கள், அதிக அளவில் நிதி
வரும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த ஆண்டு இந்த
அறிக்கையை வாசிக்கிறபோது, இந்த நிதி அடுத்த ஆண்டு வருகிற
போது பெருகும் என்று வாக்குறுதி அளித்து இருக்கிறீர்கள்.
அப்படி, நல்ல திட்டங்கள் வைத்திருப்பதை நான் வரவேற்
கிறேன். அந்த மக்களுடைய முன்னேற்றத்திற்கு, கல்விவசதிக்
காக நீங்கள் பல முயற்சிகளை எடுத்திருக்கிறீர்கள். தங்கிப்
படிப்பதற்கு தனியாக அவர்களுக்கு உணவு விடுதிகள் ஏற்பாடு
செய்வதற்கு, சீருடை வழங்குவதற்கு, கல்வித்தரத்தை மேம்
பாடு செய்வதற்கு, பள்ளிப் படிப்பிலிருந்து பட்டப் படிப்பு
வரையில் எல்லாவகையிலும் அவர்களுக்கு நிதியுதவி அளிக்கிற
வகையில், குறைந்த அளவிற்கு வசதி வாய்ப்ப இருப்பவர்கள் கூட
நிறைய அளவில் வருங்காலத்தில் பட்டம் பெறவேண்டும் என்
பதற்காக நிறைய சலுகைகளை அளித்து இருக்கிறீர்கள்.
எஸ். எஸ். எல். சி., படிக்கிற மாணவர்களுக்கு, முதல் வகுப்பு
தேர்வு பெறுகிற மாணவர்களுக்கு, அதிகமதிப்பெண் வாங்குகிற
மாணவர்களுக்கு, ஊக்கப் பரிசாக பல தொகைகளை அளித்து



இருக்கிறீர்கள். அளித்து இருக்கிறீர்கள். அந்தத் தொகைகூட இந்த
ஆண்டு அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதைப் பெரிதும்
வரவேற்கிறேன்.

பொதுவாக நல்ல திட்டங்களை அறிவிக்கிறபோது, அதற்காக
தனி இலாக்கா ஒதுக்கி இருக்கிறபோது, அந்த இலாக்கா செவ்
வனே செயல்படுவதற்கு, அந்த இலாக்காவில் மாவட்டந்தோறும்,
மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பில் இருக்கிறவர்கள், பிற்
பட்டோர் நலத் துறையை கவனிக்கிறவர்கள், அவர்களுக்கு உதவி
யாக இருப்பார்கள் என்று நீங்கள் உரையில் சொல்லி இருக்கிறீர்
கள். என்னைப் பொறுத்தவரையில் எல்லா மாவட்டத்திலும்
இவ்வாறு செய்யப்படவில்லை என்றாலும்கூட குறிப்பாக
மிகவும் பின்தங்கிய மக்கள் வாழ்கிற அந்த மாவட்டங்களிலாவது
தனிப்பட்ட முறையில் அதற்கென்று தாசில்தாராவது ஆங்காங்
காங்கே ஏற்பாடு செய்தால், நீங்கள் போடுகிற திட்டங்களை
விரைந்து செயல்படுத்தி, அந்த மக்களுக்கு நன்மைகள் போய்
சேரும்படியாகச் செய்வதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கும் என்
பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு அதிகச் செலவு
பிடிக்காது என்று கருதுகிறேன். 6, 7 லட்சம் ரூபாய் செலவு
செய்தால், குறைந்தபட்சம் பல மாவட்டங்களில் அந்த காரி
யத்தை ஏற்பாடு செய்தால், அவர்களுக்கு வழங்கப்படுகிற
தொகை, பள்ளிகளில் சேர்வதற்கு முறையில்லாமல் இருந்தால்
அதை முறைப்படுத்துவதற்கு, அவர்களுக்கு உதவித்
தொகை, ஹாஸ்டல் சரியாக இயங்குகிறதா என்று பார்ப்
பதற்கு, இதுபோன்ற காரியங்களுக்கு உதவியாக இருக்கும்.

11.15 மணி

அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அங்கேயிருக்கின்ற
அந்த டைரக்டருக்கும் உதவியாக இருக்கும் என்று நான் இந்தச்
சமயத்திலே சொல்லிக் கொள்வேன். அவர்களுக்கும் ஏராளமான
பணத்தை ஒதுக்குகின்ற போது குறைந்த பட்சமாக ஏற்கெனவே
சீர்மரபினருக்கு கல்வி வளர்ச்சிக்காக கிட்டத்தட்ட 5 கோடி
ரூபாய்க்கு மேலே நாம் செலவிடுகிறோம். அந்த அளவிற்காக
வாவது இங்கேயிருக்கின்ற மிகவும் பின்தங்கிய மக்களுக்கு
கல்வியினுடைய வளர்ச்சிக்காக, உணவு விடுதிகள் அமைப்பதற்
காக, அவர்கள் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களுக்கு உதவி
செய்வதற்காக. மேலும் பட்டப் படிப்புக்கு ஆகின்ற செலவுகளை
ஈடுசெய்வதற்காக இதுபோன்ற புஸ்தகங்கள் மற்றும்
துணிமணிகள் வாங்குவதற்காக ஏதாவது உதவி செய்வதற்கு
நீங்கள் ஏற்பாட்டைச் செய்து இருப்பதை விரிவுபடுத்தும்
நோக்கத்தோடு இந்த மிகவும் பின்தங்கிய மக்களுக்கு அந்த
ஏற்பாட்டை செய்யவேண்டும் என்று நான் இந்தச் சமயத்திலே
கேட்டுக்கொள்கிறேன்.

அந்த உதவித் தொகை வழங்குவதிலே, ஸ்காலர்சிப் வழங்கு
வதிலே 6–லிருந்து 8-வது வகுப்பு வரை விடப்பட்டு இருக்கிறது.
நாம் பள்ளிப் படிப்பிலிருந்து, பட்டப் படிப்பு வரையிலும் கொடுக்
கிறோம். ஆனால் 6-லிருந்து 8-வது வகுப்பு வரையிலும்
இருக்கின்றவர்களுக்கு சில சங்கடங்கள் இருக்கின்றன. அவர்
களுக்கு உதவி கிடைப்பதில்லை. எனவே அவர்களையும் நீங்கள்
சேர்த்துக் கொள்வது நலமாக இருக்கும் என்று நான் இந்தச்
சமயத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதனாலே நம்முடைய
அரசாங்கத்திற்கு அதிகச் செலவினம் ஏற்படாது என்பதையும்
நான் இந்தச் சமயத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

நீங்கள் புதிதாக இந்த 20 விழுக்காடு கொண்டு வந்தனி
னாலே கல்லூரியிலே, பொதுவாக வைத்தியக் கல்லூரியிலே,
என்ஜினியரிங் கல்லூரியிலே ஏராளமான மாணவர்கள் இந்த
ஆண்டு சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். நான் பெரிதும் பாராட்டு
கிறேன். வரவேற்கிறேன். இது முந்தைய ஆண்டைவிட, இந்த
ஆண்டு அதற்காக தனிக் கவனம் செலுத்தப்பட்டதால், மேலும்
20 விழுக்காட்டிற்குக் குறையாமல் பாரத்துக் கொள்ளவேண்டும்
என்று அவர்களுக்கு அறிக்கை விட்டதாலும், இந்த அளவை
இன்றையதினம் அவர்கள் ஏற்றியிருக்கிறார்கள். ஆனால் இதிலே
ஒன்று. இன்றையதினம் அந்த அப்ளிகேஷன் போட்டு, தேர்வு
செய்யப்பட்டபிறகு, அட்மிசன் ஆனபிறகு எத்தனை மாணவர்கள்
அங்கே சேர்க்கப்பட்டார்கள் எத்தனை பேர்கள் விடுபட்டு
இருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். காரணம் சில சமயங்
களிலே 2 இனங்களில், அதாவது வைத்தியத் துறைக்கும் பொறி
யியல் துறைக்கும் வந்துவிடும். அப்படிப்பட்ட சமயத்தில், ஒரு
துறையில்தான் அவர்கள் சேருகிறார்கள். இன்னொரு துறையில்
சேருவதில்லை. அதேபோல் சில சமயங்களிலே அவர்கள்
தொழிற் கல்வியைப் படிக்கின்றபோது, விவசாயச் கல்லூரியிலே
சேர்ந்து விடுகிற நிலை வருகிறபோது, இது விடுபட்டுப் போய்
விடுகிறது. மொத்தத்திலே நம்முடைய அரசாங்கக் கணக்
கிலே எத்தனை பேர்கள் அப்ளிகேஷன் போட்டார்கள்,
அப்ளிகேஷனிலே தேர்வு செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்கள்
என்று மட்டும் இருக்கிறது. அட்மிசன் வருகிறபோது, கடைசி
யாக எத்தனை மாணவர்கள் அந்தத் துறையிலே இன்றைய தினம்
சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள் என்ற விவரத்தை நீங்கள்
அறிவிக்க வேண்டும். உங்களுக்குத் திருப்தியாக இருந்தால் நான்
அதைப் பாராட்டுகிறேன். அதிலே குறிப்பாக வைத்தியக் கல்
லூரியிலே, என்ஜினியரிங் கல்லூரியிலே ஏற்கனவே சேர்க்கப்
பட்ட மாணவர்கள் எண்ணிக்கை என்பது நீங்கள் குறித்த அள
விற்குக் குறைவாக இருப்பதாக நான் கருதுகிறேன். அதற்குப்
பிறகு விடுபட்ட மாணவர்களிலே, ஏராளமானவர்கள், கிட்டத்
தட்ட 500 பேர்கள் இன்னும் சேர்ந்து கொண்டு இருக்கிறார்கள்
என்ஜினியரிங் கல்லூரியிலே, வைத்தியக் கல்லூரியிலே என்று
பார்க்கிறபோது, பின்னாலேவருகிற மாணவர்கள் சேர்க்கையிலே
தகுந்த அளவிற்கு அதிகமாக சேர்த்துக் கொள்ளப்படவில்லை.
அந்த 20 சதவீதத்தை எல்லாம் அவர்கள் பார்க்கவில்லை.



முதலாவதாக சேர்த்தபோது இருக்கிறது. பிறகு எடுக்கப்படாமல்
விடுபட்ட இடங்களுக்கு திரும்பவும் எடுக்கின்றபோது, இந்த
20 சதவீதத்தை அவர்கள் கணக்கிலே எடுத்துக் கொள்ளவில்லை
என்பது தெரியவருகிறது. எனவே இதை நீங்கள் கண்காணிக்க
வேண்டும் என்று இந்தச் சமயத்திலே நான் சொல்லிக் கொள்
கிறேன்.

விவசாயக் கல்லூரியிலே, ஐ.டி.ஐ.யிலே, இன்னும் பி.வி.எஸ்ஸி
யிலே மாணவர்களைச் சேர்க்கின்றபோது, இந்த 20 சதவீதத்தை
அவர்கள் கடைப்பிடிக்கவில்லை. அதிலேயும் அவர்களைச்
சேர்த்து, நல்லவிதமாக நீங்கள் குறித்த அந்தக் குறிக்கோளுக்
குக் குறையாமல் பாரத்துக்கொள்ளவேண்டும் என்று இந்தச்
சமயத்திலே நான் கேட்டுக்கொள்வேன்.

அதோடு சென்ற ஆண்டு நான் சொன்னேன். இந்த 20 சத
வீதம் மிகக் குறைவாக இருக்கின்றது. அதை நீங்கள் உயர்த்தித்
தரவேண்டும் என்று. அதை உயர்த்தித் தரவேண்டும் என்று
சொல்வதற்கு ஒரு காரணம் இருக்கிறது. சென்ற முறைகூட
நான் சொன்னபோது, இது அதிக எண்ணிக்கை உள்ள,
மக்கள் தொகை கொண்டவர்கள் இதிலே இருப்ப
தாலே, நீங்கள் இந்த பக்கமாக 30 சதவீதமாக ஒதுக்கித்தர
வேண்டும் என்று நான் சொன்னேன், அதற்குப் பிறகு நீங்கள்
வாக்களித்தீர்கள், பொறுத்து இருந்து பார்க்கலாம், அடுத்த
தடவை என்று சொன்னீர்கள். இந்த 20 சதவீதத்திலே கூட
மேலும் புதிதாக 2, 3 வகுப்புகளைச் சேர்த்திருக்கிறீர்கள்,
மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பிலே. அதனாலே 30 சத
வீதமாக உயர்த்தித் தந்து, இருக்கின்ற குறைகளை நீங்கள்
போக்குவதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்று நான் இந்தச்
சமயத்திலே கூறிக்கொள்கிறேன்.

பொதுவாக தேர்வாணைக் குழுவிலே கூட சமீபத்திலே
டைப்பிஸ்ட் வேலைக்கு ஆட்களை எடுத்தார்கள். அதிலே
ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை எடுத்தார்கள். ஒருவர் கூட
இவர்களில் எடுக்கவில்லை. அதை எடுக்காததற்கு என்ன
காரணம் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும்
என்று நான் இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.
எந்தத் துறையாக இருந்தாலும், அரசாங்கத்துறையிலே, இன்
னும் பல துறைகளிலேயும், அரசாங்கத்தின் வேலைவாய்ப்பு
என்று வருகிறபோது. இந்த 20 சதவீதத்தை அவர்கள் கணக்
கிலே எடுத்துக் கொள்வதில்லை. ஏதோ ரோஸ்டர் என்ற
முறையிலே அவர்கள் வைத்துக் கொள்கிறார்கள். ரோஸ்டர்
என்று பார்த்தாலும்கூட உரிய அளவிலே அவர்களுக்கு வந்து
சேருகிற ஒரு நிலையில்லாமல் இருக்கிறது என்பதை நீங்கள்
கண்காணிக்கவேண்டும் என்பதற்காக நான் இந்தச் சமயத்திலே
சொல்லிக் கொள்கிறேன்.

அதோடு தாங்களும் ஒரு பின்தங்கிய சமுதாயத்தைச்
சேர்ந்தவர்கள். உங்கள் பொறுப்பிலே அந்த இலாக்காவை
வைத்திருப்பது எங்களுக்கு எல்லாம் மிக [illegible] ஒரு யாது

[திரு. கோ. பூவராகன்] [1990 ஏப்ரல் 10

காப்பான இடத்திலே அது இருக்கிறது, அதனாலே பெரும்
குறை வராது, அப்படி குறை வந்தாலும் அதைச் சொல்லி
நாங்கள் தீர்த்துக்கொள்ள முடியும் என்ற ஒரு பெரிய நம்பிக்கை
எனக்கு இருக்கிறது, எல்லோருக்கும் இருக்கின்றது.

இதுபோன்ற இன்னும் சில இனங்களிலே நீங்கள் பார்த்தால்
தேர்வாணைக் குழுவிலே பொதுவாக—இந்த முன்சீப்செலக்சன்
கூட இப்போது வர இருக்கிறது அதிலே கூட—இந்த 20
சதவீதத்தைத் தாங்கள் கடைப்பிடிக்கவேண்டும். எந்த நிலை
யிலும் கூட நீங்கள் இந்தத் சதவீதத்திற்குக் குறையாமல்
பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.
தனியார் துறையிலே கூட—நம்முடைய அரசாங்கம் நிதி
வழங்குகின்ற அந்தத் தனியார் தொழிற் துறையிலே—இந்த
அளவிலே அவர்கள் எல்லாம் சேர்க்கப்படுகிறார்களா என்பதை
நீங்கள் பார்க்கவேண்டும்.

கூட்டுறவுத் துறையிலே சமீபத்திலே சேத்தியாத்தோப்பிலே
சர்க்கரை ஆலை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.
அதிலே எத்தனை பேர்களைச் சேர்த்திருக்கிறார்கள், யார்யாரை
எல்லாம் சேர்த்திருக்கிறார்கள் என்றெல்லாம் நீங்கள்
பார்க்கவேண்டும். குறிப்பாக நெய்வேலியிலே கூட இந்த
நிலை இருக்கிறது. அது மத்திய அரசாங்கத்திலே இருந்தாலும்
கூட மத்திய அரசாங்கத்தோடு வாதாடி—30 கோடி ரூபாயை
நீங்கள் ராயல்டியாகப் பெற்றுத் தந்திருக்கிறீர்கள், நான்
பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். வாழ்த்துக்கூற கடமைப்
பட்டு இருக்கிறேன், அதற்குத் தனியாகக்கூட ஒரு பாராட்டைச்
சொல்ல என்னைப் பொறுத்தவரையில் நான் கடமைப்பட்டு
இருக்கிறேன்—நீண்டகாலமாக அந்தப் பணத்தைப் பெறுவதற்கு
முயற்சி எடுத்தும் முடியாமல் இருந்த நிலையிலேகூட தொடர்ந்து
வாதாடி அதைப் பெற்றுத் தந்திருக்கிறீர்கள்.

தென்ஆற்காடு மாவட்டத்திற்கு அங்கேயிருக்கின்ற அந்த
அனல் மின்சாரத்தையொட்டி இந்த வருவாய் நம்முடைய அர
சாங்கத்திற்கு வந்திருக்கிறது. மிகவும் பின்தங்கிய மாவட்டங்
களைப் பல மாவட்டங்களாகப் பிரிக்க இன்றையதினம் ஏற்பாடு
செய்திருக்கிறோம், பெண்கள் படிப்பதற்காக, சேலம், கோயம்
புத்தூர், திருச்சி என்று இருக்கிறது. ஆனால் தென்னாற்காடு, வட
ஆற்காடு வரவில்லை. தென்னாற்காட்டிலே இருக்கிற பல்
கலைக் கழகத்திலே—நாங்கள் எல்லாம் படிக்கிறபோது, ஒரு
தாலுக்காவிலே 3 பேர்கள் தான் படித்தோம். பட்டப்
படிப்பு, அந்தப் பல்கலைக் கழகத்திலே—இன்றையதினம் எங்கு
பார்த்தாலும் ஏராளமானவர்கள் படிக்கின்ற ஒரு ஆர்வம்
இருக்கிறது. அந்த ஆர்வத்தைப் பயன்படுத்தி, அந்தப் பல்
கலைக் கழகத்திலே பட்டப் படிப்புக்கு நீங்கள் ஏற்பாடு
செய்யவேண்டும். நீங்கள் உத்திரவிட்டால் அவர்கள் பணி
யாமல் இருக்க முடியாது. எனக்கு நன்றாகத் தெரியும். இந்த
ஆண்டு தென் ஆற்காடு மாவட்டத்திலே அந்தப் பட்டப் படிப்பு
படிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்தச் சமயத்
திலே நான் சொல்லிக் கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 10] [திரு கோ. பூவராகன்]

11-20 மணி

நீங்கள் அளித்த கனி உண்மையிலேயே மிகச் சுவையாகத்
தான் இருக்கிறது. ஆரம்பத்திலே. அதைத்தான் நான் சொன்
னேன். ஆனால் கடைசியில் வரும்பொழுது கொஞ்சம் புளிப்
பாக இருக்கிறது. ஏனென்று கேட்டால் நடைமுறையில் நீங்கள்
சொன்னது சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் நடைமுறைப்
படுத்துகின்றவர்கள் அதைச் சரியாகச் செய்யவில்லை என்ற
குற்றச்சாட்டு எங்களுக்கு உண்டு. அதை நீங்கள் சரி பார்த்துக்
கொள்ளவேண்டும். உங்கள் மனதிலே, நீங்கள் அவர்களை எல்
லாம் அழைத்துப் பேசி இவ்வாறு சொல்வதற்கு என்ன காரணங்
கள் என்று கண்டறியவேண்டும். சொல்லுகின்றபோது சொல்
கிறார்கள். ஆனால் கடைசியில் கணக்குப் பார்க்கின்றபோது..
(மணியடிக்கப்பெற்றது) தயவு செய்து எனக்கு 2, 3 நிமிடங்கள்
தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் எல்லாம்
பெரிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள். தொகையையும் குறை
வாகக் கொடுக்கிறீர்கள். தொகையைக் குறைத்துக் கொடுத்தால்
கூட நாங்கள் பொறுத்துக் கொள்வோம். ஆனால் பேசுவதற்குக்
கூட நேரத்தைக் குறைத்தால் எப்படி ? இருக்கின்ற சந்தர்ப்பம்
இந்த ஒரே சந்தர்ப்பம்தான். பல இடங்களில் பேசமுடியாத
சந்தர்ப்பம் இருக்கின்ற காரணத்தால் இதை மன்றத்தில் எடுத்து
வைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் சொல்கிறேன்,
சிறிது நேரம் கொடுக்கவேண்டுமென்பதற்காக நான் இன்றைய
தினம் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மணியடித்து
என்னை உட்கார வைக்க முயற்சிக்க வேண்டாம். நானே
முடித்து விடுகிறேன். மணியடிக்க வேண்டாம் என்று நான் கேட்
டுக் கொள்கிறேன்.

குறிப்பாக நம்முடைய முதல்வர் அவர்கள் இந்தப் பெரிய
முயற்சி எடுத்து அதற்காக பல கோணங்களில் முயற்சி எடுத்து
வருகின்றார்கள் என்பது நன்றாகத் தெரியும். அந்த முயற்சி
வெற்றி பெறுவதற்கு நாங்கள் எல்லாம் பக்க பலமாக இருப்போம்
என்று அவர்களுக்கு இந்தச் சமயத்தில் உறுதியளிக்கின்றேன்.
அதைப்போல் சில இடங்களில் அப்படியே தட்டுத் தடுமாறி இருக்
கிறது. இங்கே இருக்கின்ற செங்கல்வராய நாயக்கன் டிரஸ்ட்
ஒரு தனிப்பட்ட மிகவும் பின்தங்கியவர்களுக்காக செய்யப்
பட்ட ஏற்பாடு. அதேபோன்று கோவிந்தநாயக்கன் டிரஸ்ட், செங்
கல்வராய நாயக்கன் இன்ஸ்டிட்யூட் என்பது இந்தச்சமுதாயத்தை
மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது. அதிலே குறிப்பாகப்
போட்டிருக்கிறார்கள் இன்னின்னாரைத்தான் இதிலே போட
வேண்டுமென்று. நீங்கள் இதிலே சமுதாய நலத்திற்கு
புதிதாக எந்தெந்த திட்டங்கள் கொண்டு வந்திருக்கிறீர்களோ,
100 ஆண்டுகளுக்கு முன்பே அந்தத் திட்டங்கள் எல்லாம் அந்த
டிரஸ்ட் மூலமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று ஏற்படுத்தி
வைத்திருக்கிறார்கள். அதிலே அரசாங்கத்திற்கு ஒன்றும் சங்
கடம் இல்லை. எல்லாவற்றையும் மொத்தமாக இணைத்தார்
கள் சரியாக இயங்கவில்லை என்று, வாஸ்தவும், எடுத்துக்

[திரு கோ. பூவராகன்] [1990 ஏப்ரல் 10

கொள்ளட்டும். நம்முடைய அரசாங்கம் எடுத்துக் கொண்ட
பிறகு, இந்த இரண்டையும் தனியாகப் பிரித்து, அதனுடைய
குறிக்கோளுக்கிணங்க அதிலே ஒரு கல்லூரியை ஏற்பாடு செய்
வதற்கு, மக்கள் படிப்பதற்கு, அதிலே இருக்கின்ற
குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு நம்முடைய அரசாங்கத்திற்கு
என்ன தடையாக இருக்கிறது ? அதற்கு யார் தடையாக இருக்
கிறார்கள் என்பதை எல்லாம் நீங்கள் அறிந்து, அதை நீக்கிவிட்டு
அதை நல்ல முறையில் நடத்துவதற்கு அந்தப்பணம்,
அவர்களுக்கே பயன்படும் வகையில்,—அந்தப் பணம் எல்லாம்
100 ஆண்டுகளாக எங்கேயோ, யாருக்கோ போய்க் கொண்
டிருக்கிறது. இந்த முறையாவது அந்தப் பணத்தை எடுத்து
உரியவர்களுக்குப் போய்ச் சேரும்படியாக நீங்கள் அந்த
ஏற்பாட்டினைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
மேலும் பட்டப் படிப்பு, ஐ.ஏ.எஸ். ஐ.பி. பட்டதாரி
களுக்கு நீங்கள் அதிக அளவிலே பயிற்சிதரவேண்டும்.
அப்படி பயிற்சி தந்து நல்ல விதமாக அவர்களைப்
பதவியில் அமர்த்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.
நம்முடைய அரசாங்கம் தேர்ந்தெடுக்கின்ற அளவிலே இருக்
கின்ற அந்தத் தேர்விலே எந்தக் குறைபாடும் இல்லாமல் நீங்கள்
பார்த்துக் கொண்டு வருகின்றீர்கள், பார்த்துக் கொள்ள
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக தொழில் செய்வதற்காக நீங்கள் அவர்களை
ஊக்குவிக்கின்றோம் என்று சொல்கிறீர்கள். பொதுவாக
விவசாயத்தில் இருக்கின்றவர்கள் வேறு எந்தத் தொழிலுக்கும்
போக மாட்டார்கள். விவசாயக் கூலிகளுக்காகவும், விவசா
யத்தை நம்பியிருக்கின்றவர்களுக்காகவும் பெரிய தொழிற்சாலை
களை அமைத்து, அந்தத் தொழிற்சாலைகளில் அவர்கள்
வேலைக்கு அமர்த்தப்பட வேண்டும். அவர்கள் வேறு
தொழிலுக்குப் போவார்கள் என்று அதற்கு நாம் மானியம்
கொடுப்பது என்று சொன்னால் அப்படி அமர்த்தப்படவில்லை
என்றால் அது நடைமுறையில் சாத்தியம் இல்லை.

11-25 மணி

விவசாயத்தை ஒட்டியிருக்கின்ற—அவர்கள் பயன்படுத்து
கின்ற—உறுப்பினர் அம்மையார் அவர்கள் சொன்னதுபோல்
அவர்களுக்கு கருவிகள் வழங்குவது, மாடுகள் வழங்குவது, கிணறு
கள் தோண்டுவது, மின்சார இணைப்பில் அவர்களுக்கு தனிச்
சலுகைக் கொடுப்பது, விளைபொருட்களுக்கு தகுந்த விலை
கொடுப்பது, மக்கள் படிப்பதற்கு தகுந்த இடங்களிலே
அதிக வாய்ப்புக் கொடுப்பது, அவர்கள் ஏதாவது உத்தியோ
கத்திற்கு வரவேண்டுமென்று சொன்னால்—பெரிய உத்தி
யோகம் இல்லையென்றாலும், ஆசிரியர் உத்தியோகத்திற்காவது



1990 ஏப்ரல் 10] [திரு. கோ. பூவராகன்]

வாய்ப்புக் கொடுக்கலாம்—அதற்கு வாய்ப்பு கொடுப்பது,
என்று ஏற்பாடு செய்யலாம் சட்டப் படிப்பு
படித்தவர்கள ஏராளமான பேர் இருப்பதால்,
அவர்களுக்கு அத்தகைய வாய்ப்புகள் கொடுக்கலாம். ஏதோ
கடுமையான உழைப்புடன் செய்யக்கூடிய உத்தியோகங்கள்
ஏதாவது இருந்தால்கூட, அந்த உத்தியோகத்திற்கு போவ
தற்குத் தயாராக இருக்கிறார்கள். அந்தவகையிலே தனிக் கவனம்
காட்டி, அவர்களுக்கு ஒரு தனிச் சலுகை அளித்து நல்ல ஏற்
பாட்டினைச் செய்ய வேண்டுமென்று சொல்லி, பொதுவாக
இந்த மானியத்தை நான் வரவேற்கிறேன். பல முயற்சிகளிலே,
பல இனங்களிலே, பல முறைகளிலே நீங்கள் எல்லாம்
அதை ஊக்குவிப்பதற்கு அதிகத் தொகையை ஒதுக்கி இருக்
கிறீர்கள். அடுத்த ஆண்டு வருகின்றபோது, சீர்மரபினர்,
மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மானியத்தைத் தனியாக நீங்கள்
அளிக்க வேண்டும். அது உங்களுக்குப் பெருமை சேர்க்கும்.
ஏனென்று சொன்னால், அது சேர்ந்திருப்பதனால் பெருமை
அளிக்குமென்று நான் சொல்லவில்லை. படிக்கின்றபோது,
பார்க்கின்றபோது எல்லாம் ஒரு பெரிய மரபினருக்காக,
நம்முடைய முதல்வர் அவர்கள் தனியாக நிதியை ஒதுக்கி
யிருக்கிறார்கள். சதவிகிதத்தை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள்
தனிக் கவனம் காட்டியிருக்கிறார்கள். ஆனால், தனி ஒதுக்கீடு
மட்டும் இங்கே காணவில்லை என்ற எனது மன வருத்தத்தைப்
போக்கக்கூடிய அளவிற்கு, அடுத்த ஆண்டு வருகின்றபோது,
அமையும் என்று சொல்லி, இந்த ஆண்டு ஏதோ ஒரு அளவிற்கு
பரீட்சார்த்தமாக ஒதுக்கியிருககிறீர்கள், அந்த நிதி போதாது.
மத்திய அரசு உதவி 50 சதவிகித விழுக்காடு. கிராமங்களைச்
சார்ந்தவர்களுக்கு, மிகவும் பின்தங்கிய பகுதியில் வாழ்கின்ற
மக்களுக்கு, பிற்பட்ட பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு
செலவிடப்பட வேண்டும் என்பதற்கிணங்க, நம்முடைய திட்
டத்திலே அதிக நிதியை, அடுத்த ஆண்டு வருகின்ற போது,
ஒரு 100 கோடி ரூபாயாவது நீங்கள் எட்டுவீர்கள் என்று
எனக்கு நன்றாகத் தெரியும். அதற்கான பணத்தைக் கண்
டறியக்கூடிய பொறுப்பு உங்களிடையே விடப்பட்டிருக்கிறது.
அதை நீங்கள் கண்டுபிடித்து, நல்லவிதமாக 100 கோடி
ரூபாய்க்கு, ஒதுக்கி அடுத்த ஆண்டு வருகின்றபோது, மிகவும்
பிற்பட்டவர்களுக்கும், சீர்மரபினருக்கும், ஒரு 75 கோடி
ரூபாயாவது ஒதுக்கித்தர ஏற்பாடு செய்யவேண்டுமென்று
கேட்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு பி. எச். பாண்டியன்: மாண்புமிகு சட்டமன்றப்
பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நல மானியக்
கோரிக்கையின் கீழ் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க
விரும்புகிறேன். தமிழ்நாட்டிலுள்ள 90 சதவிகித பிற்பட்ட
மக்களின் வாக்குகளைப் பெற்று, இந்த அவையிலே 90 சத
விகிதத்திற்கு மேல், சட்டப் பேரவை உறுப்பினர்களாக தேர்ந்
தெடுக்கப்பட்டவர்கள், பிற்பட்ட சமுதாய மக்களின் நலனுக்

காக எடுத்துவைக்கக்கூடிய அத்துணை கோரிக்கைகளையும்,
மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கத்தின் வேண்டுகோளை
ஏற்று, 1978 ஆம் ஆண்டிலிருந்து, 1990 ஆம் ஆண்டு
வரை 12 ஆண்டுகாலம் கிடப்பிலே போடப்பட்ட, மண்டல்
கமிஷன் பரிந்துரைகளை உடனடியாக அமல்
படுத்த வேண்டுமென்பது என்னுடைய
முதல் வேண்டுகோளாகும். தேர்தலிலே அள்ளி வீசுகின்ற
வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதற்கு, நம்முடைய சட்டத்
திலே இடம் கிடையாது. "El ctoral promises are not
enforcible in Law." காங்கிரஸ் கட்சி, பாராளுமன்றத்
தேர்தல், 1984 ஆம் ஆண்டு நடந்தபோது,
மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்துவோம் என்று
வாக்குகளைப் பெற்றார்கள். நிறைவேற்றவில்லை. மக்கள்
ஏமாந்து போனார்கள். சமீபத்தில் நடைபெற்ற பாராளு
மன்றத் தேர்தலில், தேசிய முன்னணி அரசு, மண்டல் கமிஷன்
பரிந்துரைகளை, ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்றுவோம் என்று
கூறி வாக்குகளைப் பெற்றிருக்கிறார்கள். எனக்கு நம்பிக்கை
கிடையாது நிறைவேற்றுவார்கள் என்று. காரணம், தேர்தலுக்
காக வாக்குகளை அள்ளிவீசி, நாட்டு மக்களை, குறிப்பாக,
பிற்பட்ட மக்களின் வாக்குகளைப் பெறுகின்ற வாடிக்கைதான்
கடந்த தேர்தல்களில் நாம் கண்ட அனுபவமாகும். அவர்கள்
நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணியிருப்பார்களேயானால்—
தேசிய முன்னணி அரசு—ஆட்சிக்கு வந்த உடனேயே, பாராளு
மன்றத்தில், ஆரம்பத்திலேயே நிறைவேற்றுகின்றோம் என்று
உத்தரவிட்டிருப்பார்கள். அதற்கு ஒரு குழுவைப் போட்டு,
இன்றைக்கு நம்முடைய பல்வேறு நண்பர்கள் சொல்வது
போல, மண்டல் கமிஷனும் ஊறுகாய்ப் பானைக்குப் போனது
போல, இருக்கிறது என்பதை மறந்துவிட முடியாது. ஆகவே,
மத்திய அரசாங்கத்தை நம்முடைய மாநில அரசாங்கம் உடனே
அணுகி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
உடனே நிறைவேற்றுங்கள்; வாக்குறுதிகளைச் சொல்லி இன்
றைக்கு ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள்; ஆகவே, வாக்காள
பெருமக்களை ஏமாற்றிவிடக்கூடாது" என்ற வேண்டு
கோளை பிரதமருக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற வேண்டு
கோளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 12 ஆண்டு காலமாக நமக்கு வழங்கப்பட்ட அரசியல்
சட்டப் பிரிவு 16 (4) மற்றும் 15 (4) இரண்டும் தமிழ்நாட்டு
மக்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது என்று சென்ற ஆண்டே
நான் தெரிவித்தேன்.

11-30 மணி

இத்தனை ஆண்டுக் காலம் நமக்குக் கிடைக்க வேண்டிய
பங்கு கிடைக்காத காரணத்தினால் ஒருவேளை இனிமேல்
தமிழகத்திலுள்ள பெரிய அதிகாரிகள், ஐ.ஏ.எஸ். பட்டம்



பெறக் கூடிய அதிகாரிகள் வருகின்ற காலங்களில் இன்னும் ஐந்து
ஆண்டுக் காலம் கழித்து இருப்பார்களா என்ற நம்பிக்கை
எனக்குக் கிடையாது. காரணம் கடந்த 20, 25 ஆண்டுக் கால
மாக, அந்தப் பதவிக்கு வந்தவர்கள் ஓய்வுபெறும்போது
புதிதாக வரக்கூடியவர்களின் வாய்ப்பு இன்றைக்கு குறைந்
திருக்கிறது. நமக்கு மறுக்கப்பட்டிருக்கிறது. யூ.பி.எஸ்.சி. யில்
நமக்குக் கிடைக்கவேண்டிய பங்கு கிடைக்கவில்லை என்பதை
நாம் உணர்ந்தாகவேண்டும். அந்த நிலையை மாற்றவேண்டு
மேயானால், பிற்படுத்தப்பட்ட மக்களை ஆள்வதற்கு பிற்
படுத்தப்பட்ட அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும் என்று
முதலமைச்சர் அவர்கள் கருதுவார்களேயானால், தமிழ்நாடு
அட்மினிஸ்ட்ரேடிவ் சர்வீஸ்—தமிழ்நாட்டிலேயே ஒரு நிர்வாகத்
துறையை ஏற்படுத்தி, நீங்களே தேர்ந்தெடுத்து நம்முடைய
மக்களை ஆளவதற்கு நம்முடைய நாட்டு பிற்படுத்தப்பட்ட
கல்வியாளர்கள், பயிற்சி பெற்றவர்களை நியமிக்கவேண்டும்
என்ற வேண்டுகோளையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்
கிறேன்.

ஐ.ஏ.எஸ். டிரெயினிங் சென்டரில் பயிற்சி பெறுவதற்கு
மாதம் 250 ரூபாய் வழங்குவதாக இங்கே குறிப்பேட்டில் பார்த்
தேன். நல்ல திட்டம். படித்து, அவர்கள் பயிற்சி பெறக்கூடிய
திட்டமாகும். ஆனால், இன்றைக்கு இந்திய அளவில் போட்டி
போடும்போது நம்முடைய மாநிலத்திலிருந்து ஐ.ஏ.எஸ்.
எழுதக்கூடியவர்கள் பெரும்பான்மையாக கல்விப் போட்டியோடு
எழுதுகின்ற காரணத்தினால் அவர்களுக்கு அதிக வாயப்புக்
கிடையாது. இங்கே திறமை மிக்கவர்கள் எல்லோரும் ஒன்
றாகச் சேர்ந்து எழுதுகின்ற காரணத்தினால் அவர்கள் இந்திய
அளவில் அதிகமான மதிப்பெண்களைப் பெற முடியவில்லை.
ஆகவே, நீங்கள் இந்த ஐ.ஏ.எஸ். பயிற்சிப் பள்ளியில்
பயிற்சி பெறக்கூடிய மாணவர்களை அரசாங்கமே தேர்வு
நடைபெறுகின்ற நேரங்களில் தேர்வுத் தாள்களை, அப்ளி
கேஷனைப் போடும்போது, பின் தங்கிய மாநிலங்களில் சில
மாநிலங்களைத் தேர்ந்தெடுத்து, ஆங்காங்கே அந்த மாணவர்
களை, இந்த, இந்த சென்டர்களில் போய்ப் பரிட்சை எழு
துங்கள், காரணம் அந்தந்த சென்டரிலிருந்து, பின் தங்கிய
மாநிலங்களிலிருந்து பரிட்சை விடைத்தாள்கள் செல்லும்
போது நம்முடைய மாணவர்கள், பின் தங்கிய மாணவர்கள்
அங்கே இருக்கக்கூடிய மாணவர்களோடு போட்டி போட்டு அதிக
மதிப்பெண்களைப் பெறமுடியும் என்ற ஒரு வழியை நான் இங்கே
தெரிவிக்க விரும்புகின்றேன்.

காரணம், இந்திய அளவில் போட்டி போடும்போது இன்
னும் பின் தங்கிய மாணவர்கள் முன்னேற முடியாமல் இருந்து
கொண்டிருக்கின்றார்கள் என்பதற்காகத் தான் நான் இங்கே
இந்த நிலையை எடுத்துச் சொன்னேன். எந்த நியமனமானாலும்

உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனமானாலும் பிற்படுத்தப்
பட்ட மக்கள் எத்தனை பேர் அங்கே நியமிக்கப்
படுகின்றார்கள். அதில் ஒவ்வொரு சமுதாயத்தினர்,
அறிவாற்றல் உள்ளவர்கள், திறமை உள்ளவர்கள்,
நேர்மையுள்ளவர்கள், நாணயம் உள்ளவர்கள், அவர்களிட
மிருந்து நீங்கள் நியமிக்க வேண்டும். அந்த விகிதாச்சாரப்படி
நியமிக்கவேண்டும் என்ற வேண்டுகோளைச் சொல்கின்றேன்.
ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பல பேர் அங்கே இருக்கக்
கூடாது. எல்லோருக்கும் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்ற
வேண்டுகோளை நான் இங்கே இந்த அவையின் முன்னால்
வைக்கின்றேன்.

விளையாட்டு ஒன்றுக்குத் தான் இட ஒதுக்கீடு கிடையாது.
ஜாதி கிடையாது. திறமை. அந்த விளையாட்டில் இருக்கக்
கூடிய அந்த மதிப்பெண்களைப் பெறக்கூடிய அளவிற்கு,
முன்னேறக்கூடிய அளவிற்கு இன்றிலிருந்து ஒரு 25 ஆண்டுக்
காலத்திற்குள்ளாவது நம்முடைய பின் தங்கிய சமுதாயங்களை
முன்னோக்கி அழைத்துச் செல்ல வேண்டுமென்ற வேண்டு
கோளைச் சொல்கின்றேன். காரணம், காலம் முழுவதும் பின்
தங்கியே இருக்கக்கூடாது நம்முடைய சமுதாயங்கள். அந்
தப் பின் தங்கிய சமுதாய மக்கள் முன்னேறவேண்டும். டெல்லி
அளவில் போட்டி போட்டு, டெல்லியிலே தமிழர்கள், டெல்லி
யிலே பிற்படுத்தப்பட்ட நம்முடைய சமுதாய மக்கள்
அங்கே கொடி கட்டி வாழ்வதற்கு வழிவகை செய்யவேண்டு
மென்ற வேண்டுகோளுக்காகத்தான் இதை உங்கள் முன்னால்
வைக்கிறேன்.

ஆகவே, பல்வேறு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
தங்களுடைய உரிமைகள் பற்றித் தெரியாது. கிராம
மக்களுக்குத் தெரியாது. நாம் தான் அவர்களை முன்னேற்றக்
கூடிய கட்டாயத்தில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறோம்
பிற்படுத்தப்பட்ட மக்கள் தேர்ந்தெடுத்த ஆட்சிதான் நம்
முடைய திராவிடக் கட்சிகளினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி
கள். பிற்படுத்தப்பட்ட மக்களைப் பாதுகாக்கக்கூடிய ஆட்சி
களாக இருந்திருக்கின்றன. இன்னும் இருக்கவேண்டும். இருந்
தாலும், 25, 30 ஆண்டுக் காலமாக எங்கேயோ தொய்வு ஏற்
பட்டிருக்கிறது. எங்கேயோ நாம் ஏமாற்றப்பட்டிருக்கின்றோம்.
எங்கேயோ புறக்கணிக்கப்பட்டு இருக்கின்றோம். பிற்படுத்தப்
பட்ட மக்கள் இன்னும் ஏங்கிக் கொண்டு இருக்கின்றார்கள்.
அழுது கொண்டிருக்கின்றார்கள். தங்களுடைய உரிமைகள்
தெரியாமல் இன்றைக்குப் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றார்கள்.
என்பதை மறுக்கக் கூடாது. சாதாரண சிறுபான்மை, அதாவது
சில சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதிக அளவிற்கு எண்ணிக்கை
11-35 மணி

யில் இல்லாவிட்டாலும் அவர்கள் அதிக எண்ணிக்கையில் இன்
றைக்குப் பெரிய பெரிய பொறுப்புகளில் இருந்து கொண்டிருக்



எண்ணிப்பார்க்க வேண்டுமென்ற வேண்டு
கிறார்கள். அதை வைக்கிறேன். ஆகவே, இந்த
கோளைத்தான் நான் இங்கே எண்ணத்தோடு, இந்த நாட்டின்
அவையிலே பெரும்பான்மை எண்ணத்தைக்கலந்து
பெரும்பான்மை எண்ணத்தோடு நம்முடைய எண்ணத்தைக்கலந்து
மத்திய அரசாங்கத்திடம், நமக்கு பறிபோன உரிமைகள், பிற்
பட்ட மக்களின் பறிபோன சலுகைகள், 12, 15 ஆண்டுக்கால
மாக பறிபோன சலுகைகளை வாங்கித் தாருங்கள் என்று
இந்த அவையின் முன்னால் நான் உங்களைக் கேட்டுக்கொள்
கிறேன். சாதாரணமாக மக்கள் இதற்குப் போராட்டம் நடத்த
முடியாது. அந்தப் போராட்டம் வெற்றி பெறவும் முடியாது.
அதிலும் டெல்லியை எதிர்த்து இங்கேயிருந்து போட்டிபோட்டு
போராட்டத்தை நடத்தி நாம் வெற்றி பெறுவது கடினமாகும்.
ஆகவே முதலமைச்சர் அவர்கள், பிரதம அமைச்சரிடம் எங்
களுடைய சலுகைகளை, இத்தனை ஆண்டுக்காலம் பறித்து
இருக்கின்றார்கள். நீங்கள் வழங்குங்கள், வழங்கினால் ஒத்
துழைப்புத் தருவோம், வழங்கவில்லை என்றால், ஒத்துழைப்பே
கிடையாது என்றுகூடச் சொல்லலாம். காரணம், சில
இக்கட்டான சூழ்நிலையிலேதான் நாம் மக்களுக்குப் பெற
வேண்டிய உரிமைகளைப் பெற முடியும். இக்கட்டான சூழ்
நிலைகளிலே டெல்லி இருக்கும் போது நாம் இதைச் சொல்லி
இதைச் செய்தால்தான் எங்களுடைய ஒத்துழைப்பு கிடைக்கும்
என்றுகூடச் சொல்லி, இன்னும் சொல்லப்போனால், மிரட்டியே
கேட்கலாம். அந்த அளவிற்கு தமிழ்நாட்டு மக்களுக்காக,
நீங்கள் வருகின்ற காலங்களில் பிற்படுத்தப்பட்ட மக்களின்
உரிமைகளைப் பாதுகாருங்கள்: பாதுகாத்துத் தாருங்கள் என்று
கேட்டு பிற்படுத்தப்பட்ட இந்த மானியத்தில் பேச வேண்டும்,
விட்டுவிடக்கூடாது என்ற காரணத்தினால் சென்ற ஆண்டு
பேசிய கருத்துக்களைத்தான் சில நேரங்களிலே இங்கே வலி
யுறுத்தியிருக்கிறேன். இருந்தாலும், இந்தச் சமுதாய மானிய
கோரிக்கையில் பேசாமல் இருக்கக் கூடாது, இந்தச் சமூகத்தைச்
சார்ந்துதான் இந்த அவைக்கு வந்திருக்கிறோம். இந்த ஒரு
மானியம்தான், இந்த ஒரு இலாக்காதான் பிற்படுத்தப்பட்ட மக்
களுக்காக இருக்கக்கூடிய இலாக்கா. இந்த ஒரு மானியம்தான்
பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன்களுக்காக போகக்கூடிய மானி
யம். ஆகவே இதிலே பேசவேண்டுமென்று தெரிவித்தேன்.
அனுமதி கிடைத்தது. நன்றி சொல்லி அமைகிறேன்.

* திருமதி ரமணி நல்லதம்பி ; மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிற்படுத்தப்பட்டோர்,
மிக பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சமய மொழிவாரி
சிறுபான்மையினர் நல மானியத்திலே பேசுவதற்கு, பிற்படுத்
தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த, பிற்படுத்தப்பட்ட தொகுதி
யைச் சேர்ந்த எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி
கூறி ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த மானியத்திலே நிதி ஒதுக்கீடுகள், இன்னும் பல்வேறு
திட்டங்களெல்லாம் மிகவும் அழகாக, வரவேற்கின்ற வகையிலே,
பாராட்டுகின்ற வகையிலே குறிபபிடப்பட்டிருக்கிறது.
இதிலே 4 பிரிவு மக்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிற்
பட்டோர், மிகவும் பிற்பட்டோர், சீர்மரபினர், சமய மொழி
வாரி சிறுபான்மையினர் என்று. இவர்களுடைய வாழ்க்கைத்
தரத்தை மேம்படுத்த, இவர்களுக்கு பல திட்டங்கள், சில
வாரியங்கள், சில இலாக்கக்கள் எல்லாம் புதியதாகத் தொடங்
கப்பட்டுள்ளன என்பதை இதிலே பார்க்கின்ற வேளையிலே
மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்தப் பிற்படுத்தப்பட்ட
மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், மொழிவாரி சிறுபான்
மையினர் போன்ற 4 வகை மக்களுக்காகவும், கல்விக் கண்
ணைத் திறக்கின்ற வகையிலே, அறிவைப் புகட்டுகின்ற வகை
யிலே கல்விச் சலுகைகள் நிறைய அறிவிக்கப்பட்டுள்ளன. அதா
வது, சீர்மரபினருக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும்
அப் டு காலேஜ்-கல்லூரி—படிப்பு வரை இலவசக் கல்வி என்று
சொல்லியிருக்கிறீர்கள். இதனைப் பாராட்டுகின்ற அதே
வேளையில் அதனைப் பிற்படுத்தப்பட்டோருக்கும் நீட்டித்துத்
தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, பயிற்சிக் கூடங்கள், பயிற்சி மையங்கள்,
மைய மாநில அரசு உயர்மட்டப் பணிகளுக்கான தேர்வுகளுக்காக
பயிற்சிகள், என்ட்ரன்ஸ் எக்சாமினேஷன்,(Entrance Examination)
மெடிக்கல், (Medical) அக்ரிகல்சுரல், (Agricultural) என்ஜினியரிங்
(Engineering)போன்றகல்லூரிகளிலே சேர்வதற்கான படிப்பிற்கான
அந்தத் தேர்வுகளுக்காக பயிற்சிகள் என்று இப்படி பல்வேறு திட்
டங்கள் விஸ்தரிக்கப்பட்ட நிலையிலே அவர்களுக்குத் தங்கு
வதற்கான விடுதி வசதிகள், அப்புறம் சாப்பாட்டுச் செலவிற்
கான பணம் இப்படி பல திட்டங்சள் இருக்கின்றன. இந்தத்
திட்டங்கள் எல்லாவற்றையும் நான் பாராட்டுகிறேன். புதிய
தாக 50 விடுதிகள் பள்ளிப் பிள்ளைகளுக்குக் கட்டுவதற்காக
திட்டமிடப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்
கனவே நிறைய விடுதிகள் வாடகைக் கட்டிடங்களிலே இருக்
கின்றன. இவைகளையெல்லாம் கூட விலை கொடுத்து வாங்கி
விடலாம். நிறைய புதிய விடுதிகளைக் கட்டுவதைவிட
தனியார் கட்டிடங்களை விலை கொடுத்தே வாங்கிவிடலாம்
அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

11-40 மணி.

இன்னும் இதிலே சலவைத் தொழிலாளர்கள்,சிகை அலங்
காிக்கும் தொழிலாளர்கள், மண்பாண்டம் செய்யும் கைவினை
ஞர்கள், நரிக்குறவர்கள் போன்ற பல்வேறு சமுதாயத்தினருக்கு
வீடுகள் கட்டிக் கொடுக்கிற திட்டம், மனைகள் வழங்குகிற திட்



டங்கள் எல்லாம் சொல்லப் பட்டிருக்கிறது. அப்படி மனைகள்
வழங்குகிற திட்டத்தை, பின் தங்கியவர்களுக்கும் வழங்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு
இன்னொன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். என்னுடைய
தொகுதியில் அரசால் நிறைய வீடுகள் கட்டப்
பட்டன. எந்த ஆட்சிக் காலத்தில் என்றெல்
லாம் சொல்ல விரும்பவில்லை. பொன்னாகுடி-
(In between Nanguneri and Thirunelveli)—என்ற கிராமத்தில்
50 கட்டிடங்கள் கட்டியிருக்கிறார்கள். அதில் யாரும் குடிபோக
வில்லை. அதனால் அந்த கட்டிடத்தின் சீலிங் அப்படியே இடிந்து
விழுந்து விட்டது. அது யாருடைய பணம்? ஏதோ கடமையாகக்
கட்டிவிட்டு, கூலிக்கு மாரடிப்பது என்று சொல்வார்களே அது
போன்றே கதையாக, அரசாங்கப் பணத்தை எடுத்து கட்டிவிட்
டார்கள். இப்போது அது இடிந்து விட்டது. அது போல என்னு
டைய தொகுதியில் கடலோரப் பகுதிகளில் மீனவர்கள் குடி
யிருப்பதற்கான வீடுகளை பெரிய தாளை, (குறுக்கீடு) கூட்டப்
பணை, கூடுதாளை போன்ற பல்வேறு பகுதிகளில், (குறுக்கீடுகள்)
ராதாபுரம் போன்ற இடங்களிலும், பின் தங்கிய மக்களுக்கான
வீடுகளைக் கட்டித் தந்திருக்கிறார்கள். (குறுக்கீடு).

திரு. இரா. மோகன்: பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர்
அவர்களே, ஓர் உறுப்பினர் சபையில் விவரங்களைப் பேசுகிற
போது, விளக்கமான தகவல்களைச் சொல்லவேண்டும். வீடு
கள் இடிந்து விட்டன என்று சொல்கிறார்கள். யாருடைய ஆட்சி
யில் கட்டப்பட்ட வீடுகள்? எப்போது இடிந்தன? ஏன் இடிந்
தன என்ற தகவல்களை விளக்கமாகச் சொல்ல வேண்டும்.
மொட்டையாகப் பேசக் கூடாது.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, சில வருஷங்களுக்கு முன்னதாகக் கட்டப்பட்ட வீடு
கள். (சிரிப்பு) காலத்தைக் கருத்தில் கொண்டு என் பேச்சைச்
சுருக்கிப் பேசுவதற்காகத்தான் எந்த ஆட்சியில் கட்டப்
பட்ட வீடுகள் என்று சொல்லவில்லை.ஏன் இடிந்தது என்று கேட்
டார்கள். கலவை சரியாகப் போடவில்லை. அதனால் இடிந்திருக்
கிறது. வெறும் மண்ணில் தண்ணீரைக் கலந்து கட்டினால் எப்படி
நிற்கும்? ஆனால் அதற்கு யார் பொறுப்பு? அதிகாரிகள் சரி
யாகப் பார்வையிட்டிருந்தால் இது நடந்திருக்குமா? சரியாக
இருந்தது என்று அதிகாரிகள் சர்டிபிகேட் கொடுத்திருப்பார்
கள் அல்லவா? எப்படிக் கொடுத்தார்கள்? எங்கள் மாவட்டத்
தில் ராமன் என்ற கலெக்டர் இருந்தார். அவர் ஒருமுறை கூட்
டப்பணைக்கு வருகிறபோது, ஆர். சி. சாமியார்கள் மற்றும் சிலர்
மத்தியில் பேசினார்கள். நானும் அங்கே போயிருந்தேன். இப்
படி இடிந்து விழுகிற அளவுக்குக் கட்டிடங்களைக் கட்டியிருக்
கிறார்களே, அதற்கு இன்ஜினீயர்கள் சர்டிபிகேட் கொடுத்திருக்

கிறார்களே, அப்படிக் கட்டியவர்கள்மீதும், சர்டிபிகேட் கொடுத்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பீர்களா என்று கேட்டேன். மேலும், அங்கே கழிப்பறைகள் கட்டியிருக்கிறார்கள். அதற்கு கதவுகளே கிடையாது. அதை முறையாகக் கட்டவும் இல்லை. மேல் நிலைத் தொட்டிகள் கட்டியிருக்கிறார்கள். அதற்கு மேல் மூடியே கிடையாது. இவைகளெல்லாம் தெரிந்து தான் நடக்கிறது. சும்மா பேருக்குக் கட்டுகிறார்கள். கழிப்பறைகளுக்கு கதவுகள் இல்லாததால் திறந்தே கிடக்கின்றன. அவைகளையெல்லாம் நான் கலெக்டரிடம் கேட்டபோது, அதிகாரிகளை மிரட்டி, தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறேன் என்று சொல்லி விட்டுப் போனார். ஆனால் அவரையும் மாற்றி விட்டார்கள். நான் வெறுமனே புள்ளி விவரங்கள் சொல்லிக் கொண்டே போவதில் பிரயோசனமில்லை.

ஆகவே, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி வழங்குகிறபோது, சலவைத் தொழிலாளர்கள், ரொம்ப ரொம்ப குறைவான எண்ணிக்கையில் இருக்கிற தொழில் நுட்பக் கைவினைஞர்கள் போன்றவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல இடங்களில் மனைகளே இல்லை, ஆனால் பட்டா வழங்கப் பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் பண்ணுவது யார், ஏன் அதிகாரிகள் Mi behave பண்ணுகிறார்கள் என்று பார்த்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படி அரசாங்கத்தையும், பின் தங்கியவர்களையும் யார் ஏமாற்றுகிறார்கள் என்று கவனிக்க வேண்டும்.

அடுத்ததாக, இட ஒதுக்கீடு. பொதுப் பட்டியலில் 50 சதவீதம் போக, மீதியுள்ள 50 சதவீதத்தில், பிற்பட்டோர், மிகப் பிற்பட்டோர், என்றெல்லாம் 20 சதவீத இட ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட சமுதாயத்தில் இருக்கிற எல்லாருமே ஏதோ ஒரு வகையில் பிற்பட்டவர்கள் என்று சர்டிபிகேட் வாங்கி, பின் தங்கியவர்கள் பட்டியலில் சேர்ந்து விட்டார்கள். ஒன்றிரண்டு சமுதாயத்தினர் நான் எப்படி இந்த பின் தங்கியவர்கள் பட்டியலில் சேருவது என்று வெளியில் இருந்து விழித்துக் கொண்டிருக்கிறார்கள். எப்படி நுழையலாம் என்று திகைத்துப் போய் இருக்கிறார்கள். இப்படி இட ஒதுக்கீடு இருப்பதால், ஒரு பிற்பட்டோர் சமுதாயமே இங்கே உருவாகிவிட்டது. பிற்பட்டவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்றால்........

**11-45 மணி.**

There are backward community, backward caste, socially backward, economically backward, communally backward, educationally backward, psychologically backward, culturally backward**

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



சொல்லிக் கொண்டே போகலாம். அவர்
என்றெல்லாம் வகையிலும் பேக்வர்ட், இந்த பேக்வர்ட்களை எல்
கள் எல்லா நேரத்தில் அத்தனை வகையிலும் பின்தங்கியவர்
லாம் பார்க்கிற நிலையில், ஒரு தேக்கம் இந்தச் சமுதாயத்தில்
களாக இருக்கின்ற இருக்கிறது என்று சொல்கிறபோது இவற்றை
இன்றைக்கு நிலவி கொண்டு நல்ல பல திட்டங்களைக் கோடிட்
எல்லாம் கருத்தில் கூட எனக்கு ஒரு சின்ன அச்சம் இருக்கிறது.
டுக் காட்டினாலும் மேம்பாட்டுக் கழகம், சிறுபான்மையோர் பாது
பொருளாதார ஏற்பாடு என்றெல்லாம் திட்டங்களைப் போட்டிருக்
காப்புக்கான நாம் திட்டங்கள் தீட்டுகிறோம். சட்டம் போடு
கிறீர்கள். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் இருக்கிறது;
கிறோம். இருக்கின்றன. ஆனால் இதை எல்லாம்
மாநிலச் சட்டங்கள் யார்? அதிகாரிகள். அதாவது அரசு
எக்ஸிக்யூட் பண்ணுவது இந்த அரசு இயந்திரம் எப்படி இருக்கிறது
இயந்திரம்தான். Psychologically backward* * *
என்று பார்க்கிறபோது சூழ்நிலைகள் உருவாகி இருக்கின்ற
என்று இப்படிப்பட்ட தடை இருக்கிறது. இதை அமல் படுத்து
காரணத்தால் பெரிய உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்
வதில் மாண்புமிகு இன்னும் 25 ஆண்டுகள் ஏன் ஆக வேண்
கள் சொன்னதுபோல் 40 ஆண்டுகள். இந்த 40 ஆண்டுகளில்
டும்? காணாதா இந்த செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் எல்லாம்
அமல்படுத்தப்பட்ட, இருக்குமேயானால் இன்றைக்கு நாம் 'ஒன்
நன்றாக நிறைவேறி என்பதிலே கூடக் குடியிருந்திருக்கலாம். நல்ல
டர் லேண்ட்' நல்லதொருபொருளாதார வளர்ச்சி
தொரு சூழ்நிலையிலே, ஆனால் இன்றைக்குப் பார்க்கிறோம்.
யிலே இருந்திருக்கலாம். மெலிந்தவர்களுக்குச் சத்துணவு என்
நலிந்தவர்களுக்கு வீடு, கொடுக்கப்படுகிறது. இந்தச் சத்துணவு ஊழியர்
றெல்லாம் எந்த அளவுக்கு தாக்குதலுக்கு உள்ளாக்கினார்
களை எல்லாம் பெரிய பெரிய முதலைகள் எல்லாம் தப்புகின்
கள்? ஆனால் மீது இருக்கின்ற நாய் உண்ணிகள் போன்றவற்
றன. நாய்களின் என்ன ஆகும். பெரிய, பெரிய திட்டங்கள்
றைப் பார்த்தால் பாலங்களைக் கட்டுகிறார்கள். அதிலே ஊழல்
இருக்கின்றன. மணிமுத்தாறு மடையிலே போய் ஹைவேஸ்
கள் ஏற்படுகின்றன. 5 இலட்சம் ரூபாய்க்குப் பாலம் கட்டுகிறார்கள்.
அதிகாரிகள்

Why it happens? Whose money is being wasted?

பார்க்க வேண்டும், இதற்கு என்ன நட
என்று யோசித்துப் மக்களுக்குப் பலவிதமான வேலைவாய்ப்பு
வடிக்கை எடுக்கிறீர்கள்? இந்த வேலைவாய்ப்புத் திட்டம்,
களை எல்லாம் கொடுக்கிறோம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

[திருமதி ரமணி நல்லதம்பி] [1990 ஏப்ரல் 10

அந்த வேலை வாய்ப்புத் திட்டம் என்றெல்லாம் கொடுக்கிறார்
கள். அதற்கான மானியக் கடன்கள் எல்லாம் கொடுக்கிறோம்.
சிர் மரபினருக்கு கிணறுக்கு, பாசனத்திற்கு மானியம் என்றெல்
லாம் சொல்கிறார்கள். 2,500 ரூபாய் மானியத்தில் கிணறு என்று
சொல்லப்பட்டிருக்கிறது. அதை மூன்றால் பெருக்கிப் பார்த்தால்
7,500 ரூபாய் வரும். 7,500 ரூபாய்க்கு 2, 3, 4 அடி கிணறுகூட
ஏற்படுத்தி பாசன வசதி செய்ய முடியாது, இன்றைக்கு இருக்
கிற சூழ்நிலையில். ஆகவே கொடுத்தும் பயன் இல்லை.
விவசாயிகளால் ஒன்றும் செய்ய முடியவில்லை; சீர் மரபினரால்
ஒன்றும் செய்ய முடியவில்லை. இன்றைக்கு இருக்கிற நிலவரம்
அப்படி இருக்கிறது. அரசு அதிகாரிகள் முன்பு கொஞ்சம், கொஞ்
சம் என்று வாங்கியவர்கள் இப்போது முற்றும் வாங்கக் கூடிய
நிலைமை வந்திருக்கிறது. அதாவது மானியம் போக அதற்கு
அப்புறமும் வந்து முதலையும் கழிக்கக்கூடிய சூழ்நிலை இருக்
கிறது. அப்படிப்பட்ட நிலை வந்திருக்கின்ற காரணத்தால்
நிறைய சங்கடங்கள் இருக்கின்றன. இதை எல்லாம் கருத்தில்
கொண்டு நமது முதலமைச்சர் அவர்கள் அந்த அரசு இயந்திரத்
தைச் சீர்திருத்த வேண்டும்.

குடிக்கிறவர்களைப்பற்றி ஒன்று நான் கேள்விப்பட்டேன்.
சமீபத்தில் ஒரு சப் இன்ஸ்பெக்டர் பற்றி நான் விசாரித்தேன்.
அப்போது சொன்னார்கள், முன்பெல்லாம் அவர் குடிப்பார்,
ஆனால் இப்போது புதிதாக ஒரு ட்ரீட்மென்ட் வந்திருக்கிறது.
அதாவது அது ஒரு சைக்காலஜி ட்ரீட்மெண்ட் (Psychological
treatment). அதற்குப்போன பிறகு அவர் குடிப்பதில்லை என்று
சொன்னார்கள். எனவே இப்போது அரசு இயந்திரம்
சைக்காலஜிக்கலி பேக்வர்ட்,** என்ற நிலைமையில் இருப்பதை
மாற்றுகிற வகையில் நல்ல ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.
இதற்கு ரொம்ப யுக்தி தேவை. அது தங்களிடம் இருக்கிறது.
நல்ல முறையில் அதைச் செய்யவேண்டும். அரசு அதிகாரிகள்,
அரசுவர்க்கம், பல இலாக்காக்களைச் சேர்ந்தவர்கள்,
பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம்
சங்கங்கள் அமைத்துக்கொண்டு மக்களுக்குச் சங்க
டங்களைத் தந்து கொண்டு இருக்கிறார்கள். இந்தச் சங்கடங்
களை அதிகாரிகளிடமிருந்து பெறுகிற மக்களுக்குச் சங்கங்கள்
இல்லாத காரணத்தால் அவர்கள் சஞ்சலங்களில் சங்கமித்துக்
கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதையெல்லாம் அகற்றுகிற
வகையில் சங்கம் இல்லாத பொது மக்களாகிய பிற்பட்டவர்
களாகிய அவர்களுக்கெல்லாம் வாழ வகை செய்கிற வகையில்
அரசு இயந்திரம் தூய்மைப்படுத்தப்பட வேண்டும். 30 வருஷம்,
35 வருஷம் சர்வீஸ் ஆகி இருக்கிறது என்றால் — சமநீதி என்று
சொல்கிறோம், சமதர்ம சமுதாயத்தை நிறுவுகிறோம் என்று
சொல்கிறோம். Difference between the haves and the havenots

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.



1990 ஏப்ரல் 10] [திருமதி ரமணி நல்லதம்பி]

என்பதைக் குறைக்கிறோம் என்றெல்லாம் சொல்லி திட்டங்
களைத்தீட்டுகிறோம். அதை எல்லாம் கருத்தில் கொண்டு சம நீதி
வழங்குகிற வகையில், சம வேலைவாய்ப்பு வழங்குகிற வகையில்
எல்லோரும் சமம் என்கிறவகையில் அதாவது All are equal before
law என்று உறுதிப்படுத்துகிற வகையில் மினிமம் 20 வருஷம் சர்
வீஸ் ஆகிவிட்டவர்களைப் போகச் சொல்லிவிட்டு அதே கல்வித்
தகுதி உடைய மற்றவர்களுக்குக் கொடுக்கலாம். இப்போது ப்ரீ
எஜுகேஷன் என்றவகையில் கல்விக்கூடங்களை எல்லாம் பெருக்கி
விட்டதற்குப் பிறகு அவர்களுக்கு ஒன்றும் தரவில்லை என்று
சொல்வது சரியில்லை. ஆகவே 20 வருஷம் சர்வீஸ் ஆனவர்களை
போகச் சொல்லிவிட்டு, புதிதாக ஆட்களை நியமித்து வேலை
வாய்ப்பை நல்கினால் நிச்சயமாக ஒரு குறைபாடான நிர்வாகம்
இருக்காது. ஆனால் இவர்களை மாற்றுவது ரொம்பக் கஷ்டம்.
ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சி, உறிஞ்சி வாழ்ந்து விட்டார்கள்.
அது இன்றைய தலைமுறையில் ஏற்பட்டது என்று சொல்ல முடி
யாது. அப்படியே வந்துவிட்டது. அதாவது 'எய்ட்ஸ்' நோய்
பற்றிச் சொல்கிறார்கள். அது வந்தால் பிழைக்க முடியாது என்று
சொல்கிறார்கள். அந்தமாதிரி ஆகிவிட்டது. ஆக எந்த அரசாக
இருந்தாலும், எந்தத் திட்டங்களாக இருந்தாலும் திட்டங்கள்
சிறப்பாக இருக்கின்றன, அழகாக இருக்கின்றன. ஆனால் அவை
நல்லவகையில் நிறைவேறுகிறவகையில் How to execute என்பதைத்
தான் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் காவல் துறை
யைப் பற்றிப் பேசுகிறபோது கூடச் சொன்னேன். நீர்கேட்டுப்
போராடியவர்களை நீர்போகும் வகையில் அடிக்கிறார்கள் என்று
சொன்னேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

11-50 மணி.

இப்படிப்பட்ட பல சூழ்நிலைகள், ஒரு பெண்மணி என்னு
டைய ரூமுக்கு முன்னாலே வந்து 4 நாட்களாகக் காத்திருக்
கிறார். அவர் என்ன சொல்கிறார் என்றால் தன்னுடைய மகள்
கொலை செய்யப்பட்டார். கொலை செய்யப்பட்ட மகளுக்காக
அவர் காவல நிலையத்தை அணுகுகிற அளவிலே, உதாசீனம்
செய்யப்பட்டு மிரட்டி விரட்டப்படுகிறார். அந்தக் கொலை
306 தண்டனைச் சட்டத்தின் கீழே போடுவதற்குப் பதிலாக
174லிலே போட்டு ஏதோ மூடி மறைத்து விட்டார்கள் என்று பல
ரெப்ரசென்டேஷன்கள். கடைசியிலே மிரட்டி. அந்த அம்மை
யார் 'ரிமாண்ட்' என்று கூட சொல்லத் தெரியவில்லை.
'டிமாண்ட்' பண்ணிவிடுவேன் என்று சொல்கிறார்கள் என்றுசொல்
லிற்று. ஆனால் நான் நினைத்துக் கொண்டேன். 'டிமாண்ட்'
தானே பண்ணுவார்கள். ரிமாண்ட் எங்கே பண்ணுவார்கள்? ஆக
அந்த நிலை இருக்கிறது. பணம் வந்து பாதாளம் வரை பாயும்.
பாமர மக்கள் கையறு நிலையிலே வாழ்கின்றவர்கள். இந்த அரசு

[திருமதி ரமணி நல்லதம்பி] [1990 ஏப்ரல் 10

இயந்திரத்தைத் தூய்மைப்படுத்தி, அவர்களுக்கு சைக்காலஜிக்கலா
கவும் டிபார்ட்மெண்டல் ஆக்ஷன் எடுத்து அவர்களுடைய **
நல்ல முறையிலே மேம்படுத்தப்பட்ட நிலையிலே முற்
போக்குக் கருத்துக்களை உடையவர்களாக, நல்ல ஒரு 'கோட்
ஆப் காண்டக்ட்' உடையவர்களாக ஆக்குவதற்கு வகை செய்
யாத வரையிலே இந்தச் சமூக நலத்திட்டங்கள் பயன்தரும் என்று
நான் நம்பவில்லை. சொல்லிவிட்டு சொல்லிவிட்டு அங்கே
போட்டோம். இங்கே போட்டோம், பொன்னுகுடிவீடு மாதிரி,
பெரியதாழை வீடு மாதிரி, கூரையில்லாமல், பெல் இல்லாமல்,
பிரேக் இல்லாமல், கதவில்லாமல், நட்டு இல்லாமல், ஆணி இல்
லாமல் Devil haunted ஆக இருக்கக் கூடிய ஒரு சூழ்நிலைதான்
வரும்.

ஆகவே அப்படிப்பட்ட பிரச்சினைகளைக் கருத்திலேகொண்டு
அவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கைகளை முதல்வர்
எடுக்க வேண்டும். அப்புறம் கைப்பற்றிய பொருள்களைத் தர
வில்லை என்றால் அது களவு. வாங்குவது யாசகம். கைப்பற்றிய
பொருளைக் கூட போலீஸ்காரன் எடுத்தால் அது களவு இல்
லையா? அரிசி, பருப்பு, கருவேப்பிலை, தக்காளி, கத்தரிக்காய்
இப்படிப்பட்ட பொருள் கூட திரும்பி வரவில்லை. பாத்திரம்
கூட வருவதில்லை. இப்படிப்பட்ட நிலை மாற வேண்டும். அவர்
களுக்கு ஒரு டிக்னிட்டி இருக்க வேண்டும். எனக்கு இன்றைக்கெல்
லாம் யாரிடமாவது எதையும் கேட்க வேண்டுமென்றால் ஒரு
கூச்சம் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு வளர்ப்பு இல்லாத
காரணத்தினால்தான். இப்படிப்பட்ட அதிகாரிகள் இருக்கும் சூழ்
நிலைகளை மாற்றி அவர்களுக்கு நல்ல பயிற்சி கொடுக்க
வேண்டும். காவல் துறையினர் எதற்காக இருக்கிறார்கள்? லா
அண்ட் ஆர்டரை மெயின்டெயின் பண்ண. அது இன்றைக்கு
இருக்கிறதா என்று அஞ்சுகின்ற நிலை இருக்கின்றது. அந்த
மது டிபார்ட்மெண்ட் இருக்கிறது அல்லவா? பண்ருட்டியிலே
45 பேர்கள் செத்துப் போய்விட்டார்கள். அதற்கு இரண்டு
பேர்கள் மேலே நடவடிக்கை. 45 பேர் உயிர்கள். அது
அருமையான உயிர்கள். அதை இழந்து எத்தனையோ உயிர்கள்
துடிக்கின்றன தவிக்கின்றன. மதுவிலக்கு இலாகாவே 'resign'
பண்ணியிருக்க வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உயிர்களிலேயும் அருமை
யான உயிர், சாதாரண உயிர் என்று இருக்கிறதா?

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அது மானிட உயிர்கள். சமூக நலம், பிற்படுத்தப்பட்
டவர்கள், பேக்வர்ட் மக்கள் எல்லாம் (proceeding towards) சமதர்ம

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.



1990 ஏப்ரல் 10] [திருமதி ரமணி நல்லதம்பி]

சமுதாயத்திற்குப் போகவேண்டுமென்று நாம்பேசிக்கொண்டு
இருக்கிறோம். So we want Social Justice என்ற அந்த தலைப்
பிலே பேசிக் கொண்டிருக்கிறேன். அதற்காக எல்லாம்
திட்டங்கள் தீட்டினாலும், சட்டங்கள் போட்டாலும் இந்த
அரசு இயந்திரம் சரியாக முடுக்கி விடப்பட்டு அதிலே களைகள்
இருந்தால் நீக்க வேண்டும். அதற்குத்தான் இதனைச் சொல்
கிறேன். இந்த சிறுபான்மையருக்கு என்று சொல்லும்போது
நிறையச் சலுகைகள் பாதுகாப்பு எல்லாம் கொடுக்கிறோம்.
6 அம்சம் திட்டம் மிக நேர்த்தியாக, மிகுந்த ஞானத்தோடு
குறிப்பிடப்பட்டுள்ளது. அதை நான் பாராட்டுகிறேன். அதை
நான் வரவேற்று மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அதற்கு ஒரு
சின்ன உதாரணத்தைச் சொல்லலாம். அதாவது காட்டைத்
திருத்தி கழனியாக்கி, அதிலே வரப்புயர்த்தி, நீர்பாய்ச்சி, அதில்
நாற்றுகளையெல்லாம் நட்டுவிட்டு, அங்கே களை எடுக்கமாட்
டோம் அல்லது நச்சுக் கிருமிகளை அழிப்பதற்கு மருந்தும்
தெளிக்கமாட்டோம் என்று சொன்னால் அது எப்படியிருக்கும்?
நல்ல மகசூலை நாம் பெறமுடியுமா? அது மாதிரிதான் இந்தத்
திட்டத்திலே விரும்பிப் பார்த்தால் முகமதியர்களை முஸ்லீம்
நாட்டுக்குப் போங்கள், கிருஸ்துவர்களை இங்கிலாந்துக்குப்
போங்கள் என்றெல்லாம் சில பகுதிகளிலே சொல்வதும்,
இந்தக் காழ்ப்புணர்வும், மத வெறி உணர்வுகளும் எல்லாம்
உண்டாகிறது. இங்கே பரம்பரை பரம்பரையாக பூட்டன்,
ஒட்டன் காலத்திலேயிருந்து இங்கே இருக்கின்றவர்கள்
எல்லோரும். ஆக நாங்களும் இந்த நாட்டு பிரஜைகளே.
இந்த பகுதியின் வாக்காளப் பெரு மக்கள் என்ற நிலையிலே
நாங்கள் இருக்கிறோம். அதனாலே இந்த சிறுபான்மையர் பாது
காப்புக்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக் கொண்டி
ருக்கிற அந்த முயற்சிகளைப் பாராட்டி அந்தச் சமூக விரோதி
களை எல்லாம் ஒடுக்குகின்ற அளவில் களை எடுக்க வேண்டும்.
மருந்து அடிக்க வேண்டும். ஆக அப்படிப்பட்ட செயல்பாடு
களை செய்ய வேண்டும் என்று கேட்டு இந்த அரசு இயந்திரத்தை
ஒரு பரிபூர்ணமான executive organisation ஆக—மாற்ற வேண்டும்
என்று கேட்டு முதல்வர் அவர்கள் தகுந்த பதிலைத் தரவேண்டும்
என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்களுடைய பேச்
சில் நான் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால் சமுதாயத்தைப்
பற்றி, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபு
சமுதாயத்தைப் பற்றிப் பேசும்போது ஒரு சொற்றொடரை
அடிக்கடி பயன்படுத்தினார்கள் ** என்று. அந்த வார்த்தையை
ஏடுகளிலே இடம் பெறாத அளவுக்கு அவைக் குறிப்பிலிருந்து
நீக்கவேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.

[1990 ஏப்ரல் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்பிற்குரிய பெருமக்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னது போல பிற்படுத்தப்பட்டவர்கள் என்பது, அந்தத் தன்மையை உணர்வதற்கு socially and educationally என்ற சொற்களைப் பயன்படுத்தினால்தான், அவர்கள் அந்த நிலைமைக்குச் சரியாக அடையாளம் காட்டப்படமுடியும். ** என்பதனாலேயே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய விளக்கத்தை ஏற்று அம்மையார் அவர்களும் இந்த அவையிலே உள்ளவர்களும் அதனை முழுமையாக ஏற்றுக்கொள்கின்றார்கள் என்ற முறையில் அந்தத் தொடர் அமைப்பு எந்தெந்த இடத்தில் எல்லாம் இடம்பெறுகிறதோ அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

11-55 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன் ஏ பாயின்ட் ஆப் கிளாரிபிகேசன். ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் இங்கே பேசுகிறபோது கட்டப்பட்ட வீடுகள் சில இடங்களில் இடிந்து விழுந்ததாகச் சொன்னார்கள். திட்டவட்டமாக, எந்த ஒன்றியத்திலே, எந்த ஊராட்சியிலே இடிந்து விழுந்தது என்று சொன்னால் நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும். உடன்குடி ஒன்றியத்திலே, சம்மரிகுளம் ஊராட்சியிலே அ.தி.மு.க.வைச் சார்ந்த தலைவரால் கட்டப்பட்ட வீடுகள் இடிந்திருக்கின்றன. உறுப்பினர் திட்டவட்டமாகச் சொன்னால், அதோடு இதையும் சேர்த்து நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் அமைச்சரிடம் எழுத்துவடிவில் கொடுத்தால் நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்கும்.

திரு. பெ. ஆசையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கை மீது பேசுகின்ற வாய்ப்பு தந்ததற்காகத் தமிழ் இனக் காவலரும் தமிழக முதல்வருமான மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜாதி, மதம், நிறம், இனம் போன்ற பேதமற்ற முறையில் அனைவருக்கும் அனைத்தும் கொடுக்க வேண்டும். அனைத்து வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும், அனைத்தும் சமமாக வழங்கப்பட வேண்டுமென்ற உன்னதமான, மகத்துவம் வாய்ந்த தத்துவத்தை நிலை நாட்டிட வேண்டுமென்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1990 ஏப்ரல் 10] [திரு. பெ. ஆசையன்]

பதற்காகத்தான் கலாச்சார ரீதியாக, பொருளாதார ரீதியாகப் பிற்பட்டு இருக்கின்ற அந்த மரியாதைக்குரிய பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்திருப்பவர்களுக்கு, மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு உதவுவதற்காக மானியத் தொகை உயர்த்தப்பட வேண்டுமென்பதற்காகப் பல சலுகைகளை அளிக்கும் முகத்தான் இதுவரை வழங்கப்படாத அளவுக்கு அதிகபட்சத் தொகை இதில் ஒதுக்கப்பட்டு, இந்த மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக இன்றையதினம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களுடைய வரிப் பணம், மக்களுடைய நலனுக்காகத்தான் செலவழிக்கப்பட வேண்டும். எஞ்சியிருக்கிற பணம் எப்படிச் செலவழிக்கப்பட வேண்டும் என்பதைச் சட்டப்படி, நியதிப்படி ஒலிபெருக்கி வாயிலாகக் கேட்டிருந்தாலும், இன்றைக்குத் தான் உள்ளபடியே அதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது தமிழ் நாட்டிலே வாழ்கிற பிற்படுத்தப்பட்ட மக்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் வழி வந்தவர்கள் சீர்மரபினர் என்று இன்றைக்கு ஆக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு காலத்தில் பிரமலைக் கள்ளர்கள் என்று சொல்லி, அவர்கள் எல்லாம் காவல் நிலையத்தில் வந்து கையெழுத்திட வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தார்கள். இன்றைக்கு அந்த அடிமை விலங்கினை முறியடித்து சீர்மரபினராக இந்தத் சமுதாயத்தினரை அறிவித்திருப்பதற்காக, அந்தத் சமுதாயத்தின் சார்பாக, வெளிநாடுகளில் வாழும் அந்தச் சமுதாய மக்களின் சார்பாக, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த விலங்கை உடைத்து எறிந்ததோடு மட்டுமல்லாமல் இந்தச் சமுதாய மக்களுக்கு ஒளி காட்டி, சமூக அந்தஸ்தை அளித்து அவர்களை எல்லாம் சீர்மரபினர் என்ற பட்டியலில் சேர்த்து அவர்களுக்காக சலுகைகளையும் வழங்கியிருக்கிறார்கள். அதற்காக அந்தச் சமுதாயத்தில் இருந்து வந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும் என்னுடைய நன்றியை மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்லாமல், முந்தைய ஆட்சியின்போது, முதல்வராக மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் இருந்தபோது பசும்பொன் முத்துராமலிங்கம் அவர்கள்

பெயரால் 3 கல்லூரிகளை அமைத்தார்கள்.
கல்லூரிகள் அமைக்கப்பட்டதன் காரணமாக அப்படிக்
போன்றவர்கள் எல்லாம் அங்கே படித்து முன்னுக்கு எங்களைப்
முடிந்தது. அந்த வகையில் இன்றைக்கு 4 வர
உறுப்பினர்கள் சீர்மரபினர் சமுதாயத்திலிருந்து சட்டமன்ற
வந்திருக்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் முக்குலத்தோர் இங்கே
சமுதாயத்தைச் சார்ந்திருக்கிற அனைத்து மக்களும்,
எத்தனையோ கட்சிகளிலும், எத்தனையோ
களிலும் தங்களை இணைத்துக் கொண்டவர்களாக இயக்கங்
தாலும் அனைவரும் கட்சி மாச்சரியங்களை இருந்
தூக்கி எறிந்து எங்களுக்கு எல்லாம் நம்பிக்கை எல்லாம்
திரு. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நட்சத்திரமாக,
பின்னால், இந்தச் சமுதாய மக்களுக்கு அவர்களுக்குப்
உதயசூரியனாக தமிழ்க் காவலர், ஆற்றலாளராக,
டாக்டர் கலைஞர் அவர்களைத் தான் மாண்புமிகு முதல்வர்
கிறார்கள். எங்களைப் போன்றவர்களுக்கு நம்பிக் கொண்டிருக்
இத்தகைய வாய்ப்பைத் தந்திருப்பதால் எல்லாம் அவர்கள்
உள்ளவரை எங்களுடைய தனிப்பட்ட எங்களுடைய ஆயுள்
வாகவும், எங்களுடைய விசுவாசத்தையும், முறையிலும், பொது
யும் என்றைக்கும் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம் நம்பிக்கையை
இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். என்பதை

12-00 மணி

அதைப்போல இன்றைக்கு பிற்பட்டோர் பொருளாதார
மேம்பாடுதனைக் கண்டிட வேண்டுமென்பதற்காக ஒரு
நிர்வாகம் அமைக்கப்பட்டும், அந்த நிர்வாகம் முடங்கிக்
கிடந்தது என்று இங்கே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.
முடங்கிக் கிடக்கிற பிற்பட்டோருடைய பொருளாதார
நிலை மேம்பாடடைய வேண்டுமென்பதற்காக அதற்கும்
கூட ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தந்து, ஒரு நம்பிக்கை
வழங்குகிற மானியமாக இன்றைக்கு இது திகழ்ந்து கொண்டிருக்
கிறது என்பதை எண்ணும்போது இதை நான் மனப்பூர்வமாக
வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே பாம்புக்கும் கூடு உண்டு, பல்லிக்கும் கூடு
உண்டு, குருவிக்குக் கூட கூடு உண்டு, ஆனால் குடியிருக்க
மனிதனுக்கு வீடு இல்லாமல் நடுத் தெருவில், நடைபாதை
யில் யாரும் நிற்கக் கூடாது என்பதற்காகத் தான் குடிசை
மாற்று வாரியத்தைக் கண்டு, அடுக்கு மாடி வீடுகளைக் கட்டித்
தந்தார்கள் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்.
அதற்குப் பின்னாலே அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கட்டித்
தந்த வீடுகள் முறையான வீடுகளாக இல்லை என்பதை
இங்கே, அந்தத் தரப்பிலே இருந்து உறுப்பினர்கள் பேசும்



போது கூடச் சுட்டிக் காட்டினார்கள். திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட வீடுகளை அ.தி.மு.க.
ஆட்சியின் போது செம்மைப்படுத்தக் கூட அவர்கள் முன்வர
வில்லை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து சிறுபான்மையினர் நலன் காக்கப்பட வேண்டு
மென்பதற்காகச் சிறுபான்மையினர் ஆணையம் அமைக்கவும்,
கல்வித் துறையில் அவர்கள் மேம்பட்டிட வேண்டுமென்பதற்
காக மத்திய அரசு பணியல்லாது மாநில அரசுப் பணிகளுக்குப்
போட்டித் தேர்வுக்கு செல்கிறவர்களுக்கு அதிக வாய்ப்புகளை
உருவாக்கித் தந்திட வேண்டுமென்பதற்காகப் பயிற்சி நிலையங்
களை, பயிற்சிக் கூடங்களை அமைக்கவும், தேர்தல்
வாக்குறுதிகளில், சொன்னதைச் செய்வோம் என்ற உத்தர
வாதத்தின் அடிப்படையில், மிகப் பிற்பட்ட சீர்மரபினருக்கு
பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வியை வழங்கி இருப்பது
மிக முக்கியத்துவம் வாய்ந்த உன்னதமான காரியமாக
இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்க
விரும்புகிறேன்.

அடுத்து ஒன்றை நான் குறிப்பிட்டாக வேண்டும்.
தேர்தலின் போது ஒரு கட்சி அல்லது ஒரு அணி தேர்தலைச்
சந்திக்கும்போது மக்கள் மத்தியில் வாக்குறுதி கொடுக்
கிறார்கள். எந்தக் கட்சியின் வாக்குறுதிகளில் மக்களுக்கு
நம்பிக்கை ஏற்படுகிறதோ அந்தக் கட்சிக்கு மக்கள்
வாக்களிக்கிறார்கள். அப்படி மக்கள் நம்பிக்கையைப் பெற்ற
கட்சி தான் ஆளுங் கட்சியாக மாறுகிறது. அந்த அடிப்படை
யிலே தேர்தல் நேரத்திலே எத்தனையோ வாக்குறுதிகளை
அ.தி.மு.க. தரப்பிலே இருந்து சொன்னார்கள். ஆனால்
இதைத்தான் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம்
என்று சொல்லி அவைகளை ஓராண்டுக் காலத்திலே செயலுக்கு
இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது என்பதை எல்லோரும்
மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளும் நிலைமை இருப்பதை
எண்ணி நாமெல்லாம் மகிழ்ச்சி அடைய வேண்டியிருக்கிறது.

நான் இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தேர்தல்
நேரத்தில் அ.தி.மு.க. தரப்பிலே இருந்தவர்கள், திராவிட
முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் சத்துணவை நிறுத்தி
விடுவார்கள் என்று சொன்னார்கள், நிறுத்தப்பட்டதா? திராவிட
முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் கப்பைக் கிழங்கைப்
போடுவார்கள் என்று சொன்னார்கள். போட்டார்களா?.
தேர்தல் நேரத்திலே மக்களிடம் வாக்குகளைப் பெற வேண்டு

மென்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால்
மழை பெய்யாது என்று சொன்னார்கள். பெய்யாமல் இருந்ததா?
இவைகளை எல்லாம் அவர்கள் தேர்தல் நேரத்திலே வாக்குறுதி
களாகக் கொடுத்த காரணத்தாலேதான் திராவிட முன்னேற்றக்
கழகத்திற்கு மக்கள் வாக்களித்தார்கள். (குறுக்கீடுகள்) அந்த
வாக்குகளைப் பெற்று. வெற்றி பெற்றிருக்கிற திராவிட
முன்னேற்றக் கழகம் .... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன சொல்லுகிறீர்கள்?
ஒருவரா? இரண்டு பேரா? உங்களுக்குள்ளே ஒரு முடிவுக்கு
வாருங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மழை அதிகமாக
பெய்தது என்று சொல்கிறார்கள். தயவு செய்து அந்த மாவட்
டங்களுக்கு எங்களை அழைத்துச் செல்லுங்கள். எங்களுடைய
பகுதியில் எல்லாம் வறண்டு, பனை மரங்கள், தென்னை மரங்
கள்கூட சாய்ந்து கிடக்கின்ற காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்
கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாங்கள் இருக்கிற பகுதி
களில் எல்லாம் மழை பெய்கிறது. உங்கள் பகுதியில் மழை
பெய்யவில்லை என்றால் அதற்குக் காரணம் சின்னசாமியாகத்
தான் இருக்கும். (சிரிப்பு) (குறுக்கீடு) உங்கள் பகுதியிலும் மழை
பெய்யவில்லையா?

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே ..........

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவ
ரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசியது. இந்த ஆண்டு
எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு, யாரும் எதிர்பார்க்காத
அளவுக்கு ஜனவரி மாதத்திலே மதுரை, இராமநாதபுரம்,
திருநெல்வேலி, தஞ்சை போன்ற மாவட்டங்களில் பெருமளவில்
மழை பெய்தது என்ற நிலையை வைத்துத்தான் அவர் பேசினார்.



1990 ஏப்ரல் 10]

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய நேரத்தில்
ஒன்றைச் சொன்னார்கள். தேர்தல் நேரத்தில் ''தி. மு. க.
ஆட்சிக்கு வந்தால் மழை பெய்யாது என்று சொன்னார்கள்''
என்று குறிப்பிட்டார்கள் அப்படி யார் சொன்னார்கள்
அந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

12-05 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் யார் யாரோ சொன்
னார்கள்.

திரு. எஸ். டி, உகம்சந்த் : இல்லை, இல்லை. யாரோ
சொன்னார்கள் என்றால் அது குற்றச்சாட்டாக ஆகாதா?
சொல்லாததைச் சொன்னால் குற்றச்சாட்டு தானே?

மாண்புமிகு பேரவைத்தலைவர் : இது எல்லாம் பொது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : பொது என்பது வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அசோகர் மரத்தைத்
வெட்டினார், சாலை போட்டார். அது பொது. உட்காருங்க.

திரு. பெ. ஆசையன் : சொன்னதைச் செய்யவில்லை ;
சொல்லாததைச் செய்வோம் என்று சொன்னீர்களே, செய்ய
வில்லையே என்று எல்லாம் ஓராண்டு முடிவதற்கு முன்னா
லேயே வாரிக் குதித்துக்கொண்டு கேட்க முற்படுகிறீர்கள். நான்
அவர்களுக்குச் சொல்ல விரும்புவது, தேர்தல் நேரத்தில்
வாக்குறுதிகளை வைப்பது என்பது 5 ஆண்டுகளிலே சாதிக்கப்
போகின்ற சாதனைப் பட்டியல். அது ஒரு இலக்கு, நோக்கு.
அதை ஓடிப் பிடித்திட வேண்டும் என்பதற்காகத் தான்
அன்றைக்கு கஜானாகளை காலி ஆக்கிவிட்டுச் சென்று
இருந்தாலும் கூட அதை நிரப்பி நாட்டு மக்களின் தேவைகளை
நல்ல நோக்கத்தோடு, கட்சி மாச்சரியங்களை மறந்து
ஒருமித்த கருத்தோடு ஒத்த உணர்வோடு அனைவரையும் பாவித்து
அனைவரும் பலன் பெற வேண்டும் என்று திட்டங்களைத்
தீட்டித் தந்து இருக்கிறார்கள். (மணியடிக்கப் பெற்றது).
கடந்த இரண்டு ஆண்டுகளிலேயே தேர்தல் வாக்குறுதிகளில்
70 அல்லது 80 சதவீதத்திற்கு மேல் நிறைவு செய்யப்பட்டு
இருக்கிறது என்பதை மற்ற கட்சிகளில் இருக்கிற நண்பர்கள்
கூட மனப்பூர்வமாக ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்ப
வெளிப்படையாகிக் கொண்டு இருக்கிறது.

[திரு. பெ. ஆசையன்] [1990 ஏப்ரல் 10

நான் இன்னொன்றையும் சொல்ல
பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களினுடைய விரும்புகிறேன்.
பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்குத் தனி அலுவலகத்தை எழுச்சிக்காக
அமைத்தும், செயலாளரை நியமித்தும் நம்பிக்கையை ஊட்டி
கொண்டு இருக்கிற காரணத்தினாலே, அனைத்துக் கட்சி
களையும் மறந்து, ஓட்டு மொத்தமாக தலைவர் தான் வழி
காட்டி என்ற நம்பிக்கை நாட்டு மக்கள் மத்தியிலே பிறந்து
கொண்டு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்
காட்டாமல் இருக்க முடியாது.

மரியாதைக்குரிய மாண்புமிகு தலைவர்
இன்றைக்கு மதுரை மாவட்டத்தில் அவர்களே.
மக்கள் சீர்மரபினர் பட்டியலில் இருக்கிற மறவர் பெரு
இருக்கிறார்கள். மதுரையில் இருந்து விடுபட்டுப் போய்
இராமநாதபுரம் மறவர் இனத்தைச் இருக்கிற மறவர் மக்கள்,
கிருந்து குடிபெயர்ந்து மதுரையில் சேர்ந்தவர்கள். அங்
றார்கள். மதுரை மாவட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கி
வரையும் அதைப்போலே இராமநாதபுரத்தில் இருக்கிற மறவர் இனத்த
மறவர், அகமுடையர் இனத்தவரையும் இருக்கிற
யலிலே சேர்த்திட வேண்டும் என்கிற சீர்மரபினர் பட்டி
வேண்டுகோளை மாண்புமிகு கருணை மெத்தப் பணிவான
தமிழக முதல்வர் அவர்களுடைய காலடியிலே உள்ளம் கொண்ட
புகின்றேன். அதோடு மதுரை மாவட்டத்தில் சமர்ப்பிக்க விரும்
சீரமைப்புத் துறை ஓரளவுக்குச் செயலிழந்து இருக்கிற கள்ளர்
என்பதையும், அதைத் துரிதப்படுத்தி, தனிக் காணப்படுகிறது
வேணடுமாய் எனது வேண்டுகோளை கவனம் செலுத்த
மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களிடத்திலே தமிழக முதல்வர்
பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன். மெத்தப்
சமுதாயத்தைச் சார்ந்து இருக்கிறவர்களுக்கு—இராமநாதபுரத் அதைப்போல மறவர்
தில் குடி இருப்பவர்களுக்கு ‘கள்ளர் ரெக்ளமேஷன்’ என்று
அமைக்கப்பட்டு இருப்பதுபோல்—‘மறவர் ரெக்ளமேஷன்’
ஒன்று அமைத்து அனைவருக்கும் வழிகாட்டுதலை வழக்கம்
போல் வாங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
இந்த முக்குலத்து சமுதாயத்தைச் சார்ந்த மக்கள், பசும்
பொன் முத்துராமலிங்கத் தேவருக்குப் பின்னால் மாண்புமிகு
முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தான் வழிக்காட்டி, வழி
காட்டி என்று நம்பிக் கொண்டு இருக்கிறார்கள். அந்த நம்பிக்கை
நட்சத்திரமாகத் திகழ்ந்து கொண்டு இருக்கிற, அந்த
நம்பிக்கை வழிகாட்டியாக அமைந்து இருக்கிற இந்த
மானியக் கோரிக்கையை ஆதரித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி
விடை பெறுகிறேன் நன்றி, வணக்கம்.

திரு. ஜி. பழனிச்சாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே இன்றைய
தினம் நடைபெறுகின்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்
பட்டோர் மானியக் கோரிக்கையில் பேசு
வதற்கு அனுமதி தந்த உங்களுக்கு எனது நன்றியைத் தெரி



1990 ஏப்ரல் 10] [திரு. ஜி. பழனிச்சாமி]

வித்துக் கொள்கிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்
பாக என்னுடைய கருத்தைச் சொல்ல முன் வந்திருக்கின்
றேன். இன்றைய தினம் எழுத்தறிவு ஆண்டாக அறிவிக்கப்
பட்டு இருக்கின்ற இந்த நேரத்தில் அதுவும் தாழ்த்தப்பட்ட
மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட டாக்டர்
அம்பேத்கார் அவர்களுடைய இந்த நினைவு ஆண்டில் தமிழ
கத்தின் முதலமைச்சர் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப்
பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்காக நல்ல பல திட்டங்களை இந்த
நேரத்தில் அறிவித்து இருப்பதையும், அதிலேயும் சென்ற ஆண்டு
19.57 கோடி ரூபாய் ஒதுக்கியதை இந்த ஆண்டு 30.70 கோடி
ரூபாயாக உயர்த்தி ஒதுக்கி இருப்பதையும் நான் மனப்பூர்வமாக
வரவேற்கின்றேன். அதுபோல பல்வேறு திட்டங்கள் இந்த
மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. குறிப்
பாக எடுத்துக் கொண்டால் மண்டல் கமிஷன் மூலமாக பிற்
படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களினுடைய
வாழ்க்கைக்கு மிகப் பெரிய உறுதுணையாக, ஆயுதமாக
அமையும் என்ற நம்பிக்கையை—தமிழக முதலமைச்சர்
அவர்கள் சென்ற சட்ட பேரவைக் கூட்டத்திலே அறிவித்த
போதும் சரி, இப்போதும் சரி—தமிழக மக்கள் மகிழ்ச்சி
கரமாக எதிர் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.
அந்த வகையில் மத்திய அரசு இன்றைய தினத்திலே வந்திருக்
கின்ற தேசிய முன்னணி அரசுக்குத் தமிழகத்தினுடைய
முதலமைச்சரவர்கள் தொடர்ந்து அதை வலியுறுத்தி அமல்
நடத்த வேண்டுமென்று இந்த நல்ல சந்தர்ப்பத்திலே நான்
கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

12-10 மணி

அதோடு மட்டுமல்லாமல், இன்னும் சொல்லப்போனால்
கூட, மருத்துவக் கல்லூரியில், பொறியியல் கல்லூரியில்,
1988 ஆம் ஆண்டு 68 விழுக்காடுகளும், அதேபோன்று 1989 இல்
189 விழுக்காடுகளும், 1988 இல் 365 பொறியியல் கல்லூரி
களில் இடங்களும், 1989 இல் 685 இடங்களும், கூடுதலாக
இன்றைய தினத்திலே இடம் அளித்திருக்கிறார்கள் என்று
சொன்னால், இதில் உண்மையிலேயே ஒரு முன்னேற்றம்
அடைந்திருக்கிறது என்று சொன்னால் அந்த 50 சதவீதத்தில்
20 சதவீதம் ஒதுக்கீடு செய்யவில்லை என்று சொன்னால்,
இதில் இருக்கக்கூடிய மற்ற இனத்தவர்களுக்கு நிச்சயமாக
இப்படிப்பட்ட ஒரு நன்மை கிடைத்திருக்க முடியாது. அப்படிப்
பட்ட ஒரு நல்ல திட்டத்தை நம்முடைய முதலமைச்சரவர்கள்
சென்ற ஆண்டில் அறிவித்ததன் மூலமாக இன்றைக்கு அப்படிப்
பட்ட ஒரு இட ஒதுக்கீட்டின் மூலமாக அந்தப் பகுதி மக்க
ளுக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இன்னும்கூட,
அதில் சில தவறுகள் இருந்தால், அதைப்போக்கி, முழுமை

யாகக் கொடுப்பதற்கான வாய்ப்புகளைத் தமிழக முதல மைச்சர் செய்வார் என்ற அந்த நம்பிக்கை எனக்கிருக்கிறது என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களுக்கு, 1990-91 ஆம் ஆண்டுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குவதற் காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. உண்மையிலேயே நல்ல திட்டம், தொடர்ந்து நாற்பதாண்டுக் காலமாகத் தமிழகத்தில் இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, அதிலும், கிராமப்புறத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்ற அந்த மக்களுக்குக் குடிநீர் வசதி, சாலை வசதி இல்லாத அந்த மக்க ளுக்கு இது ஒரு நல்ல திட்டம். அந்த மக்களுக்கு வீட்டு மனை வழங்குகின்ற அந்தத் திட்டத்தில்கூட, வீட்டு மனைப் பட்டா இல்லை என்று சொன்னால், அவர்களுக்கெல்லாம் வீடு கிடைக்காத ஒரு நிலை இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு இன்றைக்கு ஒரு கோடி ரூபாயில் வீட்டு மனைப் பட்டா வழங்குகின்ற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இதைக் கூட, தமிழகத்தில் இப்படிப்பட்ட மக்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள், எவ்வளவு பேர்களுக்கு வழங்க வேண்டும் என்கின்ற விவரத்தை, அரசு மூலமாக ஒரு சர்வே செய்து, அதற்குப் படிப்படியாக, ஒரு ஆண்டுக்கு இவ்வளவு பட்டா என்று வழங்கக்கூடிய விதத்தில், எது அவசியமான இடமோ அங்கே அதிகமாக வழங்குவதற்கான திட்டத்தை முதல மைச்சரவர்கள் கொண்டு வர வேண்டுமென்பதைத் தான் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள் இனத்தை எடுத்துக் கொண்டால் அநேகமாக 45 சதவீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் தமிழகத் திலே கல்வியற்ற நிலையில் இன்றைய தினத்தில் இருந்து கொண்டிருக்கின்றார்கள். கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்கள் தங்களுடைய உழைப்பை நம்பியிருக்கக் கூடியவர்கள், இன்னும் கல்வி என்றால் கூட என்ன என்று தெரியாத வகையில் தமிழகத்திலே 40 சதவீத மக்கள் வாழ்ந்து கொண் டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு இந்தத் திட்டங் களின் மூலமாக கல்வி கிடைப்பதற்குக் கடுமையான முயற்சி களைக் கட்டாயமாகக் கொண்டு வர வேண்டும். பல்வேறு திட்டங்களை நாம் கொண்டு வரும்போது, சட்டம் போட் டாவது அவர்களைப் படிக்க வைப்பதற்கு இந்த அரசு முன் வர வேண்டுமென்று நான் முதலமைச்சரவர்களை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



இதைக் கல்வியாண்டாக இன்றைய தினத்திலே அறிவித் திருக்கிறது. இதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குக் கேரளாவை எடுத்துக்கொண்டாலும்கூட, அந்த அரசு சொல்கிறது, கல்வியில்லாத மக்களே இல்லை என்கிற அந்தத் திட்டத்தைக் கேரள அரசு இன்றைய தினத் திலே அறிவிக்கக்கூடிய விதத்தில் கல்வியிலே மிகப் பெரிய முன்னேற்றம் அடைந்திருக்கிறது. அந்த வகையிலே கல்வியிலே ஒரு முன்னேற்றத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஹாஸ்டலை எடுத்துக் கொண்டால்கூட பிற் படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர்களுக்கு 25— 1989-90 ஆம் ஆண்டுக்கு ஏற்கனவே 25 இருக்கிறது, இப் பொழுது 50 ஆக அதை உயர்த்துவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. உண்மையாகவே பல்வேறு இடங்களிலேயும் முறையாக அது செயல்பட முடியாத நிலையில் அந்தப் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய ஹாஸ்ட லெல்லாம் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. முறையான உணவு அளிக்கப்படவில்லை. கட்டிட வசதிகள் இல்லை; கழிப்பிட வசதிகள், குடிதண்ணீர் வசதிகள் போன்ற அந்த வசதிகள்கூட இல்லாத நிலையில், சுகாதாரமற்ற முறையில் பல்வேறு இடங்களிலே ஹாஸ்டல்கள் செயல்பட்டுக் கொண் டிருக்கின்றன. அந்த ஹாஸ்டலிலே போடப்படக்கூடிய அந்த வார்டர் கூட, பல்வேறு தவறுகளை—அந்தப் பலன்கள் முழு மையாக அந்த மாணவர்களுக்குக் கிடைக்காத வகையில்— பல்வேறு தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதை யெல்லாம் போக்குவதற்குக்கூட கடுமையான முறையில்- என்னதான் சட்டம் கொண்டு வந்தாலும்கூட, தவறுகள் நடப்பதற்காகவே, தவறுகள் பண்ணுவதற்காகவே சில பேர்கள், சில அதிகாரிகள் இருக்கக்கூடிய நிலைமை இருக்கத்தான் செய்கிறது. அதையெல்லாம் போக்குவதற்கு நமது முதலமைச்சரவர்கள் முயற்சியெடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

நுழைவுத் தேர்வில், பொறியியல் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரி போன்றவைகளுக்கு கிராமப்புறத்திலே படிக்கக்கூடிய ஏழை எளிய மக்களுடைய கல்வித்தரம் என்பது மிகவும் குறைவாகவே இருக்கிறது. நகரத்திலே படிக்கக்கூடிய மக்கள் கல்வித் தரத்திலே—அவர்கள் டியூஷன் வைத்து இருப்ப

தாலும் மிகவும் நன்றாகப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது நுழைவுத் தேர்விலேகூட தனியாகப் பல்வேறு மாவட்டங்களில்—மதுரை, கோயம்புத்தூர், திருச்சி போன்ற மாவட்டங்களுக்கு அவர்களுக்கு ஓராண்டுக்குப் பயிற்சி அளிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதை எல்லா மாவட்டத்திலும் விரிவுபடுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

12-15 மணி

பிற்பட்டோர் மற்றும் அந்தப் பகுதி மக்களுக்கு 696 விடுதிகள் இன்றையதினம் இருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இன்னும் பாக்கி இருக்கிற அந்த விடுதிகளை கட்டுவதற்கு உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து நரிக்குறவர்கள் மற்றும் பல்வேறு வகுப்பினருக்கு வீடு கட்டி கொடுக்கிற திட்டம் என்பது இன்றைய தினம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு இடங்களில் நரிக்குறவர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு பல்வேறு இடங்களில் வீடு கட்டிக் கொடுத்தும் கூட, அவர்கள் வாழமுடியாத நிலை இருக்கிறது. முழுமையாக நல்ல வீடுகளாக அமையாத காரணத்தால், பல்வேறு ஊர்களில் குடிசைகள் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் தாலுகா ஆபீஸ் முன்னால் சிறிய பாதையில் நூற்றுக்கணக்கான பேர்கள் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அங்கே வருகிறபோது அவருடைய காரை மறித்துக் கொண்டு, தங்களுக்கு வீடு கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தினார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு வீடு கொடுக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியில் கோட்டூர் என்ற ஊராட்சி ஒன்றியத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவி. களுக்கு இன்னும் ஹாஸ்டல் வசதி கிடையாது. பல்வேறு கிராமங் களிலிருந்து அந்தப் பெண்கள் வருகிறார்கள். அவர்கள் தங்கிப் படிக்க விடுதிகளை ஏற்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்தினால்தான் அந்தக் குழந்தைகள் முழுமை யாகப் படிக்க வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும்.

கல்லூரியில், பள்ளிகளில் படிக்கிற தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மாணவ மாணவிகள் படித்து வீட்டுக்குச் சென்றால், தங்களுடைய குடும்பச் சூழ்நிலை காரணமாக பல்வேறு வேலை



களில் தங்களுடைய கவனத்தைச் செலுத்தி, படிப்பில் அவர்கள் பின்தங்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அந்த வகையில் ஏற் படாமல் இருக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு தலைவருக்கு நன்றி கூறி முடிக் கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத்துறையில் பேசுவதில் நான் மகிழ்ச்சி அடை கிறேன். பல ஆண்டுகளாக இந்தத் துறை குறித்து நான் பேசி வருகிறேன். அதுவும் குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நான் சட்டமன்றத்தில் பணியாற்றத் தொடங்கிய காலத்திலிருந்து இந்தத் துறையை குறித்து திட்டம் தீட்டக் கூடியவராக, பிற்பட்ட மக்கள் மேன்மை அடைய வேண்டும் என்பதற்காக சிந்தனை செய்யக் கூடியவராக இருக்கிற அந்தப் பெருமகனிடத்தில், மக்களின் சார்பாக கோரிக்கை வைக்கிற ஒரு இடத்திலிருந்து, நாம் தொடர்ந்து பணியாற்றுகிறோம் என்ற நிறை மனத்தோடு, மீண்டும் ஒரு முறை இந்த அவையில் பிற்பட்டோர் நலத்திற்காக தன்னுடைய நலத்தைக் கூட பொருட் படுத்தாது, முழுமையாக இந்த மக்களுடைய மேம்பாட்டிற் காகவே சிந்தித்து செயல்படுகிற, டாக்டர் கலைஞர் அவர் களிடத்தில், நம்முடைய கோரிக்கைகளை எடுத்து வைப்பதற் கும், அவர் இதுவரையில் ஆற்றியிருக்கிற மகத்தான சேவை களுக்காக மக்களுடைய நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரி விப்பதற்கும் மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்தமைக்கு மகிழ்ந்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஒரு மகத்தான நாட்டிலே, மகத்தான புரட்சி நடந்திருக் கிறது. கத்தியில்லா, இரத்தமில்லா புரட்சி என்று சொன்னால் அது மிகையாகாது. நாட்டில் போர்களை நடத்தி, போராட் டங்களை நடத்தி, கோரிக்கைகளை எழுப்பி, தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற நிலையில் பிற இடங்களில் மக்கள் இருக்கிறபோது, எதிர்பார்க்காத சலுகைகளை, எதிர் பாராத நன்மைகளைச் செய்கிற, இந்தச் சமுதாயத்தினுடைய தலைமகனாக, பிற்பட்டோர், மிகப் பிற்பட்டோர், சீர்மரபினர் சமுதாயத்தில் நலிந்தோர் போன்ற மக்களுடைய சிந்தனையாக, அவர்களுடைய விருப்பமாக, டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு திகழ்ந்து வருகிறார்கள் என்பதற்கு இந்த மானியக் கோரிக்கையே ஒரு எடுத்துக்காட்டு.

12-20 மணி

இந்தத் துறையைப் பொறுத்த வரையில் இதை ஒரு பெரிய மேஜர் போர்ட்போலியோ என்றுசொல்ல முடியாது. ஏனைய மாநிலங்களிலே இது ஒரு பெரிய மேஜர் போர்ட் போலியோ வாகக் கருதப்படவில்லை. ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஒரு Miscellaneous item of financial Allocation

என்ற அளவிற்கு வருகிற இந்தத் துறையைத் தொடர்ந்து மாண்பு மிகு முதல்வர் அவர்களே, கவனித்து வருவது இந்தத் துறையின் பால் அவர்கள் கொண்டிருக்கிற அக்கறையை நாட்டுக்கு விளக்குவதாக இருக்கிறது என்பதை நாம் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

கடந்த ஆண்டு, 1989-90 ஆம் நிதியாண்டில் இந்தத் துறைக் காக அன்றைக்கு இருந்த நிதிநிலைக்கு ஏற்ப 19.57 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒரே ஆண்டுக்குள்ளாக அவர்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது, கஜானா காலி என்ற நிலையை அவர்களே உணர்ந்து, கஜானா காலியாக இருந்தாலும், ஏறக்குறைய 20 கோடி ரூபாயை இந்தத் துறைக்கு ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஒரே நிதியாண்டுக்குள்ளாக, அடுத்து, சமர்ப்பித்து இருக்கிற அந்த மானியக் கோரிக்கையிலே இந்த ஒதுக்கீட்டை 30 கோடி ரூபா யாக உயர்த்தி இன்றைக்கு அந்தக் கோரிக்கைகளை அவை முன் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், எந்தெந்த வகையிலே இந்த பிற்படுத்தப்பட்ட மக்கள் மேன்மையுற வேண்டுமோ அந்த வகைகளை எல்லாம் அவர்கள் ஆய்வு செய்து சபை முன்னே இந்தக் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள் என்பதிலே எனக்கு நெஞ்சம் நிறைந்த மகிழ்ச்சி உண்டு.

ஒரு தாய் சொல்வார்கள், அழுத பிள்ளைதான் பால் குடிக் கும் என்பார்கள். குழந்தை அழுதபிறகு பால் கொடுப்பது என்பது ஒரு தாயினுடைய பண்பு. குழந்தை அழாமலேயே குழந்தைக்கு பால் தேவையாக இருக்கிறதா என்பதைக் கண் டறிந்து அந்தக் குழந்தைக்கு பால் கொடுக்க முனைவது என்பது தாய்ப் பாசத்தினுடைய உச்ச கட்டமாகும். எனவே இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த மன்றத்திலே உறுப்பினர்கள் என்னென்ன கருத்துக்களைச் சொல்வார்கள், கோரிக்கைகளை வைப்பார்கள் என்பதை எதிர்பார்த்து மட்டுமல்ல இன்னும் பல்லாண்டுகளுக்கு வளர்ந்து வருகிற இந்தச் சமுதாயத்தினுடைய தேவைகள் எதுவாக இருக்கும், அழுத்தப்பட்ட, அடக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட இந்தச் சமுதாயம் மேலோங்கி நின்று, மற்ற வர்களோடு சமத்துவத்தோடு வாழவேண்டும் என்றால், எந் தெந்த வகையிலே எல்லாம் இந்தச் சமுதாயம் ஆக்கமும், ஊக்கமும் பெற வேண்டும் என்பதற்காக வழிவகைகளை கண்டு பிடித்து, எல்லாத் துறைகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே வழி வகுத்துத் தந்திருக்கிறார்கள்.

ஒரு உதாரணம் சொல்வேன். 1982-லே தமிழ்நாடு பிற் படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அது யாருக்குமே தெரியாது. ஏன் என்றால், செயல்பட்டுக் கொண்டிருந்தால் தெரிந்திருக்கும்.



அதனால் ஏதாவது நல்விளைவுகள் நாட்டில் ஏற்பட்டிருந்தால் தெரிந்து இருக்கும். நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் என்னைவிட மூத்தவர், இந்த அவையிலே பல்லாண்டுக்காலமாக பணி யாற்றிக் கொண்டு இருப்பவர், அவர்களே கேட்டார்கள் என் னிடத்திலே, இப்படிப்பட்ட துறை என்று ஒன்று இருக்கிறதா என்று. பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் என்ற ஒரு கழகம் இருக்கிறதா என்று அவரே கேட்கும் போது, அது எந்தவகையிலே அடக்கப்பட்டு, முடக்கப்பட்டுக் கிடந்தது என்பது நமக்குத் தெரிய வருகிறது.

1982-லேயிருந்து இதுவரையிலும் அந்தக் கழகத்தின் வாயி லாக பொருளாதார மேம்பாடு மட்டுமல்ல, வேறு எந்த மேம் பாடும் கிடைக்கக்கூடிய வகையிலே அந்தக் கழகம் நாட்டுக்கு அறிமுகப்படுத்தாத ஒரு கழகமாக இருந்து வந்ததை மாற்றி, திடீரென்று அந்தக் கழகத்திற்கு ஒரு கோடி ரூபாயை அளிக் கிறேன் என்று சொன்ன பிறகுதான் எல்லோரும் கொஞ்சம் எழுந்து உட்கார்ந்து, எந்தக் கழகத்திற்கு என்று கேட்க ஆரம் பித்தார்கள். அப்படிப்பட்ட ஒரு கழகம் இருக்கிறதா என்று கேட்க ஆரம்பித்த நிலையிலே அதற்கு ஒரு கோடி ரூபாயை பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தினுடைய மேம்பாட்டுக் காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

12-25 மணி

அதுமட்டுமல்ல. அகில இந்திய அளவிலே நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்கள் போட்டி போட வேண்டும், அகில இந்திய அரசுப் பணிகளிலே அவர்கள் தேர்வுகள் எழுதி வெற்றி பெற வேண்டும் என்பது நம்முடைய நோக்கமாக இருக்கிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலை இன்றைக்கு குறைந்து இருக்கிறது. நம்முடைய மாணவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், அகில இந்திய அளவிலே அவர்களுடைய எண்ணிக்கை குறைந்து இருக்கிறது என்ற ஆதங்கமும் கவலையும் நம் அனைவரையும் நிலைகொண்டு வாட்டிக் கொண்டு இருக்கிறது. அது 1971-லே அவர்களுக்கு சிறப்பு பயிற்சி தர வேண்டுமென்பதற்காக ஒரு கழகம், அதனுடைய சிறப்பு பயிற்சி அமைப்பு ஒன்று இந்த மாநிலத்திலே தோற்றுவிக்கப்பட்டு, நல்ல முறையில் நடந்து வந்தது. ஆனால் அதற்கு நிதி ஒதுக்கீடு மட்டும் முறையாக செய்யப்படவில்லை என்ற நிலையும் இருந்து வந்தது. அதிலே ஏறக்குறைய 50, 60 பேர் இருந்து பயிற்சி பெறக் கூடிய அளவிற்கு அது நடந்து வந்தது. ஆனால் இன் றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கு முறையான நிதி ஒதுக்கீடு செய்து மாணவர்கள் தங்கிப் பயிற்சியினைப் பெறு வதற்கும், வெளியிலே இருந்து ஒரு சிலர் சென்று பயிற்சி பெறு வதற்கும், ஏற்பாடுகள் செய்யப்பட்டதிலிருந்து நம்முடைய

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1990 ஏப்ரல் 10

தமிழகம் அகில இந்திய அளவிலே தன்னுடைய நிலையை மீண்டும் பெற வேண்டுமென்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது இதன் மூலமாக விளங்குகிறது.

அடுத்து மனைப் பட்டாக்கள் இதுவரையிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மற்றவர்களுக்கும் அளிக்கப்பட்டது. இன்றைக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர்களுக்கும் அளிப்பதற்காக அது மாநிலம் முழுவதும் பரவலாக மனைப் பட்டாக்களை வழங்க வேண்டுமென்பதற்காக ரூ. 1 கோடி அதற்கென்று தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் பட்டப் படிப்பு பொறுத்தவரையிலே ஏற்கெனவே சில பிரிவினர்களுக்கு இருந்த சலுகையை இன்றைக்கு மற்ற மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அளித்ததின் வாயிலாக சமுதாயத்திலே தாழ்ந்த நிலையிலே கல்விச் செல்வத்தைப் பெற முடியாத துர்ப்பாக்கியசாலிகளாக ஆண்டாண்டுக் காலமாக வாழ்ந்து வந்த மக்கள் அந்தக் கல்விச் செல்வத்தை, கேடில் விழுச் செல்வத்தைப் பெற்றிடும் வகையில் அவர்களுக்கும் முறையாக இலவசப் பட்டப் படிப்பிற்காக வகை செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதைப்பற்றி இந்தச் சமுதாயம் பெருமை அடைகிறது. இன்றைக்கு அந்த மாணவர்கள் தங்கிப் படிப்பதற்காக ஏற்கெனவே 25 விடுதிகள் இருந்தன. அதனை 50 ஆக உயர்த்தி 100 சதவீதம் அதிலே அதிகம் என்ற அளவிற்கு வழி வகுத்துத் தந்திருக்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் கலைஞரிடத்திலே இந்த மானியத்தில் பேசி சமுதாயத்தில் தேவையுள்ளோர்கள் என்று யார் இருக்கிறார்களோ, அவர்களுக்கு குறிப்பாக வாதாடுகின்றேனோ, அவர்களுக்காக பல நன்மைகளை பெற்றிருக்கிறேன் என்ற மன நிறைவு எனக்கு உண்டு. அந்த நன்மையைத் தந்தவர் இன்றைக்கு யார்? அந்த நன்மைகளை எல்லாம் சமுதாயத்திற்கு தந்து கொண்டிருக்கிறாரே அவர் தான் தந்தவர் என்ற மன நிறைவோடும் நான் பேசுகின்றேன். கலைஞரிடம் மாறுபாடு இருக்கலாம். தனிப்பட்டு கலைஞர் என்ற முறையிலே அவரோடு மாறுபாடு இருக்கலாம். அதை நான் குற்றம் என்று கருதவில்லை. அரசியலில் கட்சி பேதா பேதங்கள் இருக்கலாம். அதுவும் இயற்கையின்பால் பட்டதுதான். ஏனென்றால் உள்ளத்தில் என்ன விருப்பம் இருந்தாலும், கட்சியைச் சார்ந்தவர்கள் என்று அவரவர்கள் நின்று இருக்கின்ற இடத்தில் இருந்து சில



143804

1990 ஏப்ரல் 10] [திரு. எம். அப்துல் லத்தீப்]

நடப்புகளைக் கையாளவேண்டும். இன்னும் சொல்லப் போனால் நடிப்பு என்று நான் சொல்லவில்லை. அவரவர்கள் அவர்களுடைய நிலையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் இருக்கிறது. நான் ஒப்புக் கொள்கிறேன். அவருடைய எழுத்திலே மாறுபாடு இருக்கலாம். அவருடைய பேச்சுக்களிலே மாறுபாடு இருக்கலாம். ஆனால் இந்தத் துறையைப் பொறுத்த வரையில், பிற்படுத்தப்பட்டோருடைய நலத்தைப் பொறுத்த வரையில், தமிழகத்திலே இன்றைக்கு கட்சி பேதா பேதங்களுக்கு அப்பாற்பட்டு, மொழிக் கொள்கைக்கு அப்பாற்பட்டு, நம்முடைய தனிப் பெரும் தலைவராக, தமிழ்ச் சமுதாயத்தினுடைய தனிப் பெரும் தலைவராக இன்றைக்கு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒரே ஒரு தலைவர் யார் என்றால் அவர்தான் மாண்புமிகு முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் இதனால் முழுப் பயனையும் அடைய வேண்டுமானால், கட்சி பேதா பேதங்களை மறந்து விடுங்கள். கொள்கை என்பது நம் அனைவருடைய கொள்கை. தமிழருடைய குனிந்த தலைகள் எல்லாம் நிமிர்ந்து நிற்க வேண்டும். அநீதிக்கு ஆளாக்கப்பட்டவர்கள் எல்லாம் நீதியைப் பெற்று, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக தலையெடுக்க முடியாமல் புன்மையாய், தேரையாய், புழுவாய், மாக்களைவிட கேடு கெட்டவனாய், கல்வியைக் கற்றுக் கொள்வதற்கு அவனுக்கு உரிமை இல்லை என்று மறுக்கப்பட்டவனாய் வாழ்ந்த இந்தச் சமுதாயம் தலை நிமிர்ந்து நிற்க வேண்டுமென்று சொன்னால், அனைவரும் ஒன்று சேர வேண்டும்.

12–30 மணி

யார் யார் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய மேம்பாட்டில், சிறுபான்மை மக்களுடைய மேம்பாட்டில், ஒட்டுமொத்தமாகச் சொல்லப் போனால், உண்மையான தமிழன், தமிழகத்திலும் பிற்படுத்தப்பட்டவன்தான். அந்தத் தமிழனுடைய மேம்பாட்டிலே, யார் அக்கறை கொண்டிருக்கிறார்களோ, அவர்களெல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய இந்த திருவுருவத்தைப் பார்க்க வேண்டும். பெருந்தலைவர் காமராஜர் அவர்களை பார்க்க வேண்டும். நம்முடைய தந்தை பெரியாரைப் பார்க்க வேண்டும். கண்ணியம் மிக்க காயிதே மில்லத், அம்பேத்கார் போன்றவர்களைப் பார்க்கவேண்டும். இவர்களுடைய உருவங்கள் வேறு; உருக்கள் வேறு; கரு என்பது ஒன்றுதான். இவர்களுடைய கருத்து ஒன்றுதான் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

50 சதவிகிதம் இன்றைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே, ஒரு தாய் இவ்வளவுதான் சட்டியிலே சோறு இருக்கிறது என்று சொன்னால்,—ஆறு குழந்தைகள் இருக்கிறார்கள்—அதிகமாக சாப்பிடுகிற குழந்தைக்கு கொஞ்சம் அதிகமாகத்தான் கொடுப்பாள். ஏனென்று சொன்னால், அவன் அழுவான்.

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1990 ஏப்ரல் 10

அப்படி சண்டைபோட்டு அழுது, 'அதிகமாக எனக்குத்தான் கொடுக்க வேண்டும்' என்று அழுகின்ற குழந்தைக்கு—மற்ற குழந்தைகளுக்கு கொஞ்சம் குறைத்து கொடுத்து—அந்தக் குழந்தைக்கு கொஞ்சம் அதிகமாகக் கொடுக்கிற ஒரு தாய் பாசத்தையுடைய டாக்டர் கலைஞர் அவர்கள், இந்த சமுதாயத்திற்கு இன்னும் பல நன்மைகளைச் செய்வதற்குக் காத்துக் கொண்டிருக்கிறார். அவரை நாம் ஆதரிக்க வேண்டும். அவர் நம்மை அணைத்துக் கொள்ள வேண்டும். எனவேதான், இந்த சமுதாயத்தினுடைய ஒட்டுமொத்தக் குரலாக இன்றைக்கு இது இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்கள்தான், உருது பேசுகின்ற முஸ்லீம்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைத்தார் என்ற வரலாற்று நாயகராக அவர் திகழ்கிறார். சிறுபான்மை உரிமைக் குழு, சிறுபான்மை நல ஆணையம், தமிழகத்திலே இன்றுவரை இல்லை. கடந்த ஆண்டுதான் வந்தார்கள். கடந்த ஆண்டுதான் அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. இன்னும் ஓராண்டுக்கூட ஆகவில்லை. அதை நிறைவேற்றித் தந்திருக்கிறார் என்ற நன்றி உணர்வு, தொடர்பான இடத்திலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு வரலாற்று சிறப்பு மிக்க ஒரு முடிவாகும் அது. உருது பேசுகின்ற மக்களுக்கு, அவர்கள் அந்த இடத்தை அளித்தார்கள். நாம் வைத்தக் கோரிக்கைகளிலே எது சாத்தியமோ, நிதிநிலைக்கொப்ப, அந்த சாத்தியங்களை அவர் செய்திருக்கிறார். இன்னும் சொல்லப்போனால், சமுதாயத்திலே இருக்கிற பல்வேறு பிரிவினர்களின் நியாயமான கோரிக்கைகளை, விகிதாச்சாரப்படி அடிப்படையிலே, அவர் நிறைவேற்றி இருக்கிறார். நிறைவேற்றி வருகிறார் என்பதுதான் உண்மை. ஏதோ ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு குறிப்பிட்ட சாராருக்கு அவர் சலுகை செய்கிறார் என்பதில் நான் அவரைப்பாராட்டவில்லை. எங்கெங்கு பள்ளங்கள் இருக்கிறதோ, அந்தப் பள்ளங்களையெல்லாம் அடைத்து, அந்தப் பள்ளங்களையெல்லாம் மூடி, நிலத்தைச் சரிப்படுத்துகின்ற வேலைகளை அவர் செய்து கொண்டிருக்கிறார் என்பதிலேதான் எனக்கு மகிழ்ச்சி.

ஒரு நல்ல மனிதாபிமான உணர்வு உள்ள ஒரு நல்ல பக்குவமான—பொறுமையுள்ள நிதானமாகப் பேசி, நிதானமாகச் செயல்படுகிற ஒருவர் நமது நாட்டினுடைய பிரதமராக வந்திருக்கிறார்கள். கடந்த காலத்திலே ஜனதா ஆட்சி இருந்தபோது, இந்தக் குழு அமைக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்காக, பரிந்துரைகளை வழங்க வேண்டுமென்று அமைக்கப்பட்டது. அந்தப் பரிந்துரைகளோடு தங்களுடைய அறிக்கையையும் கிடப்பிலே போடப்பட்டு இருந்தது. எங்கோ, இருட்டறையில் தூங்கிக் கொண்டிருந்த அந்த அறிக்கைக்கு உயிர் கொடுத்து, அதிலே வண்ணம்சேர்த்து



1990 ஏப்ரல் 10] [திரு. எம். அப்துல் லத்தீப்]

தன்னுடைய எண்ணத்தையும் இணைத்து, அது நன்மை பயக்க வேண்டும்—நாட்டுக்கு வீட்டிற்கு அது நன்மை பயப்பதாக இருக்க வேண்டும்—என்று அதை இன்று நாட்டிலே நடமாட விட்டு, அதிலே அடங்கி இருக்கிற கருத்துக்களை எல்லாம் நீங்கள் ஆய்வு செய்து அரசுக்குத் தாருங்கள் என்று தனிக் குழுவையும் இன்றைக்கு மத்திய அரசு அமைத்திருக்கிறது. ஆனால் இருந்தாலும் ஒன்றைச் சொல்கிறேன். அவ்வளவு விரைவிலே அவ்வளவு எளிதிலே இந்த நாட்டிலே இருக்கிற பிற்படுத்தப் பட்டோர் தலை எடுக்கக்கூடாது என்று நினைக்கிற சக்திகள், அவ்வளவு விரைவிலே கதவைத் திறந்து விடுவார்கள் என்று நினைக்க வேண்டாம். எனவே, கதவைத் தட்டிக்கொண்டே இருக்கவேண்டும். இல்லையென்றால், கதவு உள்ளே இருந்து, யாராலோ மூடப்பட்டால், அந்தக் கதவை உடைத்து, உள்ளே நுழைந்து அந்த அறிக்கையை வெளியே கொண்டுவந்து, நடைமுறைப்படுத்த வேண்டும். அதைச் செய்வது திரு. வி.பி. சிங் அவர்கள் மட்டுமல்ல; அதைச் செய்யக்கூடிய முழு பொறுப்பும் இந்தியா முழுவதற்கும் உண்டு. ஆகவே, குரல் கொடுத்திருக்கிற தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களை நாடு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குச் சொல்லி, உங்களோடு நாடு இருக்கிறது; கோடானுகோடி மக்கள் இருக்கிறார்கள்; அவர்களுடைய உணர்வுகள் இருக்கின்றன; அந்த உணர்வுகளோடு நாட்டு நலிவுகள் நீங்கி, அநியாயங்கள் அகன்று, நியாயங்கள் எல்லாம் நாட்டிலே உலா வர வேண்டும் என்ற மக்கள் கூட்டம் உங்களிடத்திலே இருக்கிறது. எனவே தான், அந்த மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்படுவதற்கு, நீங்கள் உங்களாலான எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டுமென்று, தமிழகத்து மக்களின் சார்பாக. அடக்கப் பட்ட, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட மக்களின் சார்பாக இந்த அவையினுடைய ஒட்டுமொத்த மான கருத்தாக டாக்டர் கலைஞர் அவர்களிடத்திலே எங்களுடைய எண்ணங்களை எல்லாம் வெளிப்படுத்தி, அதை மத்திய அரசிற்குத் தெரிவித்து, உடனடியாக அதை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்ற மகத்தான பணியை வரலாற்றிலே இன்னொரு புது அத்தியாயத்தை எழுதிக் காட்ட வேண்டும் என்றும் உங்களிடத்திலே கோரிக்கையாக வைத்து நான் வேறு கருத்துக்களைப்பற்றி இந்த நிதி ஒதுக்கீடு விஷயத்திலே உள்ளே போக விரும்பவில்லை. போனால் நான் ஒவ்வொன்றாகத் தொட்டுப் பேசவேண்டும். எனவே, ஒட்டுமொத்தமாக இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து, இதிலே ஏதாவது என்னுடைய கோரிக்கைகள் இருந்தால் அதை நான் எழுதிக் கொடுக்கிற—எழுதிக் கொடுக்கமுடியும், எழுதிக் கொடுத்தாலும் அதைச் செய்கின்ற மனப் பக்குவம் உங்களுக்கு உண்டு. எனவே, இன்றோடு நான் என்னுடைய வார்த்தைகளை நிறைவு செய்து அமர்கின்றேன்.

12–35 மணி

*திரு, வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டு வரப் பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப் பட்டோர் சீர் மரபினர் மீதான மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்ற வாய்ப்பை உருவாக்கித்தந்த உங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே 30 கோடி என்று அறிவித்து இருப்பதை, முன்னாலே ஒன்று சேர்த்து 130 கோடி என்று இருந்தால் பாராட்டு வதற்கு நன்றாக இருந்திருக்கும் என்ற என்னுடைய முதல் கருத்தை இங்கே சொல்லி, இங்கே மாண்புமிகு உறுப் பினர் திரு. ஆசையன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கட்டப்பட்ட வீடுகள் இடிந்து போனது என்றும் குறைபட்டுக்கொண்டார்கள் நான் அவருக்குச் சொல்லவேண்டுமென்றால், திராவிட முன் னேற்றக் கழக ஆட்சியிலே கட்டப்பட்டு வீணாகப் போனவை என்னென்ன என்பதைக் கூட புள்ளிவிவரங்களாகத் தரமுடியும் அதற்கு இந்த நேரத்தை வீணாக்கக்கூடாது என்று கூட நான் அவருக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆக, ஒவ்வொரு ஆட்சிக் காலத்திலே கட்டுவதும், இடிவதும் ஒரு ஆட்சியினுடைய தவறு அல்ல. அந்த வேலைகளை யார் செய்தார்களோ அவர்கள் மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று, எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவர் இன்னொன்றையும் சொன்னார், 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்று அவருடைய தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லிய காரணத்தினாலேதான் இந்தத் திட்டங்கள் எல்லாம் இன்று நாட்டுமக்களுக்கு நிறை வேற்றப்பட்ட காரணத்தினாலேதான் நிறைவேற்றிக்கொள் வோம் என்ற கருத்தைக்கூட இங்கே வலியுறுத்திச் சொன்னார். அந்தக் கருத்தின் அடிப்படையிலே நான் அவருக்குப் பணிவன் போடு தெரிவித்துக்கொள்வது, அப்படி இந்த ஓராண்டுக் காலத் தில் செய்திருந்தால், இந்த மக்களுக்கு அவருடைய திட்டங்கள் போய்ச் சேர்ந்திருக்குமேயானால் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஏன் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு இடம் கூட வராமல் போனது என்பதை நம்முடைய ஆசையன் அவர்களைக் கேட்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நாடாளுமன்றத் தேர்தல் மட்டுமல்ல, இடையிலே நடை பெற்ற சட்டமன்ற இடைத்தேர்தலிலேகூட ஒரு இடம் கூடவரா மல் போனது ஏன்? ஆக, சொன்னதைச் செய்வோம்,' செய்வதைச்-





சொல்வோம என்பது வாயளவிலேதான் இருந்ததே தவிர அது ஏட்டளவிலேதான் இருந்ததே தவிர, மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கமிஷனைப் பற்றியெல்லாம் இங்கே மிக விளக்கமாகவும், தெளிவாகவும் அனைத்துக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் இங்கே எடுத்து வைத்தார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் இது ஒரு தொடர்கதையாக இருந்து கொண்டு வருகிறது. மாண்புமிகு நேரு அவர்கள் ஆட்சியிலே இருந்த நேரத்தில் காகா கலேல்கர் கமிஷன் என்ற ஒரு கமிஷனை அமைத்தார்கள். அது மூன்றாண்டுக் காலம் நடைபெற்று அது ரிப்போர்ட்டைக் கொடுத்தது. அந்த ரிப்போர்ட்டும் ஒத்தி வைக்கப்பட்டது. பின்னாலே, இடையிலே அந்த நேரத்திலேதான் டாக்டர் நாகண்ண கவுடா தலைமையில் கர்நாடகாவிலே ஒரு கமிஷன் உருவாக்கப்பட்டது. கர்நாடகாவில் அந்தக் கமிஷன் அரசிற்கு ரிப்போர்ட் கொடுத்த காலத்திலேதான், அதற்கு முன்பாகவே, 1971–இல் அன்றைய முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள் சட்டநாதன் கமிஷனை 1971-இல் நியமித்தார்கள். ஆனால் கர்நாடகாவிலே நாகண்ண கவுடா கமிஷன் பரிந்துரையை, 'கம்பார்ட்மென்ட், ஏ. பி. சி.' என்று சமுதாயத்தைப் பிரிக் கின்ற அடிப்படையிலே கர்நாடக கவர்ன்மென்ட் அந்த நாகண்ண கவுடா கமிஷன் பரிந்துரையை ஏற்று அதைச் செயல் படுத்தத் தொடங்கியது. ஆனால் சட்டநாதன் கமிஷன் ரிப் போர்ட் கொடுத்தும் நம்முடைய கலைஞர் அவர்கள் அந்த ரிப்போர்ட்ட ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு மாறாக, அந்த ரிப்போர்ட் வருவதற்கு முன்பே, அரசு கெசட்டிலே வெளியிடுவதற்கு முன்பாகவே என்ன செய்தார் என்றால், பி.சி.–க்கு அதாவது பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு 25 சதவிகிதம் என்று இருந்ததை உயர்த்தி 31 சதவிகிதமாகவும், ஷெட்யூல்டு கேஸ்ட், அதாவது மிகவும் பிற்படுத்தப்பட்ட அந்தச் சமுதாயத்திற்கு 16 என்று இருந்ததை 18 என்று உயர்த்தியும், இதிலே அறிவிப்பை வெளியிட்டார்கள்.

12–40 மணி.

அந்த பிற்படுத்தப்பட்டவர்களிலே, ஃபார்வர்டு கம்யூனிட்டி யிலே இருந்த ஒரு 12 ஜாதிகளைக் கூட அந்த பேக்வேர்டு—பிற் படுத்தப்பட்ட ஜாதியிலே இணைத்தார்கள். ஆக, அந்த 12 ஜாதிகளை, ஃபார்வர்டு கம்யூனிட்டி அதர் கம்யூனிட்டியிலிருந்து சேர்த்த நேரத்தில் 25, 31 ஆனது. ஆனால், 12 சாதிகளுடைய மக்கள்தொகையை எடுத்துப் பார்க் கிறபோது, அப்படி உயர்த்தியது போதாது என்றுதான் சொல்லப்பட்டு அன்றையதினம் புரட்சி ஏற்பட்டது. அதற்குப் பின்னர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அந்த

சமுதாய மக்களின் கோரிக்கைகளை ஏற்று அதை 31 சதவீதமாக உயர்த்தினார்கள். மக்கள் தொகை அடிப்படையில் அந்த 12 சாதிகளையும் கணக்கெடுத்து இன்னும் அதிகமான பர்சென்டேஜ் கொடுக்க நினைத்து அந்த 31 சதவீத இட ஒதுக்கீட்டைக் கூட உயர்த்தி, முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அதை 50 சதவீதமாக உயர்த்தினார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் அறிவார்கள் என்பதைத் தெவித்துக் கொள்ளக் கடமைபபட்டி ருக்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர், எம்.ஜி.ஆர். ஆட்சியில் யாரையும் அழைத்துப் பேசவில்லை என்று சொன் னார். எம்.ஜி.ஆர். அவர்கள் தனது உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாமல், இரண்டாம் முறையாக அமெரிக்காவிற்குச் சென்று திரும்பி வந்த நேரத்தில், உடல் நலிவுற்ற நிலையிலும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சாதி மக்களையும் அழைத்துப் பேசி, ஒவ்வொரு சாதியினரின் தேவைகளையும் அறிந்து, தன்னை இழித்தும் பழித்தும் பேசியவர்களைக் கூட அழைத்துப் பேசி, அவர்களின் தேவைகளை அறிந்தார்கள். பின்னா அதற்கான ஒரு ஆய்வை நடத்த உத்தரவிட்டார்கள். ஆனால், வந்தவர் கள் எல்லாம் சொன்ன மக்கள் தொகை, அரசாங்க கெஜட்டில் இருந்த மக்கள் தொகையினை விட மிகவும் அதிகமாக இருக்கிறது என்றுகூட கருத்துக்கள் வெளியிடப்பட்டன. அதை சரிசெய் வதற்காகத்தான், சரியான புள்ளி விவரம் வேண்டுமென்பதற் காக அம்பாசங்கர் அவர்களின் தலைமையில் கமிஷன் ஒன்றை அமைத்தார்கள். அப்போது ஜனதா கட்சியின் சார்பாக பிரதம ராக இருந்த மொரார்ஜி தேசாய் அவர்கள் இதே காரணத்திற் காக மண்டல் அவர்களின் தலைமையில் கமிஷன் ஒன்றை அமைத் தார்கள். மண்டல் கமிஷன் அறிக்கை தயாரானபோது அவர் கள் பதவியில் இல்லை. அதை அமல் செய்யாமல் மத்திய அரசு முடக்கி வைத்திருக்கிறது. இப்போது மாநில சர்க்காரிலும், மத்திய சர்க்காரிலும் இருக்கிற நமது முதல்வர் அவர்களின் குடும் பத்திலே இருப்பவர் கூட மத்திய அரசிலே அமைச்சராக இருக் கக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்ற காரணத்தால், நான் இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், மைய அமைச்சரவையில் இருக்கிற மண்டல் கமிஷன் ரிப்போர்ட்டை உடனடியாக அமல்படுத்த நீங் கள் முயற்சி எடுக்கவேண்டுமென்றுதான். அதை அமல்படுத்த அவர்கள் முயற்சிகள் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதை அவர்கள் அமல் படுத்தாவிட்டால், தமிழ் நாட்டில் இருக்கிற அத்தனை மக்களையும் ஒன்று திரட்டி, அதற் கான நடவடிக்கைகளில் இறங்கினால் அதற்கு அண்ணா தி.மு.க. வும் உடந்தையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.





இன்றைக்கு, தேவிலால் அவர்களை, இந்த மண்டல் கமிஷன் அறிக்கை பற்றி ஆய்வு செய்வதற்காக பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தேவிலால் அவர்கள் ஒரு முற்பட்ட ஜாதியைச் சேர்ந்தவர். ஆனால், தேவிலால் அவர்கள் இந்த கமிஷன் பற்றி தெரிவித்த கருத்துக்களுக்காக, பீகாரிலும், உத்திரபிரதேசத்திலும் வன்முறை ரகளைகள் நடந்து உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, வி.பி. சிங் அவர்களுக்கு நெருக்கமாக இருக்கிற கலைஞர் அவர்கள் தேவி லால் அவர்கள்......

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் ஏதோ தேவிலால் அவர்கள் அறிக்கையைப் பற்றிச் சொன்ன தால்தான, பீகாரிலும் உத்திரப்பிரதேசத்திலும் போராட்டம் நடந்தது என்று தவறான கருத்தைச் சொல்கிறார்கள். தேவி லால் அவர்கள் உயர்ந்த வகுப்பைச் சார்ந்தவர் என்று சொல் வதும் சரியான கருத்து அல்ல. மண்டல் கமிஷன் ரிப்போர்ட் இன்றைக்கு இருக்கிற ஜனதா தள அரசினால் முடக்கிவைக்கப் பட்டிருக்கிறது என்று இப்படி தவறான கருத்துக் களைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஏற் கெனவே மூலையில் கிடந்த மண்டல் கமிஷன் அறிக்கையை இப் போது வந்துள்ள ஜனதா தள அரசாங்கம் தூசி தட்டி, மக்க ளுக்குத் தெரியும்படியாக எடுத்து வைத்திருக்கிறார்கள் என் பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : நான் அதைத்தான் கேட்டுக் கொள்கிறேன், வற்புறுத்திச் சொல்கிறேன். அதை அமல்படுத்த வேண்டுமென்றுதான் சொல்கிறேன். திரு. தேவிலால் அவர்கள் ஜாட் என்று சொல்லப்படுகின்ற உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர். அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். (குறுக்கீடுகள்),

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "Jat" என்பது உயர்ந்த சாதியல்ல. மிகவும் பின்தங்கிய வகுப்பைக் குறிக்கும். (குறுக்கீடு).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சித்ர் : தேவிலால் அவர்கள் உருவத்தில்தான் உயரமாக இருக்கிறார். ஜாதியில் உயர்ந்தவர் என்று சொல்ல முடியாது. அவர் ஜாதியைப் பற்றி கவலைப் படுபவர் அல்ல. மண்டல் கமிஷன் அறிக்கை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஐயா சொல்லியாகிவிட் டது. ஐயா. (சிரிப்பு)

12-45 மணி.

திரு. கோ. வீரையன் : பேரவைத் தலைவர் அவர்களே அவர் இன்ன ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டு இருக் கிறார்கள். அது குறிப்பேட்டில் இருக்கிறது. ஜாட் இந்து

மக்கள் பிற்பட்ட ஜாதியினர்தான். அவர்கள் உயர்ந்த ஜாதியினர் அல்ல. ஆனால், தவறுதலாக இங்கே பதிவாகிவிடக் கூடாது என்பதற்காகவும், அந்தத் தவறை நீங்கள் திருத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருடைய செய்தியும், நம்முடைய பதிலும் சேர்ந்தே இருக்கிறது. எனவே, இருக்கலாம்.

திரு. வி. கே. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் இன்றைக்கு விலகிக் கொண்டிருப்பதாகக் கூட தகவல் வந்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு......

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: கட்சியின் தலைவர் பதவியிலேயிருந்துதான் ராஜினாமா பண்ணி இருக்கிறாரே தவிர, அமைச்சர் பணியிலிருந்து ஒதுங்கிக்கொள்கிறேன் என்று அவர் ஒருநாளும் சொன்னதும் இல்லை. சொல்லப்போவதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது திடீரென்று தோன்றியது மாதிரி இருக்கிறது. (சிரிப்பு)

திரு. வி கே. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஜாதியில் உயர்ந்தவர் அல்ல. பொருளாதாரத்திலே உயர்ந்தவர் என்பதை நாடு அறியும். (குறுக்கீடு)

மாண்புகுமிகு பேரவைத் தலைவர் : அதை எல்லாம் வேகமாக எடுத்துக்கொள்ள வேண்டாம். உங்களுக்கு, ஆர்வத்திற்காகத்தான் சொல்கிறார்.

திருமதி பாப்பா உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சர்ச்சைகள் முழுவதிலும் நான் ஈடுபட விரும்பவில்லை. ஆனால், அப்படி அவர்கள் உயர்ந்த ஜாதியாக இருந்தாலும் தவறுதலாகத்தான் நடப்பார்கள் என்று கூறுவது சரியல்ல. ஆக, ஜாதி உயர்ந்ததாக இருந்தாலும் இந்த கமிட்டி அமல் நடத்துவதில் நிச்சயமாகத் தவறு செய்ய மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் எத்தனையோ சலுகைகளை இங்கே அறிவித்திருந்தாலும் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் அரசின் உதவி பெறுகின்ற நிறுவனங்களைப் பொறுத்தவரையில் அந்த சதவீதம் என்பது கடைப்பிடிக்கப்படாமல் உள்ளது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்து பல கோடிக்கணக்கான பணத்தைப் பெற்று பல பெரிய நிறுவனங்களை உருவாக்குகிறார்கள். அப்படிப்பட்ட நிறுவனங்களிலே,



எல்லாம் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்காக ஒதுக்கப்படுகின்ற சதவீதத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அதற்கான ஒரு உத்தரவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே வழங்கவேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த மக்கள் தொகை எவ்வளவுதான் இருக்கிறது ? ஒவ்வொரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் ஊர்வலம் நடத்துகிறார்கள். எங்களுடைய சமுதாயத்தினர் 2 கோடி, 3 கோடி, 80 இலட்சம் என்றெல்லாம் சொல்கிறார்கள். இப்படியே அது கிட்டத்தட்ட 20 கோடி என்ற அளவுக்கு வந்து இன்றைக்கு இந்தியாவின் ஜனத்தொகையே தமிழ்நாட்டிற்கு வந்துவிடும்போல் இருக்கிறது. எனவே, உண்மையான மக்கள் தொகை என்ன வென்று ஒவ்வொரு ஜாதி வாரியாக, சமுதாய வாரியாக, எவ்வளவு பேர்கள்தான் இருக்கிறார்கள் என்று இந்த 1990–91ஆம் ஆண்டு முடிவதற்குள்ளாக அதற்கென்று தனியாக ஆட்களை நியமித்து, எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை, கணக்கெடுத்து உண்மையான அறிவிப்பை அரசாங்கத்தின் சார்பாக மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 1961ஆம் ஆண்டு அரசு கெஜட்டில் ''மேதர்'' ''மேதவர்'' என்ற மக்கள் மிகவும் பின்தங்கிய மக்களாக அதாவது எம்.பி.சி. என்ற அளவிலே இருந்தார்கள். 1961ஆம் ஆண்டுக்குப் பிறகு அந்த மேதர், மேதவர் என்பது மகேந்திரா, மேதவர் என்று அறிவிப்பு வந்ததால் 1961ஆம் ஆண்டுக்கு முன்பு மேதர், மேதவர் என்ற வகையில் பயன்பெற்றவர்கள், அந்த ஜாதியை வைத்து சர்ட்டிஃபிக்கேட் வாங்கியவர்கள் இப்போது வாங்க முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து அவர்களுக்கு அந்தச் சலுகைகள் வரவேண்டும். இந்த மேதர், மேதவர், வேதநாயகர், வேணுகுலம் என்கின்ற உட்பிரிவுகளாக இருக்கின்ற அனைவருக்கும் இந்தப் பயன் கிடைக்க வேண்டும். அவர்கள் எல்லோரும் ஒன்றுதான். ஆகவே, அவர்களுக்கு இந்த உரிமையை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நாவிதர், சலவைத் தொழிலாளி நரிக்குறவர், ஆகியோரை எல்லாம் மோஸ்ட் பேக்வர்டிலே இருந்து தாழ்த்தப்பட்டவர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். அது நியாயமும்கூடதான். இன்றைக்கு நரிக்குறவர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் தெருவோரத்தில் எங்கோ இருக்கிறார்கள். அவர்கள் இருப்பதற்கு என்று நிரந்தரமான இடம் கூட இல்லை. சத்திரங்கள் போன்ற இடங்களிலும் வேறு எங்கெங்கெல்லாமோ அவர்கள் படுத்துத் தூங்குகிறார்கள். சமையல் செய்து சாப்பிடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களைத் தாழ்த்தப்

பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டும். அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். நிலம் ஆர்ஜிதம் செய்து வீட்டுமனைப் பட்டா இலவசமாகத் தர வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது போல் அவர்களுக்கும் கட்டிக் கொடுத்து அவர்களை வாழவைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று அவர்கள் நான்கு சமுதாயங்கள் சேர்ந்து ஒரு எம்.எல்.சி. இடத்தைக் கூட தரவேண்டும் என்று கேட்டிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

12.5( மணி

ஆகவே, கிராமப் பகுதியிலே எல்லா கிராமங்களிலும் வாழ்கின்ற அவர்களுக்கு ஒரு எம்.எல்.சி. இடத்தை தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்த எம்.பி.சி., சீர்மரபினருக்கு உண்மையிலேயே மாண்புமிகு முதல்வருக்கு உதவ வேண்டுமென்ற எண்ணம் உளமார இருக்குமேயானால், ஒன்றைச் செய்ய வேண்டும். கிராமப்புறத்திலேயிருந்து வருகின்ற மாணவ மாணவியர்கள் இன்றைக்கும் மிகவும் பின்தங்கித்தான் இருக்கிறார்கள். நுழைவுத் தேர்வு என்று வைத்திருக்கிறோம். உதாரணத்திற்கு 75 சதவீதம் நுழைவுத் தேர்வில் வாங்கியிருந்தால், 10 சதவீதம் மார்க்கை கிராமத்திலேயிருந்து வருகின்றவர்களுக்குக் கூட்டி, 85 சதவீதம் என்று ஆக்கித் தரவேண்டும். இதை மானியம் என்ற அடிப்படையில் தர வேண்டும். இது கிராமம் முன்னேறுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

50 மாணவ விடுதிகளை புதியதாகத் திறக்க இருக்கிறார்கள், அதை பெரியார் மாவட்டத்திலே, என்னுடைய தொகுதியிலும் திறக்கப்பட வேண்டுமென்று இந்த நேரததிலே கேட்டுக்கொள்கிறேன். காவளிபாளையம், மலையப்பாளையம் என்ற இடத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இருந்த நேரத்தில் மாணவர் விடுதி திறக்கப்பட்டது. அன்றையதினம் அவர்களுக்கு பி.சி. ஹாஸ்டல்தான் திறந்தோம். ஆனால், இன்றைக்குக் கொடுத்திருக்கிற குறிப்பிலே அதை எம்.பி.சி. என்று அறிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள். எந்த அடிப்படையிலே அதை எம்.பி.சி. என அறிவித்தார்கள் என்பதை எங்களால் அறிய முடியவில்லை. அப்படிப்பட்ட அந்த ஹாஸ்டல் திறக்கும்போது, எம்.பி.சி., சீர் மரபினருக்குத் தனியாகக் கூட திறந்துவிடலாம். டைரக்டரையே தனியாக நியமித்திருக்கிறார்கள். மாவட்ட அளவிலும், ஊராட்சி ஒன்றிய அளவிலும் அமைக்கப்பட வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



ஹாஸ்டலிலே படிக்கின்றவர்களுக்கு ரூ. 80, ரூ. 85 கொடுக்கிறார்கள் : ஓரளவு, ரூ. 100-வது கொடுக்கவேண்டும். அதே போல, பள்ளியிலே, கல்லூரியிலே படிக்கின்ற தரப்படுகின்ற ஸ்காலர்ஷிப் தொகையை உயர்த்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, வெள்ளாள கவுண்டர் சமுதாயத்தையும் எம்.பி.சி. பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டிருப்பதாக நான் அறிகிறேன். ஆக, அதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வு செய்ய வேண்டும். வேண்டுமென்றால் 20 என்று இருப்பதை 25—ஆக உயர்த்தி, அந்த இனத்தையும் சேர்த்துக் கொண்டு, எல்லா கவுண்டரும் ஒரே இனமாகக் கருதப்பட வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு இடம் கொடுக்க ரூ. 1 கோடி ஒதுக்கி இருக்கிறீர்கள், எம்.பி.சி. சீர் மரபினருக்கு. நான் தெரிவித்துக்கொள்வது பி.சி.-யிலே, கிராமத்திலே கூலி வேலை செய்பவர்களுக்கு சாதாரணமாக, ஒரு செண்ட் இடம் கூட இல்லையென்ற நிலையில் ஆயிரக் கணக்கானவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, ஒரு கோடி போதாது. ரூ. 1 கோடி என்பதை ரூ. 5 கோடியாக உயர்த்தி, எம்.பி.சி., சீர் மரபினருக்கு வீட்டு மனை ஆர்ஜிதம், அதேபோல, பி.சி.-யிலே இருப்பவர்களுக்கு கூலி வேலை செய்கிற கவுண்டராக இருக்கலாம். நாடாராக இருக்கலாம். முதலியாராக இருக்கலாம், ஆக அவர்களும் வீட்டு இடம் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் வீட்டுமனை கொடுக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஏழைகளான அவர்களுக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க, ரூ 1 கோடியை, ரூ. 5 கோடியாக அதிகரித்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, இந்த வாய்ப்பைக் கொடுத்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர், சிறுபான்மையினர் ஆகியோருக்கான மானியம் இன்றைய தினம் விவாதிக்கப்பட்டு, அது நிறைவேற்றித் தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற கட்டத்தில், இந்த மானியத்தின் அடிப்படையிலே பல்வேறு நல்ல கருத்துக்களை வழங்கியுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். எதிர்க்கட்சியின் சார்பிலே பேசிய உறுப்பினர்கள் இந்தத் துறைக்கு ஒதுக்கி இருக்கிற தொகை குறைவானது என்று கூறினாலும், அல்லது சிலவற்றைக் குறை கூறி, குற்றம் சாட்டிப் பேசினாலுங்கூட, அத்தகைய குறை கூறல்கள், குற்றச்சாட்டுகள் இவைகள் எல்லாம் மேலும் இந்தத்

துறையை வளர்ப்பதற்கும், அப்படி வளர்ப்பதன் மூலமாக, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர் மரபினர், மற்றும் சிறுபான்மை மக்களுக்கு நன்மை செய்ய இந்த அரசை ஊக்கப்படுத்தும் வேண்டுகோளாக அமையும் என்கின்ற எண்ணத்தோடு நான் அந்தக் கருத்துக்களையும் அவை எதிர்தரப்புக் கருத்துக்களாக இருந்தாலும் குற்றம் சாட்டப்பட்ட கருத்துக்களாக இருந்தாலும் அவற்றையும் நான் பணிவன்போடு ஏற்றுக் கொள்கிறேன்.

12.55 மணி

நான் இன்றைக்கு இந்த விவாதத்திலே எதிர்பார்த்ததும் ஏறத்தாழ நிறைவேறி இருப்பதும் — இந்த ஒரு மானியத்திலாவது நம்முடைய திரு. அப்துல் லத்தீப் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல அவை உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக இருந்து கருத்து மோதுதல்களுக்கு அதிக இடம் தராமல், கடுமையான வார்த்தைப் பிரயோகங்களுக்கு வழி வகுக்காமல் மோதுதல் இல்லாமல் நிறைவேற்றித் தரவேண்டும் என்பதுதன். ஏனென்றால் நம்முடைய நண்பர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல பெரும்பாலான பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், சீர் மரபினர், சிறுபான்மையினர் வாழுகின்ற இந்தத் தமிழ் நிலத்தில் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாமெல்லாம் இந்த அவையிலே வீற்றிருக்கிறோம். ஆளும் கட்சியினராக இருந்தாலும் எதிர்க்கட்சியினராக இருந்தாலும் அந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே நாம் வீற்றிருக்கிறோம்.

ஒரு 40 ஆண்டு அல்லது 50 ஆண்டுக் காலத்திற்கு, இன்னும் மேலே செல்லக்கூடிய காலத்திற்கு பின்னோக்கி இந்த மாநிலத்திலே அமைந்திருந்த அரசுகளை எண்ணிப் பார்த்து, இன்றைக்கு இந்த அவையிலே அமர்ந்திருக்கிற நாமெல்லாம் யார், எப்படிப்பட்டவர்கள், எப்படி ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள், எப்படி அடக்கி வைக்கப்பட்டவர்கள், நாமெல்லாம் இன்றைக்கு ஒரே அவையிலே அமர்ந்து இருக்கின்ற அளவுக்கு வளர்ச்சி, முன்னேற்றம இன்னும் சொல்லப்போனால் சரியாக சமுதாயத்தில் ஒரு புரட்சி ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் யார் என்பதை எல்லாம் எண்ணிப் பார்த்து, அவர்கள் இன்றைக்கு நாம் துயில் கொண்டிருக்கிற திக்கு நோக்கித் தொழவேண்டியவர்களாக இருக்கிறோம்.

1921 ஆம் ஆண்டில் பனகல் அரசர், ஆளுகின்ற பொறுப்பிலே தலைமைப் பதவியை ஏற்ற அந்த நேரத்தில் கல்வித் துறையிலே, வேலை வாய்ப்புத் துறையிலே பெரும்பாலான மக்களைக் கொண்ட சமுதாயம் தலை எடுக்க முடியாமல் புறம் தள்ளிப்



போகிறது என்பதை எண்ணிப்பார்த்து, அந்த மக்களுடைய நன்மைக்காக ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தபோது, நிறைவேற்றப்பட்டச் சட்டம் நடமாட முடியாமல் அன்றைக்கு இருந்த அதிகார வர்க்கத்தால் தடுக்கப்பட்டு, அதன் பின்னர் அமைச்சர் பொறுப்பை 1928 ஆம் ஆண்டு சுப்பராயன் அவர்கள் தலைமையிலே ஏற்றுக்கொண்ட முத்தையா முதலியார் அவர்கள் ' கம்யூனல் ஜி.ஓ. ' என்கிற அந்த வரப்பிரசாதத்தை நமக்கு சட்டரீதியிலே வழங்கினார்கள். அப்படி வழங்கப்பட்டபோது ஒரு வேலைக்கு, ஒரு பணிக்கு 12 பேர்களை எடுக்க வேண்டுமென்றால் அந்த 12 பேர்களில் ஏற்கெனவே முன்னேறியவர்கள் எத்தனை பேர், முன்னேற வேண்டிய நிலையில் பின்னுக்கு தள்ளப்பட்டு இருப்பவர்கள் எத்தனை பேர், இஸ்லாமியர் எத்தனை பேர், கிறிஸ்தவர் எத்தனை பேர், தாழ்த்தப்பட்டோர் எத்தனை பேர் என்கின்ற ஒரு முறை வகுக்கப்பட்டு, அது சட்டமாக ஆக்கப்பட்டபோது அன்றைக்குப் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. ஆனால் அந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் முத்தையா அவர்கள் அதைச் சட்டமாக நிறைவேற்றிய போது, 1928 ஆம் ஆண்டு தந்தை பெரியார் அவர்கள் குடியரசு இதழில் '' மந்திரி முத்தையா முதலியார் வாழ்க ! வாழ்க !! வாழ்க !!! '' என்று மூன்று வாழ்த்து முழக்கங்களை இணைத்து தலையங்கம் எழுதினார்கள் என்றால் எவ்வளவு உணர்ச்சிப்பூர்வமாக இந்தக் கருத்து அன்றைக்கு இந்தச் சமுதாயத்தை விழிப்படையச் செய்வதற்கு ஒரு திட்டமாக வந்திருக்கிறது, ஒரு சட்டமாக வந்திருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்த்துப் பெருமை அடைய முடியும்.

இன்றைக்கு வளர்ந்துவிட்ட ஒரு சமுதாயத்தில், பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கக்கூடிய ஒரு சமுதாயத்தில், நம்முடைய முன்னோர்கள் ஒரு 40,50 ஆண்டுக் காலத்திற்கு முன்பு இதற்காகப் போராடியதெல்லாம் மிகச் சாதாரணமாகத் தெரியக்கூடும்.

13-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால் அன்றைக்கு இருந்த சூழ்நிலையிலே இப்படிப்பட்ட புரட்சிக்கு வித்திட்டவர்கள் எவ்வளவு அரும்பாடுபட்டு அந்தப் பணியினை மேற்கொண்டார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்த்து அவர்களைப் போற்றிப் புகழக் கடமைப்பட்டிருக்கிறோம். எதிர்ப்புக்கிடையிலே கொண்டு வரப்பட்ட அந்தச் சட்டம், அதற்குப் பிறகு 1936 ஆம் ஆண்டிற்குப் பிறகு அன்று அமைந்திருந்த அரசால் எதிர்க்கப்பட்டாலும் கூட

தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் அன்றைய தினம் போர்க்குரல் எழுப்பிய காரணத்தால் அந்த எதிர்ப்பு தூளாக்கப் பட்டது. அதற்குப் பிறகு குமாரசாமி ராஜா அவர்கள் காங்கிரஸ் கட்சி சார்பிலே முதலமைச்சராகப் பொறுப்பேற் றிருந்த அந்தக் காலக் கட்டத்தில் 1950 ஆம் ஆண்டு வாக்கில் அவரும் அந்தச் சட்டத்தைப் புறக்கணிக்க விரும்பவில்லை. அதற்கு முன்பே ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் இந்தச் சட்டத்தைப் புறக்கணிக்க வேண்டும், இதை ரத்துச் செய்ய வேண்டும் என்ற குரலுக்கு செவி சாய்க்காத காரணத் தினால் ஓமந்தூர் ராமசாமி அவர்களை தாடி வைக்காத ராமசாமி நாயக்கர் என்றுகூட அன்றைக்குக் கேலி பேசினார்கள், கிண்டல் செய்தார்கள்.

ஆனால் 1950 ஆம் ஆண்டில், இது நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உயர்நீதிமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் இந்தச் சட்டம் செல்லாது என்று அரசியல் சட்டத்தின் அடிப் படையிலே சொல்லப்பட்ட நேரத்தில் பெரியாரும், அண்ணாவும் எந்த அளவுக்கு தமிழகத்திலே போர்க்கோலம் பூண்டிருந்தார்கள் என்பது கடந்த கால வரலாறாகும். அவர்கள் மாத்திரம்அல்ல. இதே மன்றத்திலே காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் உறுப் பினராக இருந்து மறைந்த கோசல்ராம் அவர்கள், மறைந்த ஆர். வி. சுவாமிநாதான் அவர்கள், இவர்கள் எல்லாம் கூட நீதி மன்றத்தினுடைய தீர்ப்புக்குப் பிறகு, பிற்படுத்தப்பட்ட மக்களு டைய வாழ்வு பெருமளவு பாதிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது, எனவே, அரசியல் சட்டத்திலே ஒரு மாற்றம் தேவை, இதற்கான ஒரு மாற்றம் செய்ய வேண்டும் என்ற கருத்தை, பெரியார் அவர்களுடைய கருத்தை, அண்ணா அவர் களுடைய கருத்தை, அவர்களும் ஏற்றுக்கொண்டு இந்த மாமன்றத்திலே பேசி, அதற்குப் பிறகு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் முதல் தடவையாக அரசியல் சட்டத்தைத் திருத்தியதே தமிழகத்திலே ஏற்பட்ட அந்தப் புரட்சியின் காரணமாகத்தான்.

அதற்குப் பிறகுதான் 'சோசியலி அண்டு எஜுகேஷனலி பேக்வேர்ட்' என்கின்ற அந்தச் சொற்றொடர் பயன்படுத்தப் பட்டு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒரு பாதுகாப்புக் கவசமாக அரசியல் சட்டம் திருத்தப்பட்டது. ஆனால் இன்றைக்குக்கூட இந்த உரிமை, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தேவை என்று வாதிடவேண்டிய சூழ்நிலை நமக் கெல்லாம் இருக்கிறது. அதற்கான மேற்கோள்களை எடுத்துக் காட்டவேண்டி இருக்கிறது. அன்றைக்கு இந்தச் சட்டம் தோற்கடிக்கப்பட்டபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு இதழில் ஒரு தலையங்கத்தை தீட்டினார்கள். அந்தத் தலையங்கத்தைத் தொடர்ந்து அவரும்





ஈடுபட்டார். 1951 ஆம் ஆண்டில் 'கம்யூனல்
ார்ச்சியில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் செல்லுபடியாகாது என்று
.ஓ. தீர்ப்பளிக்கிறது. அண்ணா அந்தத் தலையங்
்ரீம் கோர்ட்
ந்தில் எழுதுகிறார்.

''ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டோரால் சமூக நீதி
ரக்கடையில் தள்ளப்பட்டுவிட்டது. சட்டம் என்ற கோல்
காண்டு. சுப்ரீம் கோர்ட் இந்திய அரசியல் சட்டத்தைக்
ரட்டி வகுப்பு உரிமை செல்லுபடியாகாது என்று தீர்ப்பு
ந்துவிட்டது. சட்டம் என்ற கூண்டு உள்ளே சமூக நீதி
தன் தேடி அலைபவனைத் தேள் கொட்டியதைப் போல,
மநீதி மூலம் தன் முடிந்துபோன வாழ்வைச் சீர்படுத்திக்
காள்ள தொடங்கிய மக்களின் முன்னேற்றப் பாதையிலே
'ழ்ந்தப் பேரிடியாகும் இந்தச் சம்பவம், திகைத்துத் திண்டாடும்
ராவிட சமுதாயம் ரத்தம் கொதிக்க, எண்ணங்கள் கிளர்ச்சி
ரக கொட்ட எங்கள் முதுகெலும்பு உடைக்கப்பட்டதா?
ருதயத்தையோ எத்தர்கள் எடுத்துவிட்டனர். எங்களுக்கா
ந்தப் பேரிடி என்று தமது ஒளியிழந்த கண்களிலே நீர்
5தும்ப, ஒலியிழந்த குரல்களிலே வேதனை தொனிக்க தமது
தலைவர்களைச் சோகத்தோடு பார்க்கிறது. சமூக நீதி
சென்னை நீதிமன்றத்திலே சட்டப் பிரச்சினை மூலம் சாய்க்கப்
பட்டதுமே நாம் எல்லாம் குமுறினோம். நாடெங்கும்
மக்கள் கண்டனத்தைத் திரட்டிக் காட்டினோம். சம நீதி
வேண்டும். இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்து என்ற
முழக்கங்களோடு'' என்று குறிப்பிட்டார். தொடர்ந்து
அண்ணா சொன்னார். நாட்டிலுள்ள ஜாதி பாகுபாடு
அனைத்தும் ஒழிந்து, மக்கள் அனைவருமே சமுதாயத் துறை
யிலே ஒன்றே குலம் என்ற நிலை ஏற்படும் வரையில்,
இந்த வகுப்புவாரி முறை, அதாவது வகுப்புக்கு ஏற்ற நீதி
வழங்கப்பட வேண்டுமென்ற ஏற்பாடு இருந்தே தீர வேண்டு
மென்று குறிப்பிட்டார். அதைத் தொடர்ந்து பண்டித
நேரு அவர்கள் பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்களுடைய
கூட்டத்தில் பேசும் போது

13-05 மணி

I will lay special emphasis on casteism because it is the most dangerous tendency. We talk about casteism and we condemn it as we should. But the fact remains that a half dozen or may be ten —, so called superior castes dominate the Indian scene among the Hindus. There is no doubt about it. If we do not equalise or tend to equalise, undoubtedly casteism will flourish in a most dangerous way என்று குறிப்பிட்டார்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 ஏப்ரல் 10

நான் ஜாதி தன்மை குறித்து முக்கியமான கவனம்
செலுத்த விரும்புகிறேன். ஏனென்றால் அது மிகவும்
ஆபத்தான போக்கு ஆகும். நாம் ஜாதிகளைப் பற்றி
பேசுகிறோம். அதைப் பற்றி கண்டிக்கிறோம். எதனால்
என்றால் இந்து சமுதாயத்தைச் சேர்ந்த 6 அல்லது 10
உயர்ந்த ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் இந்தியாவின் அமைப்
பையே ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அதைப்பற்றி எந்தவித
சந்தேகமும் இல்லை. நாம் அதனை சமப்படுத்தாமலோ
அல்லது சமப்படுத்த முயற்சிக்காமலோ இருந்தால் சந்தேகத்
திற்கு இடம் இன்றி ஜாதித் தன்மை மிக ஆபத்தான
அளவிலே வளர்ந்துகொண்டு போகும் என்று நேரு பிரான்
அந்தக் கூட்டத்திலே எடுத்துக்காட்டினார்கள்.

நம்முடைய பேராசிரியர் அவர்கள் அந்தப் போராட்டத்
தின்போது வகுப்புரிமைப் போராட்டம் என்ற நூலை
எழுதினார். அந்த நூலுக்கு சிறப்புரை எழுதியவர் திரு.
முத்தையா முதலியார் அவர்கள். அதிலே அவர்கள்
குறிப்பிடுகிறார்கள், மிக அழகாக, கம்யூனல் ஜி.ஓ.வை.
ஆதரிப்பவர்கள் கூறுவதெல்லாம் தகுதியற்ற முன்னேறிய வகுப்
பினரை அதிகம் எடுப்பதை கைவிட்டு, தகுதியற்றவர்
என்றாலும் பிற்படுத்தப்பட்டவர் என்றால் உரிமை மிகுந்த
மற்ற வகுப்பாரை எடுப்பது என்பதாகும். மேலும் தகுதி
திறமை என்பது அர்த்தமற்ற, ஆதாரமற்ற, சுயநல ஏமாற்றுக்
கூச்சலே ஆகும் என்று முத்தையா முதலியார் குறிப்பிட்டார்.
அதையே பெரியார் குறிப்பிடுகிறார். இந்தியாவுக்கு, சிறப்
பாக தென் இந்தியாவுக்கு ஜாதி வித்தியாசங்கள் ஒழிக்கப்
படுவதும், சட்டபூர்வமாக அது வெற்றி பெறும்வரை
சமூக எதிர்ப்பையும், இழிவையும் சமாளிக்க அரசாங்கத்தின்
அரசியல் உரிமை ஸ்தாபனங்களில் பேதப்படுத்தப்பட்ட
வகுப்புகளுக்கு விகிதாச்சார உரிமைகள் வேறுபடுவதையும்
ஒரு பெரும் சமதர்மப் புரட்சியாகவே நான் கருதுகிறேன்.
மேலும் பெரியார் கூறுகிறார். ஜாதியையும், மதத்தையும்
ஒருபுறத்திலே காப்பாற்றிக் கொண்டு மற்றொரு புறத்திலே
ஜாதி மத வகுப்பு பிரதிநிதித்துவங்கள் கேட்பது இழித்
தன்மை என்று சொன்னால் அப்படிச் சொல்வது ஆயிரம்
மடங்கு, இரண்டாயிரம் மடங்கு இழித் தன்மையும், வஞ்சகத்
தன்மையும், துரோகத் தன்மையும் ஆனது என்று பெரியார்
சொல்கிறார். இத்தகைய கருத்துக்களின் அடிப்படையிலே
தான் இந்த நிலத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள், அடக்கப்பட்ட
மக்கள், தாங்கள் எப்படியும் முன்னேற வேண்டுமென்ற
முனைப்பிலே ஈடுபட்டு அதற்கான வகையிலே உறுதியான
அரசுகள் தங்களால் இயன்றவரை அவர்களுக்கு கைகொடுத்து,
இன்று இருக்கின்ற இந்த அரசு கடந்த கால அரசுகளை விட
மேலும் ஒருமடங்கு அல்ல, இரு மடங்கு அல்ல பல



1990 ஏப்ரல் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

மடங்கு நன்மைகளை இந்தச் சமுதாயத்திற்குச் செய்ய
வேண்டுமென்ற எண்ணத்தோடு பணியாற்றிக்கொண்டிருக்கிறது.
இந்த அரசு 1967ஆம் ஆண்டு அண்ணா அவர்களுடைய
தலைமையிலே அமைந்து, அண்ணா அவர்கள் மறைந்தபோது,
அந்தப் பொறுப்பை நான் ஏற்றபோது, 1969ஆம் ஆண்டு
பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக முதல் முதலில் ஒரு தனித்
துறை அமைக்கப்பட்டதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

13-10 மணி

அதற்குத் தனியாக ஒரு அமைச்சர் ஏற்படுத்தப்பட்டதும்
அப்போதுதான். 1969 வரை இந்தப் பிற்படுத்தப்பட்ட மக்க
ளுடைய துறைக்கான மானியத்தில், நம்முடைய திரு. லத்தீப்
அவர்கள் இங்கே குறிப்பிட்டதுபோல, இந்த மானியம்
கவனிப்பாரற்று, கேட்பாரற்று விவாதிக்கப்பட்ட சூழலில், சில
லட்சம் ரூபாய்கள் தான் இந்த மானியத்திற்காக ஒதுக்கப்
பட்டது. 1969ஆம் ஆண்டுதான் பிற்பட்டோர் நலத் துறை
மானியத்திற்காக முதன் முதலாக ஒரு கோடி ரூபாய்
ஒதுக்கப்பட்டது. 1969லே, ஒரு கோடி ரூபாயாக ஒதுக்கப்பட்ட
இந்தத் தொகை, 20 ஆண்டுகளில் வளர்ந்து, வளர்ந்து,
கடந்த ஆண்டு 19 கோடி ரூபாய் என்ற அளவிலே வந்து
நின்றது. ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் என்ற அளவிலே
வளர்ந்த இந்தத் தொகையை இன்றைய தினம் மேலும்
ஒரே ஆண்டில், நம்முடைய நண்பர் திரு. பூவராகன்
அவர்கள் இங்கே பாராட்டி, எடுத்துச் சொன்னதைப் போல,
11 கோடி ரூபாயை அதிகமாக்கி, ஒரே ஆண்டில் 30 கோடி
ரூபாய் இந்தத் துறைகளுக்காக இன்றைய தினம் ஒதுக்கப்பட்
டிருக்கிறது. இதுதான் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்
படுத்தப்பட்டோர் நலனில் இந்த அரசுக்கு எவ்வளவு
அக்கறை இருக்கிறது என்பதைக் காட்டுகின்ற சான்றாகும்.

இங்கே மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 20 சதவிகிதம்
அளிக்கப்பட்டதைப் பாராட்டி அனைவரும் பேசினார்கள்.
எனக்கு இன்று பெருமகிழ்ச்சி என்னவென்றால், பிற்படுத்தப்
பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக விவாதிக்கப்
படும் இந்த மானியத்தில் தனித் தொகுதியிலிருந்து தேர்ந்
தெடுக்கப்பட்டு வந்த நம்முடைய திருமதி பொன்னம்மாள்
அவர்களும், நண்பர் திரு. பழனிச்சாமி அவர்களும் இன்னும்
இதற்குத் தொகை ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுப்
பேசியது எனக்கு மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். ஏனென்றால்
எந்த மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும், தாழ்த்தப்பட்ட
அடித்தளத்தில் வீழ்த்தப்பட்டு, பிற்பட்டுக் கிடக்கிற மக்கள்
உறவோடு உரிய நண்பர்களாக வாழவேண்டுமென்று என்னு
கிறோமோ, அவர்களிடத்திலே இன்றைக்கு அந்த ஒற்றுமை
இல்லை. இப்போதுகூட நான் வேதனையோடு தெரிவிக்க

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 ஏப்ரல் 10

விரும்புகிறேன். நேற்றைக்குகூட தென் மாவட்டங்களில் ஒரு மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப் பட்ட மக்களுக்கும் இடையிலே ஏற்பட்ட ஒரு கலவரத்தின் காரணமாக இரண்டொருவர் உயிர் இழந்திருக்கிறார்கள் என்ற செய்தி எனக்குக் கிடைத்தது. ஆனால் இந்த அவையிலே இருக்கின்ற தனித் தொகுதியிலே வெற்றி பெற்ற உறுப்பினர் கள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகப் பேசுவதும், அதைப் போல ஆதிதிராவிடர் நலத் துறை மானியத்திலே பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தினுடைய பிரதிநிதிகள் அவர்களுக்காகப் பேசுவதும் இந்த மாமன்றத்திலே நாம் ஒரு நல்ல மரபாக வளர்த்திருப்பது அந்த மக்களிடத்திலே ஒற்றுமையை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படைக் கொள்கையோடுதான். இருந்த போதிலும் கூட இன்னமும் பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் அந்த ஒற்றுமை உணர்வோடு செயல்பட, உறவு கொள்ள முன்வரவில்லையே என்பதை எண்ணுந்தோறும், இவ்வளவு செய்தும்கூட, இவ்வளவு கை தூக்கிவிட எல்லா அரசுகளும் முயன்றும்கூட, இந்த முயற்சி பலனளிக்கவில்லையே என்ற ஏக்கம் நம்மை வாட்டிக்கொண்டு தான் இருக்கிறது. நான் எழுதிய ''ஒரே இரத்தம்'' என்ற தொடர் கதையிலேகூட குறிப்பிட்டிருக்கிறேன். அந்தக் காலத்திலே, புராண காலத்திலே புலியும், மானும் ஒரே துறையிலே தண்ணீர் குடித்தது என்று படித்திருக்கிறோம். ஆனால் இந்தக் காலத்தில் மானும், மானுமாவது ஒரே துறை யிலே தண்ணீர் குடிக்கக்கூடாதா? பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் மான் இனம்தானே:? அவர்கள் வேங்கை இனம் அல்லவே! இருவரில் ஒருவர் வேங்கை இனம் அல்லவே! பிறகு மானும், மானும் கூட இந்தக் காலத்திலே ஒரே துறையிலே தண்ணீர் குடிக்க மறுக்கின்ற னவே என்ற ஆதங்கத்தை நான் அதிலே வெளியிட்டிருக்கிறேன். எனவே நாம் இந்தத் துறையின் மூலமாக பணத்தை வாரி, வழங்கினாலும், அதற்காகப் பள்ளிகளை எழுப்பினாலும் கல்லூரிகளை உருவாக்கினாலும், வேலை வாய்ப்பு மற்றும் பல வாய்ப்புகளை இந்த மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக நாம் ஒதுக்கித் தந்தாலும்கூட, அவர்களிடத்திலே ஏற்படுகிற வளர்ச்சி முழு அளவில் இல்லை என்பதால், அவர்கள் வாழ நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டுமென்ற அந்த வேண்டுகோளை யும் இந்த மானியம் விவாதிக்கப்படுகிற இந்த நேரத்திலே நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

13—15 மணி

மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக 20 சதவிகிதம் ஒதுக்கீடு செய்தது பற்றி நம்முடைய எதிர்க் கட்சியின் சார்பாகப் பேசிய திரு. சின்னசாமி அவர்கள், இது என்ன பெரிய காரியம், என்பது போலக் குறிப்பிட்டார். இதற்கு மீண்டும் ஒரு மக்கள் தொகைக் கணக்கை எடுக்க வேண்டும் என்று முதலிலே



1990 ஏப்ரல் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

பேச்சை ஆரம்பித்த மாதப்பன் இங்கே எடுத்துச் சொன்னார் அவர்களே சொன்னார்கள்; அவர்களே பதிலும் சொன்னார் கள். சிங்காரமும் சொன்னார். சென்சஸ் எடுக்க ஆரம்பித் தால் ஒவ்வொரு சாதியும், 2 கோடி, 3 கோடி என்று சொல்லி தமிழ்நாட்டினுடைய மக்கள் தொகை 20 கோடி என்று வந்து விடும் என்று. அவரே அதற்கான விடையையும் வழங்கினார். என்ன தான் சரியாக கணக்கு எடுக்க சரியான அதிகாரிகளை நாம் இன்றைக்குப் பயன்படுத்தினாலும் கூட அது இன்றைய சூழ்நிலையிலே அது முடிந்த பிறகு அவர்களுக் கான விகிதாச்சாரத்தை ஒதுக்கினால் இயலாது என்ற காரணத்தினாலேதான் விரைவிலே ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் ஏற்கனவே எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களை—பல குழுக்களின் சார்பாக எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களை. சட்டநாதன் குழு, தொடர்ந்து அம்பா சங்கர் குழு—இந்தக் குழுக்களின் சார்பாக எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையிலே தான் நாம் இந்த 20 சதவீதத்தை ஒதுக்கினோம். 50 கொடுத்த காரணத்தி னாலேதானே நீங்கள் 20 கொடுக்க முடிந்தது என்று சொன்னார்கள். நான் மறுக்கவில்லை. 50 என்று அறிவித்த அருமை நண்பர் எம். ஜி. ஆர். அவர்களை நான் அன்றைக்கே பாராட்டி இருக்கின்றேன். பாராட்டுகிற நேரத்திலே பாராட் டுவதும், குறைகளைச் சொல்லவேண்டிய நேரத்திலே குறை சொல்வதும் எதிர்க்கட்சிக்கு இலக்கணமாக இருக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையில் அப்போதே பாராட்டி இருக்கின் றேன். ஆனால் அந்த 50 சதவீதம் வரவேண்டும் என்பதற் காகப் போராடியவர்களை யாரும் மறந்துவிடக் கூடாது இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தால் 9 ஆயிரம் ரூபாய் என்று ஒரு உச்சவரம்புச் சட்டத்தை எம். ஜி. ஆர். தலைமை யிலே அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்கள் பிரகடனப்படுத்திய போது, அதைத் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்தது; திராவிடர் கழகமும் எதிர்த்தது; இன்னும் சொல்லப்போனால் காங்கிரஸ் கட்சி தீர்மானம் போட்டு எதிர்க்கவில்லையே தவிர காங்கிரஸ் கட்சியிலே இருந்த நண்பர் திண்டிவனம் இராம மூர்த்தி எங்களுடைய மேடைகளிலே வந்து அந்த 9 ஆயிரம் உச்சவரம்புச் சட்டத்தை, அந்த விதிமுறைகளை எதிர்த்துப் பேசி இருக்கிறார். ரமணிபாய் அம்மையார் எங்களுடைய கூட்டங்களிலே வந்துபேசி இருக்கிறார். அனந்தநாயகி அம்மையார் எங்களுடைய கூட்டங்களிலே கலந்துகொண்டு பேசி இருக்கிறார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றாக இருந்த காலத்திலே நண்பர் தா. பாண்டியன் அவர்கள் எங்களுடைய கூட்டங்களிலே கலந்துகொண்டு பேசி இருக்கிறார். அவர்கள் எல்லாம் கட்சி சார்பாக அந்த முடிவுகளை எடுக்காவிட்டாலும் கூட அந்த கட்சிகளிலே உள்ள பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த பிரதிநிதிகள், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பேராபத்து வந்துவிட்டது என்று அந்த 9 ஆயிரம் ரூபாய் உச்சவரம்புச் சட்டம். கூடாது: ஒரே குடும்பத்தில் 9 ஆயிரம் ரூபாய்

வருமானம் உள்ளவன், 10 ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ளவன்,
என்று இரண்டு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டால்
9 ஆயிரம் ரூபாயும் அதற்குக் கீழும் வருமானம் உள்ளவன்
பிற்படுத்தப்பட்டவன்; 9,100 ரூபாய் வருமானம் உள்ளவன்
முன்னேறிய சாதி என்றால்—அண்ணன் ஒரு சாதி, தம்பி ஒரு
சாதி என்று வீட்டுக்கு உள்ளேயே ஆகிவிடும் என்று அன்
றைக்கு மிகக் கடுமையாக நாங்கள் எல்லாம் எதிர்த்த
காரணத்தால், அந்த எதிர்ப்பைத் துச்சமாகக் கருதுவேன்
என்று சொல்லாமல் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள்
அன்றைக்கு நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவு
களுக்குப் பிறகு அவர்கள் மறுபரிசீலனை செய்து, 50 சதவீதம்
என்கின்ற ஒதுக்கீட்டை பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகச்
செய்தார்கள். அதை அப்போதே நாங்கள் பாராட்டி
இருக்கின்றோம் எங்களுடைய அணுகு முறையின்படி,
ஏனென்றால் இது ஒரு கட்சிக்கு உரிய பிரச்சினை அல்ல;
கட்சிக்கு உரிய பிரச்சினையாக எப்போது ஆகிறது என்றால்
நம்முடைய திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் எடுத்துக்
காட்டியதைப் போல நாம் அறிவிக்கின்ற திட்டங்கள் ஒழுங்
காகப் போய்ச் சேராமல் அதிகாரிகள் செயல்படுவார்களே
யானால், அப்பொழுது அதை அரசியல் நோக்கத்தோடு
விமர்சிப்பதற்கு எல்லாக் கட்சிகளிலே உள்ளவர்களுக்கும்
உரிமை இருக்கின்றது. ஏனென்றால் இவைகள் எல்லாம்
ஒழுங்காகப் போய்ச் சேரவேண்டும். என்கின்ற அந்த
எண்ணத்தோடு தான் அரசு திட்டங்களைத் தீட்டுகிறது.
இன்னும் சொல்லப்போனால், இந்தத் திட்டங்களை நிறை
வேற்றுகின்ற இடத்திலே கூட அந்தச் சமுதாயங்களைச்
சேர்ந்தவர்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அவர்களுடைய
பிரதிநிதிகள், அந்த அதிகாரிகள் தான் இருக்க வேண்டும்
என்று கூட நான் எண்ணி அந்த வகையிலே தான் அந்தத்
திட்டங்கள் எல்லாம் இன்றைக்கு செயல்படுத்தப்படுகின்றன
என்பதையும் இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் நன்கு
அறிவார்கள் என்று நான் நம்புகின்றேன். அதிலே தவறுகள்
இருக்குமேயானால் அவைகளைச் சுட்டிக்காட்ட எல்லாக்
கட்சியினருக்கும் உரிமை உண்டு.

நம்முடைய நண்பர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில்
உரையாற்றிய திரு. சிரங்கன் அவர்கள் இதை வரவேற்று அதிலே
சில குறைபாடுகள் இருப்பதையும் எடுத்துச் சொன்னார்கள்.
அதைப் போல ஒவ்வொரு கட்சியின் சார்பிலே குறைபாடுகள்
சொல்லப்பட்டன. மண்டல் கமிஷன் தீர்மானத்தை நிறை
வேற்றியதே இந்த மாமன்றம்தான். இன்னும் சொல்லப்
போனால் மண்டல் கமிஷன் 1977 ஆம் ஆண்டில் அன்றைக்கு
இருந்த ஜனதா அரசில் நியமிக்கப்படுவதற்கு நான்கு ஆண்டு
களுக்கு முன்பே, 1973 ஆம் ஆண்டு அலகாபாத்தில் நடைபெற்ற
பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டில் மைய அரசின் பணிகளுக்கும்



மைய அரசு சார்புடைய நிறுவனங்களிலே உள்ள பணிகளுக்கும்
இது போன்ற வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் தேவை என்ற
கருத்தை அன்றைய தினம் நான் அந்த மாநாட்டிலே எடுத்துச்
சொல்லி இருக்கின்றேன்.

13-20 மணி

ஏனென்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நீண்ட
நாள் கொள்கை மாநில அரசிலே மாத்திரம் இந்த இட ஒதுக்கீடு
இருந்தால் போதாது ; மத்திய அரசு நிறுவனங்களிலும், மத்திய
அரசிலும், நிர்வாகத்திலும் கூட, இந்த இட ஒதுக்கீடு தேவை
என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இந்த
மன்றத்திலே தீர்மானம் போட்டு அனுப்பினோம். முன்பிருந்த
அரசு அந்தத் தீர்மானத்தை சட்டை செய்யவில்லை. ஆனால்
இன்றைக்கிருக்கின்ற மத்திய அரசு அந்தத் தீர்மானத்தை
ஏற்று, குடியரசுத் தலைவர் உரையிலே கூட மண்டல் கமிஷன்
பரிந்துரைகள் நிறைவேற்றப்படும் என்று எடுத்துச் சொல்லி,
பிறகு நிதிநிலை அறிக்கையிலே கூட டெல்லியிலே வெளியிடப்
பட்ட அறிக்கையிலே கூட மண்டல் கமிஷன் பரிந்துரை நிறை
வேற்றப்படும் என்று எடுத்துச் சொல்லி, அண்மையிலே பிரதமர்
வி.பி. சிங் அவர்களே கூட மாமன்றத்திலே உறுதியளித்திருக்
கின்றார், விரைவில் நிறைவேற்றப்படும் என்று.

என்னமோ வரும் என்று எனக்கு நம்பிக்கையே கிடையாது
என்று திரு. பி.எச். பாண்டியன் இங்கே சொன்னார். அப்படிச்
சொன்னது, வர வேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்காகச்
சொல்லப்பட்ட வார்த்தையே தவிர, வேறல்ல. வராவிட்டால்
அது வருவதற்கேற்ற வகையிலே நாம் அனைவரும் ஒருமித்த
குரல் கொடுத்த உங்களையெல்லாம் அதிலே இழுத்துச் சேர்த்துச்
செல்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான்
இந்த நேரத்திலே எடுத்துக் காட்ட விரும்புகின்றேன்.

என்னதான் நாம் அவர்களுக்குச் சலுகைகளை வழங்கி
னாலும், உரிமைகளை வழங்கினாலும், அந்த உரிமைகளை
வழங்குகின்ற ஒரே காரணத்தாலேயே அவர்கள் எல்லாப் பலன்
களையும் பெற்று விட முடியும் என்று சொல்ல இயலாது. எனவே
தான், இங்கே சில புதிய கருத்துக்களை உங்கள் முன்னிலையிலே
வைக்க நான் விரும்புகிறேன்.

நம்முடைய அருமை நண்பர் திரு. லத்தீப் அவர்கள் எடுத்துக்
காட்டியதைப் போல, இது கேட்காமலேயே சொல்லப்படுகின்ற
அறிவிப்புகள் அல்ல ; ஆனால் பல நேரங்களிலே கேட்கப்பட்டு,
இன்றைக்கு சுட்டிக் காட்டப்பட்டு, உறுதியாகக் கேட்கப்
படா விட்டாலும் கூட, என் மனதிலே இருக்கின்ற எண்ணங்
களை, ஒரு [illegible] நாட்களாகச் சிந்தித்து (?), சொல்லுகிறேன் (?).
அதனை ஒரு அறிவிப்பாக இந்த மாமன்றத்திலே உங்கள் முன்
வைக்க நான் விரும்புகிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] 1990 ஏப்ரல் 10

இன்னும் மதுரை மாவட்டம் போன்ற பகுதிகளிலே இருக்கின்ற சீர் மரபினர், குறிப்பாக பிரமலைக் கள்ளர்களுக்கெல்லாம் இருக்கின்ற குறைகளை திரு. ஆசையன் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். தம்பி ஏ.ஜி. சம்பத் அவர்கள் இங்கே பேசும் பொழுது, இன்னும் அதிகத் தொகை அதற்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். நம்முடைய திரு. சின்னசாமி அவர்கள் 30-க்கு முன்னால் ஒரு கோடு போடுங்கள் என்று குறிப்பிட்டார். எப்பொழுதும் அவர் அந்த இலக்கணத்திலே கை தேர்ந்தவர். ஒன்று என்று போட்டு விட்டு, பிறகு ஐந்தாறு பூஜ்யம் போட்டால் அந்த ஒன்று இருந்தால் தான் பூஜ்யத்திற்கெல்லாம் மதிப்பு என்கின்ற இலக்கணத்தையே நமக்கெல்லாம் சொல்லிக் கொடுத்தவர் அவர். எனவே தான் அவர், ஒன்று போடுங்கள் என்றார்.

ஆனால், இந்த 30 கோடி ரூபாய் இந்தத் துறைகளுக்காக ஒதுக்கப்பட்டிருப்பது எப்படி வளர்ந்திருக்கிறது என்றால், ஒவ்வொன்றாக வளர்ந்து, வளர்ந்து, ஆண்டு தோறும் ஒரு கோடி, ஒரு கோடி என்று வளர்ந்து, சென்ற ஆண்டு 19 கோடியாக வந்து நின்று, இந்த ஆண்டு மேலும் 11 கோடி ரூபாயை அதிகமாக உயர்த்தி மொத்தம் 30 கோடியாக ஆகியிருக்கிறது. அடுத்த ஆண்டு உங்களுடைய உணர்வுகளையெல்லாம் நம்முடைய நிதிச் செயலாளரிடத்திலே எடுத்துச் சொல்லி, 50 கோடியாக இந்தத் தொகையை உயர்த்துவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய கையொலி எனக்குத் துணை நிற்கும் என்று நான் கருதுகின்றேன்; அந்த வகையிலே நாம் அளிக்கின்ற சலுகைகள், உரிமைகள் எல்லாம் பயன் பெற வேண்டும் அல்லவா ? அப்படிப் பயன் படுவதற்குச் சில இடையூறுகள் இருக்கின்றன. சட்டநாதன் குழுவிலே கூட அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சில குடும்பங்களில் ஏற்கனவே, நான்கைந்து பேர் டாக்டர்களாக இருப்பார்கள். நான்கைந்து பேர்கள் பொறியாளர்கள் இருப்பார்கள். அவர்களுடைய வீட்டுப் பிள்ளைகள் சுலபமாக மீண்டும் ஒரு டாக்டராக ஒரு பொறியாளராக வந்து விடுகிறார்கள். அவைகளையெல்லாம் எப்படித் தவிர்ப்பது என்று அன்றைக்கே ஒரு கேள்வி எழுந்தது. இன்றைக்குக் கூட அதைப் பேசும் பொழுது சில பேர்-நம்முடைய சின்னசாமி கூட குறிப்பிட்டார் என்று கருதுகிறேன். அவர்களெல்லாம் ஜாடையாக அதைக் குறிப்பிட்டார்கள். எனவே தான், அதைப் பற்றிச் சிந்தித்து ஒரு அறிவிப்பை நீங்களெல்லாம் மகிழத்தக்க வண்ணம் இங்கே செய்கின்றேன்.

பொதுத் தொகுப்பு — பொதுத் தொகுப்பு என்றால் O.C. அதாவது, Open Competiton

பிற்படுத்தப்பட்டோருக்கான தொகுப்பு — B. C.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினருக்கான தொகுப்பு MBC (Most Backward).



1990 ஏப்ரல் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

ஆதி திராவிட பழங்குடி மக்கள் தொகுப்பு என, மருத்துவக்
கல்லூரி, பொறியியல் கல்லூரி, சட்டக் கல்லூரி, விவசாயக்
கல்லூரி, கால்நடைக் கல்லூரி ஆகிய தொழில் கல்வி தேர்வுக்கு
அந்தந்தத் தொகுப்புக்கு உரிய மதிப்பெண்கள் எடுக்கும் மாண
வர்களில், அதாவது தொழில் கல்வி பயில மாணவர்களைத்
தேர்ந்தெடுக்கும் போது பொதுத் தொகுப்புக்கு Cut off mark
245 என்று இருக்கலாம்.

13-25 மணி.

பி.சி.க்கு 240 என்று இருக்கலாம், எம். பி. சி.க்கு 230 என்று
இருக்கலாம், ஷெட்யூல்டு காஸ்டிற்கு 220 என்று இருக்கலாம்.
அப்படி உரிய மதிப்பெண்கள் எடுக்கும் மாணவர்களில், ஒரு
குடும்பத்தில் பெற்றோரோ அல்லது உடன்பிறப்புக்களோ பல்
கலைக் கழகப் பட்டம் பெறாதவர்களாக இருந்தால், அந்தக்
குடும்பத்திலிருந்து வரும் முதல் மாணவனுக்கு ஐந்து மதிப்பெண்
கள் அதிகமாகக் தரப்படுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கும்.
ஆனால் இது குறித்து தவறான சான்றிதழ் தருபவர்கள் மீது
கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகிய தொகுப்
புகளில், மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, சட்டக்
கல்லூரி, விவசாயக் கல்லூரி, கால்நடைக் கல்லூரி ஆகிய தொழில்
கல்விகளுக்குத் தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கு, அவர்கள்
குடும்பத்தில் இது வரையில் பெற்றோரோ அல்லது உடன்
பிறப்புக்களோ பல்கலைக்கழகப் பட்டம் பெறாதவர்களாக இருந்
தால் அந்தக் குடும்பத்தின் ஆண்டு வருமானம் 12 ஆயிரம்
ரூபாயும், அதற்குக் குறைவாகவும் இருந்தால், அந்தக் குடும்
பத்திலிருந்து வரும் முதல் மாணவனாக இருந்தால், அவருக்கு
மேற்கண்ட தொழில் கல்வி வரையில் இலவசமாக வழங்கப்படும்
என்று அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதே
சலுகையைப் பெறுவதற்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி
மக்களுக்கு மேலே குறிப்பிட்ட தொழில் கல்விகளைப் பெற
ஆண்டு வருமானம் 15 ஆயிரம் ரூபாயும், அதற்குக் குறைவாகவும்
என்று நிர்ணயிக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு
தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து, வருமான வரம்பின்றி ஆதிதிராவிடர், பழங்குடி
மக்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின
ருக்கும் இளங்கலைப் பட்டப் படிப்பு வரையில்—பி.ஏ., பி.எஸ்ஸி.
பி.காம்.—இலவசக் கல்வி வழங்கப்படும் என்று கடந்த ஆண்டு
அறிவித்து, அதை இப்போது செயல்படுத்தி வருகிறோம். அதைப்
போல ஆண்டு ஒன்றிற்கு 12 ஆயிரம் ரூபாயும், அதற்குக் குறை
வாகவும் வருமானமுடைய ஏழை, நடுத்தரக் குடும்பப் பெண்
களுக்கும் இளங்கலை பட்டப் படிப்பு வரையில் இலவசக் கல்வி

வழங்கப்படும் என்று கடந்த ஆண்டு அறிவித்து, செயல்படுத்தி
வருகிறோம். அதைத் தொடர்ந்து, இந்த ஆண்டு முதல்—
அவர்கள் கேட்டார்கள். பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் இளங்
கலைப் பட்டம் வரையில் இலவசக் கல்வி வேண்டும் என்று—
இந்த ஆண்டு முதல், அதைத் தொடர்ந்து, பிற்படுத்தப்பட்டவர்
களுக்கும் அந்தக் குடும்பத்தில் இது வரையில் பெற்றோரோ
அல்லது உடன்பிறப்புக்களோ யாரும் பல்கலைக்கழகப் பட்டம்
பெறாதவர்களாக இருப்பின், அந்தக் குடும்பத்தின் ஆண்டு வரு
மானம் 12 ஆயிரம் ரூபாயும் அல்லது அதற்கு குறைவாகவும்
இருக்குமானால், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த முதல் மாண
வனுக்கு இளங்கலைப் பட்டப்படிப்பு வரையில் இலவசக் கல்வி
வழங்கப்படும் என்று மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன். (மேசையை
தட்டும் ஒலி). இந்த அறிவிப்புகளோடு அகமகிழ்ந்து, உங்
களுடைய பாராட்டுக்களை நான் பகிர்ந்து கொண்டு, இந்த
அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். வெட்டுத்
தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்று, இந்த மானியத்தை
ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே,
பல நல்ல அறிவிப்புகளை முதலமைச்சர் அவர்கள் கொடுத்து
இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை
யில் சில சமுதாயங்கள், சில ஜாதிகள் குறிப்பாக குரும்ப
கவுண்டர் என்ற சமுதாயம் நீலகிரி மலையில் பிறந்தால் அவர்
கள் ஷெட்யூல்டு ட்ரைபாக, பழங்குடியினராக அங்கீகரிக்கப்
பட்டிருக்கிறார்கள். நீலகிரி மலையை விட்டு கொஞ்சம் கீழே
வந்து, பர்லியாருக்கு கீழே கோவை மாவட்டத்தில் பிறந்தால்
பின்தங்கிய சமுதாயமாக அவர்கள் கருதப்படுகிறார்கள்.

அதைப் போல போயர் சமுதாயம்—அம்மையார் பொன்னம்
மாள் அவர்கள் குறிப்பிட்டார்கள்—அதாவது ஒட்டர்கள். அவர்கள்
கர்நாடகாவில் பிறந்தால் ஷெட்யூல்டு ட்ரைபாக இருக்கிறார்கள்.
தாழ்த்தப்பட்ட சமுதாயமாக அங்கீகரிக்கப்படுகிறார்கள்.
ஆனால் நம்முடைய மாநிலத்தில், தமிழ் நாட்டில் அவர்கள்
பின்தங்கிய சமுதாயமாகத் தான் அங்கீகரிக்கப்படுகிறார்கள்.

அதைப் போல ஏர்குலா என்று ஒரு ஜாதி இருக்கிறது. வேறு
மாநிலங்களில் அவர்கள் ஷெட்யூல்டு ட்ரைபாக, பழங்குடியின
ராக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய
மாநிலத்தில் மிகப் பின்தங்கிய சமுதாயமாக இருந்தாலும் கூட,
பின்தங்கிய சமுதாயமாகத்தான் அங்கீகரிக்கப்படுகிறார்கள்.

அதைப்போல வேறு இரண்டு சமுதாயத்தைப் பற்றி குறிப்
பாகச் சொன்னார்கள். நாவிதர் மற்றும் வண்ணார். இவர்
களை தாழ்த்தப்பட்ட மக்களாக அங்கீகரிக்க வேண்டுமென்று
சின்னச்சாமி அவர்கள் விடுத்த வேண்டுகோளை, முதலமைச்சர்
ஏற்றுக்கொள்வார்களா? ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,
முதலில் அதை திருமதி பொன்னம்மாள் அவர்களே ஏற்றுக்
கொள்வார்களா என்பது கேள்விக்குரிய விஷயம். ஏனென்றால்
என்னுடைய அனுபவத்தில் சொல்கிறேன். தாழ்த்தப்பட்ட
மக்கள் அவர்களை எல்லாம் இணைத்துக்கொண்டு, தங்களுடைய
விகிதாச்சாரத்தைக் குறைத்துக்கொள்ள விரும்புவது இல்லை.
எனவே, இவைகளை எல்லாம் ஆராய வேண்டும். நம்முடைய
திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் சில சிக்கலான பிரச்சினை
களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு இடத்தில்
இருந்தால் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், இன்னொரு இடத்
திலே அவர்களே பிற்படுத்தப்பட்டோர் என்று ஆகிவிடுகிறார்கள்
என்று. அதைப்பற்றிதான் வழக்கறிஞர் கணபதி அவர்களிடத்
திலே நான் பேசிக் கொண்டிருந்தேன். ஏற்கனவே இந்த அரசு
பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள்
இவர்களிடத்தில் இருக்கிற பிரச்சினைகளை அறிய ஆலோசனைக்
குழு ஒன்று அமைத்து இருந்தது.

13-30 மணி.

அதைப்போல அத்தகைய ஒரு கருத்து வழங்குகின்ற குழு
ஒன்றை அமைத்து, இதுபோல் வருகின்ற பிரச்சினைகளை எல
லாம் அலசி ஆராய்ந்து ஏற்ற முடிவை அரசுக்கு அறிவிப்பதற்கு
அந்தக் குழுவின் சார்பாக இவைகள் எல்லாம் பரிசீலிக்கப்படும்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோருக்கு, அந்த
மாணவர்களுக்கு 12 ஆயிரம் ரூபாய் சலுகை வழங்குவது என்று
அரசு அறிவித்திருந்தபோதும்கூட, தனியார் பள்ளிகளில் 3
ஆயிரம் ரூபாய் சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு வந்தால்தான்
பள்ளியிலே உனக்கு சலுகை அளிக்க முடியும் என்று வலியுறுத்தப்
படுகிறது. அதை அரசு கட்டுப்படுத்துமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,
அது பற்றி விவரம் அனுப்பப்படுமானால், ஆராய்ந்து பார்த்து
அதற்குப் பின்னர்தான் விடை அளிக்க முடியும்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தங்கும் விடுதியிலே சேருவதற்கு மாணவர்களுக்கு
உயர்நிலைப் பள்ளிகளிலே, மேல்நிலைப் பள்ளிகளிலே 6 கிலோ
மீட்டர் தொலைவிலிருந்து வர வேண்டும் என்று ஒரு ஆணை
இருக்கிறது. இப்போது வருமான வரம்பை எல்லாம் உயர்த்திக்
தந்திருக்கிறார்கள். ஆகவே இந்த 6 கிலோ மீட்டர் தொலை
விலிருந்து வருகிற மாணவர்களுக்கு என்று இருப்பதை ரத்து
செய்து அந்தப் பள்ளியைச் சுற்றி எங்கிருந்து வந்தாலும் அவர்கள்

[திரு. வி. கே. சின்னசாமி] [1990 ஏப்ரல் 10

மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், சீர் மரபினர் அல்லது பி.சி யாக இருந்தால், அவர்களைச் சேர்க்கவேண்டும் என்ற உத்தரவை அறிவிப்பார்களா?

அதோடு வேறு ஒன்று. தாங்கள் மோஸ்ட் பேக்வார்ட், சீரமரபினரிலே 107 ஜாதிகளை உள்ளடக்கிய ஒரு பட்டியலைத் தந்திருக்கிறீர்கள். ஆனால் மத்தியிலே இருக்கிற மண்டல் அவர்களுடைய கமிஷனிலே 20 ஜாதியை அதிலே நீக்கியிருப்ப தாக தந்திருக்கிறார்கள். உதாரணமாக, அம்பலக்காரர், ஆண்டி பண்டாரம், இசை வேளாளர், ஜங்கம், கொங்கு செட்டியார், குன்னதமன்னாடி, குருவினைச் செட்டி, முத்தலக்கம்பட்டி, குன்னுவ வேட்டுவக் கவுண்டர், வேட்டுவக் கவுண்டர், யோகேசு வரன் என்று இப்படி 20 ஜாதிகளை நீக்கியிருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே அவற்றையும், தாங்கள் அறிவித்த அந்த 107 ஜாதிகள் என்று இருக்கிற அந்த ஜாதிகள் அனைத்தை யும், இந்த மண்டல் கமிஷன் அறிக்கையிலே சேர்க்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்துவார்களா, அதை அமுலாக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் சென்ற திங்கள் டெல்லிக்குச் சென்றபோது, மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளை நிறைவேற்றுகிற குழுவின் தலைவ ராக இருக்கிற துணைப் பிரதமர் தேவிலால் அவர்களிடத்திலே பேசிக் கொண்டிருந்தபோது மீண்டும் ஒரு முறை இந்தியா முழு வதும் என்னென்ன ஜாதிகள் இருக்கின்றன என்ற கணக்கில் நீங்கள் புகுந்தால், இந்தப் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு இன்னும் 100 ஆண்டுக்காலம் ஆகும். எனவே, அந்தந்த மாநில அரசுகள் எந்தெந்த ஜாதிகளை பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்கிற பட்டியலிலே இணைத்து இருக் கிறதோ அந்த மாநில கணக்குகளை மாத்திரம் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். இது நல்ல யோசனை, சிந்திக்கலாம் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, முதல்வர் அவர்கள் இறுதியிலே அறிவித்த அறிவிப்புகள் பரம் பரையாகவும், பட்டம் பெறாதவர்களும், தொழில் கல்வியைப் பெறாதவர்களும் பெறுவதற்குரிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்திய தற்கு நான் பாராட்டுகிறேன். அதன் பிறகு, அவர்கள் இதனு டைய நிபந்தனைகளிலே ஒன்றாக (குறுக்கீடு) 12 ஆயிரம் ரூபாய், அதற்கு அல்ல, அதன் பிறகு முதலிலே நீங்கள் சொன்ன அறி விப்புக்குப் பிறகு, பின்னாலே வருகின்றவர்கள் இலவசக் கல்விக்கு 12 ஆயிரம் ரூபாய் வருமானம் என்று சொன்னீர்கள். அந்த 12 ஆயிரம் ரூபாய் என்றும், அதைவிட தாழ்ந்த நிலை யிலே இருக்கின்ற மக்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் என்று சொன்ன தாக எனக்கு நினைவு, ஆதி திராவிடர்களுக்கு. அதிலே நம்



1990 ஏப்ரல் 10] [திரு. குமரி அனந்தன்]

முடைய அம்பாசங்கர் கமிஷன் ரிப்போர்ட் ஒன்று தயாரிப்பதிலே நாலும் உறுப்பினராக இருந்தேன். தற்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற மரியாதைக்குரிய எஸ். ஆர். ராதா அவர்களும் இருந்தார்கள். அதிலே இரண்டாவது பக்கத்திலே, டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்சிலே பொருளாதார நிலையினைப் பற்றி குறிப்புகள் வேண்டும் என்று சொல்லி, ஒரு ஏக்கர் புஞ்சை வைத்திருப்பவர்கள் எத்தனை பேர். அரை ஏக்கர் நஞ்சை வைத் திருப்பவர்க்ள் எத்தனை பேர், அதற்கு மேலே நிலம் வைத்திருப் பவர்கள் எத்தனை பேர் என்று ஒரு வினாப்பட்டியல் கொடுக்கப் பட்டு இருந்தாலும் கூட, அந்த விவரம் தயாரிக்கப்படவில்லை. எனவே, பொருளதாரம் என்று வருகிறபோது, அலுவலகத் திலே பணிபுரிந்து வருகிற பொருளாதாரம் மட்டுமல்லாது, நிலத்திலிருந்து வருகிற பொருளாதாரத்தையும் நாம் கணக்கில் எடுக்கவேண்டியிருக்கும். ஆனால் நாம் சொல்லுகின்ற மக்களிலே பெருநிலக்காரர்கள் நிச்சயமாக இருக்கமாட்டார்கள் என்றாலும் கூட, அதிலேகூட சிலர் இருந்து, நீங்கள் சொல்லுவதுபோல எந்த விழுக்காடு அவர்கள் பெருநிலக்காரர்களாக இருக்கின்றார்கள் என்பதைப் பார்ப்பதற்கு ஒரு குழு அமைக்கப்படுமா, அல்லது ஏற்கெனவே இருக்கிற ரெவின்யூ ரெக்கார்டுகளை வைத்தாவது ஒரு தொகுப்பு எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நல்ல கருத்து. அது பரிசீலிக்கப்படும்.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முன்பு முதல்வராக இருந்த நேரத்தில், சீர்மரபினரைச் சேர்ந்த ரத்ன வேல் பாண்டியன் அவர்களையும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வரதராஜன் அவர்களையும் முதன் முதலாக உயர்நீதி மன்றத்திலே நீதிபதிகளாக நியமித்த பெருமை உடையவர்கள். இப்போது முதல்வராக பொறுப்பை ஏற்றுவிட்ட பிறகு, இரண்டு தாழ்த்தப்பட்ட மக்கள் வகுப்பைச் சேர்ந்த நீதிபதி மருதமுத்து நீதிபதி சுவாமிதுரை ஆகியோரை உயர்நீதிமன்ற நீதிபதிகள் பொறுப்பை ஏற்பதற்கு உறுதுணையாக நின்றவர்கள். இப்படிப் பட்ட ஒரு பாரம்பரியமிக்க டாக்டர் கலைஞர் அவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்ற வகுப்பினர்களுக்கும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் பொறுப்பை ஏற்பதற்கு நல்ல முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

13-35 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் தாழ்த்தப் பட்டவர்களுக்கும் சம்மந்தி, நாடார்களுக்கும் சம்மந்தி. வேறு [illegible] (சிரிப்பு).

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய குறிப்பிலே அதாவது நன்றாக மேல்நிலைப் பள்ளியிலே, உயர்நிலைப் பள்ளியிலே படிக்கக்கூடிய குழந்தைகளுக்கு, முதல் மாணவராக வரக் கூடியவர்களுக்கு பரிசுத் தொகையாக ரூபாய் 2,000 கொடுக்கப்படும் என்று ஒரு நல்ல சிறப்பான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்திலே அவர்களை ஊக்கப்படுத்துவதற்காக கொடுக்கிறோமே தவிர, அவர்களின் பெற்றோர்களுடைய ஆண்டு வருமானம் ரூபாய் 50,000 என்று இருக்கிறது. அது தேவைதானா என்பதை மட்டும் சற்று சிந்தனை செய்வார்களா என்பதை மட்டும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை ஆலோசிக்கலாம்.

*திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் அறிவித்த அறிவிப்பில் சீர் மரபினருக்கு குறிப்பாக மறவர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மறவர்களுக்கு இந்தக் கல்விச் சலுகைபோன்ற சலுகை இப்போது இருக்கிறது. ஆனால் இராமநாதபுரத்தில் பிறந்து மதுரை போன்ற நகரங்களிலே பிழைப்புக்காக வந்த மறவர்களுக்கு இந்தச் சலுகை இப்போது இல்லாமல் இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட இராமநாதபுரம் மறவர்கள் மற்ற மாவட்டங்களிலே வாழ்ந்து வருகின்றவர்களுக்கு இந்தக் கல்வி போன்ற சலுகைகள் சீர் மரபினர் திட்டத்திலே மறவர்களுக்கு வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

இரண்டாவதாக கடந்த நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1971-ல் இருந்த காலத்தில் ''மறவர் ரெக்லமேஷன் திட்டம்'' என்று சொல்லுகின்ற மறவர்களுடைய புனர் வாழ்வுத் திட்டத்தை அமல்படுத்துவதற்காக அப்போது இருந்த பின்தங்கிய குழு தீர்மானித்து, அரசாங்கமும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் அறிவித்தார்கள். இடையில் ஆட்சி மாற்றத்தால் அது நின்றுவிட்டது. இனிமேலாவது அந்த ''மறவர் ரெக்லமேஷன் திட்டம்'' இராமநாதபுரம் மறவர்களுக்கும் அறிமுகப்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் முதலிலே, சொன்னதைப்போல் ஆலோசனைக் குழு அமைத்தால் அதனுடைய ஆலோசனைகளை இந்தக் குழுவிற்கு வழங்கினால் அதைப் பிறகு இந்த அரசு பரிசிலிக்கும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையத்தினம் பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் ஆகியோருக்கு வேலைவாய்ப்பிலே அறிய





மான முன்னுரிமை வழங்கவேண்டுமென்ற காரணத்திற்காக அவர்களுக்கு வயதுஉச்சவரம்பு 35-ஆக அரசாங்கம் உயர்த்தியிருக்கிறது ஆனால் அரசாங்கத்தினுடைய பொது நிறுவனங்களும், கார்ப்பரேஷன்களும் அவர்கள் 28 வயதிற்கு மேல் இருந்தால் இந்த வயது வரம்பானது அவர்களுக்கு பொருந்தாத அளவில் சலுகை கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய நிறுவனங்களும், கார்ப்பரேஷன்களும் இந்த அரசாங்க உத்தரவு போடப்பட்ட தினமாகிய 20—7—1989—அன்றே அதை அமல்படுத்த வேண்டும் என்று அரசு உத்தரவு வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், ஹாஸ்டலில் சேர்கின்ற நேரத்தில் இந்தத் தூரத்தை நாம் கணக்கு எடுக்கின்றோம். அவர்களுடைய பொருளாதார நிலையைக் கொண்டே தான் ஹாஸ்டலில் சேரக்கூடிய முன்வரவேண்டுமென்று அதை அடிப்படையாக வைத்து நம்முடைய சின்னசாமி அவர்கள் இங்கே கேள்வியாகக் கேட்டிருக்கின்றார்கள். அதற்கும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நல்ல அறிவிப்பினை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உகம்சந்த் அவர்கள் எடுத்துரைத்த கருத்துக்கள் ஆராயப்படும்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவு உரை வழங்கும்போது பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு கல்லூரியிலே படிக்க வரும் ஒரு குடும்பத்திலிருந்து முதலில் வரக் கூடிய மாணவருக்கு ரூபாய் 12,000 வரையில் வரம்பு இருக்கவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதைச் சொல்லும்போது தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பழங்குடியினருக்கும் ரூபாய் 15,000 என்று வரம்பு நிர்ணயிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். இதுவரையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பழங்குடியினருக்கும் அப்படி ஒரு வரம்பு இல்லாமல் இருக்கும் பொழுது இப்போது புதியதாக ஒரு வரம்பை ஏற்படுத்துவது சரியல்ல. இதை அரசு கைவிட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது இன்னும் கொஞ்சம் தீவிரமாகச் சொல்லவேண்டுமென்பதற்காக சொல்லப்பட்டு இருக்கும் என்று கருதுகிறேன். ஒரு முறை ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்களைப் பார்த்து ஒருவர் கேட்டார், நீங்கள் எதிர்க்கட்சியிலே எல்லாவற்றையும் எதிர்த்துக் கொண்டிருக்கிறீர்களே, ஒவ்வொருவருக்கும் ஒரு வீடு கொடுப்பதாகவும் [illegible] சொன்னால், நீங்கள் என்ன பதில் அளிப்பீர்கள் என்று கேட்டார். வீடு கொடுத்தால் மட்டும் போதாது அவர்களுக்கு மாதாமாதம் ரூபாய்

100 கொடுக்க வேண்டுமென்று சொல்வேன் என்று பன்னீர் செல்வம் சொன்னதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதே போல், நம்முடைய விரையன் அவர்கள் தீவிரமான ஒரு கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். தொழிற் கல்வியைப் பற்றியது அது. தொழிற்கல்வி அளவிலே ரூபாய் 15 ஆயிரம் வரம்பு என்பது. அந்த அளவிலே, அவர்களுக்கு இனாமாக, அந்தத் தொழிற் கல்வியை வழங்குவதற்காகத்தான் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

13-40 மணி.

திரு. ஒ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மிகவும் பிற்பட்டோருக்கு சலுகைகளை இங்கே வாரி வழங்கியுள்ள இந்த நேரத்திலே, தெலுங்கு செட்டி, மொண்டான் செட்டி போன்ற சில பிரிவினருக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் தந்த கலைஞர் அவர்கள் வாணிய செட்டி என்ற பிரிவினரையும் சேர்த்து இந்தச் சந்தர்ப்பத்திலே அறிவித்தால், கல்வியிலே தாழ்ந்த நிலையில் இருக்கும் அந்தப் பிரிவினருக்கும் ஒரு வாழ்க்கை தந்ததாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் கோ. விரையன், எஸ். எஸ். ராமசுப்பு, டாக்டர் எஸ். சுந்தரராஜ் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 32—பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன்—என்ற தலைப்பின்கீழ், ரூபாய் 28,46,79,000-க்கு மேற்படாத தொகை, அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று. கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 11—4—1990 புதன்கிழமை காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை 13-42 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

85. கோரிக்கை எண் 32—பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

86. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1990-91 (ஆங்கிலம்).

87. கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ், ஆங்கிலம்)

88. கோரிக்கை எண் 14—தமிழ்நாடு சிறைகளின் நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

89. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி நான்காவது அறிக்கை, 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

[1990 ஏப்ரல் 10

இணைப்பு.

[44-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க].

பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

மானியக் கோரிக்கை எண் 32
1990-91

கொள்கை விளக்கக் குறிப்பு

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் நலனுக்காக 1990-91ஆம் ஆண்டிற்கு
ரூ. 28,46,79,000 அளிப்பதற்கான 32ஆம் எண் மானியக்
கோரிக்கையை இப்பேரவையின் முன் வைக்கிறேன். இதைத்
தவிர தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்
பாட்டு நிறுவனத்திற்கு பங்குத் தொகையாக அளிக்க ரூ. 1 கோடி
மானியக் கோரிக்கை எண். 58-ன் கீழும், பிற்படுத்தப்பட்டோர்,
மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான
விடுதிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக மானியக் கோரிக்கை
எண் 53-ன் கீழ் ரூ. 1.23 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆக
மொத்தம் இத்துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 30.70 கோடி
ஆகும் என்பதையும், இது சென்ற ஆண்டு ரூ. 19.57 கோடியாக
இருந்தது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. இவ்வரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக் கொள்வதற்கு முன்
நிலவிய சூழல்களைக் கருத்திற் கொண்டு, விரிவான பரிசீலனைக்
குப் பின்னர், பிற்படுத்தப்பட்டோரின் மொத்த இட ஒதுக்
கீடான 50 விழுக்காட்டிற்குள், மிகப் பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்குத் தனியே 20 விழுக்காடு
இட ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தது. இதன் பயனாக,
1988ஆம் ஆண்டில் மருத்துவக் கல்லூரிகளில் மிகப் பிற்படுத்தப்
பட்டோர் மற்றும் சீர்மரபினர்களில் 68 மாணவர்களே தேர்ந்
தெடுக்கப்பட்டதற்கு மாறாக, 1989ஆம் ஆண்டில் 187 மாண
வர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதேபோன்று 1988ஆம்
ஆண்டில் பொறியியல் கல்லூரிகளில் மிகப் பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த 354 மாணவர்கள் தேர்ந்
தெடுக்கப்பட்டதற்கு மாறாக 1989-ல் 685 மாணவர்கள் தேர்ந்
தெடுக்கப்பட்டுள்ளனர்.

3. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு மிகப் பிற்படுத்
தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ-
மாணவியர்களுக்குப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்
கும் திட்டம் 1989-90ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படு
கிறது. இந்த திட்டத்தின்கீழ் பயனடைந்தவர்களின் மொத்த
எண்ணிக்கை 60,833 ஆகும்.



1990 ஏப்ரல் 10]

4. பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கெனத் தனியாக
ஒரு இயக்ககம் 1969-ல் அமைக்கப்பட்டது. மிகப் பிற்படுத்தப்
பட்டோர் மற்றும் சீர்மரபினரின் நலனுக்காக வகுக்கப்படும்
புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மட்டுமல்லாது
தற்போதுள்ள திட்டங்களையும் செவ்விய வகையில் நிறை
வேற்றுவதற்காகவும், நிர்வாகப் பணியாளர் அமைப்பை வலுப்
படுத்தவும், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும்
சீர்மரபினருக்கு என்று தனியாக ஒரு இயக்ககம் 1989-90-ல்
அமைக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காகத் தற்
போதுள்ள இயக்ககம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும்
சிறுபான்மையினர் நலனுக்கான திட்டங்களைச் செயல்
படுத்தும்.

5. நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வை
யிடுவதற்கும், புதிய திட்டங்களை வகுப்பதற்கும், முன்பு
தலைமைச் செயலகத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலம், சத்
துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத்துறையென இருந்ததை
இரண்டாகப் பிரித்து பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்
பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை என்ற தனித்துறை ஒன்று
அமைக்கப்பட்டுள்ளது. இத் துறைக்கு செயலாளர் ஒருவர்
தனியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

6. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்
டோர் வகுப்பினருக்காக 1989-90ஆம் ஆண்டில் மாணவ-
மாணவியர் விடுதிகள் 25 திறக்கப்பட்டன. இவ்வாண்டில் 50
புதிய விடுதிகளைத் திறக்க இருக்கின்றோம். இவ்விடுதிகளை
நல்ல கட்டிடங்களில் அமைக்க வேண்டிய அவசியத்தையும்,
மாணவர்கள் தங்களின் கல்வியைச் சீரிய வகையில் பெறுவதற்கு
ஏற்ற சுற்றுப்புறச் சூழலை அமைத்துத் தர வேண்டிய அவசியத்
தையும் நன்குணர்ந்து இவ்வாண்டில் மொத்தம் ரூ. 4 கோடி
செலவில் 40 புதிய விடுதிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான
திட்டத்தை அரசு துவக்கியுள்ளது.

7. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்
பாட்டு நிறுவனம், 1981ஆம் ஆண்டு கீழ்க்காணும் நோக்கங்
களுடன் செயல்படத் துவங்கியது :—

(1) பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்திற்கு
உதவுகின்ற தொழில் கூட்டுறவு சங்கங்களை அமைக்க
உதவுதலுடன் அத்தகைய சங்கங்களுக்கு குறிப்பிட்டுக் கடன்
வழங்குதல்;

[1990 ஏப்ரல் 10

(2) பிற்படுத்தப்பட்டவர்களின் பொருளாதார மேம்
பாட்டிற்கு அவசியம் என்று கருதக்கூடிய வர்த்தக, வணிகத்
தொழில் ரீதியான மற்றும் பொதுவான நடவடிக்கைகளை நேரடி
யாகவோ மறைமுகமாகவோ மேற்கொள்ளுதல்.

இந்நிறுவனம் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு தொழிற் சங்கங்
களுக்கு ரூ. 3 இலட்சம் என்ற உயரளவுக்குட்பட்டு திட்ட மதிப்
பீட்டில் 20 விழுக்காடு வரை தொடக்க உதவித் தொகை வழங்கி
வருகிறது. இத்தொழிற் சங்கங்கள் எஞ்சியுள்ள முதலீட்டுத்
தொகையை வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.
இந்நிறுவனம் இதுவரை 39 கூட்டுறவு தொழிற் சங்கங்களுக்கு
ரூ. 9.22 இலட்சம்வரை தொடக்க உதவித் தொகை அளித்
துள்ளது.

இந்நிறுவனம் நிதி பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டு
முனைந்து செயல்படாமல் இருந்தது. இந்நிறுவனத்தினை புதிய
வேகத்துடன் செயல்படுத்த இவ்வரசு முடிவு செய்துள்ளது. இந்த
நிறுவனத்திற்கு ரூபாய் ஒரு கோடி அளவிற்கு பங்குத் தொகை
1990–91-ல் வழங்கப்படும்.

கூட்டுறவு தொழிற் சங்கங்களுக்கு உதவி அளிப்பதோடு
பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர்
வகுப்புகளைச் சார்ந்த தனி நபர்களுக்கு சுய வேலைவாய்ப்புக்கு
கடன் உதவி அளிக்கும் திட்டங்களையும் இந்நிறுவனம் மேற்
கொள்ளும். கிராமக் கைவினைஞர் வளாகங்களை அமைப்பதற்
குத் திட்டங்களை வகுக்கும்படியும், இந் நிறுவனம் கேட்டுக்
கொள்ளப்பட்டுள்ளது. இவ்வளாகங்களில் பிற்படுத்தப்பட்ட,
மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்கு சுயவேலை
வாய்ப்புப் பெற இயலும் வகையில், நல்ல ஆதாயம்
கிடைக்கக் கூடிய தொழில்களில் பயிற்சி அளிக்க
உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8. இந்திய ஆட்சிப் பணி மற்றும் பிற மைய அரசுப் பணி
களுக்கு மட்டுமே பயிற்சியளித்து வந்த பிற்படுத்தப்பட்டோ
ருக்கான சிறப்புப் பயிற்சி நிலையத்தின் தரத்தினை உயர்த்தி,
மேம்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலிருந்து
இந்திய ஆட்சிப்பணி மற்றும் பிற மைய அரசுப் பணிகளுக்கான
தேர்வுகளுக்குப் பயிற்சியளிப்பதுடன், தமிழ் நாடு அரசுப் பணி
யாளர் தேர்வாணையம், வங்கிப் பணியாளர் தேர்வுக் குழு,
இரயில்வே பணியாளர் தேர்வுக் குழு மற்றும் பிற பணியாளர்
தேர்வு அமைப்புகள் நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கும் பயிற்சி
அளிக்க முடிவு செய்துள்ளோம்.



1990 ஏப்ரல் 10]

9. வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மிகப் பிற்படுத்தப்பட்
டோர் மற்றும் சீர்மரபினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்
கள் வழங்க முடிவு செய்துள்ளோம். இதற்காக நிலம் கையகப்
படுத்தும் செலவினத்திற்காக 1990-91 ஆம் ஆண்டில் ஒரு கோடி
ரூபாய் ஒதுக்கியுள்ளோம்.

இதுவரை ஆதிதிராவிடர், பழங்குடி மக்கள், முடிதிருத்து
வோர், சலவைத் தொழிலாளர். போயர் மற்றும் நரிக்குறவர்
முதலிய வகுப்பினருக்கு மாத்திரம் நிலம் கையகப்படுத்தி இல
வசமாக வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வந்தன.
இந்த ஆண்டிலிருந்து இந்தத் திட்டம் எல்லா மிகப் பிற்படுத்தப்
பட்ட வகுப்பினருக்கும் மற்றும் சீர்மரபினருக்கும் விரிவுபடுத்
தப்படுகிறது.

10. கணிப்பொறி, தொலையச்சு மற்றும் தொலைபேசி
இயக்குபவர் போன்ற பணி சார்ந்த பயிற்சியளிக்கும் திட்
டங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.
கடந்த வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது உறுதி
யளித்ததுபோல, மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு உண்டி:
உறைவிடக் கட்டணத்தை உயர்த்தியுள்ளோம்.

11. சமய மற்றும் மொழிவாரி சிறுபான்மையினர்
நலத்தைப் பாதுகாக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்
குறித்து ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை செய்ய
மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் ஒன்றினைத்
தோற்றுவித்துள்ளோம். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்
திரு. வி. எம். அப்துல் ஜப்பார் அவர்களைத் தலைவராக
வும், பேராசிரியர் எஸ்.எம். மரிய நல்லு அவர்களைத்
துணைத் தலைவராகவும், திருவாளர்கள் எம். சாந்திலால்
ஜெயின், கே.பி. கொட்டாரக்கரா, பி. ஒபுல் ரெட்டி மற்
றும் கே.எஸ். ஷெட்டி ஆகியோரை உறுப்பினர்களாகவும் நிய
மித்துள்ளோம்.

சிறுபான்மையினர் நல ஆணையத்திற்கு கீழ்வரும் பணிகள்
ஒப்படைக்கப்பட்டுள்ளன :—

(1) இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலும்,
மாநில சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் மூல
மும் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு பாது
காப்புகள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பது பற்றி
மதிப்பீடு செய்தல் ;

(2) எல்லாப் 15 பாதுகாப்புத் திட்டங்களையும் அமல்
படுத்துவதற்கும் செவ்வனே நிறைவேற்றுவதற்கும் வேண்டிய
பரிந்துரைகள் ;

(3) சிறுபான்மையினருக்கென அரசால் நிறைவேற்றப்பட்ட கொள்கைகளும், திட்டங்களும் செயல்படுத்தப்படுவது குறித்து ஆய்வு செய்தல் ;

(4) சிறுபான்மையினருக்கு எதிரான வேறுபாடுகளைக் களைய ஆய்வுகள், ஆராய்ச்சி, பகுத்தறிந்துணர்தல் முதலியவற்றை மேற்கொள்ளுதல் ;

(5) மாநில அரசுகள் சிறுபான்மையினர் பொருட்டு மேற்கொள்ள வேண்டிய சட்டம் மற்றும் நல்வாழ்வுத் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் தெரிவித்தல் ;

(6) மாநில அரசுக்குக் கால முறை அறிக்கைகள் அனுப்புதல்.

12. சென்ற ஆண்டு இம்மாமன்றம் ஏகமனதாக தீர்மானித்ததைத் தொடர்ந்து, இந்த அரசு வலியுறுத்தியதற்கு இணங்க மண்டல் கமிஷன் பரிந்துரைகளை விரைவில் செயல்படுத்துவோம் என்று அறிவித்துள்ள இந்தியப் பிரதமர் அவர்களைப் பாராட்டுகிறோம்.

13. அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் சிறப்பு அம்சங்களை மாத்திரம் மேலே குறிப்பிட்டுள்ளேன். பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலனுக்காக அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

## 14. கல்வி.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் பெற கல்வி ஒரு முக்கியமான சாதனமாதலால் அரசு இவர்கள் கல்வியில் ஏற்றம் பெறத் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. மேற்காண் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்காகப் பள்ளிகள், விடுதிகள், உதவித் தொகை, பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள், பயிற்சிக்கால உதவித் தொகை, சீருடைகள் மற்றும் தனிப் பயிற்சி ஆகிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. சீர்மரபினருக்கென்று நடத்தப்படும் பள்ளிகளில் சத்துணவு, இலவசக் காலணிகள் ஆகியவையும் தரப்பட்டுள்ளன.



பள்ளிகள் :

சீர்மரபினர் நிலையை மேம்படுத்துவதற்காக அரசு தனிச் சலுகைகளையும், வசதிகளையும் அளித்து வருகிறது. சீர்மரபினர் சிறுவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகத் தமிழ்நாட்டில் 278 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. 1989–90ஆம் ஆண்டில், 53,776 மாணவ மாணவியர்கள் இப்பள்ளிகளில் பயின்றனர்.

75 ஆரம்பப் பள்ளிகளுக்கு ரூ 75,000 மதிப்பீட்டுச் செலவில் போதனைக் கருவிகளும், மூன்று மேல்நிலைப் பள்ளிகள், 7 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ 75,000 மதிப்பீட்டுச் செலவில் விளையாட்டு சாதனங்களும் 1990–91ஆம் ஆண்டில் வழங்கப்பட உள்ளன.

1990–91ஆம் ஆண்டில், ரூ. 2.60 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கப்பலூர் மற்றும் மேல உறப்பனூரில் சீர்மரபினருக்காக உள்ள இரு அரசு நடுநிலைப் பள்ளிகளின் நிலை உயர்த்தப்படும்.

1989–90ஆம் ஆண்டில், இப்பள்ளிகளை நடத்த ரூ. 3,02,01,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1990–91ஆம் ஆண்டில் ரூ. 4,08,70,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பரிசுகள் வழங்குதல் :

ஒவ்வோர் ஆண்டும், மாநில மற்றும் மாவட்ட அளவில் தனித் தனியாக எட்டாம் வகுப்பு, 10ஆம் வகுப்பு, +2 பொதுத் தேர்வுகளில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

1989–90 முதல் இப்பரிசுத் தொகைகள் கீழ்க் கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளன :—

| வரிசை எண். | பாடத்திட்டம். | 1988–89 வரை வழங்கப்பட்ட பரிசுத் தொகை. | 1989–90 முதல் உயர்த்தப்பட்ட பரிசுத் தொகை. பிற்படுத்தப்பட்ட வகுப்பு. | மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1. | மாநில அளவில் : | | | |
| | +2 பொதுத் தேர்வில் முதல் பரிசு ஒரு மாணவனுக்கும், ஒரு மாணவிக்கும். | ஒவ்வொருவருக்கும் 1,000 | 8,000 | 5,000 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. |
| | எஸ்.எஸ்.எல்.சி. (10ஆம் வகுப்பு) முதல் பரிசு ஒரு மாணவனுக்கும், ஒரு மாணவிக்கும். | ஒவ்வொரு வருக்கும் 500 | 1,500 | 3,000 |
| 2. மாவட்ட அளவில் : | | | | |
| | * 2 பொதுத் தேர்வு முதல் பரிசு ஒரு மாணவனுககும, ஒரு மாணவிக்கும. | ஒவ்வொரு வருக்கும் 500 | 1,500 | 3,000 |
| | எஸ்.எஸ்.எல்.சி. (10ஆம் வகுப்பு) முதல் பரிசு ஒரு மாணவன், ஒரு மாணவிக்கு. | ஒவ்வொரு வருக்கும் 150 | 500 | 1,000 |
| | இரண்டாம் பரிசு ஒரு மாணவன், ஒரு மாணவிக்கு. | ஒவ்வொரு வருக்கும் 100 | 250 | 500 |
| | மூன்றாம் பரிசு ஒரு மாணவன், ஒரு மாணவிக்கு. | ஒவ்வொரு வருக்கும் 50 | 150 | 300 |
| | எட்டாம் வகுப்பு முதல் பரிசு ஒரு மாணவன், ஒரு மாணவிக்கு. | ஒவ்வொரு வருக்கும் 100 | 250 | 500 |
| | இரண்டாம் பரிசு ஒரு மாணவன், ஒரு மாணவிக்கு. | ஒவ்வொரு வருக்கும் 50 | 150 | 300 |

மொத்தத்தில் ஒவ்வொரு வருடமும் 256 பரிசுகள் வழங்கப்படுகின்றன. 1990–91ஆம் ஆண்டு, இதற்காக ரூ. 1.29,000 ஒதுக்கப்பட்டுள்ளது.





**பேரறிஞர் அண்ணா தந்தை பெரியார் நினைவுப் பரிசுகள்:**

ஒவ்வொரு மாவட்டத்திலும், மேல்நிலைப் பள்ளித் தேர்வில் அந்தந்த மாவட்டத்திலே முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண்கள் பெற்று தொழில் கல்லூரிகளில் சேரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த இரண்டு மாணவர்களுக்கும், இரண்டு மாணவியர்க்கும் 1989–90ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000 என உயர்த்தப்பட்ட வீதத்தில் ஐந்து வருடங்களுக்குப் பேரறிஞர் அண்ணா நினைவு விருதுகள் வழங்கப்படுகிறது. இதே போன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்தாம் வகுப்பில் முதல் இரண்டு நிலைகளில் மதிப்பெண் பெற்று பல் தொழில் பயிற்சிப் பள்ளியில் பயிலும் இரண்டு மாணவர் மற்றும் இரண்டு மாணவியருக்குத் தந்தை பெரியார் நினைவு விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்விருதுகளைப் பெற பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ. 12,000 என்று இருந்தது. 1989–90-லிருந்து வருமான வரம்பு நீக்கப்பட்டது. இதற்காக 1990–91ஆம் ஆண்டில் ரூ. 5,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 250 மாணவ, மாணவியர் பயன் அடைவார்கள்.

**தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம் :**

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் துறையால் நடத்தப்படும் 278 பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு சத்துணவு வழங்குவதற்காக 1990–91ஆம் ஆண்டிற்கு ரூ. 32,24,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**புத்தகங்கள் மற்றும் எழுதுபலகைகள் வழங்குதல் :**

மேற்குறிப்பிட்ட 278 பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு எழுதுபலகைகள், பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள் முதலியவற்றை இலவசமாக வழங்க 1990–91ஆம் ஆண்டிற்கு ரூ. 15,07,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**சீருடைகள் (பள்ளிகள்) :**

மேற்குறிப்பிட்ட 278 பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு ஒவ்வோராண்டும், தீபாவளிக்கு ஒரு ஜோடி சீருடையும், பொங்கலுக்கு ஒரு ஜோடி சீருடையுமாக ஆண்டிற்கு இரண்டு ஜோடி சீருடைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கு 1990–91ஆம் ஆண்டில் ரூ. 29,23,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1990 ஏப்ரல் 10

அரசு மாணவ மாணவியர் விடுதிகள் :

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையும், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்காக 696 மாணவ, மாணவியர் விடுதிகள் நடத்தி வருகின்றன. விவரம் வருமாறு :—

| (1) | கல்லூரி மாணவ மாணவியர் விடுதிகள். (2) | உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவியர் விடுதிகள். (3) | தொழிற் பயிற்சி நிலைய மாணவ மாணவியர் விடுதிகள். (4) | மொத்தம். (5) |
| --- | --- | --- | --- | --- |
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. .. | 56 | 334 | .. | 390 |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை. .. | | | | |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் .. | 10 | 197 | 1 | 306 |
| சீர்மரபினர் .. | 5 | 90 | 3 | |

1989-90-ல் இவ்விடுதிகளில் தங்கிப் பயின்ற மாணவ மாணவியர்களின் மொத்த எண்ணிக்கை 39,834.

விடுதிகளில் மாணவ, மாணவியரை அனுமதிப்பதற்காகப் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 5,000 என்று நிர்ணயிக்கப்பட்ட வரம்பு, 1989-90ஆம் ஆண்டிலிருந்து ரூ. 12,000 ஆக உயர்த்தப்பட்டது.

1990-91-ல், பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்காக மொத்தம் ரூ. 90 இலட்சம் செலவில் 50 விடுதிகள் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



1990 ஏப்ரல் 10]

உணவுச் செலவு :

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியருக்குத் தற்போது பின்வரும் விதங்களில் உணவுக் கட்டணம் வழங்கப் படுகிறது :—

| வரிசை எண். (1) | விடுதிகள். (2) | ஒரு மாதத்திற்கு ஒரு மாணவருக்கு வழங்கப்படும் தொகை. சென்னை மாநகர். (3) ரூ. | வெளியூர். (4) ரூ. |
| --- | --- | --- | --- |
| 1 | கல்லூரி மாணவ/மாணவியர் விடுதிகள். | 140 | 135 |
| 2 | தொழிற் பயிற்சி மாணவ/மாணவியர் விடுதிகள். | | |
| 3 | உயர்நிலைப் பள்ளி மாணவ/மாணவியர் விடுதிகள். | 85 | 85 |

விடுதிகளைப் பராமரிப்பதற்காக 1990-91ஆம் நிதி யாண்டில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைக்கு ரூ. 4,90,40,000-ம் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ. 4,52,13,000-ம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சீருடைகள் (விடுதிகள்) :

ஆண்டுதோறும் உயர்நிலைப் பள்ளி விடுதியிலுள்ள மாணவ மாணவியருக்குத் தீபாவளி பண்டிகைக்கு ஒரு ஜோடி சீருடையும் பொங்கல் பண்டிகைக்கு ஒரு ஜோடி சீருடையுமாக

இரண்டு ஜோடி சீருடைகள் வழங்கப்படுகின்றன. 33,500 மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில் 1990-91ஆம் ஆண்டிற்காக ரூ. 29,17,000 கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :—

| | ரூ. |
|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறு பான்மையினர் நலத் துறை. | 15,25,000 |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை. | 13,92,000 |

விடுதிக் கட்டிடங்கள் கட்டுதல் :

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலத் துறையைச் சேர்ந்த 696 விடுதிகளில், 58 விடுதிகள் மட்டுமே அரசு கட்டிடங்களில் இயங்கி வரு கின்றன. எஞ்சியுள்ள விடுதிகள் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. 14 விடுதிகள் கட்டும் பணி பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு அப்பணி பல்வேறு நிலைகளில் உள்ளது. 1990-91-ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 400 இலட்சம் செலவில் 40 விடுதிகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

பகுதி நேர ஆசிரியர்களை நியமித்தல் :

உயர்நிலைப் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியருக்கு உதவி புரிவதற்காக பகுதிநேர ஆசிரியர்கள் ஆண்டுதோறும் 6 மாதத்திற்கு நியமனம் செய்யப்படுகின்றனர். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 125 வீதம் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. 1989-90ஆம் ஆண்டில் இத் திட்டத்தின் மூலம் 4,100 மாணவ மாணவியர் பயன் அடைந்தனர்.

உணவு மானியம் :

தனியாரால் நடத்தப்படும் 38 மாணவ மாணவியர் விடுதி களில் தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ மாணவியர் ஒவ்வொருவருக்கும் உணவுச் செலவிற்காக மாதம் ஒன்றுக்கு ரூ. 70 என்ற விதத்தில் ஓராண்டில் 10 மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000 வரை உள்ள மாணவ மாணவியர் மட்டுமே இந்த மானியம் பெறத் தகுதியுடையவர்களாவர்.



1989-90-ல் 2,109 மாணவர்கள் பயனடைந்தனர். ரூ. 11,83,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1990-91ஆம் நிதியாண்டிற்கு இதற்காக ரூ. 12,65,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

படிப்புதவித் தொகைகள்:

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த விடுதியில் தங்கிப் பயிலும் மற்றும் விடுதியில் தங்காமல் பிற இடங்களில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியருக்குப் படிப்பு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. விடுதியில் தங்காது பிற இடங்களில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியருக்கான படிப்புதவித் தொகையில், படிப்புக் கட்டணம், தனிக் கட்டணங்கள் தேர்வுக் கட்டணம், புத்தகங்களின் தொகை ஆகியவை, அடங்கும். விடுதிகளில் தங்கிப் பயிலுபவர்களுக்கான படிப்புதவித் தொகையில் மேற்சொன்ன கட்டணங்களுடன் நிர்ணயிக்கப்பட்ட உண்டி உறையுள் கட்டணமும் அடங்கும். இவர்கள் பெற்றோரின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ. 5,000 ஆக இருந்ததை உயர்த்தி ரூ. 12,000 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ மாணவியர்க்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும், சீர்மரபினர் மாணவ மாணவியர்க்கு ஆறாம் வகுப்பிலிருந்தும் இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது. இவ்வுதவித் தொகையைப் பெற பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தோவில் 40 விழுக்காடு மதிப்பெண்ணிற்குக் குறையாமல் பெற்றிருக்க வேண்டும். ஆனால் சீர்மரபினர் மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதையே போதுமானதாகக் கொண்டு உதவித் தொகை வழங்கப்படுகிறது. உதவித் தொகை பெறுவதற்குகாக நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பு 1989-90 முதல் நீக்கப்பட்டுவிட்டது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ மாணவியருக்கு படிப்புதவித்தொகை வழங்க அந்தந்தக் கல்வி நிறுவனங்களின் முதல்வர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

1990-91-ஆம் நிதியாண்டில் இதற்காக ரூ. 5,52,32,000 கீழ்க்கண்டவாறு ஒதுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை. | ரூ. 3,25,35,000. |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை. | ரூ. 2,26,97,000. |

இலவசக் கல்வி :

மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ மாணவியர்களுக்குக் கல்லூரி வகுப்புவரை, அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானத்தை கணக்கில் கொள்ளாது இலவசக் கல்வித் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் 60,833 மாணவ மாணவியர் பயனடைந்துள்ளனர்.

1990-91ஆம் ஆண்டில், இத் திட்டத்திற்காக ரூ. 3,62,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

உண்டி, உறையுள் கட்டணங்கள் :

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு உதவித்தொகையுடன் வழங்கப்படும் உண்டி, உறையுள் கட்டணவீதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :—

| வரிசை எண். | பாட முறை. | பிற்படுத்தப் பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப் பட்டோர். | சீர் மரபினர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | சென்னை மாநகர்— | | |
| | | ரூ. | ரூ. |
| 1. | கலை, அறிவியல், சட்டம் | 60 | 70 |
| 2. | மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம் இவற்றைச் சார்ந்த மற்ற படிப்புகள். .. | 60 | 75 |
| 3. | தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்வி. | 50 | 60 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| | வெளியூர்— | | |
| 1. | கலை, அறிவியல், சட்டம் — | 50 | 55 |
| 2. | மருத்துவம், பொறியியல் வேளாண்மை, கால்நடை மருத்துவம் இவற்றைச் சார்ந்த படிப்புகள். | 55 | 70 |
| 3. | தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்வி. | 45 | 50 |

மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ மாணவியர், சீர்மரபின மாணவ மாணவியருக்கு 1990 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1ஆம் நாளிலிருந்து உண்டி உறையுள் கட்டணம் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது:—

| | | சென்னை மாநகர். | வெளியூர். |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1. | அறிவியல், கலை, சட்டம் .. | 80 | 70 |
| 2. | மருத்துவம், பொறியியல், கால்நடை வேளாண்மை, மருத்துவம் இவற்றைச் சார்ந்த மற்ற படிப்புகள். | 85 | 80 |
| 3. | தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்வி. | 70 | 60 |

இத்திட்டத்தின்கீழ் 43,000 மாணவ மாணவியர் பயனடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 15. பயிற்சி.

### சிறப்பு பயிற்சி நிலையம்:

அனைத்திந்திய உயர் அரசுப் பணிகளுக்காக மைய அரசு
தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் எழுதவிருக்கும் பிற்
படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்
மற்றும் சீர்மரபினருக்குப் பயிற்சி அளிப்பதற்காக, இத்துறை
1971 ஆம் ஆண்டிலிருந்து சென்னையில் சிறப்புப் பயிற்சி
நிலையம் ஒன்றை நடத்தி வருகிறது. இந்நிலையத்தில் 60
மாணவ மாணவியர் (விடுதியில் தங்கிப் பயிலுவோர் 50 பேர்;
வெளியில் தங்கிப் பயிலுவோர் 10 பேர்) சேர்த்துக்கொள்ளப்
படுகின்றனர். இந்நிலையத்தில் சேர பெற்றோர்களின் ஆண்டு
வருமான உச்ச வரம்பு ரூ. 12,000-லிருந்து ரூ. 24,000 ஆக
உயர்த்தப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு இலவச தங்கும் வசதி
யும், திங்கள் ஒன்றுக்கு ரூ. 250-க்கு மிகாத செலவில் உண்டி
வசதியும் செய்து தரப்படுகிறது. இப்பயிற்சி நிலையம் இந்திய
ஆட்சிப் பணி மற்றும் ஏனைய மைய அரசுப் பணிகளுக்கான
தேர்வுகளுக்குப் பயிற்சி அளிப்பதோடுமட்டும் அல்லாமல், தமிழ்
நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், வங்கிப் பணியாளர்
தேர்வுக் குழு, இரயில்வே பணியாளர் தேர்வுக் குழு
மற்றும் இதர பல்வேறு பணியாளர் தேர்வு அமைப்புகள் நடத்தும்
தேர்வு எழுதவும் சிறப்புப் பயிற்சி அளிக்கக் கருதப்பட்டுள்ளது.
இதனால் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும்
சீர்மரபினருக்கு நல்ல வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தித்தர
வேண்டும் என்ற அரசின் நோக்கம் நிறைவேறும் எனக் கருதப்
படுகிறது.

கோவை, அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில்,
அனைத்திந்தியப் பணிகளுக்கான தேர்வு எழுதவிருக்கும் பிற்
படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்
மரபின மகளிருக்கு சிறப்புப் பயிற்சி அளிப்பதற்காக, 1989-
90 ஆம் ஆண்டு முதல் சிறப்புப் பயிற்சி மையம் ஒன்று
தொடங்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் ஆண்டுதோறும் 25
பெண்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். 1990-91 ஆம்
ஆண்டில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்
மற்றும் சீர்மரபினரைச் சேர்ந்த மேலும் நான்கு தொகுதியின
ருக்கு அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வுகள் எழுத,
சிறப்புப் பயிற்சித் திட்டம் ஒன்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
ஒவ்வொரு தொகுதியிலும் ஆண்களும் பெண்களுமாக 25 பேர்
சேர்த்துக்கொள்ளப்படுவர். இத்திட்டத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 2.40 இலட்சம் செலவாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், டாக்டர் அழகப்பா பல்
கலைக் கழகம், காந்திகிராமம் கிராமிய பல்கலைக் கழகம்
மற்றும் திருநெல்வேலி புனித சேவியர் கல்லூரி ஆகிய



இடங்களில் அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட,
மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் பயனடை
யும் வகையில் இப்பயிற்சிகள் அளிக்கப்படும். அகில இந்திய பணி
களுக்கான தேர்வுகளைத் தமிழகத்திலிருந்து மேலும் அதிகமான
வர்கள் எழுத இச் சிறப்புப் பயிற்சி உதவும்.

சென்னையிலுள்ள சிறப்புப் பயிற்சி நிலையத்தை நடத்தவும்,
கூடுதல் வசதிகள் செய்து கொடுக்கவும் 1990-91 ஆம் ஆண்டில்
ரூ. 19,40,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

### பொது நோக்கு பொறியியல் பட்டறைகள்:

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூரிலும், மதுரை
மாவட்டத்தில் செக்கானூரணியிலும், திருநெல்வேலி-
கட்டபொம்மன் மாவட்டத்தில் வீரகேரளம் புதூரிலும் மூன்று
பொதுநோக்கு பொறியியற் பட்டறைகள் இத்துறையின்
நிதி உதவியுடன் நடத்தப்படுகின்றன. இவை 1984 ஆம் ஆண்டு
ஜூலைத் திங்களிலிருந்து தொழிற்பயிற்சி நிலையங்களாக நிலை
உயர்த்தப்பட்டு தற்போது, சென்னை வேலைவாய்ப்பு பயிற்சித்
துறை இயக்குநரால் நிர்வகிக்கப்படுகின்றன. இப் பட்டறைகளில்
பொருத்துதல், பற்றவைத்தல், இரும்புத் தகடு செய்தல் ஆகிய
வற்றில் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது. சீர்மரபினர்
வகுப்பைச் சேர்ந்தவர்கள், சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்
கீழ் சொந்தமாகத் தொழில்கள் தொடங்குவதற்குத் தேவையான
தொழில் நுட்பத் திறமை அளிப்பதே இத்திட்டத்தின் நோக்க
மாகும். ஆண்டு ஒன்றிற்கு 208 நபர்கள் இப்பயிற்சி நிலையங்கள்
மூலம் பயன் பெறுவர். 1990-91 ஆம் நிதியாண்டிற்கு
ரூ. 16,35,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

### வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக் கூடங்கள்:

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்
மற்றும் சீர்மரபினர் இனத்தவருக்குப் பயிற்சி அளிப்பதற்காகக்
கீழ்க் காணும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக் கூடங்கள் செயல்
படுகின்றன :—

### மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை:

(1) தையல் மற்றும் ஆயத்த ஆடைப் பயிற்சி நிலையம்,
அண்ணா நகர், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்.

(2) தையல் மற்றும் பூ வேலைப்பாடு நிலையம், தெற்குத்
தெரு, மதுரை மாவட்டம்.

இதன் மூலம் 70 நபர்கள் பயிற்சி பெறுவர்.

[1990 ஏப்ரல் 10

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை;

(3) தையல் பயிற்சி நிலையம், திருவெண்ணெய் நல்லூர், தென்னாற்காடு மாவட்டம்.

(4) தையல் பயிற்சி நிலையம், இராமவர்மபுரம், கன்னியாகுமரி மாவட்டம்.

(5) தையல் பயிற்சி நிலையம், உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

(6) தையல் பயிற்சி நிலையம், சேரன்மகாதேவி, திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம்.

(7) தையல் பயிற்சி நிலையம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்.

(8) நாரிழைப்பிரிவு, குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

தையற் பயிற்சி நிலையங்கள், சமூக நலத் துறை இயக்குநரின் நிர்வாகத்தின்கீழும், நாரிழைப் பயிற்சி நிலையம் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை நிர்வாகத்தின் கீழும் இயங்கி வருகின்றன. இதன் மூலம் 125 நபர்கள் பயிற்சி பெறுவர். இதற்காக 1990–91 ஆம் நிதியாண்டிற்கு ரூ.4,28,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

சட்டப் பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்:

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் இனத்தைச் சார்ந்த 20 சட்டப் பட்டதாரிகளுக்கு நீதித் துறையில் அனுபவம் பெறும் பொருட்டு, பல்வேறு சட்டப்பிரிவுகளில் வல்லமை பெற்று சிறந்து விளங்கும் முதுநிலை வழக்கறிஞர்களிடம் 3 ஆண்டுகள் பயிற்சி பெறும் திட்டம் ஒன்றினை அரசு செயல்படுத்தி வருகிறது. பயிற்சி காலத்தில் பயிற்சி பெறுவோருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 500 உதவித் தொகையாக வழங்கப்படும்.

ஆண்டொன்றுக்கு ரூ. 5,001 வீதம் மூன்று ஆண்டுகளுக்கு முதுநிலை வழக்கறிஞருக்கு மதிப்பூதியம் வழங்கப்படும். இத் திட்டம் 1989–90 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான வருமான உச்சவரம்பு ரூ. 12,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்திற்காக 1990–91 ஆம் ஆண்டிற்கு ரூ. 3,17,000 ஒதுக்கப்பட்டுள்ளது.



1990 ஏப்ரல் 10]

நுழைவுத் தேர்வு :

ஒவ்வோர் ஆண்டும் பொறியியல் மருத்துவம் மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் நுழைவுத் தேர்வுகளுக்குச் செல்லும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு சென்னை, திருச்சிராப்பள்ளி மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்களுக்கு துறையைச் சேர்ந்த கல்லூரி மாணவர் விடுதிகளில் ஒரு மாதத்திற்கு கட்டணம் ஏதுமின்றி தங்க அனுமதி அளிக்கப்படுகின்றது. இப்பயிற்சியில் சேரத் தகுதி பெறுவதற்கான ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ. 12,000 ஆகும். ஒரு மாத காலத்திற்கு இப் பயிற்சி அளிக்கப் படுகிறது. 1990—91 ஆம் ஆண்டில் 400 மாணவர்கள் பயனடைவதற்காக ரூ. 1,57,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை பிற மாவட்டங்களிலும் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம்:

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த [illegible] மாணவர் மற்றும் 50 மாணவியர்களுக்கு குரோம்பேட்டையிலுள்ள சென்னை தொழில் நுட்பக் கல்லூரியில் [illegible] பணிப் பொறிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி பெறும் மாணவ மாணவியர்களுக்கு இலவச உண்டி, உறையுள் வசதி அளிக்கப் படுகிறது. இப்பயிற்சியில் சேருவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு மாணவர் விடுதியில் தங்கும் மாணவர்களுக்கு ரூ. [illegible]-ம், வெளியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு ரூ. 9,000-ம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த 50 நபர்களுக்குத் தொலைபேசி/தொலையச்சு இயக்க சிறப்புப் பயிற்சியளிக்கும் திட்டம் 1989-90 லிருந்து தொடங்கப்பட்டுள்ளது. இப் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கையை 1990—91-ல் [illegible] கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1990—91 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 10.22 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

10. பேருரைகள் முன்னேற்றம்.

கலைத் துறை கட்டுதல் :

கலைத் துறைகளைக் கட்டுவதற்காக [illegible] நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு பின் வருமாறு நிதி உதவி வழங்கப்படுகிறது:—

| | | | விழுக்காடு. |
|---|---|---|---|
| 1. அரசின் மானியத் தொகை | .. | .. | 75 |
| 2. உள்ளாட்சி மன்றங்களின் பங்கு | ... | .. | 20 |
| 3. பயனாளிகளின் பங்கு | .. | .. | 5 |

1990-91 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,01,000 ஒதுக்கப் பட்டுள்ளது.

**தொழிற்கருவிகள் வழங்குதல் :**

சலவைத் தொழிலாளர், முடிதிருத்துவோர் மற்றும் போயர்களுக்கு முறையே துணி தேய்ப்புப் பெட்டிகள், முடிதிருத்தும் கருவிகள் மற்றும் கல்லுடைக்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆண்டு தோறும் வழங்கப் படும் கருவிகள் எண்ணிக்கை வருமாறு :—

| வரிசை எண். | கருவியின் பெயர். | | ஆண்டு தோறும் வழங்கப்படும் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 1. | துணி தேய்ப்புப் பெட்டிகள் | .. | 4,000 |
| 2. | முடி திருத்தும் கருவிகள் | .. | 500 |
| 3. | கல்லுடைக்கும் கருவிகள் | .. | 500 |

1990-91 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 23,80,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**முடிதிருத்தகம். சலவையகம் மற்றும் நடமாடும் சலவையகம் அமைத்தல் :**

வெவ்வேறு வட்டி விகிதத்தில் கடனுதவியளிக்கும் திட்டத்தின்கீழ் முடி திருத்தகம், சலவையகம் மற்றும் நடமாடும் சலவையகம் அமைக்க கீழ்க்கண்டவாறு கடனுதவி வழங்கப்படுகிறது.



| வரிசை எண் மற்றும் திட்டத்தின் பெயர். | பயன் அடைவோர் எண்ணிக்கை. | அரசு மானியம் | வங்கிக் கடன் உதவி. | ஒவ்வொரு பயனாளிக்கும் ஆகும் மொத்த செலவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1. முடிதிருத்தகம் ... | 200 | 1,500 | 3,500 | 5,000 |
| 2. சலவையகம் .. | 150 | 1,500 | 3,500 | 5,000 |
| 3. நடமாடும் சலவையகம். | 50 | 600 | 1,400 | 2,000 |

1990-91 ஆம் ஆண்டிற்கு ரூ. 5,55,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**பாசனக் கிணறுகள் தோண்டுதல் :**

சீர்மரபினரின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டு, அவர்களில் 2 ஏக்கருக்கும் குறையாத சாகுபடி நிலம் உள்ளவர்களுக்கு பாசனக் கிணறு தோண்ட மானியத் தொகை அளிக்கப்படுகிறது. கிணறு ஒன்றுக்கு உயரளவாக ரூ. 2,500 மானியத் தொகை அளிக்கப்படுகிறது. 1990-91 ஆம் ஆண்டிற்கு ரூ. 75,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 30 நபர்கள் பயன் பெறுவர்.

**வீட்டு வசதி :**

சீர்மரபினருக்கு, ஒவ்வொன்றும் ரூ. 4,300 மதிப்பீட்டுச் செலவில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. 1979 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இம் மதிப்பீட்டில், தற்போது வீடுகள் கட்ட இயலாது. ஆகவே வீடுகள் கட்டுவதற்கான செலவை உயர்த்துவதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

1989-90ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், தேவராயநேரி நரிக்குறவர் காலனியில் உள்ள 140 வீடுகளையும் கிணறையும் பழுது பார்க்கும் வேலை முடியும் தருவாயில் உள்ளது. இதற்காக ரூ. 2,02,500 அனுமதிக்கப்பட்டுள்ளது.

**வீட்டுமனைகள் வழங்க நிலம் கையகப்படுத்துதல் :**

முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர், போயர் மற்றும் நரிக் குறவர் முதலிய வகுப்பினருள் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்க தனியார் பட்டா நிலங்களைக் கையகப்படுத்தும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. 1990-91 ஆம் ஆண்டிற்கு இத் திட்டத்திற்காக ரூ. 13,20,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர, இத்திட்டத்தை மேலே குறிப்பிட்டவாறு விரிவுபடுத்துவதற்கு ரூ. 1 கோடி கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

## 17. முடிவுரை.

இவ்வாறு, இவ்வரசு பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் வாழ்க்கை நிலையை உயர்த்திட, பல முன்னேற்றத் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. இம் மானியத்தை ஏற்று ஒப்புதலளிக்க இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.



## இணைப்பு.

(ரூபாய் ஆயிரத்தில்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திட்டத்தில் : | பி.வ. & சி. துறை | 18,880 | 14,005 | மொத்த ஒதுக்கீடு. பி.வ. & சி. நலத்துறை | 1,04,859 | 
| | மி.பி.வ. & சீ.ம. துறை | 1,125 | | | |
| [illegible] செலவு | பி.வ. & சி. துறை | 3,689 | 10,247 | மி.பி.வ. & சீ.ம. நலத் துறை. | 1,79,820 |
| | மி.பி.வ. & சீ.ம. துறை | 6,558 | | | |
| | | | | மொத்தம் | 2,84,679 |

| வகை என்றும் திட்டத்தின் விபரம். | திட்டத்தில் சேர்ந்தவை. | | | திட்டத்தில் சேராதவை. | | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பி.வ. | மி.பி.வ. | சீ.ம. | பி.வ. | மி.பி.வ. | சீ.ம. | பி.வ. | மி.பி.வ. & சீ.ம. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. உதவித் தொகை | 538 | 36,559 | 419 | 31,997 | 17,847 | 4,072 | 32,535 | 58,897 |
| 2. பள்ளிகள் .. | .. | .. | 627 | .. | .. | 40,243 | .. | 40,870 |
| 3. மதிய உணவு .. | .. | .. | 698 | .. | .. | 2,526 | .. | 3,824 |
| 4. புத்தகம் மற்றும் [illegible] | .. | .. | 1,320 | .. | .. | 187 | .. | 1,507 |
| 5. [illegible] .. | 1,116 | 609 | 3,034 | 409 | 260 | 472 | 1,525 | 4,315 |
| 6. [illegible] மான்யம் | 92 | 46 | .. | 747 | 374 | 6 | 839 | 426 |
| 7. விடுதிகள் .. | 11,760 | 10,935 | 1,630 | 37,280 | 18,584 | 14,064 | 49,040 | 45,213 |
| 8. பல்கலைக் கழக மானியம். | .. | .. | .. | 27 | 13 | .. | 25 | 13 |

இணைப்பு—தொடர்ச்சி.



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9. ஆசிரியர்களுக்கு விருதுகள். | .. | .. | 15 | .. | .. | .. | .. | 15 |
| 10. விவசாயம் .. | .. | .. | .. | .. | .. | 75 | .. | 75 |
| 11. தொழிற் பயிற்சி | .. | .. | 75 | 252 | .. | 1,686 | 352 | 1,711 |
| 12. இலவசக் கருவிகள் | .. | 2,722 | .. | .. | 213 | .. | .. | 2,935 |
| 13. குடிநீர்க் கிணறுகள் | .. | .. | .. | .. | .. | 10 | .. | 10 |
| 14. கலைத் துறை | .. | 101 | .. | .. | .. | .. | .. | 101 |
| 15. சிறப்பு பயிற்சி நிலையம். | 1,125 | .. | .. | 805 | .. | .. | 1,940 | .. |
| 16. சீர்மரபினர்க்கு வீட்டு வசதி. | .. | 1,250 | .. | .. | .. | .. | .. | 1,250 |
| 17. வீட்டுமனை கையகப்படுத்துதல். | .. | 1,200 | .. | .. | 10,120 | .. | .. | 11,320 |
| 18. சிறப்புப் பயிற்சி | .. | 223 | .. | 41 | 20 | .. | 41 | 243 |
| 19. பட்டயக் கணக்கர் படிப்பு. | .. | .. | .. | 2 | 2 | .. | 3 | 2 |
| 20. சிறந்த மாணவர்களுக்கு பரிசு. | 629 | .. | .. | .. | .. | .. | 629 | .. |
| 21. வேலைவாய்ப்பு பயிற்சியாளர்களுக்கு விருதுகள். | 1,022 | .. | .. | .. | .. | .. | 1,022 | .. |



இணைப்பு—தொடர்ச்சி



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 22. பள்ளிகள்/விடுதிகள் கட்டுதல், பழுது பார்த்தல். | 20 | 10 | .. | .. | .. | .. | 20 | 10 |
| 23. சட்ட பட்டதாரிகளுக்கு பயிற்சி. | 317 | .. | .. | .. | .. | .. | 317 | .. |
| மொத்தம் .. | 16,629 | 53,655 | 7,818 | 71,661 | 47,373 | 63,291 | 88,290 | 1,72,137 |

மொத்தம்—1989–90 (பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை) 1,93,076

மொத்தம்—1990–91 (பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை) 1,04,859 } 2,84,679

(மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை) 1,79,820 }

1H3 804
D
V211,31 N90
N90.271

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.